# சந்நிதியில் சித்தர்கள்





ந. அரியரத்தினம்

தொண்டைமானாறு

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியில் சித்தர்கள்

ந. அரியரத்தினம்

2018

தொண்டைமானாறு

| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | சந்நிதியில் சித்தர்கள் |
| விடயம் | :- | ஆன்மீக வரலாற்று ஆவணம் |
| ஆசிரியர் | :- | ந.அரியரத்தினம் |
| உரிமை | :- | ந.அரியரத்தினம், பிரதான வீதி, தொண்டைமானாறு, இலங்கை. |
| பிரதிகள் | :- | 300 |
| அச்சுப்பதிப்பு | :- | தமிழ்ப்பூங்கா, நெல்லியடி, இலங்கை. |
| முதற்பதிப்பு | :- | 2018.05.29 |
| பக்கங்கள் | :- | 124 |

| | | |
|---|---|---|
| Title | :- | Sannithiyil Siththarkal |
| Subject | :- | Spiritual Historical Document |
| Author | :- | N. Ariyaratnam |
| Copy right | :- | Author, N. Ariyaratnam, Main Street, Thondaimanaru, Sri Lanka. |
| Copies | : - | 300 |
| Printers | :- | Thamil poonka, Nelliady, Sri Lanka. |
| First Edition | :- | 2018.05.29 |
| Pages | :- | 124 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை



தனது முன்னோரைப் பின்பற்றி ஆலயத் தொண்டு, ஆலயத் திருப்பணி ஆகிய செயற்பாடுகளில் தானும் ஈடுபட்டு எம்மையும் அவ்வாறான பணிகளுக்கு ஆற்றுப்படுத்திச்சென்ற எமது அன்புத் தாயார் திருமதி நடராசா வள்ளி அம்மாளுக்கு இந்நூலை காணிக்கையாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்
# SRI SELVASANNATHY TEMPLE



ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முகம் ஐயர்
(சமாதான நீதவான்)
பிரதம குரு
ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு
இலங்கை.
Arumugasamy Iyar Sivashanmugam Iyar (J.P)
Chief Priest,
Sri Selvasannathy Temple
Thondaimanaru.
Sri Lanka.

T.P : 021 321 6997, 0773164544
021 205 5634

25.05.2018

## ஆசியுரை

சித்தன் போக்கு சிவன் போக்கு என்பது பழமொழி. அன்பும் சிவமும் ஒன்றெனப்பர் (திருமூலர்) ஆக சித்தர் போக்கு அன்பு மயமான சிவம் போக்கு. பித்து பிடித்தது போன்ற வசனிப்பு.

மிடை கெட வைத்த பாத வித்தகர் ஊரை நோக்கி சென்று தம்மை ஆண்ட மேனி கண்டு இறைஞ்ச வேண்டி பித்தினர் கடிது சென்றார் பெருந்துறை பொருந்த எண்ணி மணிவாசகர் தமக்கு உருவத் திருமேனி காட்டி திருவடி சூட்டிய திருப்பெருந்துறை சிவபிரானை மீண்டும் தரிசிக்க வேண்டும் என மனம் பித்து பிடித்தார்.

தெளிந்தவர்கள் சித்தர்கள். தெளிய அவாவிக் கொண்டிருப்பவர்கள் பக்தர்கள். சித்தர்கள் எல்லாம் சீவன் முத்தர்கள். அந்தவகையில் பதினெண் சித்தர்களின் கோட்பாடுகள் மிக பெரிய அனுகூலம் நிறைந்தவை.

நாம் இங்கு சந்நிதியில் சித்தர்கள் எனும் நூலையும் நூலாசிரியரின் சிந்தனையையும் நோக்கும்பொழுது சந்நிதியின் மகத்துவங்கள் வெளிப்படுகின்றன. ஆகவே இந்நூலின் தலைப்பு இந்நூலாசிரியர் ந. அரியரத்தினம் அவர்களை நெறிப்படுத்தி ஆற்றுதலைப்படுத்த ஆற்றங்கரை வேலவன் பூவரச மரத்தடியில் இருந்து அவரை ஆசீர்வதிக்கும்படி வேலழகனை அகமும் முகமுமாக இறைஞ்சி வேண்டுகிறேன்.

இவண்
ஆறு. சிவசண்முகம் ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத்தின் வடபால் அமைந்துள்ளதும் உலகம் பூராகவுமுள்ள இலட்சக் கணக்கான பக்தர்களை தன்பால் ஈர்த்துக்கொண்டதுமான தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் முருகப்பெருமானது திருவடி பதிந்த புனிதமான ஆலயமாகும். ஆலயத்தின் வரலாறும் மகிமையும் தோற்றமும் பெருந்தொகையான சித்தர்களதும் ஞானிகளினதும் வாழ்க்கை வரலாற்றோடு தொடர்புகொண்டது மட்டுமல்ல தொடர்ந்தும் அத்தொடர்பு வலுப்பெற்று வருவதற்கு ஆதாரமாகவும் அமைந்துள்ளது. இப் பூமிப்பந்தின் பல இடங்களிலும் மக்கள் தமது வாழ்க்கைத் தேவையின் பல அம்சங்களுக்கும் பொருத்தமான இடங்களிலே வாழ்கிறார்கள். வேறுபட்ட மதங்கள் இவ்வுலகில் காணப்படுகின்றபோதும் அந்தந்த மதத்திற்கு புனிதமான இடங்கள் என ஆங்காங்கே பல உள்ளன. உலகின் பல பகுதிகளிலும் இவ்வாறான புனிதமான இடங்கள் உள்ளபோதும் மிகவும் தொன்மை வாய்ந்த அதிகளவான புனித இடங்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ளன. அப்புனித இடங்கள் பல ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருப்பதையும் இவ்விரு நாடுகளிலும் காணமுடியும். இச் செல்வச்சந்நிதிப் பதியிலே இறை பக்தி மிகுந்தவர்கள், இறைவனை அடைய இறைவழி சென்றவர்கள், இறை தரிசனம் பெற்றவர், இறைவனோடு கலந்தவர்கள் என்ற வகையில் பல ஆத்மஞானிகள் அறியப் பட்டுள்ளார்கள். பல சித்தர்கள் தோன்றிய இடமாகவும், பல சித்தர்கள் ஏக காலத்தில் ஒன்றுகூடிய இடமாகவும் தமக்கிடையே வாதங்கள் செய்தவர்களாகவும் தொடர்ந்தும் சித்தர்கள் தோன்றிக் கொண்டு இருக்குமிடமாகவும் அன்னப் பணிக்கெனத் தம்மை அர்ப்பணித்த சித்தர்கள் பலர் வாழ்ந்த இடமாகவும் பல வகையிலும் சித்தர்கள் தோன்றிக்கொண்டே இருக்கும் அற்புதமான புனித இடமாக செல்வச்சந்நிதி ஆலயம் அமைகின்றது.

சித்தர்கள் பொது வாழ்க்கை நெறிக்கு உட்படாது, தமக்கென்று தனி வாழ்வியல் வழிமுறைகளையும் நெறிமுறைகளையும் உருவாக்கி இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள். சித்தர்கள் இயற்கையைக் கடந்த அல்லது மீறிய சக்திகளைக் கொண்டவர்கள் என சிலர் குறிப்பிடுகின்றபோதும் இவர்கள் உலகாயுத இயல்புகளை நன்கு அறிந்து சிறப்பாகப் பயன்படுத்தினர் என்பதே பொருத்தமானதாக அமையும் எனலாம். இவர்களின் உலகாயுதப் பண்புகளின் வெளிப்பாடுகளாக மருத்துவ, இரசவாத, கணித, சோதிட, இலக்கிய, தத்துவார்த்த, ஆன்மீக ஈடுபாடுகள் அமைகின்றன. ஒரு வகையில் சீர்திருத்தவாதிகளாகவும் காணலாம். சமூகத்திற்குப் பயனுள்ளது எதுவென்று பகுத்தறிந்து சாதி, சமய, சமூக ஏற்றத்தாழ்வுகளை மாற்ற முற்பட்டமையும் சீர்திருத்தவாதித் தன்மையைக் காட்டுகின்றது. இவற்றுக்கு மேலாக சித்தர்கள் என்பவர்கள் தங்களின் இருப்பை, சிந்தையை, உடம்பை, சுற்றுச்சூழலை இந்த உலகின் இயல்பு நோக்கிய தெளிவான புரிதலைக் கொண்டவர்கள். அறநிலை உணர்வைக் கொண்டவர்கள். மெய்யுணர் வில் சித்தியடைந்தவர்கள் எனக் கூறலாம். எண் பெரும் சித்திகளைப் பெற்றவர்கள் சித்தர்கள் ஆவார். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிராத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியவை எண்பெரும் சித்திகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியில் சித்தர்கள் என்ற இந்த நூலின் ஆசிரியர், நீண்ட காலம் ஆசிரியப் பணிசெய்து, அதிபராகக் கடமையாற்றி, கல்வி நிர்வாகப் பதவிகளில் அமர்ந்து ஓய்வுபெற்றவர். அவரது தொழில்சார் நிலை நுண்ணிய பல விடயங்களைப் புரிந்துகொள்ளவும் அதனூடாக பல அனுபவங்களையும் பெற உதவியது. மேலும் இவர் செல்வச்சந்நிதிச் சூழ்நிலையிலே வாழ்ந்தவர். ஆலயத்தோடு தன்னை இணைத்துக்கொண்டவர். சந்நிதியான் அற்புதங்கள் பற்றிய பல நூல்களை அடுக்காக எழுதியவர். சந்நிதிப் பதியில் வாழ்ந்து சமாதியடைந்த பல சித்தர்களோடு நெருக்கமான தொடர்பைப் பேணிவந்தவர். வெளிநாட்டில் இருந்துவந்து தமது ஆன்மீக வாழ்வுக்கு பொருத்தமான இடமாக சந்நிதியில் வாழ்ந்தவர்களோடு ஒட்டி உறவாடி ஆன்மீக அனுபவத்தையும் பெற்றவர். ஆகையால் சந்நிதியில் சித்தர்கள் என்ற நூலை எழுதப் பொருத்தமானவராக இவரைச் சந்நிதியான் தேர்ந்தெடுத்துள்ளான் என்றே கருத வேண்டியுள்ளது.

ஆன்மீக ஈடுபாடுகள், ஆன்மீகப் பக்குவநிலை என்பவை ஒரு பிறவித் தொடர்ச்சியைக் கொண்டதென்பதை நூலாசிரியர் குறிப்பிடும்போது அதற்காதார மாக ரமண மகரிசியின் ஆன்மீகப் பயணத்தைக் குறிப்பிட்டு திருவண்ணாமலை ஆலயத்தின் புனிதத் தன்மையையும் நினைவூட்டுகிறார். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி அமைந்துள்ள சூழல், கந்தபுராணக் காலத்தில் இருந்தே ஒரு புனித இடமாக அமைந்தமை, எம் நாட்டுச் சித்தர்கள் மட்டுமல்லாமல் கடல் கடந்த நாடுகளில் உள்ள சித்தர்கள் ஆலயம் நோக்கி ஈர்க்கப்பட்டமை, இங்கேயே சமாதியடைந்தமை போன்றவற்றைத் தொட்டுக் காட்டுவதன் ஊடாக, ஆலயத்தின் புனிதத்தன்மையும் தொன்மையும் வெளிப்படுத்தப்படுகின்றது. கந்தபுராணக் கால நிகழ்வுகள் சந்நிதி ஆலயத்தோடு எவ்வாறு இணைந்திருந்தன என்பதும் புலப்படுத்தப்படுகிறது. மற்றைய ஆலயங்களை விட செல்வச்சந்நிதி ஆலயத்தின் முருகப் பெருமான் மூலவராக இருக்க சிவபெருமான் லிங்க வடிவில் அமைந்திருக்கின்ற முறையை விளங்கிக் கொள்வதற்கு இந்நூல் உதவுவதோடு சித்தர்களின் உறைவிடமாக இவ்வாலயம் அமைந்தமைக்கான காரணத்தையும் காட்டுகின்றது. சந்நிதியான் ஆலயத்தின் தூய்மை, கையாளப்படும் செயற்பாடுகளில் எவ்வளவு தூரம் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறதென்பதை சாதாரண பக்தர்களும் அறியக்கூடிய வகையில் இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

ஆலயத்தின் வரலாற்றுத் தொடர்புகளுக்கு மேலதிகமாக இலங்கையின் தென்பகுதியில் மாத்தறை மாவட்டத்தில் உள்ள புராதன காலத்துத் ''தென்னாவரம்'' இந்துக் கோவில் பற்றிய தகவல்கள் புதியவையாக வாசகர்களுக்கு கிடைக்கின்றது. இந்த விஸ்ணு ஆலயம் இப்பொழுது எமது சகோதர சிங்கள இனத்தவரால் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருவதையும் குறிப்பிடுவதோடு, சீனக் கடற்படைத் தளபதி 1409 இல் காலி நகரில் நிறுவிய கல்வெட்டிலும், பழைய கிரேக்க வரைபடங்களிலும் இது குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பதை ஆசிரியர் குறித்துக் காட்டுகின்றபோது அவருடைய தேடல் முயற்சியையும் ஆதாரங்கள் திரட்டப்பட்ட பாங்கும், பாராட்டுக்குரியனவாகும். எமது முன்னோர்களின் வாழ்க்கைக் கோலம் தமது நாட்டில் தமது ஊரில் அறநெறி சார்ந்த ஆன்மீகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியைக் கொண்டிருந்தது. கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் போக்கு இன்று சிதறிவிட்டது. ஒரு குடும்பத்து அங்கத்தவர்களே வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு தொழிலில் வெவ்வேறு வாழ்க்கை முறைகளைப் பேணுபவர்களாக மாறிவிட்டனர். அத்தகையவர்கள் தமது மதம், பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றை அறிந்து கொள்ள நூலாசிரியர் இந்தத் தேடல் பணி கணிசமான பங்கை எதிர்காலத்தில் வழங்கும் என்பதில் மறுபேச்சுக்கு இடமில்லை எனலாம்.

ஐரோப்பாவில் 18 ஆம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர்களின் வாழ்க்கைக் கோலம் நவீன நுட்பப் பிரயோகங்களால் மாறுபாடு அடைந்தது. மத்திய காலப் பகுதியில் காணப்பட்ட ஆன்மீக நாட்டம் குறையத் தொடங்கியது. விஞ்ஞான நாட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. பரத்தையே ஆராய்ந்து மன உலக, ஆன்ம உலக உண்மைகளை நம் முன்னோர்கள் கண்டறிந்தனர். ஐரோப்பாவில் ஏற்பட்ட நவீன நுட்ப மாற்றம் ஆன்மீக நாட்டம் உள்ளவர்களில் சிலரை ஆராய்ச்சிக்காகவும் ஆன்மீக தேடலுக்காவும் அதன் நிறைவுக்காகவும் கீழைத்தேசங்களை நோக்கி நகர்த்தியது. இந்த ஆன்மீக தாகம் கொண்டு வந்தவர்கள் சிலர் செல்வச்சந்நிதி சூழலில் சமாதி அடைந்தனர். அந்தச் சித்தர்களின் ஆன்மீகத் தேடலின் விபரங்களை ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டதன் மூலம் செல்வச்சந்நிதி ஆலயம் இங்குள்ளவர்களை மட்டுமல்ல உலகின் பல பகுதிகளில் இருந்தும் ஆன்மீக நாட்டம் கொண்டவர்களை ஈர்த்து இழுத்து தன்னகத்தே கொண்டிருந்ததை ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார். அவர்கள் பர்ணசாலை அமைத்து அதனுள் தவநிலையை அனுஷ்டித்ததையும் இலங்கையின் முதலாவது மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரி பிரபுவின் மகனும் இந்த ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டு ஈற்றில் யோக சுவாமிகளின் அருளுக்கு உட்பட்டுச் செயற்பட்டதையும் குறிப்பிட்டு ஆன்மீக உறவுகளின் தொடர்புகளை வெளிப்படுத்தியுள்ளார். சந்நிதி ஆலயம், எவராயினும் அவரவர் விரும்பிய முறையில் விரும்பிய பாதையில் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கான சூழலை அன்று தொடக்கம் இன்றுவரை அளித்துவருவதையும் சுட்டிக்காட்டுகின்றது.

தேவையும் சந்தர்ப்ப சூழலும் பொருந்துகின்றபோது சித்துக்கள் பலவற்றை நிகழ்த்தி சித்தர்களுக்குரிய இலக்கணத்தோடு வாழ்ந்த பல சித்தர்களையும் நூல் விபரிக்கின்றது. எமது காலத்து சித்தர்களாக காணப்பட்ட அவர்களின் வரலாற்றைக் கூறுவதன்மூலம் ஆன்மீக நம்பிக்கையை ஆசிரியர் ஊட்டுகிறார். 1980களின் பின்னரைப் பகுதியில் யுத்த சூழல் ஆலயத்திற்கு பெரும் சேதத்தையும் தாக்கத்தையும் உருவாக்கியது. பூசைகள் தடைப்பட்டன. அழிவுகள் ஏற்பட்டன. இந்த வரலாற்று அனர்த்தங்களை அற்புதங்கள் பல நிகழ்த்திய சித்தரான முருகேசு சுவாமிகள் அடியார்களுள் தானும் ஒருவராக செயற்படுத்திய பாங்கினையும் கூறுகின்ற நூலாசிரியர் இன்றைய உலகில் ஆன்மீக நாட்டமும் கூட சந்தேகிக் கப்படுகின்ற நிலையில், ஆதாரபூர்வமாக, பல சித்தர்களின் செயற்பாடுகளை ஆசிரியர் நிலைநிறுத்திச் செல்கின்றார். பல அடியார்களின் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கும் அருளாளர் மயில்வாகனம் சுவாமிகளின் அன்னதானப் பணி மகத்தானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானக் கந்தன் என அழைக்கப்படும் முருகப்பெருமான் சந்நிதியில் வீற்றிருக்கும் முருகப் பெருமான் ஆகும். இளவயதில் துறவறம் பூண்டது மட்டுமல்ல ரமண மகரிஷியின் ஆச்சிரமத்திலே அவரை குருவாக ஏற்று தவ வாழ்க்கை மேற்கொண்ட மயில்வாகன சுவாமிகள், பிறந்த நாட்டுக்குச் சென்று தொண்டு செய் என்ற குருவின் கட்டளைப்படி சந்நிதிச் சூழலுக்கு வந்து நீண்ட காலம் அடியார்களுக்கு பசிப்பிணி அகற்றும் கடமையில் ஈடுபட்டு சமாதியடைந்தவர். சித்தர்களின் வாழ்வியல் முறையும் செயற்பாடுகளும் அந்தந்தக் காலத்திற்குப் பொருந்துவனவாக அமைகின்றபோதே சித்துக்கள் செம்மை பெறும். நீண்ட காலத் தொண்டராகவும் பின்பு மயில்வாகனம் சுவாமியின் சீடராக இருந்த இன்றைய சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளான மோகனதாஸ் சுவாமிகள் ஆவார். மயில்வாகனம் சுவாமிகளைக் குருவாகக் கொண்ட சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளான மோகனதாஸ் சுவாமிகள் நித்திய அன்னப்பணி என்ற நிலைக்கப்பாற்பட சென்று எண்ணற்ற சமூகப்பணிகளை பல இடங்களுக்கும் பரவலாக்கிச் செல்வது காலத்தின் தேவை அறிந்து அருளாளர்கள் செயற்பட வேண்டிய இறைபணித் தொடர்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

யோகர் சுவாமிகள் சந்நிதி ஆலயத்தில் தவ வாழ்க்கை மேற்கொள்ளா விடினும், சன்னதி ஆலயமே தவ வாழ்க்கை வாழ்வதற்கு உகந்த புனிதமான இடம் என்பதை அருளிச் சென்றவர். எம் காலத்து சித்தர். அற்புதங்கள் பல நிகழ்த்தியவர். எமக்கு நற்சிந்தனையை அளித்தவர். யோகர் சுவாமிகளின் மகா வாக்கியங்கள் நூலில் எடுத்துப் பேசப்படுகின்றன. யோகர் சுவாமிகளின் சீடர்களில் ஒருவர் செல்லத்துரை சுவாமிகள். அண்மைக் காலம்வரை அதாவது சமாதி அடையும்வரை யோகர் சுவாமிகளின் செயற்பாடுகளையும் உணர்வுகளையும் எம் மண்ணில் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வளர்த்து வந்தவர் செல்லத்துரை சுவாமிகள். இந்த நூலாசிரியர் பல சித்தர்கள், அருளாளர்களோடு நெருங்கிப் பழகியவர். அவர்களின் கருத்துக்களை செவிமடுத்து அவர்களின் ஆன்மீக வழிகாட்டலை ஏற்றுக்கொண்டு செயற்பட்டவர். ஆகையால் தான் சந்நிதிச் சித்தர்கள் பற்றிய மிகப்பெரிய ஆய்வை அவர் மேற்கொண்டுள்ளார். ஓர் ஆவணப் பதிவாக இன்று அமைகின்றது. ஆசிரியர் ஒரு முருகனடியார். நூல்கள் பலவற்றைக் கற்றறிந்தவர். தான் கற்றவற்றின் மீது படித்தவர் கற்றவற்றை நன்கு தெளிந்து கொண்டவர். அந்தவகையில் பிறரும் தெரிந்துகொள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். அவர் உடல்நலம் ஓங்க வாழ்ந்து சந்நிதி ஆலயம் சார்பான மேலும் பல விடயங்களை நூலாக வெளியிட வேண்டும் என சந்நிதியானை வணங்கி நிற்கிறேன்.

**அ. குமாரவேல்**

முதுநிலை விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டதாரிப் பிரிவு,
யாழ்ப்பாணம்.
24.05.2018


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உலகத்தில் மக்கள் வாழ்கின்ற இடங்களில் எல்லாம் இறை வழிபாடும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அவர்கள் வழிபடுகின்ற அல்லது நம்புகின்ற இறைவனும் வழிபாட்டு முறைகளும் இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படலாம். இந்த பரந்த உலகில் இது இயல்பானதே. தமிழர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அநாதியான காலம் தொடக்கம் எமது முழுமுதற் கடவுளாக சிவனையும் எமது மதமாக சைவசமயத்தையும் கடைப்பிடித்து வருகின்றோம். அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை புராதன காலத்திலிருந்து சிவனின் மூர்த்தமாக விளங்கும் முருகக் கடவுளை கண்கண்ட தெய்வமாக வழிபட்டு வருகின்றோம். தமிழர்கள் மட்டுமல்ல சகோதர இனத்தவர்களும் வழிபட்டு வரும் கதிர்காமக் கந்தக்கடவுளின் ஆலயம் எமது இந்த தொன்மையான நம்பிக்கைக்கும் வழிபாட்டிற்கும் இன்றும் சான்றாக விளங்கிக்கொண்டிருக்கும் ஒரு புனிதமான ஆலயமாகும்.

இவ்வாறான தொன்மையும் புனிதமும் நிறைந்த கதிர்காமத்துடன் தொடர்புடைய ஆலயமாக விளங்கிக்கொண்டிருப்பதுதான் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும். இவ்வாறான தொன்மையும் புனிதமும் கதிர்காமத்தைப் போல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் விளங்கிவருவதை காணமுடிகிறது. இதனை வெளிப்படுத்தக்கூடிய பல்வேறு சம்பவங்கள் உதாரணங்கள் என்பனவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த ஆலயம் பற்றி அறிந்துகொள்ள விரும்பும் அடியார்களுக்கு இவை மிகவும் பயனுள்ள தகவல்களாக அமையுமென நம்புகின்றேன்.

அது மட்டுமன்றி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஐராவசு என்ற ஒரு சித்தருடன் தொடர்புபட்ட சிறப்பிற்குரிய ஆலயமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆம் அடியார்களை ஈடேற்றுகின்ற ஆலயமாக மட்டுமன்றி சித்தர்கள், ஞானிகள், யோகிகள், அருளாளர்களையும் அவர்களது பாதையில் ஈடேற்றுகின்ற திருத்தலமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இவ்வாறு சித்தர் மருதர் கதிர்காமர் காலத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியிலிருந்து இன்றுவரை இந்த ஆலயத்தை நாடிவந்து தம்மை தமது ஆன்மீகப் பாதையில் ஈடேற்றிக் கொண்ட அருளாளர்கள் ஏராளம். இவ்வாறான அருளாளர்கள் தொடர்பான ஒரு ஆவண நூலாகவே இது ஆக்கப்பட்டுள்ளது. பல மூலங்களிலிருந்து இந்நூலிற்குரிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன. ஆனாலும் அதிகமான விடயங்கள், தகவல்கள், சம்பவங்கள் அடியேனது நேரடியான அனுபவத்துடனும், சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியாக பழகி அவர்களிடமிருந்து அல்லது அவர்கள் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களாகவும் அமைந்துள்ளன. இதனால் இது ஒரு ஆன்மீக வரலாற்று ஆவண நூலாக இருந்தபொழுதிலும் உயிரோட்டமான ஒரு நூலாக அமைந்திருக்கிறது என நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ஈடுபாடு உள்ளவர்கள் மற்றும் ஆன்மீக நம்பிக்கை உள்ளவர்களுக்கு ஆண்டவன் அவர்களின் பூர்வ புண்ணிய தொடர்புகளுக்கு ஏற்ப இவ்வுலகில் ஒவ்வொரு இறை பணியை அல்லது இறை தொண்டை வகுத்துள்ளான் என்றே கூறவேண்டும். அவ்வாறு ஆண்டவன் கிருபை கொண்டு அடியேனுக்கு வகுத்த ஒரு இறைபணியாகவே இதனை அடியேன் கருதுகின்றேன். அத்துடன் சந்நிதியான் தொடர்பான இதுபோன்ற செயற்பாடுகளை மேற்கொண்டுவருவது அடியேனது ஒரு ஆன்மீக வரலாற்றுக் கடமையாகவும் உள்ளது.

இன்று ஈழத்தமிழர்கள் அரசியல் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி சமய கலாச்சார பண்பாட்டு ரீதியாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நெருக்கடிகளை சந்தித்து வருகின்றோம். இவை தொடர்பாக ஏற்கனவே நாம் பல விடயங்களை பறிகொடுத்துவிட்டோம் அல்லது இழந்துவிட்டோம் என்றே கூறவேண்டும். தொன்மையான சில ஆலயங்கள், ஒரு சில தெருமூடி மடங்கள், கட்டடங்கள், சுமைதாங்கிக் கற்கள், ஆஉரஞ்சி கற்கள், மிருகங்களுக்கான தாகசாந்தித் தொட்டிகள் போன்ற மிக சொற்பமான விடயங்களே எமது இருப்பையும் எம்மையும் அடையாளப்படுத்த எஞ்சியுள்ள சில வரலாற்று எச்சங்களாக உள்ளன. அது மட்டுமன்றி அவற்றின் பெறுமதியை உணராது நாமே அவற்றை அழித்துக் கொண்டிருக்கின்ற கவலை தரும் நிகழ்வுகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழ் இனத்தின் சொத்தான இவை போன்ற வரலாற்று ஆதாரங்கள் எவ்வாறு அழிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இவ்விடத்தில் வெளிப்படுத்துவது பொருத்தமானது. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தெற்குத்திசையில் வெல்லங் கிராய் பகுதியில் மனிதர்களுக்கு வேறாகவும், மந்தைகளுக்கு வேறாகவும் அமைக்கப்பட்டிருந்த நீர் ஊற்றுக் கிணறும் சிறிய குளமும் இப்பொழுதும் அருகருகே காணப்படுகின்றன. ஆனால் அதை ஆக்கியவருடைய பெயர் விபரங்கள், காலம் என்பவற்றை உள்ளடக்கிய கல்வெட்டாகவும் ஆஉரஞ்சி கல்லாகவும் ஒரு கற்தூண் அங்கே இருந்தது. அந்த கற்தூண் மிக அண்மையில் களவாடப்பட்டுள்ளது. இதேபோன்று வல்லை முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக இருந்த இரண்டு ஆஉரஞ்சி கற்கள் வேறு நடவடிக்கைகளுக்காக கிளப்பி அகற்றப்பட்டிருந்தன. இது தொடர்பாக நாம் செயற்படுவதை அறிந்ததால் போலும் அது மீண்டும் இப்பொழுது அதே இடத்தில் நாட்டப்பட்டுள்ளன.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் கந்தபுராண கால தொன்மை நிறைந்த ஆலயமாக விளங்குகின்ற அதேநேரம் அதன் தற்போதைய வரலாறு மருதர் கதிர்காமர் காலத்திலிருந்து ஆரம்பமாகிறது. சித்தர் மருதர் கதிர்காமர் காலத்திலிருந்து அவருடைய சந்ததியினர் இவ்வாலயத்தை இன்றுவரை தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் பூசைகள் நடாத்தி நிர்வாகம் செய்தும் வருகின்றனர். இவை யாவும் வரலாற்று ஆவணங்களாகவும், ஆதாரங்களாகவும் பூசகர் குடும்பங்களால் பேணப்பட்டு வருகின்றன. அது மட்டுமன்றி இவ்வாலயத்தின் மகிமை, அடியார்கள் பெற்று வருகின்ற ஆன்மீக ஈடேற்றம் என்பவை தொடர்பாகவும் ஏராளம் நூல்களும் வெளிவந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான புனிதமும் வரலாற்று சிறப்பும் மிக்க இந்த ஆலயத்தின் தீர்த்தக் கிணறு மற்றும் மூலஸ்தான கதவு, சட்ட விளக்கு போன்ற திருப்பணிகளை செய்கின்ற பேறு எமது தாயாரின் பேரனான அமரர் வ. முருகுப்பிள்ளை அவர் களுக்கு ஒரு நூற்றாண்டிற்கு முன்பு கிடைத்துள்ளது. அதுமட்டுமன்றி தூரநோக்கில் அந்த மூலஸ்தான கிணற்றின் உபயத்தை கிணற்றின் விளிம்பில் கல்வெட்டாகவும் பொறித்துள்ளார். இதேபோன்று தேசியத் தலைவரின் மூதாதையர் அமைத்த வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் ஆலயத்தின் பிரமாண்டமான சூரனையும் இந்தியாவிலிருந்து வரவழைத்து திருப்பணி உபயமாக கையளித்துள்ளார். சூரனின் பீடத்தில் அது வழங்கப்பட்ட 1898ஆம் ஆண்டு உட்பட்ட அதன் விபரங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த குறிப்புகள் ஆவணமாக எதிர்கால சந்ததிக்கு பயன்பட வேண்டுமென்ற தூரநோக்குடன் அடக்கமாக அடக்கமான இடங்களில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதே ஆலயத்தின் சிவன் பார்வதி திருக்கல்யாணம் நடைபெறும் கல்யாண மண்டபத்தை எமது தாயார் தனது திருப்பணி உபயமாக அளித்து எமக்கும் வழிகாட்டிச் சென்றுள்ளார்.

இவையாவும் ஆலயத் திருப்பணி செயற்பாடுகளாகும். இருந்தபோதும் இவ்வாறான ஆவணங்களை தனியே அந்தக் குடும்பங்களில் தனிப்பட்ட வாழ்வியலுக்குரிய வழிகாட்டிகளாக மட்டும் நாம் எடுக்கக்கூடாது. இவை அந்தந்த ஆலயங்களுக்கும் ஒட்டுமொத்தமாக தமிழ் இனத்தினுடைய வரலாற்று ஆவணங்களாகவும் கருதி பேணப்பட வேண்டியவையாகும். உதாரணமாக அடியேன் அறிந்தவரை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தக்கிணற்றில் கல்வெட்டு வடிவில் பொறிக்கப்பட்டுள்ள இதனை ஒரு தொன்மையான ஆவணமாக கருதலாம்.



ஆலயத் திருப்பணி பாரம்பரியம் எமது மூதாதையருக்கு இருந்து வந்தது மட்டுமன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது ஒரு மானசீகத் தொடர்பும் சிறு வயதிலிருந்தே அடியேனது உள்ளத்துக்குள் இருந்து வந்ததையும் என்னால் நன்கு உணரமுடிகின்றது. எல்லாமே சந்நிதியானின் பெருங் கருணை. அடியேன் மட்டுமல்ல சந்நிதியானின் பல்லாயிரக் கணக்கான அடியவர்களும் இவ்வாறே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பரை பரம்பரையாக சந்நிதியானுடன் ஏதோ ஒரு வகையான தொடர்பு உள்ளவர்களாக உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து கொண்டிருப்பதையும் எம்மால் உணர முடிகிறது.

இந்நூலிற்கு ஆசியுரை வழங்கிய வணக்கத்திற்குரிய பிரதமகுரு ஆறுமுகசாமி ஐயர் சிவசண்முக ஐயர் அவர்களும், அணிந்துரை வழங்கிய சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேலு ஆகிய இருவரும் பெருமதிப்பிற் குரியவர்களாக மட்டுமன்றி சந்நிதியானது அருளாசிக்கும் ஆட்பட்டவர்கள். பிரதமகுரு ஆறு. சிவசண்முக ஐயர் வெளிநாடு செல்வதற்காக எல்லாவித ஆயத்தங்களுடனும் இந்தியாவில் நின்றபொழுது சந்நிதியானால் ஆட்கொள்ளப்பட்டு இங்கே அழைக்கப்பட்டவர். இதேபோன்று விரிவுரையாளர் அ. குமாரவேலு அவர்கள் சந்நிதியான் வாசலில் வைத்து சந்நிதியானால் ஆட்கொள்ளப்பட்டவர். இவ்வாறான பக்குவநிலையிலுள்ள இந்த இருவரும் உளப்பூர்வமான தமது பங்களிப்பை வழங்கி இந்நூலிற்கு சிறந்த அணிகலன்களாக அமைந்துள்ளனர். இதேபோன்று கபிலா போட்டோ உரிமையாளர் மற்றும் தமிழ்ப்பூங்கா அச்சகத்தினர் இந்நூல் வழமைபோல சிறப்பாக அமைவதற்கு தமது அர்ப்பணிப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவர்கள் எல்லோருக்கும் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்வது அடியேனது தலையாய கடமையாகும்.

சந்நிதியில் சித்தர்கள் என்ற இந்த ஆவண நூல் சித்தர்கள் தொடர்பான முழு விபரங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது எனக் கூறமுடியாது. இது அடியேனால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு ஆரம்ப முயற்சியே. இவை தொடர்பான தகவல்கள் மேலும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களில் எதிர்காலத்தில் அவற்றையும் நாம் உள்ளடக்கமுடியும். மேலும் இந்நூலில் சொற்பிழை, பொருட்பிழை இடம்பெற்றிருந்தால் அவற்றிற்காக மன்னிப்பு வேண்டி நிற்கின்றேன்.

அத்துடன் பல வகையிலும் பல்வேறு தகவல்களை இந்நூல் தொடர்பாக வழங்கி இந்நூல் சிறப்பாக அமைவதற்கு உதவிகள், ஒத்துழைப்புகள் வழங்கிய நல்ல உள்ளம் படைத்தவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இந்நூல் வெளியீடு தொடர்பாக நான் அதிபராக இருந்த காலத்தில் எனது பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் உடன் கடமையாற்றி தற்பொழுது அதிபர்களாக இருக்கின்ற இரு அதிபர்கள் தமது முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகள்.

அடியேனது அனைத்துச் செயற்பாடுகளிலும் தோன்றாத்துணையாக இருந்து செயற்படுத்துகின்ற சந்நிதி முருகனே இந்நூல் உருவாக்கத்திற்கும் துணையாக இருந்துள்ளான். அவன் இயக்க அடியேன் இயங்கியுள்ளேன். எல்லாம் அவனது கருணை. இந்நூலை உணர்வுடன் வாசிப்பவர்களுக்கும் அவன் கருணை கிடைப்பதாக.

பிரதான வீதி,
தொண்டைமானாறு,
27.05.2018

இறை தொண்டில்
**ந. அரியரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| உள்ளே | பக்கம் |
|---|---|
| பூமியில் புனிதம் | 1 |
| தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் | 3 |
| ஆலயத்தின் புனிதமும் சிறப்புக்களும் | 4 - 18 |
| ✧ சந்நிதியானின் அருள்வாக்கு | |
| ✧ கந்தபுராணக் கருப்பொருள் | |
| ✧ ஆணவம் அகலுதல் | |
| ✧ வாழ்வியல் யதார்த்தம் | |
| ✧ சித்தர்கள் உறைவிடம் | |
| ✧ யோக சுவாமிகளின் ஞானப்பார்வை | |
| ✧ ஒரு முறை வழிபாடு | |
| ✧ தீபாராதனையின் புதுமை | |
| ✧ கிறிஸ்தவ மதபோதகருக்கு கிட்டிய அழைப்பு | |
| ✧ அறுபத்துமூவர் வழிபாடு | |
| ✧ தூய்மை | |
| ✧ கதிர்காமத்தைக் காண பக்தி சந்நிதியை எண்ணப் பக்தி | |
| ✧ சந்நிதியானிடம் பாத யாத்திரை மேற்கொண்டு வந்த சகோதர இனத்தவர் | |
| சித்தர்கள் | 19 |
| ☆ புராதன இலங்கையில் சித்தர்கள் | 20 |
| ☆ தாந்தாமலை முருகன் ஆலயம் | 20 |
| ☆ தென்னாவரம் இந்துக் கோவில் | 22 |
| ☆ ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சித்தர்கள் | 25 |
| ✧ ஐராவசுச் சித்தர் | 27 |
| ✧ சித்தர் மருதர் கதிர்காமர் | 31 |
| ✧ இடைக்காட்டுச் சித்தர் | 37 |
| ✧ வைரமுத்துச் சுவாமிகள் | 41 |
| ✧ நடராசா சாமியார் (அடியார் மடம்) | 43 |
| ✧ அருளாளர் விநாசித்தம்பி | 45 |
| ✧ ஜேர்மன் சுவாமிகள் | 48 |
| ✧ ஆனைக்குட்டிச் சுவாமிகள் | 54 |
| ✧ நரிக்குட்டிச் சுவாமிகள் | 57 |
| ✧ பன்றிக்குட்டிச் சுவாமிகள் | 58 |
| ✧ முருகேசு சுவாமிகள் | 60 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✧ சடைவரத சுவாமிகள் 66
- ✧ மயில்வாகனம் சுவாமிகள் 67
- ✧ சிவயோக சுவாமிகள் 74
- ✧ செல்லத்துரை சுவாமிகள் 76
- ✧ செந்தில் சாமியார் 83
- ✧ கொல்லிமலைச் சித்தர் 87
- ✧ வைரமுத்து சாமி 89
- ✧ தம்புசாமி 89
- ✧ நடராசா சாமியார் (மணியம் மடம்) 90
- ✧ தம்பையா சாமியார் 92
- ✧ புதுக்குடியிருப்பு சுவாமிகள் 93
- ✧ இணுவில் சாமியார் 94
- ✧ புங்குடுதீவுச் சுவாமிகள் 96
- ✧ பபாச் சாமிகள் 100
- ✧ கைதடிச் சுவாமிகள் 105
- ✧ தியாகராசா சாமியார் 109
- ✧ சின்னத்தம்பிச் சாமிகள் 110
- ✧ மௌனகுரு சுவாமிகள் 112
- ✧ மலர் அம்மா 116
- ✧ அருளாளர் குமாரசாமி ஐயர் 118

மருதர் கதிர்காமர் வழிவந்த அருளாளர்கள் 121

அருளாளர் வரிசையில்.... 123

நடமாடும் அருளாளர்கள் 124




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வருடாந்த மகோற்சவத்தில் சந்நிதியான் வீதியுலாவும் விளக்கெடுக்கும் சிறுமிகளும் - 2017




சந்நிதியிலிருந்து கதிர்காம யாத்திரை புறப்படுதல் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூமியில் புனிதம்

இந்த புண்ணிய பூமியில் மக்கள் எங்கும் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் அன்றாட வாழ்க்கைக்கு பொருத்தமான தட்பவெப்பநிலை போன்ற பௌதிக அம்சங்களும் மற்றும் தொழில் வாய்ப்பு, போக்குவரத்து போன்ற வாழ்வதற்கான சூழ்நிலைகளும் பொருத்தமாக உள்ள பகுதிகளில்தான் மக்கள் செறிந்து வாழ்வதை நாம் காணமுடிகிறது.

இதேபோன்று ஆன்மீக ரீதியாக நோக்குகின்றபொழுதும் இப்பூவுலகில் ஆலயங்களும் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட இடங்களும் எங்கும் பரந்து காணப்படு கின்றன. ஆனால் சில பகுதிகள் அல்லது சில ஆலயங்கள் புனிதமானவையாகக் காணப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு மதத்தினருக்கு மட்டுமன்றி ஒவ்வொரு மதத்தினருக்கும் இவ்வாறு புனிதமான இடங்கள் என்று சொல்லக்கூடியதான சில இடங்கள் உலகில் காணப்படுகின்றன. சைவசமயத்திலும் இவ்வாறு புனிதமானவை என்று மக்கள் கருதுகின்ற சில இடங்கள் இன்று வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா உட்பட உலகம் முழுவதிலும் எங்கும் பரந்து காணப்படுகின்றன. ஆனாலும், இந்தியாவிலும் இலங்கையிலும் இவ்வாறான புனிதமான இடங்கள் மிகவும் தொன்மையானதாகவும் அதேநேரம் எண்ணிக்கை யிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான புனிதமான இடங்களையே சித்தர்கள் ஞானிகள் தாம் வாழ்வதற்கு உவப்பான இடங்களாகத் தெரிவுசெய்து அவ்விடங்களிலேயே தமது இருப்பிடங் களை அமைத்துக்கொண்டதையும் காணமுடிகிறது. ஆம் மக்கள் உலகில் சில பகுதிகளில் செறிந்து வாழ்வதைப் போன்று இந்த சித்தர்களும் ஞானிகளும் சில இடங்களிலே செறிந்து வாழ்ந்துவருகின்றனர். இலங்கையில் கதிர்காமம், சிவனொளிபாதமலை, திருக்கோணேஸ்வரம் போன்றவை அனைத்து மக்களும் நன்கு அறிந்த மிகவும் தொன்மையான புண்ணிய ஸ்தலங்களாக விளங்கி வருகின்றன. அது மட்டுமன்றி கடல்கடந்த நாடுகளிலிருந்தும் புராதன காலத்திலிருந்தே யாத்திரிகர்கள் நாடி வருகின்ற அளவுக்கு உலகத்தில் உள்ளவர்களாலும் அறியப்பட்ட புனிதமான இடங்களாகவும் இவை விளங்கி வருகின்றன. இதேபோன்றுதான் இலங்கையின் வட பகுதியில் தொன்மையும் புனிதமும் நிறைந்த ஆலயமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்கிவருகிறது. அதுமட்டுமன்றி சித்தர்கள் ஞானிகள் உறைகின்ற இடமாகவும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அன்று தொடக்கம் இன்றுவரை சிறப்புப் பெற்றதாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தென்னிந்தியாவில் அருணாசலம் என்ற புனிதமான ஆலயமும் அந்த ஆலயம் அமைந்திருக்கும் திருவண்ணாமலைப் பகுதியும் ரமண மகரிஷியின் உள்ளத்தில் அவரது பதினாறு வயதிலேயே இடம்பிடித்துவிட்டது. ரமண மகரிஷியின் இளமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் வேங்கடராமன். வேங்கடராமன் தனது தந்தை காலமாகிவிட்ட காரணத்தால் மதுரையில் தனது சிறிய தந்தையார் வீட்டில் தங்கியிருந்து கல்விகற்கின்றார். அப்பொழுது அவரது சிறிய தந்தையாரைக் காணவந்த சிறிய தந்தையின் உறவினர் ஒருவர் மூலம் அருணாசலம் என்ற சொல்லை முதன்முதல் கேள்விப்படுகின்றார். இவ்வாறு அருணாசலம் என்ற அந்த சொல்லை கேட்கின்ற முதற்தடவையிலேயே தீப்பொறி போல அருணாசலம் என்ற அந்த புனிதமான ஆலயம் தொடர்பான உணர்வு அவரது உள்ளத்தில் பற்றிக் கொள்கிறது. அத்துடன் அவரை அறியாமலே ஆழ்மனதில் உறங்கிக் கொண்டிருந்த அருணாசலம் என்ற உள்ளுணர்வு அவருள் வெளிப்படத் தொடங்கிவிட்டது.



அதுமட்டுமன்றி என்றுமே பார்த்திராத அந்த புனிதமான ஆலயத்தை நோக்கிய அவரது ஆன்மீகப் பயணம் ஆரம்பமாவதற்குரிய அத்திவாரமும் அப்பொழுதே இடப்பட்டுவிட்டது. இந்நிகழ்வு இடம்பெற்று சிறிது காலத்திற்குள்ளேயே மதுரையில் தான் தங்கியிருந்து கல்வி கற்ற தனது சிறிய தந்தையின் வீட்டிலிருந்து கல்வியைத் துறந்து, தனது நண்பர்களைத் துறந்து, உற்றார் உறவினரைத் துறந்து, தான் வாழ்ந்த அந்த இயல்பான சமூகச் சூழலை எல்லாம் துறந்து புனிதமான சூழலில் அமைந்த அருணாசல ஆலயத்தை நோக்கி தனது ஆன்மீகப் பயணத்தை ஆரம்பிப்பதை பார்க்கின்றோம். அங்கே ஆலயத்தை சென்றடைந்தவுடன் கையில் இருந்த சில்லறை நாணயங்களையும் குளத்திலே வீசியெறிந்துவிட்டு பூரண துறவற வாழ்க்கையை தனது 16 வயதிலேயே அந்த புனிதமான ஆலயத்தில் ஆரம்பிக்கின்ற அவரது ஆன்மீக வாழ்க்கைப் பயணம் ஆன்மீக தேடலில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு அரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது. சித்தர்கள், ஞானிகள், அருளாளர்கள் இவ்வாறான புனிதமான ஆலயங்களையோ அல்லது புனிதமான பகுதிகளை நோக்கியே ஈர்க்கப்படுகின்றனர். ஆம் புனிதமான அருணாசலேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ள திருவண்ணாமலைப் பகுதி ஏற்கனவே சித்தர்கள் ஞானிகள் வாழ்ந்த புனித பூமியாக அருள்பாலித்துக் கொண்டிருந்தது. தற்பொழுது 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரிய சித்தராகிய ரமண மகரிஷியால் அந்த புண்ணிய பூமிக்கு மேலும் ஒருபடி உயர்வான அருள்ஒளியும் சிறப்பும் பெருமையும் ஏற்பட்டிருப்பது சைவ மக்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியமே.

முற்பிறவிகளில் ஒருவருக்கிருந்த ஆன்மீக ஈடுபாடுகள் ஆன்மீகத்தில் அவருக்குள்ள பக்குவநிலை என்பவற்றின் தொடர்ச்சிகளாகவே இப்பிறவியில் அவருக்குள்ள ஆன்மீக ஈடுபாடு, ஆன்மீகத்தின் பக்குவநிலை, ஆன்மீகப் பயணம் என்பன எல்லாம் தொடர்கிறது என்பதற்கு ரமண மகரிஷியின் வாழ்க்கைப் பயணமும் எமக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. இதேபோன்று திருஞான சம்பந்தர், கண்ணப்ப நாயனார் போன்றோரும் இளம் வயதிலேயே ஆன்மீக ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளவர்களாகவும் உயர்வான ஞானநிலை உள்ளவர்களாகவும் பிறப்பெடுத்ததைக் காண்கின்றோம். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் கால வயது மூன்று ஆண்டுகளாக இருந்த பொழுதிலும் முற்பிறப்புக்களில் அவரின் ஆன்மீக ஈடுபாடும் பக்குவநிலையும் உயர்வாக இருந்துள்ளது. இதனால் அவர் இந்தப் பிறவியில் தனது மூன்று வயதிலேயே உயர்வான ஞானத்தை பெற்று தனது ஆன்மீகப் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்கின்றார். எமது புராண இதிகாசங்களில் இடம்பெறுகின்ற பல பாத்திரப் படைப்புக்களில் இதுபோன்று அவர்களின் முற்பிறவிகள் தொடர்பான சம்பவங்கள் அவர்களின் அடுத்த பிறப்பு நிகழ்வுகளில் தொடர்புபட்டிருப்பதை வெளிப்படுத்தும் ஏராளம் உதாரணங்கள் இடம்பெற்றுள்ளதையும் நாம் காணமுடிகிறது.

இவ்வாறு புராணங்கள், இதிகாசங்களில் கூறப்படுபவை எமது வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளவை மட்டுமல்ல அவை எமது வாழ்க்கைப் பயணத்தை நாம் இட்டுச் செல்வதற்கான ஆதார உண்மை நிகழ்வுகளாகவும் காணப்படுகின்றன. இங்கே ரமண மகரிஷியின் வாழ்க்கைப் பயணத்திலிருந்து எமது நூல் தொடர்பாக நாம் இரண்டு பயனுள்ள விடயங்களைப் பெற்றுக் கொள்ளமுடிகிறது.

1. அவர் யாருடைய உபதேசமுமின்றி, யாருடைய தூண்டுதலுமின்றி 16 வயதிலேயே ஞானத்தின்பால் ஈர்க்கப்பட்டு ஞானியாக தனது வாழ்க்கைப் பயணத்தை தொடருகின்ற ஒரு அற்புத நிலையை நாம் பார்க்கின்றோம். இது அவருடைய முற்பிறப்புக்களின் ஆன்மீகப் பயணத்தின் தொடர்ச்சியை அவர் முன்பு விட்ட இடத்திலிருந்து இப்பிறப்பில் தொடர்ந்து முன்னெடுக்கின்றார் என்பது.
2. ரமண மகரிஷியின் ஆன்மீக வாழ்க்கைப் பயணமும் அவர் ஞானியாக தன்னை பக்குவப்படுத்திக் கொண்டதும், அவர் ஞானியாக இருந்து ஞான ஒளியை இந்த உலகத்திற்கு பரப்பிக் கொண்டிருந்ததற்கும் அடித்தளமாக அமைந்திருந்தது அருணாசலம் அமைந்துள்ள திருவண்ணாமலை என்ற புனிதமான புண்ணிய பூமியே என்பதையும் நாம் காணமுடிகிறது. அது மட்டுமல்ல திருவண்ணாமலை என்ற அந்த புனிதமான சூழல் தன்னுடன் இரண்டறக் கலந்த ஒரு புனிதமான பூமி என்பதை அவரே பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி யிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்

யாழ் மாவட்டத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் மேற்கு எல்லைக் கிராமமான தொண்டைமானாறு கிராமத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாறு இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயமும் பல சிறப்பு அம்சங்கள் நிறைந்த ஆலயமாகக் காணப்படுகிறது. இந்த ஆலயமும் ஆலயம் அமைந்திருக்கின்ற சூழலும் கந்தபுராண காலத்திலிருந்து ஒரு புனிதமான பகுதியாக இருந்துவருவதாக நம்பப்படுகிறது. இதேபோன்று இங்கே எமது நாட்டு சித்தர்கள், ஞானிகள் மட்டுமன்றி கடல் கடந்த நாடுகளில் உள்ள அருளாளர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயம் நோக்கி ஈர்க்கப்பட்டு அவர்களும் இங்கே தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளதைக் காணமுடிகிறது. அது மட்டுமல்ல அவர்களில் சிலர் இங்கேயே சமாதியும் அடைந்துள்ளனர்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் புனிதமும் அருளும் நிரம்பி வழிகின்ற ஒரு அற்புதமான புண்ணிய பூமி என்பதை காலங்காலமாக இங்கேவந்து வழிபட்டு வருகின்ற மெய்யடியவர்கள் தமது அனுபவத்தால் மிகவும் சிறப்பாகவே உணர்ந்து கொண்டுள்ளார்கள். ஆனாலும் இந்த ஆலயம், இது அமைந்திருக்கும் சூழல் தொடர்பாக மேலும் சில விடயங்களை தெளிவாக விளங்கிக்கொள்ளும் பொழுது அவை இந்த நூல் தொடர்பான தேடலுக்கு மிகவும் பயனுள்ளவையாக அமையும் என்பதால் அவற்றையும் இங்கே அடியார்களுக்கு வழங்குவது பொருத்தமானது.

## தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனிதமும் சிறப்புக்களும்

ஆலயங்கள் அவற்றுக்குரிய விதிமுறைகளுக்கு இணங்கவும் தூய்மையாகவும் செயற்படும்பொழுது அவை எல்லாமே அடியார்களுக்கு ஆன்மீக ஈடேற்றத்தை வழங்கக்கூடிய புனிதமான ஆலயங்கள்தான் என்பதை மெய்யடியவர்கள் தாங்கள் தாங்கள் வணங்குகின்ற ஆலயங்களிலிருந்து உணர்ந்துகொள்ள முடியும். ஆனாலும் இந்த புண்ணிய பூமியில் சில ஆலயங்களை புனிதமான ஆலயங்கள் என அடியவர்கள் இனம்கண்டு அவற்றை நாடிச்சென்று வழிபட்டு பயனடைந்து வருவதையும் நாம் காணமுடிகிறது. இவ்வாறு புனிதமான ஆலயங்கள் எனக் கூறும்பொழுது வரலாற்று ரீதியாக சில ஆன்மீகப் பின்புலங்களும் சிறப்புக்களும் அங்கே காணப்படுவதை நாம் பார்க்கமுடிகிறது. அதேநேரம் அந்த ஆலயங்களுக்கு சென்று வழிபடுகின்ற அடியவர்களுக்கும் ஒரு வித்தியாசமான நிறைவான திருவருள் கிடைத்து வருவதும் முக்கியமான ஒன்றாக உணரப்படுகிறது. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் இவ்வாறு வித்தியாசமான நிறைவான திருவருள் காலங்காலமாக கிடைத்து வருகிறது என்பதை அடியார்கள் மிகவும் நன்றாகவே தமது அனுபவத்தால் உணர்ந்து கொண்டுள்ளனர். ஆனாலும் இவற்றிற்கு மேலாகவும் அடியவர்கள் அறிந்துகொள்வதற்காக மேலும் சில பயனுள்ள தகவல்களை இங்கே வாசகர்களாகிய அடியவர்களுக்கு வழங்குகின்றோம்.

### 1) சந்நிதியானின் அருள்வாக்கு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் கந்தபுராண கால தொண்மை வாய்ந்த ஆலயம் மட்டுமல்ல கதிர்காமம், திருச்செந்தூர் ஆலயங்களைப் போல கந்தபுராண கால வரலாற்று நிகழ்வுடன் தொடர்புபட்ட ஆலயமெனவும் நம்பப் படுகிறது. இதனால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் ஆலயச் சூழலும் மிகவும் தொண்மையான காலத்திலிருந்தே புனிதம் நிறைந்தவையாக இருந்து வருகின்றன. முருகப் பெருமானுடைய தூதுவராக வீரவாகுதேவர் சூரபத்மனிடம் ஆகாய மார்க்கமாக தூது செல்லும்பொழுதும், சூரனை வெற்றி கொண்டு யுத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவடைந்தபின் திரும்பிச் செல்லும்பொழுதும் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ள வல்லி ஆற்றங்கரையில் தங்கி முருகப் பெருமானுக்கு பூசைகள் நடாத்தியதாக எமது ஆலயம் தொடர்பாக வரலாற்று விளக்கம் கொடுப்பவர்கள் காலம் காலமாக வெளிப்படுத்தி வருகின்றனர். அதுமட்டுமன்றி இங்கே வீரவாகுதேவர் நடாத்திய பூசையை முருகப்பெருமான் ஏற்றுக்கொண்டு மகிழ்வுற்று வீரவாகுதேவருக்கு காட்சி கொடுத்தது மட்டுமன்றி **இவ்விடத்திற்கு வந்து வழிபடுகின்ற அடியவர்கள் எவரும் இலகுவாக என்னுடைய திருவருளைப் பெற்றுக்கொள்வார்கள்** எனவும் அருள்வாக்கு வழங்கியதாகவும் நம்பப்படுகிறது. இந்த நிகழ்வு நடைபெற்ற காலம் தொடக்கம் இந்த சூழல் புனிதம் நிறைந்த இடமாகவும் இந்த ஆலயத்திற்கு வந்து வழிபடுகின்ற அடியவர்கள் இலகுவாகவும் நிறைவாகவும் வேலனது திருவருளை இன்றுவரை பெற்றுவருகின்ற புனிதமான இடமாகவும் இருந்துவருகிறது.

இவ்வாறான கந்தபுராண கால நிகழ்வுகளில் இங்கே இடம்பிடித்த அற்புதமான அமைவிடத்திலேயே இலங்கையும் இந்த ஆலயச் சூழலும் அமைந்திருந்துள்ளது என்பதை வெளிப்படுத்தக் கூடியதான கந்தபுராண பாடல் ஒன்றையும் இங்கே வாசகர்களுக்கு வழங்குகின்றோம். ஆம், யுத்தம் நிறைவடைந்து முருகப் பெருமான் சூரனுடைய மகேந்திரபுரியிலிருந்து திருச்செந்தூருக்கு சென்று தனது திருக்கோயிலின் முன் இறங்கினார் என யுத்த காண்டம் மீட்சிப் படலத்தின் பதினேழாவது பாடலில் கச்சியப்ப சுவாமிகள் குறிப்பிடுகிறார்கள். அவ்வாறு செல்லும்பொழுது முருகப்பெருமான் இலங்கையைக் கடந்து கடலையும் கடந்து சென்றார் என்பதும் அங்கே வெளிப்படுத்தப்படுகிறது.

கலங்கல் கொண்டிடு மகேந்திர
    வரைபினைக் கடந்தே பின்
னிலங்கை மாருக தொருவியே
    யளக்கரை யிகந்தேகி
நலங்கொள் சீருடைச் செந்தியிற்
    றொல்லைமா நகரெய்தி
யலங்க லஞ்சுடர் மஞ்ஞைநின்
    றிழிந்தன னயில் வேலோன்.

## 2) கந்தபுராண கருப்பொருள்

எமது பரம்பொருளான சிவபெருமான் பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு சந்தரப்பங்களில் பல்வேறு மூர்த்தங்களாக (பல்வேறு கடவுள்களாக) செயற்பட்டு தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்டி உலக இயக்கத்தை நெறிப்படுத்த பல திருவிளையாடல்களை நிகழ்த்தி வருவதை எமது சமய நூல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இங்கே கந்தபுராணத்தில் முழுமுதற் கடவுள் முருகப் பெருமானாக, மூர்த்தம் எடுக்கின்ற தேவை ஏற்படுகிறது. இவ்வாறு முருகப்பெருமான் என்ற மூர்த்தத்தினூடாக தேவர்களை சூரனிடமிருந்து மீட்டெடுக்கின்ற நிகழ்வு இடம்பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களை சூரனிடமிருந்து மீட்டெடுப்பதற்காக நடைபெற்ற நிகழ்வை மானிடராகிய நாங்களும் அறிந்து பயனடைய வேண்டுமென்பதற்காக இறைவனால் அருளப்பெற்ற புராணமே கந்தபுராணமாகும். மேலும் இறையருள் பெற்ற கச்சியப்ப சுவாமிகள் இறைவனின் ஆணைப்படியும் இறையருளின் துணையுடனும் பக்திச் சுவையுடனும் இலக்கிய சுவையுடனும் இனிய தமிழில் எழுதி எமக்காக வழங்கிய அரிய பொக்கிஷமாகவும் புராணமாகவும் இது விளங்குகிறது. ஆம் கந்தபுராணம் என்ற நூல் தமிழ்மொழிக்கு கிடைத்த மிகப்பெரிய சொத்தாகும்.

கந்தபுராணத்தை எழுதிய கச்சியப்ப சுவாமிகள் புராணக் கதையை புராணத்திற்குரிய எல்லா அம்சங்களுடனும் பாடல்களால் வெளிப்படுத்துகின்ற அதே நேரம் மூலமூர்த்தியாகிய சிவன் வேறு முருகன் வேறு அல்ல என்ற உண்மைப் பொருளையும் மிகவும் கச்சிதமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துவதை காணமுடிகிறது. கந்தபுராணத்தில் வெளிப்படுத்தப்படுகின்ற அல்லது நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டிய இந்த கருப்பொருள் எமது நூல் தொடர்பான தேடலுக்கும் முக்கிய விடயமாக அமைந்திருக்கிறது.

முருகப்பெருமானுடைய பிரதிநிதியாக சூரபத்மனிடம் தூது செல்கின்ற வீரவாகுதேவர் சூரபத்மனிடம் முருகப்பெருமானை சாதாரண ஒருவராகக் கருத வேண்டாம். அவர் மூலமூர்த்தியாகிய சிவபெருமானின் ஓர் அங்கமே என்ற உண்மையை வெளிப்படையாக சூரனுக்கு தெளிவுபடுத்துகின்றார். ஆனாலும் சூரனிடம் குடிகொண்டிருந்த ஆணவத்தின் காரணமாக இதனை அவன் அப்பொழுது ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

இதேபோன்று சூரபத்மனுக்கும் முருகப்பெருமானுக்கும் நேருக்குநேர் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில் சூரபத்மன் தனது தவ வலிமையால் சிவபெருமானிடம் தான் பெற்ற வரங்களின் ஆற்றல்களைக் கொண்டு முருகப்பெருமானுடன் மிகவும் ஆக்கிரோஷமாக யுத்தம் செய்கின்றார். இவ்வாறு சூரபத்மன் தனது பெரும் பலத்தால் சரிநிகர் சமானமாக முருகப் பெருமானுடன் யுத்தம் செய்வதை தேவர்கள் பலர் அவதானித்து கலக்கமடைகின்றனர். அது மட்டுமல்ல தம்மை மீட்பதற்காக போர் செய்துகொண்டிருக்கின்ற முருகப் பெருமானை சூரபத்மன் தோற்கடித்து விடுவானோ என அச்சமும் அடைகின்றார்கள். இவ்வாறு தேவர்கள் அச்சப்பட்டு செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். அப்பொழுது இவ்வாறு பயந்து நடுங்கிக் கொண்டிருக்கின்ற தேவர்களிடம் பிரமதேவர் இவரை நீங்கள் யார் என்று நினைத்தீர்கள். இங்கே சூரனை எதிர்த்து முருகனாக போர் செய்து கொண்டிருப்பவர் எமது பரம்பொருள். முருகப் பெருமானாக வடிவமெடுத்து வந்து போர் செய்கின்றார். அவர் எப்படி தோற்கமுடியும் என்ற உண்மையை ஏனைய தேவர்களுக்கு தெளிவுபடுத்துவதைக் காண்கின்றோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக சூரபத்மன் போரில் எல்லாவற்றையும் இழந்து தன்னந்தனியாக போர்க்களத்தில் நிர்க்கதியாகி நிற்கின்றான். அப்பொழுது கருணையே வடிவமான முருகப்பெருமான் சூரபத்மனுக்கு சிறிது நேரம் ஞானத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி காண்பதற்கரிய தனது விசுவரூபத்தையும் அவனுக்கு அங்கே வெளிப்படுத்துகின்றார். அப்பொழுது சூரபத்மனுடைய ஆணவம் நீங்குகிறது. அவனுக்கு ஞானநிலை ஏற்படுகிறது. இப்பொழுதுதான் சூரபத்மனுக்கு பரம்பொருள் தான் தன்னுடன் நேருக்குநேர் நின்று போர்செய்ய வந்திருக்கின்றார் என்ற உண்மை தெரிகிறது. மேலும் அண்ட சராசரங்களும் அந்த விசுவரூபத்திற்குள்ளே உள்ளடங்கியிருக்கின்ற கண்கொள்ளாக் காட்சியையும் கண்டு ஆனந்தப் பரவசத்துள் மூழ்குகின்றான். அது மட்டுமன்றி இந்த பேறு யாருக்கு கிடைக்கும் எனவும் தனது உடல் அழிந்தாலும் பறவாயில்லை என எண்ணுகின்றான். பரம்பொருளான சிவபெருமானுடன் நேருக்குநேர் நின்று போர் செய்தவன் என்ற புகழும் பெருமையும் தனக்கு இந்த உலகம் உள்ளவரை கிடைக்கும் எனவும் உவகை கொள்கின்றான்.

இனிய தமிழில் இலக்கியச் சுவையுடன் இந்த உணர்வுகளை கச்சியப்ப சுவாமிகள் கந்தபுராணத்தில் வெளிப்படுத்துகின்ற பாடல்களையும் இங்கே தருகின்றோம்.

பாலனாக வந்த முருகப்பெருமான்தான் மூலமூர்த்தியாகிய முழுமுதற் கடவுள் என்பதை சூரபத்மன் உணர்ந்து கொள்வதை சூரபத்மன் வதைப்படலத்தின் 432 ஆவது பாடலில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

கோலமா மஞ்சை தன்னிற்
    குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட்
    பரிசிவை யுணர்த்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை
    வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற
    மூர்த்தியிம் மூர்த்தியன்றோ.

- கச்சியப்ப சுவாமிகள் -

மூலமூர்த்தியுடனே போர்செய்ய நேர்ந்துள்ளதால் தன் உடல் அழிந்துபோகும். ஆனால் மூலமூர்த்தியுடனே போர் செய்தவன் என்ற புகழ் இந்த உலகம் உள்ளவரை நிலைக்கும் என்பதை 447 ஆவது பாடல் வெளிப்படுத்துகின்றது.

ஒன்றொரு முதல்வ னாகி
    யுறைதரு மூர்த்தி முன்ன
நின்றமர் செய்தே னிந்நா
    னெஞ்சினி தளறே னம்மா
நன்றிதோர் பெருமை பெற்றேன்
    வீரனு நானே யானே
னென்றுமில் புகழே நிற்கு
    மிவ்வுட னிற் பனுண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராண வரலாற்றையும், சிவன் வேறு முருகன் வேறு அல்ல இருவரும் ஒருவரே என்ற எமது சமயத்தின் மூல தத்துவத்தையும் இந்த புராணத்தினூடாக வெளிப்படுத்துகின்றார். இங்கே சிவன் வேறு முருகன் வேறு அல்ல என்பதை பூவுலகத்து மக்கள் தெளிவாக அறிந்திருக்க வேண்டுமென்பதற்காக கந்த புராணத்தில் பல சந்தர்ப்பங்களில் அக்கருத்து வெளிப்படுத்தப்படுகிறது. அவற்றில் சில சந்தர்ப்பங்களையே வாசகர்களாகிய அடியார்களுக்கு இங்கே நாம் வெளிப்படுத்தியிருந்தோம். இவ்வாறு கந்தபுராணத்தில் வெளிப்படுத்தப்படும் இந்த கருப்பொருள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கருவறையில் துலாம்பரமாக இடம்பெற்றிருக்கும் மகத்துவத்தை இங்கே நாம் காணமுடிகிறது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆலயம். முருகப்பெருமானுடைய அருட்கட்டளைக்கு இணங்க முருகப்பெருமானால் வழங்கப்பட்ட வேல் ஒன்றை வைத்து மருதர் கதிர்காமர் என்ற புனிதர் வழிபட ஆரம்பித்த ஒரு ஆலயம். ஆனால் கச்சியப்ப சுவாமிகள் கலியுகத்து மக்களுக்கு கந்தபுராணத்தினூடாக வெளிப்படுத்துகின்ற முருகப் பெருமான் வேறு எமது மூலமூர்த்தியாகிய சிவபெருமான் வேறு அல்ல என்ற எமது சமயத்தின் தத்துவ உண்மை மிகவும் கச்சிதமாக இங்கே இந்த ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. ஆலயத்தின் கருவறையில் இந்த தத்துவம் இயல்பாக அமைந்திருக்கின்ற பாங்கினையும், சிறப்பையும், புனிதத்தையும் நாம் இங்கே காணமுடிகிறது.

ஆம் இந்த ஆலயத்தின் கருவறையில் முருகப்பெருமான் மூலவராக வேல் வடிவில் காட்சிதந்து அருள்பாலித்துக் கொண்டிருக்க அவருடன் உடனிருந்து மூலமூர்த்தியாகிய சிவபெருமான் லிங்க வடிவில் காட்சிதந்து அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பாக்கியம் இவ்வாலயத்தை வழிபட செல்லும் அடியார்களுக்கு அவர்கள் அறியாவிட்டாலும் கிடைத்து வருகிறது. அடியார்களுக்கு திருநீறு வழங்குவது தொடக்கம் வருடாந்த மகோற்சவ காலச் செயற்பாடுகளை எதிர்நோக்குவது உட்பட எல்லாவற்றிலும் நான் உடனிருந்து வழிகாட்டுவேன் என்று மருதர் கதிர்காமருக்கு கூறி அவரை ஆற்றுப்படுத்திய சந்நிதியானே இங்கே இந்த கருவறை அமைப்பு உட்பட அனைத்து செயற்பாடுகளுக்கும் தோன்றாத் துணையாக இருந்து வழிப்படுத்தி வருகின்றான். யாமிருக்க பயம் ஏன் என்று அபயமளித்துக் கொண்டிருக்கின்ற சந்நிதியானுடைய ஆலயத்தின் இவ்வாறான புனிதத் தன்மைகளை எல்லாம் எம்மால் வார்த்தைகளால் வெளிப்படுத்திவிட முடியுமா?



மூலஸ்தானத்திற்குள் வேலனுடன் சிவனும் பார்வதி அம்மையும் இடபமும் இடம்பெற்றிருக்கும் அற்புதக் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்தூர் ஆலயமும் கந்தபுராண வரலாற்றுடன் நேரடியாக தொடர்பு பட்ட ஓர் அற்புதமான ஆலயமாகும். அறுபடை வீடுகளில் ஒன்றான அந்த முருகன் ஆலயத்திலும் அடியார்கள் வேறு எந்த முருகன் ஆலயத்திலும் கண்டிருக்க முடியாத அளவு பல்வகைப்பட்ட தத்துவங்களை வெளிப்படுத்தும் பெருமளவு சிவலிங்கங்களை பார்த்து வணங்கி பக்திப் பரவசமடையமுடியும்.

### 3) ஆணவம் அகலுதல்

மூலப்பொருளான சிவனும் முருகப்பெருமானும் ஒன்றே என்ற கந்த புராணத்தின் கருப்பொருள் சந்நிதியானின் கருவறையில் இடம்பெற்றிருக்கும் சிறப்பும் புனிதமும் சந்நிதியில் காணப்படுவதுபோல கந்தபுராணத்தில் வெளிப்படுத்தப்படும் ஏனைய பல்வேறு தத்துவ உண்மைகளையும் படிப்பினை களையும் கூட அடியார்கள் சந்நிதியில் தத்தமது சொந்த அனுபவத்தாலும் பட்டறிவினாலும் அனுபவித்து வருகின்ற புதுமையும் இந்த ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த ஆலயத்திற்கு மெய்யான பக்தியுடன் வந்து வழிபடுகின்ற அடியார்கள் எவரும் தமது ஆணவம், அகங்காரம், மமதை என்பன எல்லாம் இயல்பாகவே இல்லாமல் போகின்ற ஒரு தனித்துவமான சிறப்பை இங்கே அனுபவத்தால் உணர்ந்துகொள்ள முடியும். இவ்வாறு உணர்ந்துகொள்வது நிதர்சனமான உண்மையாகும். இந்த இயல்பான சூழலை யாரும் உதாசீனம் செய்து சூரபத்மனைப் போல வேண்டுமென்றே தமது ஆணவம், அகங்காரங்களை இங்கே யாரும் வெளிப்படுத்த விரும்புவார்களாயின் அதனுடைய விளைவுகள் நிச்சயமாக விரும்பத்தகாத விளைவுகளாகவே அவை அமைந்துவிடும். இவை காலம் காலமாக இங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகளாகும்.

சற்று பொருளாதார வசதிபடைத்த ஓர் அன்பர் ஒருமுறை சந்நிதியானைத் தரிசிக்க ஆலயத்திற்கு வந்து கிணற்றில் கால் கழுவச் சென்றுள்ளார். உற்சவ காலம் ஆனபடியால் அங்கே அடியார்கள் நெருக்கடியாக நின்று கால்கழுவிக் கொண்டிருந்துள்ளார்கள். இவருடைய மூளை சற்று வித்தியாசமாக வேலை செய்துள்ளது. அருகில் இருந்த கடையைப் பார்த்திருக்கிறார். அங்கே ஆட்கள் குறைவாகக் காணப்பட்டுள்ளனர். உடனே அங்கே சென்று அடுக்கி வைக்கப்பட்டிருந்த சோடாக்களில் ஒரு சோடாவை பணம் கொடுத்து வாங்கியுள்ளார். தண்ணீருக்குப் பதிலாக சோடாவால் காலை கழுவிவிட்டு வழமைபோல ஆலய வழிபாட்டை முடித்துவிட்டு வீடு திரும்பிவிட்டார். சில நாட்களுக்குள்ளேயே அவரது கால்களில் அரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. பின்பு அது சிரங்கு போன்ற நோயாக மாறி மிகுந்த வேதனைப்பட்டுள்ளார். வைத்தியத்தால் மாற்ற முடியவில்லை. இறுதியாக தவறை உணர்ந்து சந்நிதியானிடம் வந்து ஆலயத்தில் தங்கியிருந்து மன்றாடி தனது நோயைக் குணமாக்கியுள்ளார். அதன்பின் ஆணவம் அகங்காரமற்ற மெய்யடியவராக ஆகிவிட்டார். 1975ம் ஆண்டளவில் ஒரு ஓவசியருக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தை புலோலி தெற்கு சாரையடியில் வசித்த அமரர் வேலுப்பிள்ளை மூலம் அடியேன் பெறக்கூடியதாக இருந்தது. இவ்வாறான அனுபவங்களால்தான் சந்நிதியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு வந்துவிட்டால் அனைவரும் எளிமையானவர்களாக ஆகிவிடுவதை நாம் இங்கே எப்பொழுதும் காணமுடியும். சந்நிதியான் ஆலயம் சமரசமும், சமத்துவம் நிறைந்த புனிதமான சந்நிதானம்.

சூரனைப் போல அல்லது சூரனை விட ஆணவம் அகங்காரத்துடன் ஒருவர் சந்நிதியில் செயற்பட்டால் அவருக்கு என்ன நடக்கும் என்பது தொடர்பான துயரமான சம்பவம் ஒன்றையும் அடியேன் சந்நிதியான் அற்புதம் பாகம் நான்கில் வெளிப்படுத்தியுள்ளேன். ஆர்வமுள்ள அடியவர்கள் அதனையும் வாசித்து பயனடையமுடியும்.

### 4) வாழ்வியல் யதார்த்தம்

மேலும் தேவர்கள் பிழை எனத் தெரிந்தும் தக்கன் நடாத்திய யாகத்தில் பங்குபற்றியமை போன்ற பாவச் செயல்களில் ஈடுபட்டனர். அவ்வாறான வினைப் பயன்களால்த்தான் சூரபத்மன் மூலம் அவர்கள் துன்பங்களை அனுபவித்தனர். இதேபோன்று சந்நிதியானது மெய்யடியார்கள் கூட தமது வினைப்பயன் காரணமாக சில சந்தர்ப்பங்களில் மிக மோசமாகவும் தொடர்ச்சியாகவும் துன்பங்கள் துயரங் களை அனுபவிக்க நேரிடுகிறது. அத்துடன் இவ்வாறு துன்பக் கடலில் மூழ்கி அதிலிருந்து விடுபட வழிதெரியாது தத்தளிக்கும் நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல சில சந்தர்ப்பங்களில் துன்பத்தின் சுமையை தாங்கமுடியாது துன்பத்தின் விளிம்பிற்கே செல்ல நேரிடுகிறது. ஆம் துன்பத்திலிருந்து விடுபட முடியாத நிலையில் தமது வாழ்க்கையில் எல்லாமே முடிந்துவிட்டது என்ற முடிவுக்கும் வரநேரிடுகிறது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மெய்யடியவர்கள் சற்றும் எதிர்பார்க்காத வகையில் எதிர்பார்க்காத நேரத்தில் சந்நிதியான் ஆபத்பாந்தவனாக வந்து அருள்புரிவதையும் பார்க்கின்றோம். ஆம் சந்நிதியான் மெய்யடியார்களுக்கு மலை போல வந்த துன்பங்களை மடுவாக மாற்றி அவர் களை ஆனந்த பரவசத்தில் ஆழ்த்தி ஆனந்த கண்ணீர் சொரிய வைக்கின்றான். ஆம் தன்னை முழுமையாக நம்பி உள்ளம் உருகி வழிபடுகின்ற அடியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் வாழ்வியலின் யதார்த்தத்தையும் புரிய வைத்து அதேநேரம் ஆபத்பாந்தவனாகவும் செயற்படுவதில் சந்நிதியானுக்கு நிகர் சந்நிதி யானே என்பதை மெய்யடியவர்கள் தமது அனுபவத்தால் நன்கு உணர்ந்தவர் களாக உள்ளனர்.

இவ்வாறான கருணைக்கடலாக சந்நிதியான் விளங்குவதால்தான் கந்தசஷ்டிக் காலத்தில் வடபகுதியிலிருந்து மட்டுமல்ல இலங்கையின் எல்லாப் பகுதிகளி லிருந்தும் கண்கண்ட தெய்வமான சந்நிதியானது இந்த ஆலயத்திற்கு அடியவர்கள் நாடிவந்து ஆலயத்தில் தங்கியிருந்து விரதம் அனுஷ்டித்து பெறுதற்கரிய பேறுகளை பெற்றுவருகின்றனர். நாற்பது ஐம்பது வருடங்களாக தொடர்ச்சியாக இங்கு வந்து தங்கியிருந்து கந்தசஷ்டி விரதமிருக்கின்ற அடியவர்களையும் கந்தசஷ்டிக் காலத்தில் இங்கே நாம் சந்திக்கமுடிகிறது. ஆம் கந்தபுராண தத்துவம் மட்டுமல்ல கந்தபுராண கலாசாரமும் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்ற புனிதத்தை நாம் இந்த ஆலயத்தில் மிகச் சிறப்பாக காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5) சித்தர்கள் உறைவிடம்

ஆம் கந்தபுராண கலாசாரம் மிகச் சிறப்பாக வெளிப்படுகின்ற புனிதத்தை நாம் இந்த ஆலயத்தில் மிகச் சிறப்பாக காணமுடியும். வியாழ பகவானின் சாபத்திற்கு உட்பட்ட ஐராவசு என்ற கந்தர்வன் கதிர்காமக் காட்டில் மதம் கொண்ட யானையாக சுற்றித்திரிந்து கொண்டிருந்தான். அப்பொழுது தென்திசை நோக்கி யாத்திரை மேற்கொண்டிருந்த சிகண்டி முனிவரால் ஐராவசு கதிர்காமக் காட்டில் சாப விமோசனம் அடைகின்றான். அவ்வாறு சாப விமோசனம் அடைந்த ஐராவசு தனக்கு முத்தி அடைவதற்கு வழிகாட்டுமாறு கதிர்காமக் கந்தனை வணங்கி வேண்டுதல் செய்கின்றான். அப்பொழுது அவன்மீது கருணை கொண்ட கதிர்காமக் கந்தன் அவனை ஈழத்தின் வடபகுதியில் காணப்படுகின்ற வல்லியாற்றங்கரையில் உள்ள புனிதமான பகுதிக்கு சென்று அங்கே தவமிருந்து முத்தியடையுமாறு அருள்வாக்கு வழங்குகின்றார். கதிர்காமக்கந்தனின் அருள்வாக்கிற்கு இணங்க ஐராவசு இன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் பகுதிக்கு வந்து அங்கே ஒரு பூவரசு மரத்தின் கீழ் தவமிருந்து முத்தியடைகின்றான். இவ்வாறு தவமிருந்து முத்தியடைந்த ஐராவசு என்ற சித்தருடன் தொடர்புபட்ட பூவரசு மரமே இவ்வாலயத்தின் தல விருட்சமாக இன்றும் பேணப்பட்டு வருவதாக நம்பப்படுகிறது. ஆம் கதிர்காமக்கந்தன் ஆலயத்தை போல தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும், ஆலயம் அமைந்திருக்கும் பகுதியும் புராதன காலத்திலிருந்து சித்தர்கள் தவமிருந்து முத்தியடைகின்ற புனிதமான இடமாக இருந்து வருவதை இவ்வாறான புராண வரலாறுகளும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

## 6) யோக சுவாமிகளின் ஞானப் பார்வை

முருகப்பெருமானும் முழுமுதற் கடவுளான சிவனும் ஒன்றே என்ற தத்துவ உண்மை கந்தபுராணத்தினூடாக நன்கு வெளிப்படுகிறது. இந்த கந்தபுராண தத்துவ உண்மையை உள்வாங்கி உள்ள புனிதமான ஆலயம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம். இதனை யோக சுவாமிகள் தனது ஞானப் பார்வையால் கண்டு உணர்ந்து எமக்கு வெளிப்படுத்திச் சென்ற சிறப்புக்குரிய ஆலயமாக ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகிறது.

## 7) ஒரு முறை வழிபாடு

எத்தனை முறை சென்று வழிபட்டாலும் தெவிட்டாத பக்திச் சுவையும் பரவசமும் ஏற்படுகின்ற ஆலயம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் என்பதை உணர்ந்து பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் காலங்காலமாக அங்கே சென்று சந்நிதியானை வழிபட்டு வருகின்றனர். ஆறு ஏழு தசாப்தங்களாக ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் தொடர்ச்சியாக சந்நிதியானிடம் சென்று அவனை வழிபட்டு வாழ்வில் நிறைவுடன் வாழ்ந்து வருகின்ற பேறு பெற்று பலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறானவர்கள் பலரது ஆன்மீக அனுபவங்களை நீங்களும் அறிந்திருக்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒருமுறை மட்டுமே சந்நிதியானிடம் சென்று வழிபட்டாலும் அங்கே தமக்கு ஏற்பட்ட தனித்துவமான பக்தி உணர்வையும் அந்த ஒரு நாளிலேயே சந்நிதியான் தமக்கு நிகழ்த்திய அற்புத அனுபவத்தையும் காலம் காலமாக மனதில் நிறுத்தி சந்நிதியானை மானசீகமாக வழிபட்டு வருகின்றவர்களும் ஏராளம். ஒரு முறை மட்டுமே இந்த ஆலயத்திற்கு இவர்கள் சென்றாலும் உள்ளத்தால் தினமும் வழிபடும் அடியவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் ஒருவர்தான் திரு. அருணகிரிநாதன். வலிகாம பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட இவர் சென்ற வருடம்வரை வவுனியாவில் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் பதில் நீதிபதியாகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவர் ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு முன்பு ஒருமுறை மட்டுமே இந்த ஆலயத்திற்கு சென்று வழிபட்டுள்ளார். இயல்பாகவே இறை ஈடுபாடு உள்ள அவருக்கு அங்கே ஏற்பட்ட தனித்துவமான புதுமையான பக்தி உணர்வால் சந்நிதியானை மெய்மறந்து நீண்டநேரம் வழிபட்டுள்ளார். ஆனாலும் சாயரசப் பூசைக்கு வழிபாடு செய்ய சென்ற இவர் பலமுறை வீதிவலம் வந்து தன்னை மறந்து சந்நிதியானை வழிபட்டுள்ளார். அத்துடன் வீடு செல்வதற்கு இடுப்பில் செருகி வைத்திருந்த பஸ் பயணத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்தையும் தொலைத்துவிட்டு இறுதியில் பரிதவிக்கும் நிலைக்கும் உள்ளாகியுள்ளார். அது மட்டுமல்ல மற்றவர்களிடம் கையேந்தாத சுயகௌரவம் காக்கின்ற பேர்வழிகளில் அவரும் ஒருவராக இருந்துள்ளார். விளைவு இரவு நீண்ட நேரமாகியும் வீடு திரும்ப முடியாது நிற்கதியாகி பெரும் தவிப்புடன் அங்கேயே நிற்கநேர்ந்துள்ளது. சோதனை செய்தாலும் ஆபத்பாந்தவனாக அபயமளிக்கின்றவன் சந்நிதியான் அல்லவா? ஆம் இறுதியில் அவருக்காக அவருக்கு வேண்டிய ஒரு அடியவரை அங்கே அனுப்பி அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளான். அதுமட்டுமன்றி அவரை முழுநிறைவுடன் வீடு செல்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளான். சந்நிதியானின் நினைவுகளுடன் வாழ்ந்து அருணகிரிநாதன் அவர்கள் அமரத்துவம் அடைந்தாலும் சந்நிதியான் அவருக்கு நிகழ்த்திய அற்புத நிகழ்வை அவரது குடும்பத்தவர் அவரது நினைவு மலரில் இடம்பெறச் செய்துள்ளனர்.

## 8) தீபாராதனையின் புதுமை

பேருந்து வண்டியில் பிரயாணம் செய்யும்பொழுது ஒருமுறை சந்நிதி ஊடாக பிரயாணம் செல்லும் இ.போ.ச. பேருந்தில் பிரயாணம் செய்யும் சந்தர்ப்பம் ஒரு அம்மணிக்கு கிடைத்துள்ளது. அவ்வாறு ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள வீதியால் அவர் பிரயாணம் செய்த பேருந்து சென்றுகொண்டிருக்கும் பொழுது சந்நிதியானுடைய பஞ்சாலாத்தி தீபாராதனையை தற்செயலாக காணுவதற்கும் அவருக்கு கிருபை கிடைத்துள்ளது. அரிதாகவும் புதுமையாகவும் அவருக்கு தென்பட்ட அந்த புனிதமான தீபாராதனையை பேருந்தில் இருந்தவாறே அந்த அம்மையார் பார்த்து வணங்கி பரவசமடைந்துள்ளார். இந்த நிகழ்வு சில தசாப்தங்களுக்கு முன்பு நடைபெற்றது. அந்த நிகழ்விற்கு முன்போ அல்லது பின்போ இன்றுவரை சந்நிதியான் ஆலயத்திற்கு இவர் நேரடியாகச் சென்று வழிபட்டதில்லை. ஆனாலும் ஆலயத்திற்கு வந்து வழிபடாவிட்டாலும் சந்நிதியான் என்ற தெய்வத்தின் திருவருள் அவருக்கு கிடைத்துள்ளது. பூசலார் நாயனார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தால் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்ததுபோல இவரும் மனத்தால் தினமும் சந்நிதியானை வழிபட்டு மானசீகமாக அவனது திருவருளைப் பெற்று வருகின்றார். இவருடைய பெயர் திருமதி சம்பந்தன் சொந்த இடம் நல்லூர். தற்பொழுது கனடாவில் ரொரன்றோவில் டவுன்ரவுனில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தொண்டைமானாற்றில் அமைந்துள்ள ஆற்றங்கரையானுடைய ஆலயத்திற்கு நேரடியாகச் செல்லாவிட்டாலும் அங்கே ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானச் செயற்பாடு போன்றவற்றிற்கு பங்களிப்பு செய்துகொண்டிருக்கிறார். ஆம் ஆலயத்திற்கு ஒருமுறை கூட வந்து தரிசனம் செய்யாத அடியவரையும் தனது மெய்யடியவராக ஏற்று கருணை செய்துவரும் புனிதம் நிறைந்த ஆலயம் சந்நிதியான் குடியிருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

## 9) கிறிஸ்தவ மதபோதகருக்கு கிட்டிய அழைப்பு

ஆலயம் எப்படி இருக்குமென்றோ எங்கே இருக்கிறதென்றோ ஆலயத்தைப் பற்றி எதுவும் அறிந்திராத அன்பர்களுக்கு கூட சந்நிதியான் கனவுகள் காட்சிகள் மூலம் வெளிப்பட்டு அவர்களுக்கு அபயமளித்து அருள்பாலிக்கின்ற நிகழ்வுகளும் ஏராளம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவர் ஒரு கிறிஸ்தவ மதபோதகர். மட்டக்களப்பில் பாதிரியாராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இவருக்கும் ஒரு நாள் சந்நிதியான் கனவிலே காட்சி கொடுத்துள்ளான். அதுமட்டுமல்ல சந்நிதிக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்ததுடன் அங்கே குறிப்பிட்ட இடத்தில் பிரசாதம் இருக்கிறது. அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு அவருக்கு கனவிலே அருள்வாக்கு கூறியுள்ளான். பாதிரியார் மட்டக்களப்பிலிருந்து இங்கேவந்து சந்நிதியான் கனவில் காட்டிய அடையாளத்தின்படி ஆலயத்தின் தெற்குப் பகுதிக்கு சென்றுள்ளார். அவ்வாறு சென்றபின் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பாக கனவிலே வெளிப்பட்ட அந்த கல்லினை இனம்கண்டு அந்த கல்லினை கிளப்பிப் பார்த்துள்ளார். ஆம் என்ன அதிசயம். அங்கே சந்நிதியானுடைய புனிதமான திருநீறு பிரசாதமாக அவருக்காக அங்கே வைக்கப்பட்டிருந்தது. பாதிரியாருக்கு சந்நிதியானுடைய முற்பிறப்பு தொடர்பு போலும் இப்பிறப்பில் சந்நிதியானே அவரைத் தேடிச் சென்றுள்ளான்.

அடியேன் யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த காலகட்டம். 2002 ஆம் ஆண்டு என நினைக்கின்றேன். தொண்டைமானாறு, வளலாய் அச்சுவேலி போன்ற பகுதிகளுக்கு பொறுப்புடைய கிருஸ்தவ சபையிலிருந்து ஒரு கிருஸ்தவப் பாதிரியார் எமது பாடசாலைக்கு வருகை தந்திருந்தார். கிருஸ்தவ மிஷனரியினால் ஆரம்பித்து நடாத்தப்பட்ட ஆரம்ப பாடசாலை ஒன்று தொண்டைமானாறு கிராமத்தில் இருந்தது. பின்பு அது எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்டதுடன் அதற்குரிய நிலமும் எமது கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் இருந்துவந்தது. அதனைப் பார்வையிட்டுச் செல்வதற்காக வந்திருந்த அந்த கிருஸ்தவ பாதிரியார் என்னுடன் மிகவும் நட்பு ரீதியாக உரையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது தொண்டைமானாறு கிராமத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் பற்றியும் உரையாடும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை ஏற்பட்டது. அந்த உரையாடலின் நடுவில் அந்த பாதிரியார் ''நீங்கள் மட்டுமல்ல நானும் சந்நிதி முருகனை வழிபட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். முக்கியமாக இந்த பாதைகளால் சென்றுவரும் பொழுதெல்லாம் அவரை வணங்காமல் நான் சென்றதில்லை'' என என்னிடம் குறிப்பிட்டார். அவரது சொந்த இடம் இந்த ஆலயம் அமைந்திருக்கும் பகுதிக்கு அண்மையிலுள்ள வளலாய் பகுதியாகும். மதம் என்பதைக் கடந்து மானிடராக, ஆன்மீக உணர்வுள்ளவராக அவரை காணமுடிந்தது. ஆம் சந்நிதியானின் திருவருளின் சிறப்பை தான் நன்கு உணர்ந்துள்ளதால் தான் தனது இளமைக் காலத்திலிருந்து சந்நிதி முருகனை வழிபட்டு வருவதை விபரமாக அடியேனிடம் எடுத்துக்கூறினார்.

2016ஆம் ஆண்டு ஒரு இஸ்லாமிய அன்பர் சந்நிதிக்கு வந்து கற்பூரம் ஏற்றி சந்நிதியானை மனமுருகி வழிபட்டுச் சென்ற நிகழ்வையும் ஆலயத்தில் உள்ள சில அன்பர்கள் அடியேனுடன் பகிர்ந்துகொண்டனர். ஆம் மதம் என்ற குறுகிய வட்டத்திற்கு அப்பால் சென்று ஆண்டவனின் அருள் வேண்டி வணங்குகின்ற எல்லா மக்களுக்கும் புனிதமான ஸ்தலமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

## 10) அறுபத்து மூவர் வழிபாடு

எமது சமயம் தொடர்ந்து சிறப்பாக வாழ்வதற்கும், வளர்வதற்கும் வழிகாட்டிச் சென்றவர்கள் நாயன்மார்கள். ஆன்மீக ஈடேற்றத்தை விரும்புகின்ற ஆன்மாக் களுக்கு ஒவ்வொரு நாயன்மார்களது வாழ்க்கை வரலாறும் அரிய பொக்கிஷமாகப் பயன்படக்கூடியது. இறைவன் திருவடியை அடைந்த இந்த நாயன்மார்களுக்கும் பிரசித்திபெற்ற சிவாலயங்கள் தோறும் தனித்தனி விக்கிரகங்கள் அமைக்கப் பட்டிருப்பதைக் காணமுடியும்.

இவ்வாறு தனித்தனி விக்கிரகங்கள் அமைக்கப்படாவிட்டாலும் தினமும் இந்த அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் அமுது படைத்து பூசை நடைபெறுகின்ற சிறப்பும் புனிதமும் நிறைந்த ஆலயம்தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும். அதுவும் சாதாரணமாக அல்ல சந்நிதி முருகனுக்கு அமுது படைப்பது போலவே இந்த அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் ஒரே இடத்தில் ஒரே விதமாக நைவேத்தியமாக ஆலம் இலைகளில் அமுது படைக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல இதனை இங்கே இவ்வாறு படைத்து வழிபடுமாறு மருதர் கதிர்காமரைக் கேட்டுக்கொண்டதே சந்நிதி வேற்பெருமான்தான். என்ன அதிசயம்! என்ன அற்புதம்!

ஆம் ''நான் அறுபத்திமூவருடன் வருவேன். எனக்கும் அந்த அறுபத்து மூவருக்கும் உனக்குமாக அறுபத்திஐந்து ஆலம் இலைகளில் அமுது படைத்து வழிபாடு செய்'' என முருகப்பெருமான் மருதர் கதிர்காமரைக் கேட்டுக்கொண்டார். அந்த அருள் கட்டளைக்கு இணங்கவே மருதர் கதிர்காமருடைய ஏழாவது சந்ததி தொடருகின்ற இக்காலம்வரை தினமும் இந்த ஆலயத்தில் இவ்விதமாக அறுபத்திஐந்து ஆலம் இலைகளில் அமுது படைத்து வழிபாடு நடாத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. இந்த ஆலயத்திற்கு வந்து பூசையில் பங்குபற்றி வழிபடுகின்ற அடியவர்கள், அவர்கள் அறிந்தோ அறியாமலோ 63 நாயன்மார்களையும் வழிபடுகின்ற பேறு பெற்றவர்களாகின்றார்கள். மேலும் இந்த அறுபத்து ஐந்து ஆலம் இலை அமுது தான் இன்றுவரை அடியவர்களது நோய் தீர்க்கும் மருந்தாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எல்லாம் சந்நிதியானது கருணையாகும். எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா என்று பாரதியார் பாடியது போல அடியவர்கள் மீது எத்தனை கோடி கருணை கொண்டுள்ளான் சந்நிதி முருகன் என்ற நிதர்சனமான உண்மையை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறதல்லவா?

## 11) தூய்மை

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தூய்மைக்கு முதலிடம் வழங்கப்படுகிறது. மருதர் கதிர்காமர் காலம் தொடக்கம் இன்றுவரை எல்லா வகையான செயற்பாடுகளிலும் தூய்மை என்பது இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

அன்றைய தினம் பூசையை மேற்கொள்கின்ற பூசகர் பூசையின்பொழுது அணியும் வேட்டி சால்வை போன்ற வஸ்திரங்கள், மௌனப்பூசையை நடாத்துவதற்கு வசதியாக வாயை மறைத்துக்கட்டும் மூக்குத்துண்டு என அழைக்கப்படுகின்ற வெள்ளைத்துணி உருத்திராக்கம் மாலைகள் போன்றவற்றை ஓலைப் பெட்டியில் வைத்து மூடி வீட்டிலிருந்து ஆலயத்திற்கு எடுத்து வருவார். இதனைப் பூசைப்பெட்டி என அழைக்கின்றனர். வீட்டில் நீராடிவிட்டு வந்தாலும் ஆலயத்திற்கு வந்து ஆலயத்தில் மீண்டும் நீராடிய பின்பே பிரதம பூசகர் பூசைப் பெட்டியிலுள்ள ஆடை ஆபரணங்களை அணிந்து பூசையை மேற்கொள்வார். மேலும் ஒரு நாளைக்கு ஐந்து முறை பூசை நடாத்துவதென்றால் ஐந்து தடவைகளும் நீராடி பின்புதான் பூசையை நடாத்தும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இங்கே மந்திரம் ஓதப்படுவதில்லை. வாய்கட்டிய நிலையில் மிகவும் உச்சமாக உள்ளத்தால் உருகி மௌன மொழியால் சந்நிதியானை துதித்த வண்ணமே பூசகர்கள் பூசையை மேற்கொள்வார்கள். இவ்வாறு நடைபெறுகின்ற அந்த சந்தர்ப்பத்தில் பூசகரும் அவரை அறியாமலே புனிதம்பெற்றவராக மாறிவிடுகின்றார். இதனால்தான் பூசை நிறைவடைந்து திருநீற்றுத் தட்டுடன் வருகின்ற பூசகரை சந்நிதியானாகக் கருதி அவரது பாதங்களை தொட்டு வணங்கும் நடைமுறையை அடியார்கள் மேற்கொள்வதை அங்கே காணமுடியும்.

அது மட்டுமல்ல பூசையை நடாத்துவதற்கென பிரதம பூசகரோ அல்லது அவருக்கு உதவுகின்ற உதவிப் பூசகர்களோ வீட்டிலிருந்து ஆலயத்திற்கு வந்துவிட்டால் அன்று பூசை முடியும்வரை ஆலயத்தின் குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே நடமாடுவதற்கு அவர்கள் கடமைப்பட்டவர்கள். அந்த குறிப்பிட்ட எல்லையை விட்டு பூசகர்கள் எவரும் வெளியே செல்லமாட்டார்கள். இன்றும் இந்த மரபு இங்கே அவர்களால் பேணப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேத்தியம் தயார் செய்வதற்கு மடைப்பள்ளிக்குள் இன்னொரு பிரத்தியேகமான மடப்பள்ளி காணப்படுகிறது. அதற்குள் தகுதிபெற்ற ஆண் பூசகர்களாலேயே சந்நிதியானது நைவேத்தியம் தயார் செய்யப்படும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட நைவேத்தியம் கதிர்காமத்தைப் போல மிகவும் பவ்வியமாகவும் தூய்மையாகவும் ஆலயத்திற்குள் எடுத்துச்செல்லப்படும். அங்கே ஆலம் இலை அமுது ஆலம் இலைகளிலும் ஏனையவை வாழை இலைகளிலும் படைக்கப்படுகிறது. ஆம் இந்த ஆலயத்தில் இவ்வாறு எல்லா வகையான செயற்பாடுகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான தூய்மையான செயற்பாடுகளையே சந்நிதி முருகன் உவகையுடன் ஏற்றுக்கொள்கின்றான். இவ்வாறான தூய்மையான செயற்பாடுகளில் இருந்து பூசகர்கள் எப்பொழுதும் விலகுவதில்லை. அவ்வாறு விலக நேர்ந்தால் சந்நிதியானே கனவுகள் காட்சிகள் மூலம் அவர்களை நெறிப்படுத்தும் திருவிளையாடல்களை நிகழ்த்திவிடுவான்.

இங்கே நவீன மாற்றங்களுக்கு அதிக இடம் வழங்காமல் இயற்கை சமநிலையை பேணக்கூடிய பழைய மரபுகளையே இன்றும் பெருமளவு பேணி வருகின்றனர். ஆலம் இலை, வாழை இலை, வாழைத்தடல் என்பவை பயன்படுத்தப்படுகின்றன. மடப்பள்ளிக் கழிவுகள் பசு மாடுகளுக்கு உணவாக பயன்படுத்தப்படுகிறது. திருவிழாவின் நிறைவில் அடியார்கள் திருவிழாவில் நூற்றுக்கு மேற்பட்ட ஆலயத் தொண்டர்களுக்கு வழங்கப்படும் பிரசாதம் இன்றும் பனை ஓலைப் பெட்டிகளிலேயே வழங்கப்பட்டுவருகிறது. கதிர்காமத்தில் மாணிக்க கங்கையிருப்பது போல இங்கேயுள்ள தொண்டைமானாறு ஆற்றில் அடியார்கள் தீர்த்தமாடி நிறைவடையும் காட்சியையும் நாம் காணமுடியும்.

இதேபோன்று நவநாகரிக உடையணிந்து வருகின்ற அடியவர்களையும் நாம் இங்கே காணமுடியாது. மெய்யான பக்தியுடன் வருகின்ற மெய்யடியார் களையே நாம் இங்கே காண்பது அனைவருக்கும் நிறைவளிக்கும் அம்சமாக உள்ளது.

## கதிர்காமத்தை காணப் பக்தி, சந்நிதியை எண்ணப் பக்தி

1937ம் ஆண்டு ஐப்பசி மாதம் திரு.க. இராமச்சந்திரன் என்பவரால் கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திர சாலையில் தொண்டைமானாற்று செல்வச்சந்நிதி வடிவேலர் பதிகம் என்ற நூல் பதிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இது பாடல்களாக வெளிவந்த ஒரு சிறிய நூலாகும். இதனை வெளியீடு செய்த க. இராமச்சந்திரன் அவர்கள் அந்த நூலின் முகவுரையில் தனது அனுபவத்தை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

எனது நான்காவது வயதில் கேள்விப்பட்ட இச்சந்நிதியைத் தரிசிக்கும் பாக்கியம் நாற்பதாவது வயதில்தான் கிடைத்தது. எனது வினை மாறுங்காலம் எட்டும் வரையில் இப்புண்ணிய யாத்திரை கிட்டவில்லைப் போலும். இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பல ஸ்தலங்களைப் பன்முறை தரிசித்த எமது கண்களுக்கு சந்நிதியில் முதல் முதல் பெற்ற காட்சி ஓர் புது உணர்ச்சியை உண்டாக்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தில்லையைக் காண முத்தி அருணையை நினைக்க முத்தி'' என்ற புராணக் கூற்றை ஒட்டிக் ''கதிர்காமத்தைக் காணப் பக்தி, சந்நிதியை எண்ணப் பக்தி'' என்று விசேடித்துக் கூற என் இருதயம் தூண்டிற்று.

பின்பு, யான் அடிக்கடி சென்று தரிசித்து வரும் அனுபவத்தில் என்னை முழுவதுமே தனக்கு அடிமையாக்கிக் கொண்ட அப்பெருமானின் மீது சில தோத்திரங்களை இயற்றித் துதிப்பதற்கு விரும்பினேன் என சந்நிதியானின் புதுமையை அவர் விபரித்து செல்கின்றார்.

ஆம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனிதம் அதன் சிறப்புக்கள், அங்கே அடியவர்கள் பெறும் அற்புத அனுபவங்கள் இவை எல்லாம் வார்த்தைகளால் அளவிட முடியாதவையாகும்.

**சந்நிதியானிடம் பாத யாத்திரை மேற்கொண்டு வந்த சகோதர இனத்தவர்**

2014ஆம் ஆண்டு தொடக்கம் நந்தசிறி பெர்னான்டோ என்ற சகோதர இனத்தவர் சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு தொடர்ந்து பாத யாத்திரை மேற்கொண்டு வருகின்றார். இதன் தொடர்ச்சியாக இந்த வருட பாத யாத்திரையை வைகாசி மாதம் 17ம் திகதி ஆரம்பித்துள்ளார். இது ஒரு புதுமையான விடயம் அல்ல என சிலர் நினைக்கலாம்.



ஆனால் அடியேன் இங்கே குறிப்பிடுவது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொடர்பாக இதுவரை அடியவர் எவரும் மேற்கொள்ளாத ஆன்மிகச் செயற்பாட்டை சகோதர இனத்தவரான இந்த நந்தசிறி பெர்னான்டோ மேற்கொண்டுள்ள செயற்பாடு பற்றியதாகும். ஆம் 2017ஆம் ஆண்டு நந்தசிறி பெர்னான்டோ தனது வசிப்பிடமான தெகிவளையிலிருந்து தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகனிடம் தனியாக பாத யாத்திரை மேற்கொண்டு வந்துள்ளார். இவர் ஏறத்தாழ எண்ணூறு கிலோ மீற்றர் தூரத்தை கால்நடையாக இருபத்தைந்து நாட்கள் நடந்து சந்நிதியானிடம் வந்து சேர்ந்துள்ளார். இவர் தனது இருப்பிடமான தெகிவளையிலிருந்து மாதம்பை நுவரெலியாவுக்கு ஊடாக கண்டியை அடைந்துள்ளார். கண்டியிலிருந்து மாத்தளையூடாக அனுராதபுரத்தை அடைந்து பின்பு A9 பாதையூடாக பல ஆலயங்களையும் தரிசித்து சந்நிதியானிடம் வந்தடைந்துள்ளார்.

2017ஆம் ஆண்டு இவ்வாறு சந்நிதியானிடம் வந்துசேர்ந்தவர் திரும்பவும் 2017 ஆம் ஆண்டு வேல்சாமி சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு புறப்பட்ட பாத யாத்திரையில் இணைந்து கதிர்காமத்திற்கு பாத யாத்திரை சென்றுள்ளார். ஆம் இலங்கையின் தெற்கு பகுதியிலிருந்து வடக்கேயுள்ள சந்நிதியானிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் தொடர்ந்து வடக்கேயுள்ள சந்நிதியிலிருந்து தெற்கேயுள்ள கதிர்காமத்திற்கு தொடராக யாத்திரையை மேற்கொண்டு தனது நேர்த்தியை நிறைவுசெய்துள்ளார்.

2018ஆம் ஆண்டும் வழமைபோல நந்தசிறி பெர்னான்டோ சந்நிதியிலிருந்து கதிர்காம யாத்திரை மேற்கொள்வதற்காக சந்நிதிக்கு வந்து ஆலயச் சூழலில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது மே மாதம் 15ம் 16ம் திகதிகளில் அவர் சந்நிதியில் தங்கியிருந்த இடத்திற்கு சென்று அவரை சந்தித்து உரையாடினேன். பாத யாத்திரையின் பொழுது தான் எதிர்நோக்கிய சவால்கள், பிரச்சனைகள், ஆதரவளித்த மனித நேயம் கொண்ட மனிதர்கள், அதே நேரம் நான் யாத்திரிகன் என தெரிந்தும் தமது வருமானத்தில் மட்டும் குறியாக இருந்த சில மனிதர்கள் என பல வகைப்பட்ட அனுபவங்களையும் அன்பாகவும் பண்பாகவும் பகிர்ந்து கொண்டார்கள்.

அமைதியான முறையிலும், தியான வழியிலும் இறைவனை வணங்கு வதையே இவர் பெரிதும் விரும்புகின்றார். இவர் பாத யாத்திரை செல்லும் பாதையிலுள்ள ஆலயங்களில் தங்கியிருக்கும் பொழுது இவ்வாறான வழிபாட்டு முறைகளையே மேற்கொண்டு வருகின்றார். அசரீரியாகவும், கனவுகளாகவும் அற்புத நிகழ்வுகளாகவும் தனக்கு கிடைத்துவருகின்ற இறையருளின் நிறைவு பற்றியும் அடக்கமாக அடியேனிடம் எடுத்துக்கூறினார்கள்.

மது, மாமிசம் என்பவற்றில் மிகுந்த நாட்டமுள்ளவராக வாழ்ந்துவந்த பெர்னான்டோ இப்பொழுது அவற்றை முழுமையாகக் கைவிட்டுள்ளார். சந்நிதி யிலிருந்து கதிர்காமத்திற்கு யாத்திரை மேற்கொள்ளும் ஐம்பதுக்கும் மேற்பட்ட யாத்திரிகர்களுக்கு தேவையான பிரயாணப் பை, படுக்கை உட்பட பல பொருட்களை வழங்கி சந்நிதியில் தான தர்ம செயற்பாட்டிலும் ஈடுபட்டுவருகின்றார். ஆம் சந்நிதியான் திருவருளை என்றும் கண்டிராத பெர்னாண்டோ இன்று சந்நிதியானை கண்கண்ட தெய்வமாக உணர்ந்து வழிபட்டு வருகின்றார். அதுமட்டுமல்ல சந்நிதியானது திருவருளிற்கும் பாத்திரமாகியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்கள்

அநாதியான எமது சமயத்தில் இறைவனே ஒரு சித்தராகவும் சித்தருக்கெல்லாம் மூலமான சித்தராகவும் இருந்து செயற்பட்ட சிறப்பை எமது சமயம் வெளிப்படுத்துகின்றது. இதேபோல முழுமுதற் கடவுளான சிவன் குருந்த மர நிழலில் குருவாக வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்ட அற்புத வரலாற்றையும் பார்க்கின்றோம். சைவசமயம் தொடர்பான பல்வேறுபட்ட நூல்களில் வெவ்வேறு காலப்பகுதிகளில் வாழ்ந்த சித்தர்கள் பற்றிய விபரங்கள் இடம்பெற்றுள்ளதை சமய அறிஞர்கள் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி வருகின்றனர். இதில் அட்டமா சித்திகள் பெற்ற பதினெண் சித்தர்கள் பற்றிய விபரங்களும் முக்கியமானவை. அந்த பதினெண் சித்தர்களில் திருமூலர், இராமதேவ சித்தர், அகத்தியர், இடைக்காடர், தன்வந்திரி போன்றவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஒரு சிவயோகியாக இருந்த திருமூலர் பிராகாமியம் என அழைக்கப்படும் கூடுவிட்டு கூடு பாயும் சித்தினை பயன்படுத்தி மூலன் என்ற இடையனின் இறந்த உடம்புக்குள் புகுந்து இடையனாக உருவம் பெறுகின்றார். இவ்வாறு மூலனாக இருந்த அவர் பாடிய வேத, ஆகம கருத்துக்கள் உள்ளடங்கிய 3000 இற்கு மேற்பட்ட பாடல்களே திருமந்திரப் பாடல்களாகும்.

இவ்வாறு எமது சயமத்தில் சித்தர்களுக்கு தனித்துவமான சிறப்புகள் உள்ளன. புராதன காலத்திலிருந்து காலத்திற்கு காலம் வாழ்ந்துவந்த சித்தர்களின் விபரங்களையும் அவர்களின் சிறப்புக்களையும் செயற்பாடுகளையும் எமது சமயத்தவர்கள் அறிந்தே வந்துள்ளனர். அதேநேரம் பிற்காலத்தில் கடல்வழியாக நாடுகளுக்கிடையே தொடர்புகள் ஏற்பட்டன. வியாபாரம், யாத்திரை போன்றவற்றிற்காக இந்தியா போன்ற கீழைத்தேயங்களுக்கு ஏனைய நாடுகளிலிருந்து பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு கடல் பிரயாணங்கள் செய்து வந்தவர்கள் மூலம் அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த சித்தர்கள் பற்றியும் அவர்களின் அபூர்வ திறமைகள், சிறப்புக்கள் பற்றியும் ஏனைய நாட்டவர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன. சீன தேசத்தவர்கள் இஸ்லாமியர் மற்றும் ஐரோப்பியர்கள் என கடல்கடந்த நாட்டவர்களும் இந்த சித்தர்களுடைய சித்துக்கள் பற்றி அறிந்துகொண்டது மட்டுமன்றி சித்தர்கள் தயாரித்த மருந்துகள் மற்றும் மூலிகைகளையும் பயன்படுத்தி பயனடைந்துமுள்ளனர். 14ம் நூற்றாண்டில் இலங்கை உட்பட பல நாடுகளுக்கு புனித யாத்திரை மேற்கொண்ட இஸ்லாமிய யாத்திரிகரான இபன் பட்டுட்டா அக்காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த சித்தர்கள் பற்றியும், சித்தர்களை தான் நேரடியாக சந்தித்த அனுபவம் பற்றியும் தனது யாத்திரைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சராசரி மனிதர்களை விட ஆன்மீக ரீதியாக ஞான நிலையில் உள்ளவர்கள் மற்றும் யோகக் கலைகளில் உயர்வான நிலையில் உள்ளவர்களை இன்று சமுகம் சித்தர்கள், ஞானிகள், யோகிகள், அருளாளர்கள் என பல்வேறு பெயர்களால் அழைப்பதை நாம் பார்க்கின்றோம். ஆம் இவர்கள் சராசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களைவிட ஆன்மீக ரீதியாக ஞானநிலை அடைந்தவர்களாக காணப்படலாம். அல்லது மருத்துவம், வாக்குக் கூறுதல் போன்ற சில யோகக் கலைகளில் இவர்கள் உயர்வான பக்குவநிலையில் காணப்படலாம். இதுபோன்ற விடயப் பொருள்கள் இங்கே சமூகத்தால் முக்கியமாக நோக்கப்படுகிறது. பால சிவ கடாட்சம் என்ற கட்டுரையாளர் சித்தர்களாக அழைக்கப்படுகின்றவர்கள், அவர்கள் அழைக்கப்படுகின்ற பெயர்களுக்கு ஏற்ற வகையில் சிற்சில விடயங்களில் சிறப்பான திறமையுள்ளவர்களாக நோக்கப்படலாம் என்றும் யோகக் கலைகளில் அதிதீவிர ஈடுபாடு கொண்டவர்களே யோகிகள் என்ற பெயருக்கு உரித்துடையவர்கள் எனவும் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

## புராதன இலங்கையில் சித்தர்கள்

புராதன காலத்திலிருந்து இலங்கையின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என எல்லாப் பகுதிகளிலும் சைவ மக்கள் பரந்து வாழ்ந்துள்ளனர். இதேபோன்று கி.முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தொன்மையும் கீர்த்தியும் மிக்க பல சைவ ஆலயங்கள் காணப்பட்டுள்ளன. இவ்வாறு புராதன காலத்தில் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் காணப்பட்ட சைவ ஆலயங்களில் அதிகமானவை பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு காரணங்களால் தற்பொழுது அழிவடைந்துவிட்டன. அண்மைக்காலம் வரை அவற்றின் சிதைவுகளும் எச்சங்களும் மட்டுமே எஞ்சியிருந்தன. அந்த எச்சங்களும் சிதைவுகளும் கூட பல்வேறு காரணங்களால் இன்று இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன.

ஆனாலும் புராதன காலத்திலிருந்து கதிர்காமம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம் போன்ற ஆலயங்கள் இன்றும் தொடர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருப்பதால் அவற்றின் மகிமையை நாம் இன்றுவரை தொடர்ந்து அறிந்துகொள்ள முடிகிறது. அது மட்டுமல்ல மிகவும் தொன்மையான காலத்திலிருந்து இலங்கையில் சைவ ஆலயங்கள் இருந்துவருகின்றன என்பதற்கான ஆணித்தரமான ஆதாரங்களாகவும் மேற்குறிப்பிட்ட இந்த ஆலயங்கள் இன்று எமக்கு அரிய சான்றுகளாகவும் காணப்படுகின்றன.

## தாந்தா மலை முருகன் ஆலயம்

இலங்கையில் அதிகமான சித்தர்கள் தங்கி வழிபாடு செய்த ஒரு ஆலயம் தாந்தாமலை முருகன் ஆலயம். இது மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பகுதியில் மலைகள் குன்றுகள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ள எளிமையான ஆனால் கீர்த்தி மிக்க ஆலயமாகும்.

தாந்தாமலை முருகன் என்ற பெயரே சித்தர்களால் வழங்கப்பட்ட பெயராக உள்ளது. முருகப்பெருமானிடம் ஒரு சித்தர் குறிப்பிட்ட ஒரு கோரிக்கையை வேண்டுதல் செய்து பதினான்கு நாட்கள் ''தா'' என தியானத்தில் இருந்துள்ளார். பதினைந்தாம் நாள் முருகப்பெருமான் அந்த சித்தருடைய உண்மையான வேண்டுதலை ஏற்று ''இந்தா'' என அதனை வழங்கியுள்ளார். இதனால் தா + இந்தா = தாந்தா என்றும் மலையில் இருக்கும் முருகன் என்பதால் தாந்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை முருகன் என்றும் பெயர் வந்ததாக தற்பொழுது இந்த ஆலயத்தின் குருக்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் புவனசிங்கம் நவரூபன் குருக்கள் அடியேனிடம் தெரிவித்தார்கள்.

தாந்தாமலை முருகன் ஆலயத்தில் சித்தர்கள் வாழ்ந்தது மட்டுமன்றி முருகப்பெருமானை வேண்டி அடியார்களுக்கு ஏராளம் அற்புதங்களையும் இந்த சித்தர்கள் நிகழ்த்தியுள்ளார்கள். தாந்தாமலை முருகன் கிருபையால் வாய் பேசாத குழந்தைகளை பேசவைப்பதில் இங்கேயுள்ள சித்தர்கள் பிரபல்யமானவர் களாக இருந்துள்ளனர். இவ்வாறு 46 குழந்தைகள் பயனடைந்ததாக அறிய முடிகிறது.



1956ஆம் ஆண்டு கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து பாரிப்போடி என்ற சாமி கதிர்காம யாத்திரை மேற்கொண்டுள்ளார். அப்பொழுது நெருக்கடி நிலை நிலவியுள்ளது. இந்த நிலையில் பாரிப்போடி சாமிக்கு முருகப்பெருமான் கதிர்காமத்திற்கு பதிலாக தாந்தா மலைக்கு யாத்திரை செய்யும்படி ஆற்றுப்படுத்தியுள்ளார். அதன்படி பாரிப்போடி சாமிகள் தாந்தா மலை முருகனிடம் யாத்திரையாக வந்து சேர்ந்துள்ளார். அதன்பின் இங்கேயே நீண்ட காலம் சித்தராகவும் வாழ்ந்துள்ளார். சித்தர்கள் உறைவதற்கு மிகப் பொருத்தமான சூழல் உள்ள இந்த ஆலயம் மிகப் புராதன கால ஆலயங் களில் ஒன்றாக உள்ளது. 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இவ்வாலயத்தினை தரிசிக்க சென்றபொழுது இதனை நேரடியாக அவதானிக்க முடிந்தது. ஏராளம் புதைபொருட் சின்னங்கள் இங்கே கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. உற்சவ காலத்தில் அயலில் உள்ள சிங்கள கிராமங்களான 36ம் கிராமம், வைகலை போன்றவற்றிலிருந்து மற்றும் கொழும்பு, மாத்தறை, கண்டி மாவட்டங்களிலிருந்தும் ஏராளம் சிங்கள அடியார்கள் இங்கே வந்து தரிசனம் செய்கின்றனர். அதேநேரம் உற்சவ காலத்தில் கொக்கட்டிசோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான தமிழ் அடியார்கள் பாத யாத்திரை மேற்கொண்டு வருகின்ற செயற்பாடும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள தனித்தமிழ் கிராமமான பன்சேனை கிராமம் பற்றியும் இவ்விடத்தில் வெளிப்படுத்துவது அவசியமானது. இக்கிராமம் 2007 ஆம் ஆண்டு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இராணுவத்தாலும் இறக்கிவிடப்பட்ட யானைகளாலும் முழுமையாக அழிக்கப்பட்ட கிராமம். தற்பொழுது மீண்டு எழுந்து வரும் இந்த கிராமத்திற்கும் அடியேன் சென்று சில நாட்கள் அங்கேயே தங்கியிருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. கனடாவிலிருந்து அன்புநெறி என்ற அமைப்பு இந்த கிராமத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்துவருவதை காணமுடிகிறது. இதுபோன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைக் கிராமங்களின் நலனில் அக்கறை செலுத்தி கிராமத்திற்கும் அங்கே வாழும் மக்களுக்கும் அபயம் அளிக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். சமயம் சமயத்திற்காக மட்டுமன்றி சமுகத்திற்காகவும் செயற்பட வேண்டிய காலம் இதுவாகும்.

## தென்னாவரம் இந்துக்கோவில்

இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்கு பகுதிகளில் இந்து ஆலயங்கள் மிகவும் தொன்மையான காலம் தொடக்கம் இருந்து வருகின்றன என்பது ஏற்கனவே நாம் அறிந்த விடயங்களே. இதேபோன்று இலங்கையின் தெற்குப்பகுதியிலும் மிகமிக புராதன காலத்திலிருந்தே இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன என்பதை இவ்விடத்தில் வெளிப்படுத்துவது பயனுடையதாகும். இன்று மத இன வேறுபாடு இன்றி இலங்கையிலுள்ள எல்லா மக்களும் வழிபட்டு வருகின்ற ஒரு ஆலயம் இலங்கையின் தெற்கே மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள விஷ்ணு ஆலயமாகும். சிங்கள மக்கள் இதனை தற்பொழுது தெவுந்தர தெய்வம் என அழைக்கின்றனர். காரணம் இந்த விஷ்ணு ஆலயம் இலங்கையின் தெற்கு முனையான தெவுந்தர முனை அல்லது தேவுந்தர முனை என்ற பகுதியில் அமைந்திருப்பதுடன் தெவுந்தர முனை தென்னாவரம் என அழைக்கப்பட்டுள்ளது.

ஆனால் புராதன வரலாற்றில் தெவுந்தர என்ற இந்த இடம் தென்னாவரம் என அழைக்கப்பட்டுள்ளது. எனவே இந்த கோயில் புராதன வரலாற்றில் இடத்தின் பெயரை அடைமொழியாகக் கொண்டு தென்னாவரம் கோயில் என அழைக்கப்பட்டு வந்துள்ளது.



இந்த ஆலயம் இப்பொழுது சகோதர இனத்தவரான சிங்கள இனத்தவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. சிங்கள இனத்தை சேர்ந்த சிங்கள அடியவர்கள் மட்டுமன்றி எல்லா இனத்தவர்களும் மிகுந்த பயபக்தியுடனும், மிகுந்த நம்பிக்கையுடனும் விஷ்ணு, சிவன் உட்பட இங்கு உள்ள தெய்வங்களை வழிபட்டு ஆன்மீக ஈடேற்றம் பெற்று வருகின்றனர். இது ஒரு தனி ஆலயம் அல்ல கடற்கரை ஓரத்திலிருந்து உள்பகுதிவரை பல்வேறு இந்து தெய்வங்களின் பலநூற்றுக் கணக்கான விக்கிரகங்களை தன்னகத்தே கொண்டு அமைந்திருக்கும் பரந்து விரிந்திருக்கும் ஒரு ஆலய தொகுதியாகும். விஷ்ணு, சிவன் உட்பட பிரதான சந்நிதானங்களுக்கு (கோயில்களுக்கு) இன்றும் பிராமண இனத்தவர்களே இந்து சைவ முறைப்படி வேதம் ஓதி பூசைகளை மேற்கொண்டு வருகின்றனர். இலங்கையின் தெற்கு பகுதியிலிருக்கும் பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், இந்துக்கள் மட்டுமன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அங்கே செல்கின்ற எல்லா மதத்தவர்களும் இந்த ஆலயத்தை வழிபட்டு வருகின்றனர். இலங்கையின் தெற்கு பகுதியில் வாழுகின்ற இஸ்லாமிய அன்பர் ஒருவரை மிக அண்மையில் டுபாய் விமான நிலையத்தில் சந்தித்து ஆறுதலாக உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது அவர் இலங்கையின் தென்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து இன மக்களில் ஒருமுறையேனும் இந்த ஆலயத்திற்கு சென்று வணங்காதவர்கள் மிகமிக அரிதாகவே இருப்பர் என்ற யதார்த்தத்தை அடியேனுக்கு வெளிப்படுத்தினார்.

இவ்வாறு இன்றும் இலங்கையின் தென்பகுதியில் பிரபல்யம் பெற்றதாக விளங்கிக் கொண்டிருக்கும் தேவுந்தர விஷ்ணு ஆலயத்தின் வரலாற்று பழமையை நாம் பின்னோக்கி பார்ப்பது மிக அவசியமானது

**1) கிரேக்க தொடர்பு :**

ஆரம்பகால கிரேக்க வரைபடங்களில் இலங்கையின் தெற்கு கடற்கரை யோரத்தில் ஒரு இந்து ஆலயம் இருப்பது வெளிப்படுத்தப்படுகிறது. கி.மு. 98இல் தொலமியினால் இந்நகரம் ''தாகரை'' அல்லது ''தானா'' (சந்திரனுக்கு புனிதமானது) என்றும் குறிப்பிடப்படுகிறது. இதனை புவியியலாளர்கள் தென்னாவரம் கோயில் (தெவுந்தர விஷ்ணு கோவில்) என்று நம்புகின்றனர்.

**2) சீனத்தொடர்பு :**

இக்கோயில் இடத்தின் சிறப்பு பெயரை கொண்டதாக ''தென்னாவரம் கோயில்'' என்றே இது மிகவும் தொன்மையான காலத்திலிருந்து அழைக்கப்பட்டு வருவதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். தெற்கு ஆசிய நாடுகளுக்கு பட்டுப்பாதை வழியாக பிரயாணம் செய்த சீனக்கடற்படை தளபதி ஜெங்ஹே (Chinese Admiral Zheng he) 1409ஆம் ஆண்டில் காலி நகரில் நிறுவிய கல்வெட்டில் தென்னாவரம் கோயில் பிரதான கடவுளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இக் கல்வெட்டு தமிழ், சீனம், பாரசீகம் ஆகிய மூன்று மொழிகளில் மட்டுமே பொறிக்கப் பட்டுள்ளது. இந்த கல்வெட்டு 1911இல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் சீனத் தளபதி ஜெங்ஹே சீனமொழியில் புத்தருக்கும், தமிழ்மொழியில் தென்னாவர நாயனாருக்கும், பாரசீகத்தில் அல்லாவுக்கும் அவரது மரியாதைக்குரிய பக்தியுள்ள காணிக்கைகளைப் பதிவு செய்துள்ளார். இந்த தகவல்கள் யாவும் சீன வரலாற்றுப் பதிவுகளிலும் ஆவணப்படுத்தப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.



1911ஆம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் கண்டெடுக்கப்பட்ட மும்மொழிக் கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) **போர்த்துக்கேயர் கால தொடர்பு :**

போர்த்துக்கேயர் காலத்தில் ''இலங்கை தீவின் கோட்டைத் தாவரங்கள், பகோடாக்கள் மற்றும் முதலியன'' என்னும் புத்தகம் போத்துக்கேய மொழியில் வெளியிடப்பட்டது. அதிலும் இந்த ஆலயம் இடம்பெற்றுள்ளது.

4) **ஒல்லாந்தர்கால தொடர்பு :**

கண்டி அரசனால் கண்டியில் சிறைவைக்கப்பட்டிருந்த ஆங்கிலேயரான ரோபேட் நோக்சினால் இலங்கையின் வரலாறு தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டன. அது பின் நூலாகவும் வெளியிடப்பட்டது. அதில் ரோபேட் நோக்சினால் வரையப்பட்ட வரைபடத்திலும் தென்னாவரம் என்ற இந்த ஆலயப் பகுதி இடம்பெற்றுள்ளது.

ஆம் தற்பொழுதும், இலங்கையில் தெற்கில் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த விஷ்ணுகோயில் இலங்கையின் மிகமிக புராதன காலத்திலிருந்தே இந்துக்கோயில்கள் செயற்பட்டுக் கொண்டிருப்பதற்கான இன்னொரு ஆணித்தரமான ஆதாரமாக இருப்பதை வாசகர்கள் அறிந்துகொள்ள முடிகிறது. அத்துடன் இலங்கையில் இந்த விஷ்ணு கோவில் மிகவும் பிரபல்ய மானதும் பிரமாண்டமானதுமான கோவில்களுள் ஒன்றாகவும் இருந்துள்ளதுடன் தற்பொழுதும் இருந்துவருகிறது. இந்துக் கோயிலான இக் கோயிலுக்கு 1510ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த கோட்டை மன்னனான ஆறாம் விஜயபாகு நிலத்தைத் தானமாக வழங்கியுள்ளான். அந்தக் கல்வெட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி வரலாற்றில் இந்த விஷ்ணு ஆலயம் இந்து தமிழ் வணிகர்களினால் நிர்வாகம் செய்யப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வந்துள்ளது. மேலும் இது புராதன காலத்திலிருந்து ஒரு யாத்திரிகர் ஸ்தலமாகவும் இருந்துவருகிறது.

தனது கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக ''இலங்கையின் தென்பகுதியில் விஷ்ணு வழிபாடு'' என்ற தலைப்பில் ஓர் சிங்கள பேராசிரியர் ஆய்வுகள் மேற்கொண்டு ள்ளார். அதில் இந்த விஷ்ணு ஆலயம் தொடர்பான ஆலயத்தொகுதியில் கடமை செய்வதற்கு 500 இற்கு மேற்பட்ட தேவதாசிகள் கடமைபுரிந்தனர் எனவும் ஏராளம் சாதுக்கள் அல்லது சித்தர்கள் ஆலயச் சூழலில் வாழ்ந்தது பற்றியதுமான ஏராளம் விபரங்களை வெளியிட்டுள்ளார்.

ஆம் 15ம் நூற்றாண்டில் தெற்காசிய நாடுகளுக்கு பிரயாணம் செய்த சீனதேசத்து கடற்படைத்தளபதி தென்னாவரம் விஷ்ணு பெருமானுக்கு தமிழ் மொழியில் வணக்கம் செலுத்தி கல்வெட்டு பொறித்துள்ள விபரம் எமக்கு கிடைத்துள்ள ஒரு அரிய வரலாற்றுப் பொக்கிஷமான சான்றாகும். அத்துடன் தமிழ் வணிகர்களே அந்த ஆலயத்தின் நிர்வாகம், பராமரிப்பு என்பவற்றிற்கும் பொறுப்பாக இருந்துள்ளனர். அந்தளவுக்கு தமிழ் வணிகர்களும் தமிழ் மக்களும் இந்து மதமக்களாக அப்பகுதியில் வாழ்ந்துள்ளதும் வெளிப்படுகிறது. அத்துடன் வரலாற்று குறிப்புகளிலிருந்தும் சிங்கள பேராசிரியரின் ஆய்வுகளிலிருந்தும் ஏராளம் ஆண் சித்தர்களும் பெண் தேவதாசிகளும் இப்பகுதியில் வாழ்ந்து வந்ததும் எமக்கு ஆதாரத்துடன் வெளிப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் ஈழத்தில் புராதன காலத்தில் மதச் செயற்பாடுகளும் தவ வாழ்க்கைக்குரிய சூழல்களும் இன்று இருப்பதைவிட மிகச் சிறப்பாகக் காணப்பட்டுள்ளதால் இந்தியாவைப் போல இலங்கையிலும் சித்தர்கள் தாராளமாக வாழ்ந்திருப்பார்கள் என்பது வெளிப்படுகின்றது. ஆனாலும் 18ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் வாழ்ந்த சித்தர்கள் தொடர்பான விபரங்களையோ, ஆணித்தரமான ஆதாரங்களையோ பெறமுடியாதிருப்பது வருந்தத்தக்க விடயமாகவே உள்ளது.

கதிர்காமத்தில் பெறப்படுகின்ற திருநீறு கதிர்காமத்தில் காட்டுக்குள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் நிலத்தின்கீழ் இருந்து பெறப்படுகிறது. இயற்கையாக நிலத்தின் கீழ் வெட்டி எடுக்கப்பட்டு பின்பு அது சுத்தப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படுவதாக கதிர்காமத்து ஆலய பூசகர்களுடன் உரையாடும்பொழுது அறியமுடிந்தது. மேலும் இவ்வாறு திருநீறு வெட்டி எடுக்கப்படுகின்ற குறிப்பிட்ட பகுதி ஆதி காலத்தில் சித்தர்கள் ஞானிகள் ஓமம் வளர்த்து தவம் செய்து வாழ்ந்த புனிதமான பகுதி என தாம் நம்புவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஆம் புராதன இலங்கையிலும் சித்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு இவ்வாறு ஆன்மீக ரீதியானதும் நம்பிக்கையின் அடிப்படையிலானதுமான ஆதாரங்களை நாம் மேலும் தேடிப் பெற்றுக்கொள்வதே இப்பொழுது எமக்குள்ள ஒரே வழியாக உள்ளது.

ஆனால் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்தில் வாழ்ந்த சித்தர்கள் தொடர்பான தகவல்களை எம்மால் ஓரளவு பெறக்கூடியதாகவுள்ளது. 19ம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த சித்தராக வாழ்ந்த கடையிற்சுவாமிகள் இவர்களில் மிக முக்கியமான ஒரு சித்தராகக் காணப்படுகின்றார். இவ்வாறு 19ம் 20ம் நூற்றாண்டுகளில் சித்தர்களாக வாழ்ந்தவர்கள், அவ்வாறு வாழ்ந்த சித்தர்களின் சீடர்களாக வாழ்ந்தவர்கள், தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், இந்த சித்தர்களுடன் தொடர்புபட்ட அடியார்கள் மூலம் கிடைக்கும் தகவல்கள், சித்தர்களுடைய சமாதிகள் போன்ற பல மூலங்களிலிருந்து இவர்கள் தொடர்பான தகவல்களை எம்மால் பெறமுடிகிறது. அது மட்டுமன்றி ஈழத்திலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் இந்த சித்தர்கள் சென்றுவருகின்ற செயற்பாடுகளும் தாராளமாக இடம்பெற்றுள்ளன. இவ்வாறு கடந்த இரண்டு நூற்றாண்டு காலத்தில் ஈழத்தில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற சித்தர்கள் தொடர்பான பல தகவல்களை தற்பொழுது ஓரளவுக்கேனும் பெறக்கூடிய வசதிகள் வாய்ப்புகள் காணப்படுகின்றன. இதனால் ஈழத்தில் வாழ்ந்த சித்தர்கள் தொடர்பான சில நூல்களும் வெளிவந்துள்ளன.

### ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சித்தர்கள்

இலங்கையின் வட பகுதியில் புண்ணிய பூமியாக விளங்குகின்ற தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிலும் 19ம் 20ம் நூற்றாண்டுகளில் ஏராளம் சித்தர்கள், ஞானிகள், யோகிகள் என பல தரப்பட்ட அருளாளர்கள் வாழ்ந்துள்ளதையும் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகிறது. இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துவருகின்ற அருளாளர்கள் தொடர்பான விபரங்களை எமக்கு கிடைக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில் நாம் சேகரித்து வெளிப்படுத்துவது எமது தற்போதைய முக்கியமான வரலாற்றுக் கடமையாகிறது.

எமது முன்னோர்கள் காலத்தில் வாழ்வியல் முறை ஆன்மீகத்துடன் ஒன்றியதாகக் காணப்பட்டுள்ளது. அக வாழ்வு, ஆன்மீக வாழ்வு என்பவற்றில் எமது முன்னோர்கள் நிறைவாக வாழ்ந்துள்ளார்கள் என்ற பதிவுகள் எமக்கு மட்டுமல்ல எமது அடுத்த சந்ததிக்கும் மிகவும் பயன்படக்கூடியவையாகும். எமது மூதாதையர் காலத்தில் அன்றாட வாழ்வியல் சூழ்நிலைகள், குடும்ப வழிகாட்டல்கள், ஒவ்வொரு மனிதனையும், ஆன்மீக வாழ்விற்கும் சமூக விழுமியங்களுக்கும் அவர்களின் தனித்துவத்திற்கும் ஆற்றுப்படுத்துவதாய் அமைந்திருந்தது. அதேநேரம் எமது முன்னோர்கள் எதனையும் ஆவணப்படுத்த வேண்டிய அவசியமோ தேவையோ அவர்களுக்கு அப்பொழுது இருக்கவில்லை. அதே நேரம் அவ்வாறு ஆவணப்படுத்த வேண்டுமென தூரநோக்கில் சிந்திக்கவுமில்லை. ஆனால் இன்று மனிதனுடைய வாழ்வியல் முறை பன்மைத் தன்மை பெற்றுவிட்டது. பிறப்பு, கல்வி, வேலை, வாழ்க்கை என வாழ்வியலின் ஒவ்வொரு நிலைகளும் ஒவ்வொரு பிரதேசங்களில் மட்டுமன்றி பலருக்கு அது ஒவ்வொரு நாடுகளில் என்ற வகையில் கூட அமைந்துவிட்டது. இதனால் எமது முன்னோர்கள் எமக்கு தந்துவிட்டுச் சென்ற வாழ்வியல் முறை முற்றாகவே குழப்பமடைந்தும் சிதறடிக்கப்பட்டும் விட்டன.

இதனால் ஆகக்குறைந்தது ஒருவர் தனது மதம், பண்பாடு, பாரம்பரியங்கள் என்பவற்றின் சிறப்புக்களையும், தனித்துவங்களையும் அவர் விரும்பிய பொழுது அறிந்துகொள்வதற்கும், விரும்பினால் அவற்றை பின்பற்றுவதற்கும் இது போன்ற ஆவணப் பதிவுகள் அவசியமாக உள்ளன. எமது முன்னோர்கள் விட்ட ஒரே தவறு பொதுநலம் சார்ந்து எதனையும் ஆவணப்படுத்த தவறியதாகும். அதே தவறை நாமும் விடக்கூடாதென்ற விருப்பத்தின் விளைவே அடியேனது இரண்டாவது ஆவண நூலான சந்நிதியும் சித்தர்களும் என்ற இந்த ஆன்மீக நூல் தொடர்பான தேடலாகும்.

ஈழத்து சித்தர்கள் தொடர்பான வரலாற்றில் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொடர்பாக வாழ்ந்து வழிகாட்டிச்சென்ற சித்தர்கள் வாழ்க்கை வரலாறுகள் மிக முக்கியமான விடயப் பொருளாகக் கருதப்படுகிறது. இதன் முக்கியத்துவம் இரண்டு வகைகளில் நோக்கப்படுகிறது.

1. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புராதன வரலாறே ஒரு சித்தருடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது.
2. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவமிருந்து இங்கேயே சமாதியடைந்த ஐராவசு என்ற சித்தர்தான் இந்த ஆலயத்தின் முதலாவது சித்தராகவுமுள்ளார். அது மட்டுமன்றி இந்த ஐராவசு சித்தர்தான் வடபகுதியிலும் நாம் அறிந்த முதலாவது சித்தராக விளங்குகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐராவசு சித்தர்

தென்திசை நோக்கி சிகண்டி முனிவர் ஆன்மீக யாத்திரை மேற்கொண்டிருக்கும் பொழுது கதிர்காமக் காட்டில் மதம் கொண்ட யானை ஒன்று அவரை தாக்குவதற்கு எதிர்கொண்டுள்ளது. அப்பொழுது சிகண்டி முனிவர் தனக்கு அண்மையில் தென்பட்ட வெற்றிலை நுணியை கிள்ளி பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி அந்த வெற்றிலை நுணியை யானை மீது வீசியுள்ளார். அப்பொழுது அந்த வெற்றிலை நுணி வேலாக மாறி மதம் கொண்ட யானை மீது பாய்ந்தது. இந்த சம்பவத்தின் மூலம் யானை வடிவிலிருந்த ஐராவசு என்ற கந்தர்வன் சிகண்டி முனிவரால் சாபவிமோசனம் பெற்று மானிட வடிவம் பெற்றுள்ளான். அவ்வாறு மனித வடிவம்பெற்ற ஐராவசு தான் முத்தி அடைவதற்கு வழிகாட்டி அருளுமாறு கதிர்காமத்து கந்தப்பெருமானை மனமுருகி வழிபட்டுள்ளான். ஐராவசு மீது கருணை கொண்ட கதிர்காமக்கந்தன் அவனை இலங்கையின் வடபகுதியிலுள்ள புனிதமான வல்லி ஆற்றங்கரைக்குச் சென்று அங்கே தவமிருந்து முத்தியடையுமாறு அந்த ஐராவசுவுக்கு அருள்வாக்கு வழங்கி அருளினார். அதன்படி ஐராவசு என்ற சித்தர் இன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் புனிதமான வல்லி ஆற்றுப்பகுதிக்கு வந்து அங்கே தவமிருந்து முத்தி அடைந்ததாக எமது ஆலயம் தொடர்பான புராண வரலாறுகள் மூலம் அறியமுடிகிறது.

### வெற்றிலை நுணி

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புராதன கால இந்த வரலாற்று நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் இன்றும் 'வெற்றிலையின் நுணி' எழுந்தருளி வேலின் நடுவிலே பதிக்கப்பட்டு சந்நிதி வேற்பெருமான் வீதி உலா வரும் வழக்கம் பின்பற்றப்பட்டு வருகிறது. இவ்வாறு வேலின் நடுவிலே வெற்றிலை நுணி பதிக்கப்பட்டு சந்நிதி முருகன் வீதிவலம் வருவதென்பது வேறு எங்கும் இடம்பெறாத சந்நிதிக்கே உரித்தான தனித்துவமான சிறப்பு அம்சமாகும். அதேநேரம் இவ்வாலயத்தின் முதலாவது சித்தர் ஐராவசு என்பதையும் அவரது வரலாறு இந்த ஆலயத்துடன் எவ்வாறு பின்னிப்பிணைந்துள்ளது என்பதையும் இவ்வாறு எழுந்தருளிவேலின் நடுவில் வெற்றிலை நுணி பதிக்கப்படும் நிகழ்வு எமக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

### புனித பூவரசு மரம்

மேலும் ஐராவசு சித்தர் ஒரு பூவரசு மரத்தின்கீழ் தவமிருந்தார் என்று கூறப்படுகிறது. இதேபோன்று அவர் சமாதி அடைந்த இடத்தில் பூவரசு மரம் தோன்றியது எனவும் நம்பப்படுகிறது. இவ்வாறான நிகழ்வுகளுடன் தொடர்பு பட்டதனால் தான் இந்த ஆலயத்தின் தலவிருட்சமாக ஆலயத்திற்குள்ளேயே காணப்படுகின்ற புனித பூவரசு மரம் பேணி பாதுகாக்கப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐராவசு சித்தருடன் தொடர்புபட்ட ஆலயத்தின் தல விருட்சமான இந்த புனித பூவரசுமரம் சாதாரண ஒரு தலவிருட்சமல்ல. இதன் மகிமை இன்றுவரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது. ஆலயத்தை தரிசிக்க வருகின்ற அடியவர்கள் இங்கே காணப்படுகின்ற அந்த தலவிருட்சத்தை புனிதமான மரமாகக் கருதி அதனை தொட்டு வழிபடுவதுடன் அதன் காய்ந்த இலைகளை புனிதப் பொருளாகவும் எடுத்துச் செல்வதை நாம் காணமுடியும். ஒரு இளம்பெண் அடியவர் முருகேசு சுவாமிகளிடம் பெறுகின்ற தல விருட்சத்தின் காய்ந்த பூவரசம் இலைகளை புனிதமான பொருளாக தனது சாமி அறையில் பேணிவருவது வழக்கம். ஒருமுறை இன்னொரு பெண் அதனை கேலிக்குரிய செயற்பாடாகக் கூறி பரிகாசித்துள்ளார். இதனால் பூவரசம் இலையை பேணிவந்த அந்த இளம்பெண் மிகுந்த வேதனை யடைந்துள்ளார். அடுத்தநாள் அதனை பார்க்க வேண்டுமென்ற உள்ளுணர்வு தூண்டியதால் அதனை பார்க்க நேர்ந்துள்ளது. அப்பொழுது அந்த பெண் பேணிவந்த காய்ந்த பூவரசம் இலை பத்து ரூபாய் தாளாக மாறிய அற்புதமும் அரங்கேறியது.

சராசரி அடியவர்கள், ஞானநிலைக்கு தம்மை தயார்படுத்துபவர்கள் என பலநிலைப்பட்டவர்களும் சந்நிதியில் அமைதி நிலையிலும் மௌன நிலையிலும் வழிபாடு செய்வது வழக்கம். இவ்வாறு வழிபாடு செய்கின்றவர்கள் அனைவரும் ஐராவசு சித்தருடன் தொடர்புபட்ட அல்லது அவர் தவமிருந்த இந்த புனித பூவரசு மரத்தடியிலிருந்தவாறே வழிபாடு செய்து தம்மை பக்குவப்படுத்திக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலியுகக் கவலைக்கான தீர்வு

மானிட வாழ்வில் மனிதன் சில சந்தர்ப்பங்களில் தாங்கமுடியாத துன்பங்கள், துயரங்களை எதிர்நோக்கும் நிலைக்கும் தள்ளப்படுகின்றான். மேலும் இவ்வாறான துன்பங்களை தொடர்ந்து எதிர்நோக்கமுடியாது துன்பக்கடலில் மூழ்கி தத்தளிப்பது, இறுதியில் வாழ்வையே முடித்துக்கொள்ள துணிவது என்பதெல்லாம் இந்த கலியுகத்தில் தாராளமாக எங்கும் நடந்துகொண்டிருக்கும் நிகழ்வுகளாகும். கடந்த யுத்த காலச் சூழலில் இவ்வாறான கடினமான கசப்பான சூழ்நிலைகளை எமது மக்கள் நிறையவே எதிர்கொண்டமையும் நாங்கள் அறிந்ததே. இதற்கு நவீன உளமருத்துவம் எந்தவிதத்திலும் உதவியதாகத் தெரியவில்லை. ஆனால் அடியேன் அறிந்தவரை இதற்கான நிவாரணத்தை அல்லது தீர்வை பெற்றுக்கொள்ள எமது சமயம் வழிகாட்டுகிறது. அதிலும் எமது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இதற்கான ஆற்றுகைப்படுத்தல் அல்லது தீர்வு சிறப்பாக இடம்பெற்றுக் கொண்டிருப்பதை காணமுடிகிறது. இந்த ஆறுதல் அல்லது ஆற்றுகைப்படுத்தல் இந்த ஆலயத்தில் பலவிதமாக அடியார்களுக்கு கிடைத்துவருகிறது.

அதில் முக்கியமான தீர்வு ஐராவசு சித்தருடைய தவவாழ்க்கையுடனும் அவரது சமாதியுடனும் தொடர்புபட்டதாகக் கருதப்படும். இந்த புனித பூவரசு மரத்தின் கீழ் கிடைத்துவருவதைக் காணமுடிகிறது. பூநூல் அணிந்த அந்தணர் தொடக்கம் இருபது வயதுப் பூவையர் வரை எல்லாத் தரத்தினரும் எல்லா வயதினரும் இவ்வாறு இங்கே இந்த இடத்தில் வந்து அமர்ந்து ஆறுதல் பெற்றுச் செல்கின்றனர். இவர்கள் இந்த இடத்தில் அமைதியாக அடக்கமாக அமர்ந்திருந்து சந்நிதியான் திருப்பாதங்களை சிக்கனப் பற்றி அவனது திருப்பாதங்களில் தமது துன்பங்கள் துயரங்கள் வேதனைகளை ஒப்புவித்து நீயே துணை! நீயே வழிகாட்டு.... என மனத்தால் உருகி அவனது கருணைக்காக மன்றாடுகின்றனர். அதுவும் தர்மத்தின் வழிநின்று நீதியாகவும் உண்மையாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் சந்நிதியானின் அடியவர்களாக நீங்கள் இருந்தால் இவ்வாறு செயற்படும் பொழுது நிச்சயம் சந்நிதியானின் கருணைக்கு நீங்கள் ஆட்படுவீர்கள். இது நிதர்சனமான உண்மை.

## சுய ஆற்றுகைப்படுத்தல்

மனிதன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இதுபோன்ற ஜீரணிக்கமுடியாத துயரமான சூழ்நிலைகளுக்கு தீர்வாக நவீன உளமருத்துவம் சுய ஆற்றுப் படுத்துகையை பல ஆய்வுகளின் பின் பரிந்துரைக்கின்றது. ஆனால் அடியேன் இங்கே குறிப்பிடுகின்ற வழி அடியார்கள் தினமும் சந்நிதியான் ஆலயத்தில் தீர்வு கண்டு கொண்டிருக்கின்ற தவநிலை சார்ந்த இந்த மௌன வழிபாடு நவீன உளமருத்துவம் பரிந்துரைக்கின்ற சுய ஆற்றுகைப்படுத்துகையையும் உள்ளடக்கியது. ஆனால் அதைவிட பல மடங்கு பெறுமதி வாய்ந்த பல மடங்கு பயன்தரக் கூடிய ஒரு மகத்துவமான வழிமுறையாகும். இது மனிதனுடைய முயற்சியாலும் ஆண்டவனின் கருணையாலும் கிடைக்கின்ற நிவாரணம். இந்த நிவாரணத்திற்கு ஈடாக உலகத்தில் வேறு எதுவுமே இருக்கமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத அல்லது நாம் பூரணமாக புரிந்துகொள்ள முடியாத இந்த புனிதம் இங்கே அருகருகே அமைந்திருக்கும் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் மூலஸ்தானம், ஐராவசு சித்தருடன் தொடர்புபட்ட இந்த புனித பூவரசு மரம் ஆகியவை இரண்டும் அமைந்திருக்கும் இந்த சூழலில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு இங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் புனிதம் இந்த புனிதத்தால் கிடைக்கும் ஆன்மீக அமைதி, சாந்தி, ஈடேற்றம் என்பன எல்லாம் எவருக்கும் எட்டாத பொருளாக இல்லாமல் அனைவருக்கும் வற்றாத ஊற்றாகக் கிடைத்துவருகிறது. சராசரி ஆன்மீக நாட்டம் உள்ளவர் களுக்கும் சாதாரண பாமர மக்களுக்கும் இவை எல்லாம் நிறைவாகவே கிடைத்து வருகிறது. இவை எல்லாம் அடியார்கள் மீது கலியுகக் கந்தன் கொண்டுள்ள பெருங் கருணையேயன்றி வேறு ஏதுமில்லை.

ஆம்! ஐராவசு சித்தர் கதிர்காமக்கந்தனின் கருணையினால் இந்த வல்லியாற்றங்கரைக்கு வந்து தவமிருந்து முத்தியடைந்தார். இதேபோல ஐராவசு சித்தர் தவமிருந்து சமாதி அடைந்த தல விருட்சமான இந்த புனித பூவரசுமரம் அவரைத் தொடர்ந்து வந்த ஏனைய சித்தர்களுக்கும் அடியார்களுக்கும் இன்றுவரை தொடர்ந்து ஈடேற்றம் வழங்கும் புனிதமுடையதாக இருந்துவருகிறது.

இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் முதலாவது சித்தரான ஐராவசு சித்தர் காலத்தால் மிகவும் முற்பட்ட ஒரு சித்தராகக் காணப்படுகின்ற அதேநேரம் காலம் கடந்தும் அவரின் அடையாளமாக இந்த புனித பூவரசு மரம் புனிதமான விருட்சமாகவும் தல விருட்சமாகவும் பேணப்பட்டு வருகிறது. இதேபோன்று ஐராவசு சித்தர் தவமிருந்து சமாதி அடைந்த காலம் தொடக்கம் சித்தர்கள் ஞானிகள் யோகிகள் நாடிவந்து கூடுகின்ற புண்ணிய பூமியாகவும் இந்த ஆலயச் சூழல் சிறப்படையத் தொடங்கியுள்ளது.

இறைவனிடம் நீ வேண்டுதல் செய்து ஒரு நன்மை உனக்குக் கிடைத்து விட்டால் அதற்கான நன்றியை இறைவனுக்குச் செலுத்திவிடு. அப்பொழுது தான் நீ மீண்டும் கேட்கும் ஒன்றை இறைவன் தருவான். இதேபோலவே மற்றவர்கள் செய்கின்ற உதவிகளை, நன்றியுணர்வுகளை எப்போதும் மனதில் இருத்துவது மட்டுமன்றி சமயம் வரும்பொழுது அந்த நன்றிக்கடனைச் செலுத்திவிடு. அவ்வாறு செய்தால்தான் அவன் மீண்டும் உனக்கு உதவி செய்வான்.

இதேபோன்று ஓர் உதவியை நீ பெறும்போது நீ மட்டுமன்றி உனது குடும்பமும் நன்மையை பெற்றுக்கொள்கின்றது. எனவே நீ மட்டும் அதற்கான நன்றியை உணர்வது போதாது உனது பிள்ளைகளுக்கும் அதனை தெரிவித்துவிடு. இவ்வாறு செய்தால்தான் அந்தப் பிள்ளை நன்றி செய்தவனுக்கு மட்டுமன்றி எதிர்காலத்தில் உனக்கும் நன்றியுள்ள பிள்ளையாக உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் மருதர் கதிர்காமர்

கந்தபுராண கால வரலாற்றுச் சிறப்புடைய ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தொன்மையான வரலாற்றின் முதலாவது சித்தராக ஐராவசு சித்தர் விளங்குகின்றார். இதேபோன்று 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் ஆலயத்தின் தற்போதைய வரலாறு சித்தர் மருதர் கதிர்காமருடன் ஆரம்பமாகின்ற சிறப்பை இங்கே காணமுடிகிறது. நாம் இன்று வழிபட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் முதலாவது சித்தராகவும் முதற் பூசகராகவும் மருதர் கதிர்காமர் விளங்குகின்றார். மருதர் கதிர்காமர் சந்நிதியானுக்குரிய பூசைச் செயற்பாடுகளை 1840 ஆம் ஆண்டளவில் ஆரம்பித்த காலத்திலிருந்து அவரது சந்ததியினர் தொடர்ச்சியாக தற்பொழுது ஏழாவது சந்ததியினராக இங்கே பூசைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேபோன்று சித்தர்மருதர் கதிர்காமரைத் தொடர்ந்து இங்கே சித்தர்களும் ஞானிகளும் யோகிகளும் அருளாளர்களும் தவ வாழ்க்கை வாழ்ந்து வருகின்ற செயற்பாடுகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதை காணமுடிகிறது. ஆம் தற்போதைய ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் சித்தர் பரம்பரையின் முதலாவது சித்தராக மருதர் கதிர்காமர் விளங்குகின்றார். அது மட்டுமன்றி தற்காலச் சித்தர்களுக்கெல்லாம் தலையாய சித்தராக அவரது வரலாறு அமைந்திருப்பதும் ஒரு வரலாற்று அற்புதமே. அது மட்டுமன்றி 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தற்காலத்தின் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் பல்வேறு சான்றுகள் மூலம் இவற்றையெல்லாம் ஆவணப்படுத்தக் கூடிய வாய்ப்புக்களும் எமக்கு ஏற்பட்டுள்ளன.

மருதர் கதிர்காமர் ஆரம்ப காலத்தில் தொண்டைமானாற்றுக் கிராமத்தில் முருகப் பெருமானை உள்ளம் உருகி வழிபடுகின்ற ஒரு சராசரி அடியவர் என்பதே அவரது இவ்வுலக வாழ்வின் ஆரம்பகால வரலாறாகும். அதேநேரம் அவரது முற்பிறப்புக்களின் வரலாற்றின்படி அவர் மிகமிக பக்குவமான ஆன்மிக நிலையில் காணப்பட்டுள்ளார் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளமுடிகிறது. முழுமுதற் கடவுள் குருவாக வந்து குருந்தமர நிழலில் மணிவாசகரை ஆட்கொள்கின்ற திருவிளையாடலைப் பார்க்கின்றோம். இதேபோன்றுதான் கலியுகக் கடவுளான முருகப் பெருமான் தொண்டைமானாறு ஆற்றங்கரையில் சிறுவனாக வந்து மருதர் கதிர்காமரை ஆட்கொள்கின்ற அற்புதம் இங்கே அரங்கேறுகின்றது. அது மட்டுமன்றி முருகப் பெருமான் தனக்கு அங்கே ஆலயம் அமைத்து அவரையே தனக்கு பூசைகளை நடாத்துமாறு அருள் கட்டளையிடுகின்ற நிகழ்வுகளும் நடைபெறுகிறது. ஆம் இவ்வாறு முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்படுகின்ற பக்குவமுள்ள மருதர் கதிர்காமர் என்ற சித்தரும், அவர் மூலம் அரிய பொக்கிஷமான ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் எமக்கு கிடைத்திருப்பதும் நாம் செய்த பெரும் பாக்கியமே. இவை எல்லாம் சந்நிதி முருகனின் கருணையே அன்றி வேறேதுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற நிகழ்ச்சிகளை நாம் பார்க்கின்றபொழுது சித்தர் மருதர் கதிர்காமர் மிகவும் அமைதியும் எளிமையும் அடக்கமும் நிறைந்த ஒருவராக விளங்கியுள்ளார். அவர் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு பூசைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் கூட அவரிடம் இந்த இயல்பான பண்புகள் தொடர்ந்துள்ளன. சித்தர் மருதர் கதிர்காமர் பூசைச் செயற்பாடுகள் தொடர்பாக சந்நிதி முருகனிடம் தனது சந்தேகங்களையும் விளக்கங்களையும் கேட்பதும் அதற்கு முருகப்பெருமான் விடைகளையும் விளக்கங்களையும் அளிக்கின்ற அற்புத நிகழ்வுகளும் இந்த ஆலயத்தில் இடம்பெற்றுள்ளன. அந்தளவுக்கு சித்தர் மருதர் கதிர்காமர் பக்குவநிலை பெற்றவராகவும் முருகப் பெருமான் மீது எல்லையற்ற பக்தி உள்ளவராகவும் விளங்கியுள்ளார்.

மாணிக்கவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது என்று முழுமுதற் கடவுளான தில்லை திருக்கூத்தன் அந்தணர் வடிவில் திருவாசகத்தை எழுதி அதற்கு கையொப்பமிட்ட வரலாற்றை நாம் பார்க்கின்றோம். அதேபோல இங்கே மருதர் கதிர்காமர் கேட்க சந்நிதி முருகன் கூறிய விடைகள் விளக்கங்கள் வழிகாட்டல்களின் அடிப்படையில்தான் சந்நிதியில் இன்றும் பூசைச் செயற்பாடுகள் சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் உள் மண்டபத்தில் நந்திக்கு கிழக்கு பக்கமாக இரண்டு திண்ணைகள் காணப்படுகின்றன. அதில் ஒரு பக்க திண்ணையில் மருதர் கதிர்காமர் இருந்து தனது கண்களை மூடியவாறு ஆலயச் செயற்பாடுகள் தொடர்பாக தனது சந்தேகங்கள் கேள்விகளைக் கேட்க எதிர்ப் பக்க திண்ணையில் சந்நிதி முருகன் இருந்து நேரடியாக தனது விளக்கங்களை மருதர் கதிர்காமருக்கு கூறியுள்ளார். ஆனாலும் கேள்விகள் சந்தேகங்களுக்கு விடைகள் வழங்கிமுடிவடைந்தபின் சித்தர் மருதர் கதிர்காமர் தனது கண்களை திறந்து பார்க்கின்றபொழுது எதிர்த்திண்ணையில் இருந்து விடைகூறிய குரலுக்குரிய நபரை அங்கே காணமுடிவதில்லை. இது மருதர் கதிர்காமருக்கும் சந்நிதியானுக்கு மிடையே இடம்பெறுகின்ற ஒரு சூட்சுமமான உரையாடல் ஆகும். இந்த உரையாடல் சாயரட்டைப் பூசை முடிவடைந்து இரவு நீண்ட நேரத்திற்கு பின்பு ஆலயத்தில் அடியார்கள் நடமாட்டம் இல்லாத நேரங்களிலே இடம்பெற்றுள்ளது. இன்றும் சந்நிதியில் பூசையை மேற்கொள்கின்ற பிரதம பூசகர்கள் சாயரட்சை பூசை முடிவடைந்து நீண்ட நேரத்தின் பின்பு பூசையின் பொழுது அணிந்திருக்கும் விஷேட அணிகலன்கள் எதுவுமின்றி சாதாரண ஒரு அடியவர்போல சந்நிதியானிடம் இது போன்ற பாங்கில் தமது வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சித்தர் மருதர் கதிர்காமருக்கும் சந்நிதி முருகனுக்குமிடையில் இவ்வாறான உரையாடல் ஆலய வாசலுக்கு நேரே உள்ள அந்த திண்ணைகளில் இடம்பெற்று வந்தமையால்தான் சந்நிதியான் வெளிவீதியில் உலா வருதவற்கு வெளிவீதிக்கு வரும்பொழுது மூலஸ்தானத்திற்கு நேரே இருக்கும் இந்த இரண்டு திண்ணைகளுக்கு இடையில் உள்ள வாசல் வழியாக சுவாமி வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதில்லை. மாறாக ஆலயத்தின் இடது பக்கமாக மடப்பள்ளிக்கும் ஆலயத்திற்குமிடையில் உள்ள பாதையூடாகவே வீதிஉலாவிற்கு எம்பெருமான் வெளிவீதி வருவதை அடியார்கள் அங்கே காணமுடியும்.



மருதர் கதிர்காமர் என்ற சித்தர் முருகப்பெருமானுக்கு பூசையை நடாத்துவதற்குரிய பொறுப்பை ஏற்று ஆலயப் பூசகர் என்ற போர்வைக்குள் வாழ்ந்தாலும் அவர் ஆலய பூசகராக இருந்த காலம் முழுவதும் சந்நிதி முருகன் அவருக்கு ஒரு குருவாகவே இருந்து வழிகாட்டிச் சென்ற வரலாற்றை நாம் காணமுடிகிறது. அது மட்டுமன்றி அருட் கட்டளைகளாகவும் வேண்டுதல்களாகவும் அறிவுறுத்தல்களாகவும் ஆலோசனைகளாகவும் பல்வேறு வழிமுறைகளில் முருகப் பெருமான் அவரை வழிப்படுத்தி, நெறிப்படுத்தி, உற்ற துணையாக இருந்துவந்த அற்புத வரலாற்றையும் நாம் இங்கே காணமுடிகிறது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தற்போதைய வரலாறு மருதர் கதிர்காமர் காலத்தில் இருந்து ஆரம்பமாகிறது. தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் வல்லி ஆற்றுப் பகுதியில் முருகப்பெருமான் சிறுவனாக வந்து முருக பக்தனான மருதர் கதிர்காமரை ஆட்கொண்டு தனக்கு இவ்விடத்தில் ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுது படைத்து பூசையை நடத்துமாறு வேண்டிக் கொண்டார். கலியுகக் கடவுளான முருகப்பெருமான் நிகழ்த்திய இந்த அற்புத நிகழ்விற்கு இணங்கவே தற்போதைய பூசைச் செயற்பாடுகள் இவ்வாலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல முருகப்பெருமான் மருதர் கதிர்காமரை கண்களை மூடுமாறு கூறி அவரைக் கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று அங்கே இடம்பெறும் பூசை முறைகளைக் காண்பித்து வெள்ளியிலான வேல் ஒன்றையும் அவருக்கு வழங்கிய அற்புத நிகழ்வும் அங்கே அரங்கேறியது. அதற்கிணங்கவே இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் எம்பெருமான், எளிமையான வேல் வடிவில் காட்சிதந்து கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்தில் கப்புறாளைகள் வாய்கட்டிப் பூசை செய்வதைப் போன்று இங்கேயும் பூசகர்கள் வாய்கட்டி சந்நிதியானுக்குப் பூசையை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு சந்நிதி முருகனால் ஆட்கொள்ளப்படுகின்ற பேறுபெற்ற ஏழை குடிமகனான மருதர் கதிர்காமர் ஓலைக்கொட்டில் அமைத்து அங்கே வெள்ளியிலான வேலை வைத்து வேலவனுக்கு பூசையை மேற்கொள்ள ஆரம்பித்தார்.

சூரபத்மனுடன் போர் இடம்பெற்ற பொழுது முருகப் பெருமான் தனது போர் பாசறையாக பயன்படுத்திய இடத்திலேதான் இன்று கதிர்காமக் கந்தன் ஆலயம் அமைந்திருக்கின்றது. கந்தபுராணத்துடன் ஆழமான ஈடுபாடுள்ள சமயப் பெரியோர்கள் இவ்வாறே நம்புகின்றனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து செயற்பட்டுவரும் கதிர்காமக்கந்தன் ஆலயத்தின் தொன்மை இதனை எமக்கு வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு கந்தபுராண காலத் தொன்மையுள்ள கதிர்காமக்கந்தன் ஆலயத்திற்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும் மிக நெருக்கமான தொடர்புகள் இருந்து வருகிறது. கதிர்காமக் கந்தன் கொடியேற்றத்தின் பொழுது முருகப் பெருமான் அங்கே செல்வதாக மருதர் கதிர்காமருக்கு கூறி தன்னை வழி அனுப்புமாறு கேட்டுக்கொள்வதும் அதேபோல கதிர்காமத்தில் தீர்த்த உற்சவம் நிறைவடைந்து இங்கேதான் களைப்புடன் திரும்பி வந்துள்ளதாக முருகப் பெருமானே மருதர் கதிர்காமருக்கு வெளிப்படுத்துவதும் இந்த இரு ஆலயங் களுக்குமிடையேயுள்ள தொன்மையையும் தொடர்பையும் எமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறு இந்த இரு ஆலயங்களுக்கிடையேயுள்ள தொன்மையான தொடர்பு மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல. முருகப்பெருமானே மருதர் கதிர்காமர் என்ற புனிதருக்கு வெளிப்படுத்தி ஆரம்பமான தொடர்புகளாகும். இதனால்தான் கதிர்காமக் கொடியேற்றத்தின் பொழுது வேலவனுக்கு உழுத்தம்பிட்டு நைவேத்தியமாக படைத்து வேலனுப்பும் விசேட தினப் பூசையும் தீர்த்தத் திருவிழாவின்போது பயறும் இளநீரும் படைத்து வேல் திரும்பும் விசேட தினப் பூசையும் சந்நிதியில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

பொதுவாக ஆலயச் செயற்பாடுகள் எல்லாவற்றிலும் சித்தர் மருதர் கதிர்காமரை சந்நிதி முருகனே வழிப்படுத்தி வந்துள்ளதை காணமுடிகிறது. இதே போன்று சித்தர் மருதர் கதிர்காமரும் அந்த வழிப்படுத்தல்களுக்கு ஏற்ப பூசைகள் மற்றும் அதுதொடர்பான செயற்பாடுகளை ஆலயத்தில் நடாத்தி வந்துள்ளார். இவ்வாறு சித்தர் மருதர் கதிர்காமர் ஆரம்பித்து வைத்த அதே செயற்பாடுகள் தான் ஆரம்பம் முதல் இன்று வரை அப்படியே பூசகர்களால் பின்பற்றப்பட்டு வருகிறது.

வேல் திரும்பும் நாள் மற்றும் கதிர்காம கொடியேற்றத்திற்கு வேல் அனுப்பும் நிகழ்வு என்பவை எல்லாம் இன்றும் மருதர் கதிர்காமர் காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அதே விதமாக எவ்வாறு பூசகர்களால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை இங்கே அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

ஒருநாள் இரவு மருதர் கதிர்காமர் நித்திரையில் இருக்கும் பொழுது சந்நிதியான் அவரை நித்திரையின்றும் எழுப்பி நான் கதிர்காமத்திலிருந்து வருகின்றேன். எனக்குப் பசியும் களையும் அதிகமாக உள்ளது. உண்பதற்கு ஏதாவது கொடு என்று கேட்டுள்ளார். அதற்கு மருதர் கதிர்காமர் இந்த வேளையில் தங்களுக்கு அமுது படைக்க எங்கு போவேன் என்று மனம் நொந்து சந்நிதி முருகனைக் கேட்ட பொழுது அதற்குச் சந்நிதி முருகன் உன்னிடம் உள்ள பயற்றைத் துவைத்து இளநீரும் தா என்று கேட்கவே கதிர்காமரும் அவ்வாறே திருவமுது படைத்துள்ளார். இந்த நாள் தற்பொழுதும் கதிர்காமத்திலிருந்து திரும்பும் நாளாக (வேல் திரும்பும் நாள்) கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் மருதர் கதிர்காமர் படைத்தது போலப் பயற்றம் துவையலும், இளநீரும் நைவேத்தியமாகப் படைக்கும் வழக்கம் தொடர்ந்தும் சந்நிதியில் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது.

இது போன்ற கதிர்காமத் திருவிழா ஆரம்பிக்கும் முதல்நாள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வேல் செல்லும் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதாவது கதிர்காமத்திற்குச் சந்நிதியானை வழி அனுப்பும் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த நாளில் மாலை நேரம் அதுவும் மையல் நேரத்தில் விசேஷ பூசை இடம்பெறும். பின்னர் மூலஸ்தானத்திலிருந்து பிரதம பூசகர் தனது இரண்டு கைகளினாலும் பொத்தியபடி (சந்நிதியானை) வெளியே வர ஏனைய பூசகர்களும் மற்றும் பூக்காரர் போன்றோரும் அவருக்குக் கேடயம் அமைத்து கிழக்கு வாசல் வழியாகக் கூட்டிக்செல்வார்கள். அங்கே சிட்டி விளக்குகளால் அவர்கள் செல்லுகின்ற பாதை ஏற்கனவே ஒழுங்கமைக்கப் பட்டிருக்கும். இந்தப் பாதையினூடாக அவர்கள் எல்லோரும், எவரும் என்ன நடக்கின்றது என்பதை உணரமுடியாத அளவுக்கு வேகத்துடனும், பக்தி பரவசத்துடனும் வெளிவீதியையும் தாண்டிச் சென்று கொண்டிருப்பார்கள். அதே நேரம் அடியார்கள் அரோகரா அரோகரா என்ற கோஷங்களைக் கிளப்ப இறுதியாக அங்கே காணப்படும் அரச மரத்தடியில் சந்நிதியானை வழியனுப்பும் நிகழ்வு இடம்பெறும். அங்கே ஆகாயத்தை நோக்கியபடி பொத்திய கைகளைப் பூசகர் உயர்த்திச் சந்நிதியானை வானத்தினூடாக வழியனுப்பி வைப்பார். அப்பொழுது அங்கே ஏற்படுகின்ற பக்தி உணர்வு கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு எல்லோருடைய உள்ளத்திலும் பொங்கி எழுந்து கரைபுரண்டு ஓடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதே நேரம் பக்தர்கள் தங்கள் கைகளில் வைத்திருக்கின்ற தேங்காய்களைச் சிதற அடித்துச் சந்நிதியானை வழியனுப்புவதும் ஒரு வழக்கமாக உள்ளது. மேலும் குறிப்பிட்ட அந்த சாயரட்சப் பூசையின் பொழுது உழுத்தம் பிட்டே திருவமுதாகப் படைக்கப்படுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது. அனைவருக்கும் அன்று உழுத்தப்பிட்டு பிரசாதமாக வழங்கப்படும். ஆம் சித்தர் மருதர் கதிர்காமர் ஆரம்பித்து வைத்த இந்த செயற்பாடு இந்த ஆலயத்தில் இன்றும் அதே பக்திப் பரவசத்துடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் மருதர் கதிர்காமர் காலத்தில் சந்நிதியான் அருள் கட்டளைக்கு இணங்க ஆரம்பமான பூசைச் செயற்பாடுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் சாதாரண செயற்பாடுகள் அல்ல. வேல் பயணம் செய்வது உட்பட அனைத்து செயற்பாடுகளும் புனிதமான செயற்பாடுகளாகும். இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்கள் இதனையே எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சந்நிதியிலிருந்து வேல் அனுப்பும் விஷேட தினப் பூசை நடைபெறும் தினம், மட்டக்களப்பு, திருகோணமலை உட்பட நம்பிக்கையுள்ள மெய்யடியவர்கள் பலருக்கு இவ்வாறு வானவெளியில் வேல் பயணம் செய்யும் இந்த காட்சி காலம் காலமாக வெளிப்பட்டு வருகிறது. 2017ஆம் ஆண்டும் இவ்வாறான அற்புத நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. 2017ஆம் ஆண்டு சந்நிதியிலிருந்து வேல் பயணம் செல்லும் தினத்தன்று ஒரு அடியார் கூட்டம் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை மேற்கொண்டு சென்றுகொண்டிருந்தது. அப்பொழுது பிரித்தானியாவி லிருந்து வந்த ஒரு பெண் அடியவரும் காட்டுப்பாதையூடாக கால்நடையாகச் சென்ற அந்த யாத்திரையில் பங்குகொண்டு சென்றுள்ளார். இவர்கள் காட்டுப் பாதையூடாகச் சென்றுகொண்டிருந்தபொழுது வானத்தில் நீல நிறத்தில் ஒரு ஒளிக்கீற்று சென்றுகொண்டிருப்பதை பார்த்து அடியார்கள் எல்லோரும் அரோகரா! அரோகரா! அரோகரா!... என வானத்தை நோக்கி ஒலி எழுப்பி பக்தி மேலீட்டால் பரவசமடைந்துள்ளனர். அப்பொழுது பிரித்தானியாவிலிருந்து வந்து யாத்திரையில் பங்குகொண்ட திருமதி சுசீலா இராஜாவும் அதனை நேரடியாக பார்த்து மெய் சிலிர்க்க ஆனந்த பரவசமடைந்துள்ளனர். அதுமட்டுமல்ல உடனடியாகவே அச்சுவேலியில் தான் தங்கியிருந்த வீட்டு உரிமையாளரான டாக்டருடன் தனது கையடக்க தொலைபேசி மூலம் தனது அற்புத அனுபவத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். அச்சுவேலியில் சந்நிதியான் மருந்தகம் என்ற பெயரில் தனியார் வைத்தியசாலை நடாத்திவரும் டாக்டர் P. சிவபாலன் தான் அந்த வைத்தியராவார். அடியேனும் டாக்டர் சிவபாலனுடன் உரையாடிய பின்பே வாசகர்களாகிய அடியார்களுக்கும் இதனை வழங்குகின்றேன்.

அது மட்டுமல்ல வேல் பயணம் போகும் நாளை அறிந்துவைத்து சந்நிதியானுடைய விசுவாசமான அடியார்கள் அன்று தமது வீடுகளை துப்பரவு செய்து தாமும் புனிதம் பேணுவார்கள். இது காலங்காலமாக பல கிராமங்களில் இடம்பெற்று வருகின்றது. நாம் சிறுவர்களாக இருக்கின்றபொழுது எமது மூதாதையர்கள் அந்த நாளில் அந்தக் காட்சியை வானத்தில் பார்க்கும் முயற்சியில் ஈடுபடுவதை நாம் பார்த்திருக்கின்றோம். அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப அதை அவர்கள் உணர்ந்தும் கொள்வார்கள். 2017ஆம் ஆண்டு கரணவாய்ப் பகுதியில் இவ்வாறு புனிதம்பேணி வானவெளியை நோக்கிய பெண்மணிக்கு நீலநிற ஒளிக்கீற்றாக வேல் செல்லும் காட்சி தென்பட்டுள்ளது. இதனை அந்த குறிப்பிட்ட பெண்மணியே அண்மையில் மருதர் கதிர்காமர் வழிவந்த பூசகர் குடும்ப பெண்மணி ஒருவருக்கு வெளிப்படுத்தியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்காட்டுச் சித்தர்

திருமூலர் காலம் தொடக்கம் சித்தர்கள் அருளாளர்கள் தாங்கள் தங்களை பக்குவப்படுத்துவதுடன் நின்றுவிடாது தாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மண்ணுக்கும் மக்களுக்கும் பயனுள்ளவர்களாக வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற சிறப்பையும் நாம் காணமுடிகிறது. இந்தவகையில் இடைக்காட்டுச் சித்தரும் இதற்கு ஓர் சிறந்த உதாரண புருஷராகக் காணப்படுகின்றார். இவர் வடமராட்சியில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ள தொண்டைமானாற்றுக் கிராமத்தின் மேற்குத் திசையில் அமைந்துள்ள இடைக்காட்டுக் கிராமத்தில் 1860ஆம் ஆண்டளவில் சைவப் பாரம்பரியமுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்துள்ளார். இவரது பெயர் வல்லியப்பர் அருணாசலம். 90 வயது வரை வாழ்ந்த இந்த சித்தரின் திருவடிக் கலப்பு இவரது சொந்த கிராமத்திலேயே இடம்பெற்றுள்ளது.

பெற்றோர் அருணாசலத்திற்கு திருமணம் செய்துவைக்க வேண்டும் என்ற பெரு விருப்பத்துடன் இருந்துள்ளனர். இதனால் இவர் திருமண வயதை அடைந்த நிலையில் பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்க ஒரு சராசரி மனிதனாக இல்லற வாழ்வில் இணைந்து இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையாக தனது இல்லற வாழ்வை நடாத்திச் சென்றுள்ளதையும் காணமுடிகிறது. ஆனாலும் இள வயதிலிருந்தே அவரது அடி மனதில் துளிர்விட்டுக் கொண்டிருந்த ஆன்மீகத்தின் பால் அதிக ஈடுபாடு கொண்டு தன்னை படிப்படியாக பக்குவப்படுத்தி வந்துள்ளார். ஏறத்தாழ ஐம்பது வயதளவில் இவர் குடும்ப வாழ்விலிருந்து முற்றாக விலகி ஒரு சித்தராகவே வாழ்ந்துள்ளார். அதிகமாக அருளாளர்கள் பிறக்கின்ற இடம் ஒன்றாகவும் அவர்கள் அருளாளர்களாக வாழ்ந்து மக்களால் மதிக்கப்படுகின்ற இடம் வேறாகவும் இருப்பதை நாம் பொதுவாக அவதானிக்கமுடிகிறது. ஆனால் இவரைப் பொறுத்தவரை இவரது சொந்த கிராமமான இடைக்காட்டு மக்களே சித்தர் என இவரை அழைக்கக்கூடியளவிற்கு இளமையிலிருந்தே இவரிடம் அப்பழுக்கற்ற பக்குவநிலை வெளிப்பட்டுவந்துள்ளது. அத்துடன் அப்பகுதி மக்கள் ஆன்மீக ரீதியாகவும் சித்த வைத்தியத்தின் ஊடாகவும் இந்த சித்தரினால் பெரிதும் பயனடைந்துள்ளதையும் காணமுடிகிறது. ஆம் இவர் பிறந்து வளர்ந்த இடைக்காட்டுக் கிராமத்தில் இவரது காலத்தில் வாழ்ந்த சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் சித்தர் தனது வாழ்வியல் முறையால் அவர்களுக்கு ஒரு சீரிய ஆன்மீகப் பாதையை ஏற்படுத்திச் சென்றுள்ளார். பல தரப்பினருக்கும் மூலிகைகள் மூலம் சித்த வைத்திய முறையினால் பலவகையான நோய்களை மாற்றியுள்ளார்.

இடைக்காட்டுச் சித்தரும் தமது மூதாதையரைப் போல ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் மீது சிறுவயதிலிருந்தே ஆழமான பக்தி உள்ளவராக விளங்கியுள்ளார். இவர் ஆன்மீகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பின்பு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம் ஆகிய இரண்டு ஆலயங்களும் இவரது தவ வாழ்க்கைக்குரிய உறைவிடங்களாக இருந்துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஒரு ஆலமரத்தின் கீழ் அருளாளராக இருந்து அடியார்களை ஆற்றுப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆலயத்தின் வட கிழக்கு திசையில் காணப்பட்ட சிறிய கட்டிடப் பகுதியில் தங்கியிருந்து தனது ஆன்மீக செயற்பாடுகளை முன்னெடுத்ததாக அவரால் பயனடைந்த பலர் மூலம் வாய்வழியாக அறியமுடிகிறது. இவரது மடியில் எப்பொழுதும் விபூதிப் பொட்டலம் காணப்படும். தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு முக்கியமாக விபூதி வழங்குவது இவரது வழக்கமாக இருந்துள்ளது. இதனால் இவர் திருநீற்றுச் சாமியார் என அடியார்களால் அழைக்கப்பட்டுள்ளார். அத்துடன் வாக்கு கூறுவது, திருநீறு வழங்கி சித்த மருத்துவ மூலிகைகள் மூலம் நோய்களை குணமாக்குவது, பேய் பிடித்தல் போன்ற உளநோயுள்ளவர்களின் வருத்தங்களை மாற்றுவது போன்ற செயற்பாடுகள் மூலம் அடியார்கள் துன்பங்கள், துயரங்களை போக்கி வந்துள்ளார். வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என எல்லாப் பகுதிகளில் உள்ளவர்களும் இடைக்காட்டு சித்தரையும் அவரது செயற்பாடுகளையும் நன்கு அறிந்தவர் களாகவும் பயன்பெற்றவர்களாகவும் வாழ்ந்துள்ளனர்.

இடைக்காட்டுச் சித்தர் எவரையும் தனது குருவாகக் கொண்டு செயற்பட்டதாக அறியமுடியவில்லை. ஆனால் இளமைக் காலத்திலிருந்தே இயல்பாக ஆன்மீக நாட்டமுள்ளவராக விளங்கிவந்ததால் தமது சொந்த வளவிற்குள் இருந்த முனியப்பர் ஆலயத்தை ஆதரித்து வந்துள்ளார். அத்துடன் அருள்வாக்கு கூறுகின்ற சித்தி இவரிடம் சிறப்பாக வெளிப்பட்டுவந்துள்ளது. ஆனால் இவர் அருள்வாக்கை பொதுவாக யாரும் கேட்டுச் சொல்வதில்லை. தானாகவே அழைத்து கூறுவது தான் வழமையாக இருந்துள்ளது. அத்துடன் அருள்வாக்கை கூறிவிட்டு நிறைவாக ''அவன் சொன்னான்'' என்றுதான் அந்த அருள்வாக்கு வசனத்தை முடிப்பது இவருடைய தனித்துவமாக இருந்துள்ளது. அவன் சொன்னான் என்பதன் தாற்பரியம் மிகவும் பெறுமதிமிக்க ஆழமான ஆன்மீகப் பொருள் நிறைந்தது என்பதை ஒவ்வொரு அடியவரும் தத்தமது பக்குவநிலைக்கு ஏற்ப அதனை புரிந்துகொள்ளமுடியும். இவ்வாறு அவன் சொன்னான் என்ற அடைமொழியுடன் இடைக்காட்டு சித்தர் கூறுகின்ற அருள்வாக்கு எவ்வளவு சித்துத் தன்மை கொண்டது என்பதற்கு அவர் கூறிய அருள்வாக்கு தொடர்பான ஒரு நிகழ்வை இங்கே வெளிப்படுத்துவது அடியவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

வலிகாமத்தைச் சேர்ந்த திரு. திருமதி தம்பிரத்தினம் செல்வரத்தினம் என்ற குடும்பம் கல்வியறிவும் வசதி வாய்ப்புகளும் நிறைந்த குடும்பமாக வாழ்ந்து வந்தனர். ஆனாலும் திருமணம் முடிந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும் குழந்தைப்பாக்கியம் கிடைக்காததால் மிகவும் மனம்நொந்து காணப்பட்டுள்ளனர். வைத்திய சிகிச்சை உட்பட பலவிதமான முயற்சிகளில் ஈடுபட்ட பொழுதிலும் அவர்களுக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. இக் காலகட்டத்தில் இடைக்காட்டுச் சித்தர் வலிகாமம் பகுதியிலுள்ள மல்லாகம், சுண்ணாகம் மற்றும் மாவிட்டபுரம் போன்ற பல பகுதிகளுக்கும் சென்று அப் பகுதிகளில் ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம் செய்துவருவது வழக்கம். அதேநேரம் அடியவர்களது அழைப்பை ஏற்று சில அடியவர்களது வீடுகளுக்கும் செல்வதுண்டு. செல்லுகின்ற வீடுகளில் உள்ளவர்களை ஆன்மீக ரீதியாக ஆற்றுப்படுத்துவது, அருள்வாக்கு கூறுவது, நோய்நொடிகளை குணமாக்குவது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு அவர்களது துன்பங்களுக்கு நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுண்டு.

இக் காலகட்டத்தில்தான் குழந்தைப் பேற்றிற்காக ஏங்கிக்கொண்டிருந்த வசதி படைத்த அந்த வலிகாமத்து தம்பதியினர் இடைக்காட்டுச் சித்தரின் அருள்வாக்கின் மகிமையை கேள்விப்பட்டுள்ளனர். ஒருமுறை வலிகாமத்திலுள்ள ஒரு அடியவர் வீட்டில் சித்தர் தங்கியிருப்பதை கேள்விப்பட்டு மேற்படி தம்பிரத்தினம் செல்வரத்தினம் தம்பதிகள் அவரை நாடிச்சென்று வணங்கி அமைதியாக அமர்ந்திருந்துள்ளனர். சித்தர் இவர்களைக் கூப்பிட்டு நீங்கள் கிறிஸ்தவர்களா எனக் கேட்டுள்ளார். அத்துடன் எமது திருநீற்றை தந்தால் பூசுவீர்களா என்றும் வினாவியுள்ளார். அவர்களும் ஆம் என்று தமது முழுச் சம்மதத்தையும் தெரிவித்துள்ளனர். சித்தர் அவர்களுக்கு திருநீற்றை வழங்கியது மட்டுமன்றி தானாகவே அடுத்த ஆனி உத்தரத்திற்குள் உங்களுக்கு ஆண் மகவு பிறக்கும் என்று அருள்வாக்கும் கூறியுள்ளார். மேலும் அருள்வாக்கின் இறுதியில் ''அவன் சொன்னான்'' என்றும் அடக்கமாகக் கூறி அவர்களை வழியனுப்பி வைத்துள்ளார். இந்த நிகழ்வு நடைபெற்று ஏறத்தாழ மூன்று மாதங்களின்பின்பு வலிகாமப் பகுதியில் சித்தர் வந்திருப்பதை அறிந்து திருமதி செல்வரத்தினம் அவர்கள் சாமியார் தங்கியிருந்த வீட்டிற்கு சென்று அங்கே சித்தரை சந்தித்துள்ளார். தான் சுகமில்லாமல் இருப்பதாகவும் தனக்கு குழந்தை தங்கியிருப்பதாகவும் அகமும் முகமும் மலர சித்தரிடம் எடுத்துக்கூறினார்கள். அப்பொழுது சித்தர் ஆம் எனக்குத் தெரியும். 'அவன் சொன்னான்' என்ற அந்த தாரக மந்திரத்தையும் கூறியுள்ளார். ஆம் அந்த அம்மையார் தெரிவித்த அந்த மகிழ்ச்சியான செய்தியை தானும் உறுதிப்படுத்தி அவரை வழியனுப்பி வைத்துள்ளார்.

அடுத்த ஆனி உத்தரத்திற்கு முன்பு அங்கே அதிசயம் நடந்தேறியது. சாமியார் குறிப்பிட்டது போல திரு திருமதி தம்பிரத்தினம் செல்வரத்தினம் தம்பதிகளுக்கு ஆண் மகவு பிறந்து குடும்பம் மட்டற்ற மகிழ்ச்சியில் குதூகலித்துக் கொண்டிருந்தது. தாம் தமது வழிபடும் தெய்வத்திடம் வேண்டியும் கிடைக்காத பிள்ளைச் செல்வம் சாமியார் மூலம் கிடைத்ததையிட்டும் சாமியார் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் அவர்களுக்கு ஏற்பட்டது. அத்துடன் தமது குழந்தையுடன் இடைக்காட்டில் சாமியார் தங்கியிருந்த கேவில் என்ற இடத்தில் அமைந்திருந்த அந்த சிறிய முனியப்பர் கோவிலுக்கு சாமியாரை நாடி வந்தனர். அங்கே கோயில் வாசலில் தமது குழந்தையை வளத்தி ஆண்டவனை வழிபட்டனர். மேலும் சித்தரிடம் தமது மட்டற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதுடன் தமது மனம் ஆறுதலும் நிறைவும் அடைவதற்காக தம்மிடம் எதையாவது கேட்டுப் பெறுமாறு சித்தரிடம் மிகவும் அடக்கமாக வேண்டுதல் செய்தனர். அப்பொழுது சித்தர் ''கட்டை காசிக்கு போக வேண்டுமென்ற விருப்பம்'' என்ற தனது உணர்வை தனக்கே உரிய பாணியில் சுருக்கமாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர் தெரிவித்த விருப்பத்திற்கிணங்க வசதியான அந்தக் குடும்பம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. அது மட்டுமன்றி சாமியாருடன் சேர்ந்து கிறிஸ்தவ குடும்பமான அந்தத் தம்பதிகளும் காசிக்கு புனித யாத்திரை மேற்கொண்டனர். யாத்திரையின் இறுதியில் இடைக்காட்டுச் சித்தர் காசியில் தனக்கு கிடைத்த லிங்கத்துடன் இடைக்காட்டு கிராமத்தை வந்தடைந்தார். இடைக்காட்டில் தான் ஏற்கனவே வழிபட்டுவந்த அந்த முனியப்பர் ஆலயத்தில் இந்த லிங்கத்தை பிரதிஷ்டை செய்து அந்த ஆலயத்திற்கு காசிலிங்கம் என்ற நாமமும் சூட்டி அதனை பயபக்தியுடன் வழிபட ஆரம்பித்தார்கள். மேலும் சித்தர் மூலம் அருள்வாக்கு பெற்று குழந்தைப்பேறு கிடைக்கப்பெற்ற திரு. செல்வரத்தினம் அவர்கள் பிற்காலத்தில் மல்லாகம் நீதவானாகக் கடமை புரிந்ததாகவும் அறியப்படுகிறது. இருந்தபோதும் அந்த தம்பதியினர் அதன்பின்பும் மிகுந்த நன்றி உணர்வுடன் சித்தரை அடிக்கடி வந்து சந்தித்து ஆசி பெற்று சென்றுள்ளதை தற்பொழுது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மூலம் உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

இடைக்காட்டுச் சித்தர் பூசைசெய்து வழிபாடு நடாத்திய ஆரம்பகால முனியப்பர் ஆலயமும் மகிமை பொருந்திய ஆலயமாக விளங்கியுள்ளது. சிவலிங்கம் போன்ற அமைப்புடைய கல்லையே பிரதிஷ்டை செய்து அதற்கு முனியப்பர் எனப் பெயரிட்டே இவர் தினமும் அமுது படைத்து பூசை நடாத்தி வழிபட்டுவந்துள்ளார். அமாவாசை, பௌர்ணமி போன்ற முக்கிய நாட்களில் ஆலயத்தின் வடக்கு திசையில் அமைந்திருந்த கேணியில் கழுத்தளவு தண்ணீரில் நின்று தியானம் செய்வது பின்பு தரையில் ஒரு காலில் நீண்ட நேரம் நின்று தியானம் செய்து வழிபாடு செய்கின்ற வழமையும் இவரிடம் காணப்பட்டுள்ளது. அதன்பின்பு முனியப்பருக்கு பூசை நடாத்தி பிரசாதத்தை பிள்ளைகளுக்கு வழங்கி அவர்கள் மகிழ்ச்சியில் தான் நிறைவடைகின்ற தாய்மை உள்ளமும் இவரிடம் காணப்பட்டுள்ளது. மேலும் பூசை நிறைவுபெற்றபின் சிவலிங்கத்தை சுற்றி நாகபாம்பு படம் எடுத்துநிற்கும் காட்சி, லிங்கத்தை சுற்றி ஒளிப்பிளம்பு வட்டமாக மிளிர்தல் போன்ற காட்சிகளையும் குழந்தைகளுக்கு காட்டிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான மகிமை பொருந்திய அந்த முனியப்பர் ஆலயம்தான் பின்பு சித்தரினால் காசி விசுவநாதர் ஆலயமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆனாலும் பலாலி இராணுவ முகாமிற்கு அருகாமையில் இந்த ஆலயம் அமைந்துள்ளதால் ஏறத்தாழ 40 வருடங்கள் அங்கே பூசைச் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன. வன்செயல் காலத்தில் இந்த ஆலயம் முற்றாக அழிவடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இந்த ஆலயத்தின் பூர்வீகத்தையும் மகிமையையும் இடைக்காட்டு மக்கள் நன்கு அறிந்திருந்ததினால் இந்த ஆலயம் இருந்த இடத்தில் மீண்டும் 48 இலட்சம் ரூபா செலவில் சிறப்பாக தற்பொழுது ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. புதிய காசி விஸ்வநாதர் கோயிலின் கும்பாபிஷேகம் 2011 ஆனி உத்தரத்தில் இடம்பெற்றுள்ளது.

இடைக்காட்டைச் சேர்ந்த ஓய்வுநிலை தபால் அதிபர் நல்லதம்பி, ஓய்வு நிலை ஆசிரியர் கதிரித்தம்பி ஆகியோர் மூலம் இடைக்காட்டுச் சித்தர் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களை எளிதாக அடியேனால் பெறக்கூடியதாகவிருந்தது. 07.03.2018 புதன்கிழமை காசி விசுவநாதர் ஆலயத்தை தரிசித்து நிறைவடையும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது அங்கே ஆரம்ப காலம் தொடக்கம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சில புதுமைகளையும் காணமுடிந்தது. ஆலயத்தின் வடக்குத் திசையில் சித்தர் நீராடிய ஆழமான வற்றாக் கேணி அதே பழமையுடன் இப்பொழுதும் காணப்படுகிறது. அத்துடன் வற்றாத அந்தக் கேணியிலிருந்து அப்பகுதி விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பூரணமாக புனரமைக்கப்பட்ட காசி விசுவநாதர் ஆலயத்திற்கென ஒரு தர்மகர்த்தா சபை செயற்படுகின்றது. அதன் தலைவராகச் செயற்படும் 80 வயதைத் தாண்டிய திருமதி வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை என்ற அடியார் பூரணமான அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் முழுநேரமாக அங்கே செயற்பட்டுக் கொண்டிருப்பதை காணமுடிகிறது. சித்தர் காலத்தில் முனியப்பர் விக்கிரகத்தை நாகபாம்பு சுற்றி நின்று புனிதம் பேணியது போல இப்பொழுதும் அங்கே நல்லபாம்பு (பெரியவர்) ஆலயத்தில் எப்பொழுதும் புனிதம் பேணி காவல் காத்து வருகிறது. பார்வதிப்பிள்ளை அம்மையாரால் பெரியவர் என அழைக்கப்படும் அந்த நல்லபாம்பு அவரின் வாய்ச்சொல்லை செவிமடுத்து செயற்படுகின்ற அதிசயம் இப்பொழுதும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## வைரமுத்து சுவாமிகள்

அலைஅலையாக அடியார்கள் ஒன்றுகூடி அன்னதானக் கந்தனை வழிபட்டு அருளைப்பெற்று செல்வதுபோலவே ஆரம்ப காலத்தில் இருந்தே சித்தர்களும் இந்த ஆலயத்தில் ஒன்றுகூடி வருகின்றனர். இவ்வாறு ஒன்றுகூடுகின்ற பலதரப்பட்ட அருள்நிலையில் காணப்படுகின்ற அருளாளர்கள் எல்லோரும் மௌனமாக தவ வாழ்க்கை வாழ்ந்து தம்மை பக்குவப்படுத்துகின்ற செயற்பாட்டை மட்டுமே செய்கின்றனர் எனக் கூறமுடியாது. சந்நிதியில் கூடுகின்ற சித்தர்களில் சிலர் ஆண்டவன் சந்நிதிதானச் சூழலில் தங்கியிருந்து தம்மை பக்குவப்படுத்துகின்ற அதே நேரம் இன்னும் சிலர் இங்கே கூடுகின்ற அடியார்களுக்கு அன்னதானப் பணி செய்கின்ற செயற்பாட்டையும் ஒரு தவமாகக் கருதி அதனை சிறப்பாகச் செயற்படுத்துகின்ற அருளாளர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு தனது அருள் வாழ்க்கையுடன் அன்னதானப் பணியையும் மேற்கொண்ட மிகச் சிறப்பான அருளாளர்களில் ஒருவர்தான் வைரமுத்து சுவாமிகள். ஆலயத்தின் கிழக்கு வீதி என்று அழைக்கப்படுகின்ற கிழக்கு திசையிலிருந்து ஆலயத்திற்கு வரும் பாதையில் உள்ள இரண்டாவது மடம்தான் அடியார்மடம். இந்த அடியார் மடத்திலிருந்து 1960 ஆம் 70ஆம் ஆண்டு தசாப்தங்களில் வைரமுத்து சாமியார் மிகச் சிறப்பாக தனது பணியை முன்னெடுத்துள்ளதை காணமுடிகிறது.

வைரமுத்து சாமிகள் அடியார்மடத்தில் அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்ட காலத்தில் சிறிதும் பெரிதுமாக 40க்கு மேற்பட்ட அன்னதான மடங்கள் சந்நிதியில் செயற்பட்டுள்ளன. அந்த மடங்களில் அதிக அளவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் சிறப்பாகவும் அன்னதானப் பணி இடம்பெற்ற மடங்களில் வைரமுத்து சாமிகள் செயற்படுத்திய அடியார் மடமும் ஒன்றாகக் காணப்பட்டுள்ளது. மடத்திற்குள் வேல் வைத்து வழிபடுகின்ற வழிபாட்டு அறை ஒன்றும் காணப்பட்டுள்ளது. கோயில் போன்று இங்கே பூசைகள் வழிபாடுகள் நடாத்தப்பட்ட பின்பே அன்னதானச் செயற்பாடுகள் இடம்பெறும். அதுமட்டுமல்ல பூசை அறையில் பூசை நடாத்தப்பட்டபின்பு அந்த தீர்த்தம் பந்தியில் அமர்ந்திருக்கும் அடியார்கள் அனைவருக்கும் தெளிக்கப்படுவதுடன் பஞ்சாலாத்தி தீபாராதனையும் அனைவரும் தொட்டு வணங்குவதற்கு வசதியாக அடியார்கள் அமர்ந்திருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படும். ஆம் அன்னதானச் செயற்பாடு வழிபாட்டுடன் இணைந்த அன்னதானச் செயற்பாடாக இடம்பெறுவதில் வைரமுத்து சாமிகள் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். இதேபோன்று வேறு எங்கும் அன்னதானச் செயற்பாடுகள் இடம்பெறாத நாட்களில் ஆலயச் சூழலில் தங்கியிருக்கும் அடியார்கள் இந்த மடத்தின் வாசலில் ஒன்றுகூடும் வழக்கம் இருந்துள்ளது. வைரமுத்து சாமிகளும் அதனை புரிந்துகொண்டு அங்கே ஒன்றுகூடும் அடியவர்களின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு உடனடியாகவே சமையல் வேலைகளை ஆரம்பித்து அவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதும் இவருடைய வழக்கமாக இருந்துள்ளது.

தினமும் மாலை நேரங்களிலும் மற்றும் ஓய்வாக இருக்கும் காலங்களிலும் தேவார திருவாசகங்கள் மற்றும் கந்தபுராணம் போன்றவற்றை ஆழமாகக் கற்றுணர்ந்து சைவசமய சீலராக வாழ்கின்ற செயற்பாட்டிலும் இவர் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். ஒருபுறம் அடியார்கள் பசி போக்குகின்ற அன்னதானப் பணியை மேற்கொண்ட அதேநேரம் மறுபுறம் தன்னை ஞானநிலைக்கு பக்குவப்படுத்துகின்ற வகையிலும் இவரது அருள் வாழ்க்கை அமைந்திருந்துள்ளது.

இந்த உலகத்தில் இறை தொண்டாக இருந்தாலும் சுய நலம் எதுவுமற்று தூய்மையாக அந்த தொண்டை எத்தனை பேர் மேற்கொள்கின்றனர் என்பது கேள்விக்குரிய விடயம் என்பது ஒரு கசப்பான உண்மையாகும். ஆனால் நாயன்மார்களைப் போல இறை தொண்டிற்காகவே தமது சிந்தனை செயற்பாடு அனைத்தையும் செலவுசெய்து சுயநலம் சிறிதுமின்றி தூய்மையான இறை தொண்டு செய்கின்றவர்களும் இலைமறை காயாக இந்த உலகத்தில் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவராகவே இந்த வைரமுத்து சாமிகள் வாழ்ந்திருக்கிறார்கள். இதனால் அடியவர்களால் மட்டுமல்ல அயலட்டையிலுள்ள பூசகர் குடும்பங்கள் உட்பட அனைவராலும் மதிக்கப்படுகின்ற அருளாளராக இவர் வாழ்ந்துள்ளார்.

ஒரு சொற்ப பணத்தை கூட தனக்கென்றோ தனது எதிர்காலத்திற்கென்றோ சேமித்து வைக்காத, வைக்க விரும்பாத பண்பும் இவரிடம் காணப்பட்டுள்ளது. அதேநேரம் தனது இறுதிக் காலச் செலவிற்கு யாரையும் கடமைப்படுத்தக்கூடாது என்பதும் அவரது விருப்பமாக இருந்ததால் அதற்குரிய ஒழுங்குடனேயே வாழ்ந்துள்ளார். ஆம் தான் படிக்கின்ற கந்தபுராணப் புத்தகத்திற்குள் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக்கால அந்திமச் செலவிற்கென குறிப்பிட்ட தாள் ரூபாய் நோட்டுக்களை வெளிப்படையாகவே பேணி வைத்திருந்துள்ளார்.

வைரமுத்து சாமிகள் சலவைத்தொழில் செய்கின்ற சமுகத்தவராக இருந்தாலும் அன்பே சிவம் என்ற எமது சமய தத்துவத்தினடிப்படையில் அறப்பணி செய்து அறநெறியில் வாழ்ந்ததால் அவர் வாழுகின்றபொழுதே சிறந்த சிவனடியவராகவே மதிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பிரதமபூசகராக இருப்பவர் அ. ஞானசேகரம் ஐயர். இவர் தனது சிறுவயது தொடக்கம் வைரமுத்து சாமிகள் சமாதி அடையும்வரை அவருடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்தவர்களில் ஒருவர். வைரமுத்து சாமிகள் ஒரு அருளாளராக இருந்த அதேவேளை உண்மை, நேர்மை, பிறருக்காக வாழ்தல் போன்ற பண்புகளால் அவர் இன்றும் தனது உள்ளத்தில் நிறைந்திருக்கின்றார் என்பதை அ. ஞானசேகரம் ஐயா உணர்பூர்வமாக அடியேனிடம் எடுத்துக்கூறினார்கள். வைரமுத்து சாமிகளின் சமாதி ஆலயத்தின் தெற்கு திசையில் அமைக்கப்பட்டுள்ளது.

## நடராசா சாமியார் (அடியார் மடம்)

நோய்நொடி உள்ளவர்களுக்கு மட்டுமல்ல குடும்பப் பிரச்சனை உள்ளவர் களுக்கும் அபயமளிக்கும் கடவுள்தான் சந்நிதி முருகன். யாழ்ப்பாணச் சமூகத்தில் குடும்பங்களில் பிரச்சனை ஏற்பட்டு ஒருவர் அக்குடும்பத்தை விட்டு தான் பிரிந்துவாழ நேர்ந்தாலோ அல்லது குடும்பத்தவர் இவரைப் பிரித்துவிட்டாலோ அண்டை அயலவர், சுற்றம் சூழல் என்பதற்கு அப்பால் சம்பந்தப்பட்ட நபர் ஆணோ பெண்ணோ யாருடைய தயவுமின்றி தனது மனம் போன வழியில் வந்து தங்கி வாழ்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும் இடமாக காலம் காலமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் இருந்துவருகிறது. இன்றும் அப்படிப்பட்ட பலர் சந்நிதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வீட்டிற்கு வீடு வாசற்படி என்பது போல ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சனைகள் காணப்படும். ஆனால் பிரச்சனையின் உருவம்தான் வேறுபட்டிருக்கும். இந்த வீட்டில் பிரச்சனை இவ்வாறு காணப்பட்டுள்ளது.

ஆன்மீக ஈடேற்றத்திற்காக கதிர்காம யாத்திரை மேற்கொண்டு திரும்பி வந்தவரை அவரது மனைவி வீட்டில் ஏற்றுக்கொள்ளாததுதான் இங்கே பிரச்சனை. இவ்வாறு ஏற்றுக்கொள்ளாதபொழுது அவ்வாறு யாத்திரை மேற்கொண்டு திரும்பிவந்தவர் என்ன செய்வது? இது ஆன்மீகம் பற்றி கதைப்பவர்களுக்கு ஒரு சங்கடமான விடயம்தான்.

அவ்வாறு ஆன்மீகம் கதைப்பவர்கள் சங்கடப்படக்கூடாது என்பதனாலோ என்னவோ அப்படிப்பட்டவர்களை சந்நிதியானே நாடிச்சென்று அவர்களுக்கு அபயமளித்து அவர்களை சந்நிதிக்கே அழைத்துவரும் திருவிளையாடல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே நடைபெறுகின்றன. அவ்வாறு சந்நிதியானே நாடிச்சென்று அபயமளித்து சந்நிதியானாலேயே சந்நிதிக்கு அழைத்து வரப்பட்ட சாமியார்தான் நடராசா சாமியார்.

பெயர் முருகர் நடராசா. சொந்த இடம் மந்துவிலாகும். 1950 ஆம் ஆண்டு குடாநாட்டிலிருந்து கால்நடையாக கதிர்காம யாத்திரை மேற்கொள்ளும் அடியவர்களுடன் முருகர் நடராசாவும் யாத்திரை மேற்கொண்டு ஆன்மீக நிறைவுடன் வீடு திரும்பியுள்ளார். தாடியுடன் வீடு திரும்பியதால் நடராசாவின் மனைவிக்கு தாடியில் கோபமோ அல்லது அவரது கணவரான நடராசாவில் கோபமோ தெரியாது. போய் தாடியை எடுத்துவிட்டுவா அல்லது வீட்டிற்கு வராதே என கோபமாக பேசிக்கலைத்துள்ளார். நடராசா வீட்டிலிருந்து திரும்பிச் சென்று ஒரு ஆலயத்தில் கவலையுடனும் கலக்கத்துடனும் படுத்திருந்துள்ளார்.

அப்பொழுது நடராசா என்ன யோசிக்கின்றாய்.... எல்லாம் நல்லபடியே நடக்கும். சந்நிதிக்கு போவோம் வாருங்கள் என ஒருவர் வந்து கூறியதுடன் அவரே நடராசாவை சந்நிதிக்கும் அழைத்துவந்துள்ளார். அவ்வாறு அழைத்து வந்தவர் வழியில் ''நீங்கள் முன்னுக்கு போங்கள் நான் வருகின்றேன்'' என அவருக்கு கூறி அவரை ஆற்றுப்படுத்திவிட்டு சென்றுவிட்டார். இவ்வாறு சந்நிதிக்கு வந்து சேர்ந்த நடராசா அப்பொழுது எல்லோருக்கும் அபயமளித்து ஆறுதல் செய்கின்ற செல்லையா ஐயரிடம் சென்று அவருடைய மடத்தில் சில காலம் தங்கியிருந்துள்ளார். அவ்வாறு தங்கியிருக்கும் காலத்திலும் சந்நிதியான் அவருக்கு பல திருவிளையாடல்களை நிகழ்த்தி இறுதியில் அவரை முழுமையாக தன்னுடைய அடியவனாக ஆக்கிக்கொண்டுள்ளார்.

இதன்பின்பு நடராசா அடியார்மடத்தில் தங்கியிருந்து அடியார் மடத்தின் அன்னதானச் செயற்பாடுகளுக்கு தனது பங்களிப்பை செய்துவந்துள்ளார். ஆம் சந்நிதியானால் ஆட்கொள்ளப்பட்டு சந்நிதிக்கு அழைத்துவரப்பட்ட நடராசா சாமியார் சந்நிதியில் ஒன்றுகூடுகின்ற அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கும் பணியினையும் சந்நிதியானை அர்ச்சிப்பதற்கு பூக்கள் கொய்து கொடுக்கும் தொண்டினையும் மிகவும் அடக்கத்துடனும் அமைதியுடனும் மேற்கொண்டு வந்துள்ளார். அவருடைய தொண்டுள்ளம் நிறைந்த செயற்பாடுகள் அவரை சாமியார் என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது. ஆம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமும் ஆலய சூழலும் அவருக்கு முழுமையான நிம்மதியையும் நிறைவையும் கொடுத்துள்ளது. நடராசா சாமியார் 1990 ஆம் ஆண்டு தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் தனது சொந்த கிராமத்திலேயே இறைபதம் அடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் விநாசித்தம்பி



செல்வச்சந்நிதி ஆலயத்தின் மரபுகள் சிறப்புக்கள் தனித்துவங்களை நன்கு அறிந்து உணர்ந்த அருளாளர்களில் மிக முக்கியமான ஒருவர் அருளாளர் விநாசித்தம்பி அவர்களாவார். அது மட்டுமல்ல சந்நிதியானின் திருவருளின் மகத்துவத்தையும் பூரணமாக விளங்கிக்கொண்டு நாளும் பொழுதும் அதனை உள்வாங்கி அனுபவித்து வாழ்ந்த ஒரு அருளாளராகவும் காணப்படுகின்றார். இவற்றுடன் இவர் மேற்கொண்ட இரண்டு பணிகள் சந்நிதியின் அருளாளர்கள் வரிசையில் இவருக்கு தனித்துவமான ஒரு இடத்தை ஏற்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒன்று இவர் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் தல புராணத்தை சரியான உள்ளடக்கத்துடனும் அதேநேரம் அழகான அற்புதமான கவிதை நடையிலும் பாடிய சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவராக கருதப்படுகின்றார். இரண்டு சந்நிதியானுடைய திருவருளையும், மகத்துவத்தையும் பூரணமாக விளங்கிக் கொண்ட ஒருவர். இதனால் இவற்றை எல்லாம் தனது தனித்துவமான சொற்பொழிவுகள் மூலம் சாதாரண அடியவர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் வெளிப்படுத்தி அருள் தொண்டு புரிந்துவந்த அருளாளர்.

அருளாளர் விநாசித்தம்பி ஐயா அவர்களுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் அவருடைய கவிதைத்துறையின் செயற்பாடுகளை பாராட்டி கௌரவ பட்டத்தை வழங்கி கௌரவித்தது யாவரும் அறிந்த விடயம். ஆனால் அருளாளர் விநாசித்தம்பி அவர்கள் சந்நிதியானுடைய தலபுராணத்தை கவிதை வாயிலாக வெளியிட்ட பொழுதே சமுகம் அவருக்குரிய டாக்டர் பட்டத்தை ஏற்கனவே வழங்கிவிட்டதென்றே கூறவேண்டும். அந்தளவிற் சந்நிதியானின் தல புராணத்தில் அவருடைய கவிதைச் சிறப்புக்கள் வெளிப்பட்டிருந்ததை அடியேன் பலர் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகிறது. இதேபோன்று சந்நிதியானின் திருவிளையாடல்களை பக்திச் சுவையுடனும் பக்திப் பரவசத்துடனும் சொல்ல வந்த விடயங்களை பொருத்தமான வசன நடையில் சொல்லி அடியார்களை ஆன்மீகக் கடலில் மூழ்கவைப்பதிலும் அவருக்கு நிகர் அவராகவே காணப்பட்டுள்ளார். கிருபானந்த வாரியார் சொற்பொழிவு போன்று அருளாளர் விநாசித்தம்பி அவர்களுடைய சொற்பொலிவிலும் ஒரு இனிமையும் தனித்துவமும் வெளிப்பட்டதை நாம் காணமுடிந்தது.

நாட்டுக் குழப்பங்கள் ஆரம்பமாகிய 1980ஆம் ஆண்டு தசாப்தத்திற்கு முற்பட்ட காலம். இக்கால கட்டங்கள் தற்பொழுது காணப்படுவது போன்று நவீன பொழுதுபோக்கு சாதனங்கள் அதிகம் அறிமுகமில்லாத காலம். இதனால் ஆலய இரவு உற்சவங்களில் சொற்பொழிவு, வில்லுப்பாட்டு, கச்சேரி, கூத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. அத்துடன் ஆலய வீதிகளில் பெரிய சிகரங்கள் கட்டி அழகு பார்த்தல் வான வேடிக்கை போன்றவையும் இடம்பெற்றன. இத்தகைய செயற்பாடுகள் அக்கால சூழ்நிலையில் எல்லா வயதுப் பிரிவினருக்கும் மகிழ்ச்சியூட்டும் பயனுள்ள பொழுதுபோக்குகளாகவும் அமைந்திருந்தன. தமிழகத்தி லிருந்து கிருபானந்தவாரியார் உட்பட பல பிரபலமான சொற்பொழிவாளர்கள் இங்கே அழைக்கப்பட்டு ஆலயங்களில் சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டன. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆனால் பக்திக்கு தடைகள் ஏற்படாத வகையிலும் சமூக சீரழிவுகளுக்கு இடம்கொடுக்காத வகையிலும் சந்நிதியில் இவ்விதமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஒரு முறை ஆலயத்துடன் தொடர்புடைய ஓர் அன்பர் சின்னமேளத்தை வெளிவீதி மேடையில் ஒழுங்குசெய்துள்ளார். அந்த நிகழ்வு அங்கே இடம்பெற்றாலும் அது முழுமையாக முற்றுப்பெறவில்லை எனக் கூறப்படுகிறது. அத்துடன் சம்பந்தப்பட்ட அன்பருக்கு சந்நிதியான் கனவிலே தோன்றி ''இங்கே எத்தனை சின்னமேளங்கள் ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றைவிட வேறு சின்னமேளங்கள் தேவையா'' என கேட்டதாகவும் அறியமுடிகிறது. அத்துடன் அந்த அன்பருடைய வாழ்வில் இருட் காலம் தோன்றியதாகவும் கூறப்படுகிறது. ஆம் இவ்வாறான கசப்பான நிகழ்வுகள் ஒருசில இடம்பெற்றாலும் அருளாளர் விநாசித்தம்பி ஐயா அவர்களுடைய சொற்பொழிவு போன்ற பயனுள்ள பண்பாட்டோடு ஒத்துப்போகக் கூடிய நிகழ்வுகள் இரவு உற்சவங்களில் சந்நிதியில் சிறப்பாக இடம்பெற்று வந்துள்ளன.

இன்று சந்நிதியில் மட்டுமல்ல வேறு ஆலயங்களிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவது பெருமளவுக்கு அருகிப் போய்விட்டன. ஆனாலும் 1998ஆம் ஆண்டு தொடக்கம் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் ஆச்சிரமத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாராந்த சொற்பொழிவு நிகழ்வுகள் இன்றுவரை அங்கே தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சொற்பொழிவு நிகழ்வுகளில் வருடாந்த மகோற்சவ காலத்தில் அருளாளர் விநாசித்தம்பி அவர்கள் தனது இறுதிக் காலம்வரை இங்கே வந்து தனது அருள் ததும்பும் சொற்பொலி வினை வழங்கிச்சென்றுள்ளார்கள். உடல்நிலை இடம்கொடுக்காவிட்டாலும் அவர் உற்சவ காலத்தில் வந்து தனது சொற்பொழிவினை வழங்கத் தவறுவதில்லை. அப்பொழுது அவர் தான் சந்நிதியானுடைய உள் வீட்டுப் பிள்ளை. சந்நிதியானை நினைக்கும்பொழுதே சந்நிதியான் எனக்கு உடம்பில் தெம்பை ஏற்படுத்தி என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிடுகின்றான் என அடியேனிடம் சிரித்துக்கொண்டே கூறுவார்கள்.

இவர் ஒரு அருளாளராக இருந்த காரணத்தால் மருதர் கதிர்காமர் எவ்வாறு சந்நிதியானால் ஆட்கொள்ளப்பட்டு அருளாளராக ஆக்கப்பட்டார் என்பது போன்ற விடயங்களை மிகவும் தத்ரூபமாக அடியவர்களுக்கு தனது சொற்பொழிவின் பொழுது எடுத்துக்கூறுவார். ஏற்கனவே பூசைச் செயற்பாடுகளில் சிறிதேனும் பரிட்சயமில்லாத மருதர் காதிர்காமருக்கு பூசைச் செயற்பாடுகள், உற்சவ காலச் செயற்பாடுகள் போன்றவற்றில் அவ்வப்பொழுது சந்தேகங்கள் ஏற்படுவது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சாயரட்டைப் பூசை முடிவடைந்து இரவு நேரங்களில் அங்கு நந்திக்கு அருகில் இருக்கும் திண்ணையில் ஒன்றில் இருந்து தனது கண்களை மூடியவாறு கதிர்காமர் தனது சந்தேகங்களை முருகனிடம் கேட்பார். அப்பொழுது எதிர்ப்பக்க திண்ணையிலிருந்து சந்நிதியான் அவற்றிற்கு விளக்கமும் விடையும் கூறுவார். இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அடியார்கள் மெய்மறக்கும் வகையில் பக்திப் பரவசத்துடன் எடுத்துக் கூறுவதில் அருளாளர் விநாசித்தம்பிக்கு நிகர் அவரே எனக் கூறலாம்.

அருளாளர் விநாசித்தம்பி அவர்கள் சந்நிதியில் தங்கி தவவாழ்க்கை வாழா விட்டாலும் எழுத்து வடிவிலான ஆக்கங்கள் மூலமும் மற்றும் பிரசங்கங்கள் மூலமும் சந்நிதியானுடைய அருளையும், சிறப்புக்களையும் பெருமைகளையும் பல்லாயிரக் கணக்கான அடியவர்களுடன் பகிர்ந்துகொள்கின்ற மேம்பட்ட மேலான ஒரு பணியை மேற்கொண்டுள்ளார்கள். அருளாளர் விநாசித்தம்பி அவர்கள் சந்நிதியானுடைய பக்தர் மட்டுமல்ல நாராயணன் பக்தர் என்பதும் யாவரும் அறிந்த விடயமே. அளவெட்டியில் தனது வசிப்பிடத்திற்கு அருகிலேயே அருமையான நாராயணர் ஆலயத்தை ஸ்தாபித்து அதனூடாக அடியவர்களுக்கு மகத்துவமான ஆன்மீகப் பணியை மேற்கொண்டு வந்துள்ளார். இவை எல்லாவற்றையும் விட அவர் மேற்கொண்டுவந்த ஜோதிடப் பணியால் பயனடைந்து மக்கள் பெற்ற வாழ்வியல் உயர்வும் மகத்தானது. அவர் மேற்கொண்ட ஜோதிடப் பணி ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட ஜோதிடப்பணி. அவருடைய ஜோதிடத்தில் ஆன்மீகமும் கலந்திருக்கும். அவர் ஜோதிடத்தின் பொழுது அடியவர்களுக்கு கூறுகின்ற அருள்வாக்கு ஒருவருடைய வாழ்க்கையை ஆற்றுப்படுத்தும் வாக்காக அமைந்திருக்கும். இதனால் பலபேர் திசைமாறிச் செல்லாமல் வாழ்வில் சரியான பாதையில் சென்று பயன்பெற்று இன்றும் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

அருளாளர் விநாசித்தம்பி அவர்கள் மக்கள் மயப்பட்ட சேவைகளை மேற்கொண்ட ஒருவர். அவரை தமது குருவாக ஏற்று வாழ்ந்துவருகின்ற சீடர்களும் காணப்படுகின்றனர். அவர் சமாதியடைந்து விட்டாலும் அவரது அனுக்கிரகங்களும் அற்புதங்களும் அவர் இல்லாத நிலையிலும் தமக்கு நிகழ்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். ஆம் விநாசித்தம்பி அருளாளர் இல்லாவிட்டாலும் அவர் ஆற்றிய ஆன்மீகப் பணிகள் இந்த மண்ணில் நின்று நீடிக்கின்ற பணிகளாக இருப்பதை நாம் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மன் சுவாமிகள்

ஐரோப்பாவில் மத்திய காலம் நிறைவுபெறுகின்ற 15ம் நூற்றாண்டு காலப்பகுதி வரை அங்கே வாழ்ந்த மக்களின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் அவர்களுடைய மதமான கிறிஸ்தவ மதம் பெரும் செல்வாக்கு செலுத்திவந்தது. இதனால் அவர்களிடம் ஆன்மீக நாட்டமும் மிக உயர்வாகவே காணப்பட்டது. மத்திய காலத்தை தொடர்ந்து அங்கே ஏற்பட்ட நவீன மாற்றங்கள் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளால் படிப்படியாக வாழ்க்கை முறையிலும் சமூகத்திலும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. இதனால் 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்ப கண்டத்தில் ஆன்மீக நாட்டமும் பெருமளவு குறைந்து போய்விட்டது. இத்தகைய சூழ்நிலைகளால் ஐரோப்பா கண்டத்தில் ஆன்மீக நாட்டமுள்ளவர்களில் சிலர் தமது ஆராய்ச்சிக்காகவும் ஆன்மீக தேடலுக்காவும் ஆன்மீக நிறைவுக்காகவும் கீழைத்தேசங்களை நாடிவரத் தொடங்கினார்கள். அவ்வாறு ஜேர்மன் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு ஆன்மீக தாகம்கொண்டு வந்தவர்தான் ஜேர்மன் சுவாமிகள். 1907ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டில் பிறந்த இவரது இயற்பெயர் பீற்றர் யேச்சிம் ஸ்கொன் பெல்ட் என்பதாகும்.

1930 ஆம் ஆண்டு தனது 23 வது வயதில் இந்தியாவிற்கு மேற்கொண்ட ஜேர்மன் சுவாமிகளின் ஆன்மீகப் பயணம் 1984ஆம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அவர் சமாதி அடையும்வரை தொடர்ந்து சென்றுள்ளது. இந்து மதம் தொடர்பாகவே இவரது நாட்டம் இருந்ததால் பரந்த பாரத தேசத்தில் இந்து மதம் தொடர்பான பல புனித பிரதேசங்களுக்கும் தல யாத்திரை சென்றுள்ளார். இதேபோன்று இவர் இந்துமதம் தொடர்பான நூல்கள் மூலமாகவும், பல இந்துமத குருமார்கள் மற்றும் சித்தர்களை நேரில் சந்தித்து அவர்கள் மூலமும் இந்து மதம் தொடர்பான பல விடயங்களை அறிவதிலும் இவரது தேடல் அமைந்திருந்தது.

இதன் பின்பு இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் தனது ஆன்மீகப் பயணத்தை தொடர்ந்துள்ளார். அப்பொழுது தென் இலங்கையில் பௌத்த குருவாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த ஜேர்மன் நாட்டவர் ஒருவரையும் இவர் சந்தித்துள்ளார். இதனால் அந்த ஜேர்மன் நாட்டு பௌத்தகுரு மூலம் பௌத்த மதம் பற்றியும் அறிந்து கொண்டுள்ளார். அது மட்டுமன்றி பௌத்த மதத்திற்கு ஊடாகவும் தனது ஆன்மீகத் தேடலை நடாத்தியுள்ளதையும் அறியமுடிகிறது.

ஜேர்மன் சுவாமிகள் இந்தியாவிலிருந்து இவ்வாறு இலங்கைக்கு வந்து இங்கே தங்கியிருந்து செயற்பட்டுக் கொண்டிருந்த பொழுதிலும் இந்தியாவிலுள்ள இந்துமத ஸ்தாபனங்களுடனும் குருமார்களுடனுமான தனது தொடர்புகளை அவர் நிறுத்தவில்லை. இலங்கையில் இருந்துகொண்டே இந்தியாவிற்கும் பல முறை ஆன்மீகப் பயணங்களை மேற்கொண்டு வந்துள்ளார். அப்பொழுதுதான் ஆதிசங்கராச்சாரியார் இவரது ஆன்மீக ஆர்வத்தையும் பக்குவத்தையும் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடலையும் மதித்து அவருக்கு தீட்சை வழங்கியுள்ளார். அத்துடன் கௌரிபாலகிரி என்ற சிறப்பு நாமத்தையும் அவருக்கு சூட்டியுள்ளார்.

இவ்வாறு ஜேர்மன் சுவாமிக்கு ஆதிசங்கராச்சாரியாரினால் வழங்கப்பட்ட தீட்சையும் சிறப்பு நாமமும் அவருடைய ஆன்மீகப் பயணத்தில் அவர் அடைந்த ஒரு மைல் கல்லாக நாம் நோக்கமுடியும். ஆனாலும் அவருடைய ஆழ் மனதில் அவர் அடைய இருந்த ஆன்மீக இலக்கை நோக்கிய அல்லது ஆன்மீக நிறைவை நோக்கிய அவரது ஆன்மீக பயணம் தொடர்ந்துகொண்டே இருந்துள்ளது. இதன் ஒரு அங்கமாகத்தான் ஆன்மீகப் பக்குவம் நிறைந்தவர்கள் வாழுகின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் இவர் பயணம் மேற்கொண்டு இங்கே யாழ்ப்பாணத்திலும் தனது ஆன்மீகத் தேடலை தொடர்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஜேர்மன் சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற ஸ்ரீலங்கா புத்தகசாலைக்கும் சென்றுள்ளார். நூல்கள் மூலமும் தனது தேடலை தொடர்ந்து கொண்டிருந்த ஜேர்மன் சுவாமிகள் அங்கே காணப்பட்ட ஆன்மீக நூல்களை எடுத்து தனது தேடலுக்கு உதவக்கூடிய நூல்களைப் புரட்டிப்பார்த்துக் கொண்டிருந்துள்ளார். அப்பொழுதுதான் அவருடைய ஆன்மீக தேடலுக்கான விடையும் அதற்கான அதிஷ்டமும் அங்கே அந்த இடத்தில் அவரையே நாடிவருகின்ற அற்புதம் ஒன்று அங்கே அரங்கேறியது. ஆம் அங்கே ஒருவர் திடீரென வந்து ஜேர்மன் சுவாமிகள் கையில் வைத்திருந்த நூல்களை பறித்து வீசிவிட்டு அட முட்டாளே நீ தேடும் விடயம் புத்தகத்தில் இல்லை எனக் கூறியதுடன் ''சும்மா இரு'' என்ற அந்த மகா வாக்கியத்தையும் குரு மந்திரமாக அவருக்கு கூறியுள்ளார். ஆம்! அவர்தான் யாழ்ப்பாணத்தின் பெரும் சித்தரான சிவயோக சுவாமிகள்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மிகப்பெரிய சித்தரான சிவயோக சுவாமிகள் இவ்வாறு குருவாக நாடிவந்து ஜேர்மன் சுவாமிகளுக்கு அருளிய அருள்வாக்கும் வழிகாட்டுதலும் நீண்ட காலம் தொடர்ந்துகொண்டிருந்த ஜேர்மன் சுவாமிகளது ஆன்மீகப் பயணத்தை அர்த்தமுள்ளதாக்கியது. அத்துடன் அது அவருக்கு மிகப்பெரிய தெளிவையும் அவர் தொடர்ந்து செல்லவேண்டிய சரியான பாதை யையும் அவருக்கு ஏற்படுத்தியதை நாம் உணரமுடிகிறது. இதன்பின்பு ''சும்மா இரு'' என்ற தேடலுக்கூடாக ஞானநிலையை அடையலாம் என்ற அந்த குரு மந்திரம் தான் அவரது வேத மந்திரமாக மாறியது. ஆம்! ஜேர்மன் சுவாமிகளின் தேடலும் போதனையும், வழிகாட்டலும், வாழ்க்கையும் ''சும்மா இரு'' என்ற மகா வாக்கியம் தொடர்பாகவே அமைந்திருந்ததை காணமுடிகிறது. அத்துடன் ''சும்மா இரு'' என்பது தொடர்பான சைவசமய நூல்களையும் சமயப் பெரியார் களால் எழுதப்பட்ட நூல்களையும் ஆராய்ந்து அறிவதிலும் தேவையான சந்தர்ப்பங் களில் அதனை மற்றவர்களுக்கு உபதேசிப்பதிலுமே இவருடைய வாழ்நாள் கழிந்துள்ளது. மேலும் இவர் தான் தேடிய பாதையை சரியாக இனம்கண்டு கொண்டபின் தனது இருப்பிடத்தை சித்தர்கள் உறைகின்ற இடங்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்திலும் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்திலும் ஏற்படுத்திக் கொண்டுள்ள தையும் காணமுடிகிறது.



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைதி யான இடத்தில் தனக்கென தனியாக பன்னசாலை அமைத்து தங்கியிருந்த காலத்தில் மற்றவர்களுடன் உரையாடுவதை தவிர்த்து மௌனமாக அமர்ந் திருந்து தியானத்தில் ஈடுபட்டதையே நாம் அங்கே காணக்கூடியதாக இருந்தது. ஆனால் அதற்கு முன்பு மயில்வாகனம் சுவாமிகளின் ஆனந்தாச்சிரமத்தில் தங்கியிருந்த காலத்திலும் கதிர்காமத்திற்கு யாத்திரை மேற்கொண்டு அங்கே தங்கியிருந்த காலங்களிலும் ''சும்மா இரு'' என்ற தத்துவத்தினூடாக ஞானநிலை அடைவது பற்றிய கலந்துரையாடல்கள் விவாதங்கள் போதனைகளில் எல்லாம் இவர் தாராளமாக ஈடுபட்டுள்ளதையும் நாம் அறியமுடிகிறது. அத்துடன் ''சும்மா இருக்க சூத்திரம்'' என்ற தொகுப்பு நூல் ஒன்றையும் இவர் வெளியிட்டுள்ளார்.

ஜேர்மன் சுவாமிகள் கதிர்காமத்தில் தங்கியிருந்தபொழுது அங்கே ஒரு அன்பர் மற்றவர்கள் பார்த்து வியக்கின்ற வகையான புறச் செயற்பாடுகளிலேயே அதிகம் ஈடுபடுவதை அவதானித்துள்ளார். அவருடைய பிழையான செயற்பாட்டை அவருக்கு சுட்டிக்காட்டி மனதை ஒருநிலைப்படுத்துகின்ற ''சும்மா இரு'' என்ற மார்க்கத்தினூடாகவே உண்மையான ஈடேற்றத்தை பெறமுடியுமென்பதையும் அந்த அன்பருக்கு எடுத்துக் கூறியுள்ளார். செல்லத்துரை சுவாமிகள் எழுதிய சிவயோக சுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டுதலும் என்ற நூலில் இளைப்பாறிய பொலிஸ் அதிபரான திரு. எஸ். இராசையா என்ற அந்த அன்பர் 1956ஆம் ஆண்டு தனக்கு நிகழ்ந்த அனுபவத்தை பின்வருமாறு அவரே குறிப்பிடுகின்றார்.

அடியேன் 1956ஆம் ஆண்டுக்கு முந்திய சில ஆண்டுகளாக, ஆண்டுதோறும் கதிர்காமத் திருத்தலத்திற்குச் சென்று கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கும் நியமம் பூண்டவனாயிருந்தேன். அவ்வாண்டும் கதிர்காமம் சென்று நீர் கூடப் பருகுவ தில்லையெனவும், வாய் பேசாது மௌனமாயிருப்பதெனவும் சங்கற்பித்துக் கொண்டு விரதமிருந்தேன். அந்நாட்களிலே ஜெர்மன் சாமியும், சந்தசாமியும் கதிர்காமத்தில் தங்கியிருந்தனர். அவர்கள் அடியேனது கடும் நோன்பினைக் கேள்விப்பட்டனராதல் வேண்டும். அவர்களுள் ஜெர்மன் சாமியார் ''நீ வாய்பேசாத விரதம் பூண்டிருக்கிறாயே, உனது மனமும் அசைவற்றுச் சும்மா இருக்கிறதோ'' என்று கேட்டார். எனது மனம் ஓயாது அங்கு, இங்கு, அது, இது என்று அலைவதை நான் ஒப்புக்கொண்டேன். ''சித்தசலனமுமற்றுச் சும்மா இருப்பதே மௌனம்'' என்பதை ஜெர்மன் சாமியார் வலியுறுத்தினார். நான் வாய் பேசாது ஊமையாயிருக்கும் வெளிவேடத்தை விட்டுவிடத் தீர்மானித்தேன். ஜெர்மன் சாமியார் கந்தரநுபூதி என்னும் திருநூலிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே''

எனும் பாடலையும் பாடிக்காட்டினார். அவரது கொன்னைத் தமிழில் அநுபூதிப் பாடலைக் கேட்கச் சுவையாக இருந்தது. அவர் தமது கையிலும் 'சும்மா இரு' எனும் மந்திரத்தைப் 'பச்சைகுத்திப்' பொறித்திருந்தார். ஜெர்மன் சாமி, சந்தசுவாமி எனுமிருவரும் என்னையோர் தனியிடத்திற்கு அழைத்துச் சென்று ஆறுதலாக உரையாடினர்.



1970ஆம் 1980ஆம் ஆண்டு தசாப்தங்களில் ஜேர்மன் சுவாமிகள் ஸ்ரீ செல்வச்சந்நிதி சூழலிலேயே நிரந்தரமாகத் தங்கி தனது தவ வாழ்க்கையை மேற்கொண்டுள்ளார். ஆலயத்தின் தெற்கு திசையில் தென்னந்தோப்புகளுக்கு மத்தியில் மயில்வாகனம் சுவாமிகள் மிகச் சிறப்பாக தனது ஆனந்தாச் சிரமத்தை செயற்படுத்திக் கொண்டிருந்தார்கள். மயில்வாகனம் சுவாமிகளின் ஆதரவும் அரவணைப்பும் ஜேர்மன் சுவாமிகளுக்கு மிகத் தாராளமாகக் கிடைத்துள்ளது. மயில்வாகனம் சுவாமிகள் ஜேர்மன் சுவாமிகளுக்கு சிறந்த சகபாடியாக இருந்ததுடன் ஜேர்மன் சுவாமி களுக்குரிய உணவு வசதி, தங்குமிட வசதி என்பவற்றை சிறப்பாக வழங்கியுள்ளதையும் காணமுடிகிறது.

ஜேர்மன் சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்தில் தங்கியிருந்த சம காலத்தில்தான் பிரித்தானிய நாட்டவரான ஜேம்ஸ் ராம்ஸ் பொதம் (ஆனைக்குட்டி சுவாமிகள்) அவுஸ்திரேலிய நாட்டவரான வரி ஒவன் வின்சன் (நரிக்குட்டி சுவாமிகள்) தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி சுவாமிகள் ஆகியோரும் ஆனந்தாச்சிரமத்தில் தங்கி தமது ஆன்மீகத் தேடலை மேற்கொண்டுள்ளனர். இவர்களுடன் எமது நாட்டைச் சேர்ந்த அருளாளர்கள் பலரும் வழமைபோல அங்கே தங்கியிருந்து செயற்பட்டுள்ளனர். தினமும் மாலை நேரங்களில் இவர்கள் எல்லோரும் ஆன்மீகம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தலைப்புகளின்கீழ் கருத்துப் பரிமாற்றங்கள் விவாதங்கள் என்பவற்றில் எல்லாம் ஈடுபடுவது அவர்களது வழமையான செயற்பாடுகளாக இருந்துள்ளன. தற்பொழுது சந்நிதியான் ஆச்சிரமத்தின் நிர்வாகியான மோகனதாஸ் சுவாமிகள் அந்த காலகட்டத்தில் ஆனந்தாச்சிரமத்தில் ஒரு தொண்டராகச் செயற்பட்டுக் கொண்டிருந்ததினால் அவர் மூலமும் நாம் பல தகவல்களை பெறக்கூடியதாக உள்ளது. இந்தக் காலகட்டத்திலும் ஜேர்மன் சுவாமிகள் ''சும்மா இரு'' என்ற தனது தாரக மந்திரம் தொடர்பாகவே தனது காலத்தையும் நேரத்தையும் செலவு செய்துள்ளார். அது மட்டுமல்ல ''சும்மா இரு'' என்பது தொடர்பாக சில நூல்களையும் இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டத்தில் வெளியீடு செய்துள்ளார். ஆனாலும் அவற்றை தற்பொழுது எம்மால் பெறமுடியாதிருப்பது வருந்தத்தக்க விடயமே.

ஜேர்மன் சுவாமிகள், பிரித்தானிய நாட்டவரான ஆனைக்குட்டிசுவாமிகள் போன்றோர் ஆலயத்தின் தெற்கு திசையில் பரந்த புற்தரையாகவும் பறவைகள் சரணாலயமாகவும், இயற்கை காடுகள் நிறைந்த பகுதியாகவும், நீர் நிலை பரந்துவிரிந்து காணப்பட்ட பகுதியாகவும் காணப்பட்ட அந்த எழில் நிறைந்த பகுதியில் உலாவந்ததுடன் தனிமையில் தியான நிலையில் இருந்து தமது காலங்களையும் போக்கியுள்ளனர்.



ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய பகுதிகளில் எடுக்கப்படும் மாபிள்பாணம், திராட்சைபாணம் என்பவற்றை அருந்துவது போல பனையில் இருந்து எடுக்கப்படும் பனம் பாணத்தையும் தனது உடல் ஆரோக்கியத்திற்காக அருந்தியுள்ளார். இவற்றை எல்லாம் வயிற்றை நிரப்பும் சூழலில் உள்ள உணவு களாக மட்டுமே கருதி இவற்றை உட்கொண்டதாக அவருடன் பழகிய பல அன்பர்கள் மூலம் அறிய முடிகிறது. ஆனால் சந்நிதியானை முழுமையாக சரணடைந்த பின்பு தூய சைவ உணவை உண்பவராக மாறியுள்ளார். தீக்குளிப்பு நடைபெறும் சந்தர்ப்பங்களில் தீக்குள் இயல்பாக நடந்து செல்வது மட்டுமல்ல கைகளால் நெருப்பை அள்ளி உடல் முழுவதும் கொட்டுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அவரது இயல்பாக இருந்துள்ளது.

இவ்வாறு ஆரம்பத்தில் மயில்வாகனம் சுவாமிகளின் ஆனந்தாச்சிரமத்தில் இருந்து செயற்பட்டாலும் காலப்போக்கில் ஜேர்மன் சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்திற்கு அண்மையாக வடக்குத்திசையில் தனக்கென தனியான ஒரு பன்னசாலையை அமைத்துள்ளார். பிற்காலத்தில் அதனையே தனது தவ வாழ்க்கைக்குரிய இருப்பிடமாகக் கொண்டு தான் சமாதி அடையும்வரை அவர் அங்கேயே வாழ்ந்துள்ளார். ஐரோப்பா கண்டத்தை சேர்ந்தவர், வெள்ளைத்தோல் உள்ள ஒருவர் தனிக் கோவணத்துடன் தவ வாழ்க்கை வாழ்வதென்பது பலருக்கு வியப்பாகவே அமைந்திருக்கும் என்பதை நாம் இலகுவாக ஊகிக்க முடியும். இதனால் சிறுவயதினர் தொடக்கம் வயதிலும் ஆன்மீகத்திலும் முதிர்வு பெற்றவர்கள் வரை பலதரப்பட்டவர்களும் ஜேர்மன் சுவாமிகளது அந்த அழகான அமைதியான பச்சைத் தாவரங்கள் படர்ந்திருந்த பசுமையான பன்னசாலைக்குச் சென்று அவரையும் அந்த எழில் கோலத்தையும் கண்டு வந்துள்ளனர். அவ்வாறு சென்ற பலர் அந்த பசுமையான அனுபவத்தை இன்றும் எம்முடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஜேர்மன் சுவாமிகள் தனது பன்னசாலையில் எப்பொழுதும் மௌனமாக சிந்தனையில் மூழ்கியிருப்பார். தனது கையில் ''சும்மா இரு'' என்ற தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகத்தை பச்சை குத்தியிருந்தார். அவருடன் உரையாட முயற்சிப்பவர்களுக்கு தனது பதிலாக ''சும்மா இரு'' என்று பச்சை குத்தியிருக்கும் தனது கையையே காண்பிப்பது அவரது வழமையாகும். அடியேன் அப்பொழுது ஒரு சில தடவைகள் ஜேர்மன் சுவாமிகளை அவரது பன்னசாலையில் சென்று பார்த்திருக்கிறேன். அடியேன் அவருடன் உரையாட முயற்சிக்காவிட்டாலும் அங்கே அவருடன் உரையாட முயற்சித்தவர்களுக்கு அவருடைய பதில் எவ்வாறு அமைந்திருந்தது என்பதை நன்கு அவதானித்திருக்கின்றேன்.

ஆனாலும் ஆன்மீக பக்குவமும் பரந்த சிந்தனையுமுள்ள அன்பர்களுடன் ஜேர்மன் சுவாமிகள் மிகவும் நெருக்கமாக உரையாடி பழகிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. தொண்டைமானாற்றை சேர்ந்தத நில அளவையாளர் அம்பிகை பாகனுடன் ஒரு குடும்ப நண்பர்போல மிக நெருக்கமாக ஜேர்மன் சுவாமிகள் பழகியுள்ளார். ஈரப்பெரிய குளத்தில் அமைந்திருந்த அவரது விவசாய பண்ணைகளுக்கு சென்று அங்கே சிறிது காலம் தங்கியும் வந்துள்ளார்.

மானிட வாழ்வில் ஆன்மீகப் பயணம் உட்பட இலட்சியத்துடன் முன்னெடுக்கப்படுகின்ற எந்தவகையான பயணமாக இருந்தாலும் அவற்றில் வேதனைகளும் சோதனைகளும் தவிர்க்கமுடியாதவை என்பதுதான் வாழ்வியல். தமிழகத்தின் முன்னால் முதலமைச்சர் அமரர் எம்.ஜி. இராமச்சந்திரன் பலரும் வியக்கத்தக்க புகழுடனும் மதிப்புடனும் வாழ்ந்த அதேநேரம் மக்கள் மனங்களை வென்ற ஒரு உன்னதமான தலைவர். அவரது வாழ்க்கைப் பாதையின் அழகான தருணங்களை இன்றும் பலர் புதிதுபுதிதாக வெளிப்படுத்திக்கொண்டே இருக்கின்றனர். மேலும் அவர் இறைபக்தி உள்ளவராகவும் முருகப்பெருமானை வழிபடுகின்ற முருக பக்தராகவும் தியானத்தின் மூலம் மன அமைதி காண்பவராகவும் வாழ்ந்துள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக மிகச்சிறந்த மனிதநேயம் கொண்ட மனிதனாக வாழ்ந்துகாட்டிச் சென்றுள்ளார். அதே நேரம் அவரது வாழ்விலும் வேதனைகள் சோதனைகள் நிறைந்த பல சம்பவங்களையும் ஆதாரங்களுடன் சிலர் வெளிப்படுத்துவதை காணமுடிகிறது. எம்.ஜி. இராமச்சந்திரன் வாழ்க்கைப் பாதையில் மட்டுமல்ல ஆன்மீகத் துறையில் எல்லோராலும் அறியப்பட்ட இராமகிருஷ்ண பரமகம்சர். ரமண மகரிஷி ஆகியோரும்கூட தத்தமது வாழ்க்கைப் பாதையில் பல சோதனைகளைக் கடந்து வந்துள்ளதையே நாம் காணமுடிகிறது. இதேபோன்று ஜேர்மன் சுவாமிகளும் ஞான நிலையை அடைவதற்காக அவர் ஜேர்மன் நாட்டிலிருந்து ஆன்மீகத் தேடலை ஆரம்பித்த காலம் தொடக்கம் சந்நிதியில் சமாதி அடையும் வரை பொறுமையுடன் அவர் மேற்கொண்ட மிக நீண்ட ஆன்மீகப் பயணத்தை நாம் ஒரு சாதாரண பயணமாக கருதிவிடக்கூடாது. ஞானத்தை உண்மையாக தேட விரும்புகின்றவர்களுக்கு அவரது நீண்ட சலிப்பற்ற ஆன்மீகப் பயணம் ஒரு நல்ல வழிகாட்டுதலாக அமைந்துள்ளது.

ஜேர்மன் சுவாமிகள் ஐரோப்பா கண்டத்தில் பிறந்தாலும் பாசமும் பண்பும் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்துள்ளதையும் அறியமுடிகிறது. ஜேர்மன் சுவாமிகளின் இறுதிக்காலம் நெருங்குகின்ற காலகட்டத்தில் இவரது சகோதரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே இவரது பன்னசாலைக்கு வந்து இவரை ஜேர்மன் நாட்டிற்கு வருமாறு அழைத்துள்ளார். ஆனால் ஜேர்மன் சுவாமிகள் இந்த மானிட வாழ்வில் சரியான பாதையில் சரியான பயணத்தை தான் மேற்கொண்டிருப்பதை உணர்ந்துவிட்ட நிலையில் சகோதர பாசம் அவருக்கு ஒரு பொருட்டாக தெரிந்திருக்க முடியாதல்லவா? ஆம் அவர் தனது சகோதரியின் விருப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தாயாக, தந்தையாக, சகோதரியாக எல்லாமாகவும் தன்னுடன் சந்நிதியான் இருப்பதை உணர்ந்துவிட்ட நிலையில் அவருக்கு வேறு யாரும் பெரிதாகத் தெரியவில்லை. மேலும் அவர் கீழைத்தேசங்களுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொண்டுவந்த காலப்பகுதி இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியாகவும் இருந்துள்ளது. அக் காலகட்டத்திலும் அதற்குப் பின்னரும் கூட, அவர் பல சோதனைகளையும் வேதனைகளையும் கடந்தே அவர் தனது சரியான ஆன்மீகப் பாதையையும் சரியான இடத்தையும் கண்டறிந்து சந்நிதியில் தனது தவவாழ்க்கையை மேற்கொண்டுள்ளார். இதனால் சந்நிதியில் சமாதி அடைவதே அவரது உறுதியான முடிவாக இருந்துள்ளதில் வியப்பேதும் இருக்க முடியாதல்லவா. இதற்கு முந்திய பிறப்புகளில் சந்நிதியானுடன் இவருக்கிருந்த பூர்வபுண்ணிய தொடர்புகளும் இவரது இந்த பிறவியில் தொடர்புபட்டிருப்பதாகவே நாம் கருதவேண்டியுள்ளது.

மேலும் றோஸ் என்ற பெயருடைய அவருடைய சகோதரி இறுதிக் காலத்தில் அவரிடம் வந்தபொழுது தன்னுடன் அவரை சிறிதுகாலம் தங்குமாறு கூறியுள்ளார். அவர் கூறியதுபோல அவரது சகோதரி இங்கே தங்கிநிற்கும் காலத்தில்தான் ஜேர்மன் சுவாமிகள் சமாதியடைந்தார்கள்.

## ஆனைக்குட்டி சுவாமிகள் (ஜேம்ஸ் ராம்ஸ் பொதம்)

ஆனைக்குட்டி சுவாமிகள் பிறந்து வளர்ந்து கல்வி கற்ற நாடு பிரித்தானியா. ஆனைக்குட்டி சுவாமிகள் எனவும் சந்த சுவாமிகள் எனவும் அழைக்கப்பட்ட ஜேம்ஸ் ராம்ஸ் பொதம் பிரித்தானியாவில் செல்வமும் செல்வாக்குமுள்ள பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவர். அதுமட்டுமன்றி பிரித்தானியாவின் பிரபல்யமான பல்கலைக்கழகமான ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் அவர் கல்விபயின்று அங்கே தத்துவஞானத் துறையில் பட்டமும் பெற்றுள்ளார். அத்துடன் இலங்கையில் மகாதேசாதிபதியாக இருந்து 1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பை வழங்கிய சோல்பரி பிரபுவின் மகனும் கூட. இவ்வளவு பின்புலங்கள் இருந்தபொழுதிலும் சமூகசேவை போன்ற அறச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் இவருக்கு இளமையிலிருந்தே நாட்டம் இருந்துள்ளது. இந்த நாட்டம் இவரை ஆன்மீகத்தின் பாலும் ஈர்த்துள்ளது. ஜேர்மன் சுவாமிகள் அருளாளராக வாழ்ந்த 1960ஆம் ஆண்டு கால தசாப்த காலத்தில் ஜேம்ஸ் ராம்ஸ் பொதம் என்ற இயற்பெயர் கொண்ட பிரித்தானிய நாட்டவரான ஆனைக்குட்டி சுவாமிகளும் சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்துள்ளார். இவருக்கு சந்த சுவாமிகள் என்ற இன்னொரு பெயரும் விளங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பிரித்தானியாவில் தனது பட்டப்படிப்பை முடித்த பின்பு இவரைப் போல சமூக சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்ணை திருமணம் புரிந்துள்ளார். ஆனாலும் முதற் பிரசவத்தின் பொழுதே தாயும் குழந்தையும் தவறுகின்ற துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு இளமையிலேயே இவர் பெரிய துன்பத்தை எதிர்நோக்கியதாலோ என்னவோ இவருடைய மனம் ஆன்மீகத்தின்பால் நாட்டம் செலுத்தியுள்ளது. இந்தநிலையில் இவரும் ஜேர்மன் சுவாமிகள் போல பிரித்தானியாவிலிருந்து இந்தியாவிற்கு ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு வந்துள்ளார். இந்தியாவில் இவர் சமய சம்பந்தமான முக்கியமான இடங்களுக்கு சென்று தரிசித்து ஆன்மீக விடயங்களில் ஈடுபட்டுள்ளதை அறியமுடிகிறது. பின்பு இலங்கைக்கும் இவர் வந்துள்ளார். இங்கே இவரைப் போன்று ஆன்மீக நாட்டமுள்ள ஜேர்மன் சுவாமிகள் போன்றவர்களின் தொடர்புகள் இவருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த தொடர்புகள் அவருக்கு அவர் போகவேண்டிய அவரது பயணம் பற்றிய சரியான ஒரு தெளிவை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல தனது ஆன்மீகப் பயணத்திற்குரிய சரியான பாதையை காட்டக்கூடியவர் சிவயோகசுவாமிகள்தான் என்பதையும் உணர்ந்து சிவயோக சுவாமிகளை நாடிச் சென்றுள்ளார். யோக சுவாமிகளும் இவரை அரவணைத்து தனது சீடனாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிரித்தானிய நாட்டவரான ஆனைக்குட்டி சுவாமிகளிடம் ஆன்மீக தேடலுக் கூடாக தன்னை பக்குவப்படுத்த வேண்டுமென்ற தாகம் இருந்துள்ளது. அதற்காகவே அவர் கீழைத்தேசங்களை நாடிவந்திருந்தார். அதேநேரம் ஔவைப்பிராட்டியார் குறிப்பிட்டது போன்று அரிதாகக் கிடைத்துள்ள இந்த மானிடப் பிறப்பை முழுமை யடையச் செய்வதற்கு முடிந்தவரை முடிந்தவற்றை மற்றவர்களுக்கு செய்ய வேண்டும் என்ற துடிப்பும் இளமையிலிருந்தே இவரிடம் வெளிப்பட்டுவந்துள்ளது. ஆம் ஞானநிலையை அடைதல், மற்றவர்களுக்கு சேவை செய்தல் இந்த இரண்டு செயற்பாடுகளிலும் ஆனைக்குட்டி சுவாமிகள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்ததை அவரது வாழ்க்கைப் பயணத்திலிருந்து நாம் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

இலங்கைக்கு வந்த இவர் ஆரம்பத்தில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் ஜேர்மன் சுவாமிகள், அவுஸ்திரேலியா நாட்டவரான நரிக்குட்டி சுவாமிகள் போன்றவர்களுடன் தங்கியிருந்து தனது ஆன்மீகத் தேடலுக்கான அத்திவாரத்தை ஏற்படுத்தியுள்ளார். அதன் பின்பு யோக சுவாமிகளுடன் அவரது கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் தங்கியிருந்து அவரைக் குருவாகக் கொண்டு தன்னை ஞான நிலைக்கு பக்குவப்படுத்தியுள்ளார். யோகசுவாமிகள் இவருக்கு தெரிந்த பைபிள் வாசகங்களை உதாரணங்களாகக் காட்டியே இவருக்கு ஆன்மீக தெளிவை ஏற்படுத்தியுள்ளார். அதேநேரம் ஆனைக்குட்டி சுவாமிகளிடம் காணப்பட்ட ஆணவம் அகங்காரம் என்பவற்றைக் களைவதற்காக அவருக்கு கடுமையான சோதனை களையும் நடாத்தியே அவரை புடம்போட்டு எடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு தனது குருவான யோக சுவாமிகளின் வேண்டுதலை ஏற்று செங்கல்லடி சிவத்தொண்டன் நிலையத்திற்கு சென்று அங்கே 12 ஆண்டுகள் வரை பணி புரிந்துள்ளார். இதன்பின்பு மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி கைதடியில் மார்க்கண்டு சுவாமிகளுடன் சில காலம் தங்கியிருந்து தனது ஞானநிலையை மேலும் மேம்படுத்தியதையும் அறியமுடிகிறது. அதன்பின்பு இவர் தனது சொந்த நாடான பிரித்தானியாவுக்கு திரும்பிச் சென்று அங்கே ஆன்மீக சேவைகளை தொடர்ந்துள்ளார்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அடியார்கள் தாம் விரும்பிய முறையில் விரும்பியவாறு வழிபட்டு திருவருளைப் பெற்றுக்கொள்வது போல இங்கே வாழ்ந்த சித்தர்களும் அருளாளர்களும் தாம் விரும்பிய முறையில் விரும்பிய பாதையில் சென்று தம்மை பக்குவப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு சூழல் இங்கே நீண்டகாலமாக இருந்துவருவதை காணமுடிகிறது. இவ்வாறான ஒரு சூழல்தான் பிரித்தானிய சுவாமிகளான ஆனைக்குட்டி சுவாமிகளுக்கும் ஆரம்பத்தில் மிகவும் தேவையாக இருந்துள்ளது. இவ்வாறு அவர் விரும்பியது போன்ற ஒரு சூழல் அவருக்கு சந்நிதியில் ஆனந்தாச்சிரமத்தில் மிகவும் வாய்ப்பாக அமைந்துள்ளதை நாம் நன்கு உணரமுடிகிறது. ஆனந்தாச்சிரமத்தில் ஒழுங்குடனும் ஒழுக்கத்துடனும் நடைபெற்றுக் கொண்டிருந்த அன்னதானப் பணியும் அதனைச் செயற்படுத்திய மயில்வாகனம் சுவாமிகளின் செயற்திறனும் பிரித்தானிய நாட்டவரான ஆனைக்குட்டி சுவாமிகளுக்கு நிறைவைத் தந்துள்ளது.

அதேநேரம் ஆனந்தாச்சிரமத்தில் சமகாலத்தில் அவருடன் தங்கியிருந்த ஜேர்மன் சுவாமிகள், நரிக்குட்டி சுவாமிகள், பன்றிக்குட்டி சுவாமிகள் போன்றோருடன் ஆன்மீகம் தொடர்பான கலந்துரையாடல்கள் விவாதங்களில் ஈடுபட்டதால் அவை அவருக்கு சைவசமயம் தொடர்பான அறிவையும் அதே நேரம் சைவசமயம் தொடர்பான தேடலுக்கான ஆர்வத்தையும் அவருக்கு ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் சந்நிதியில் தங்கியிருந்த காலத்திலும், கதிர்காம யாத்திரை மேற்கொண்ட காலங்களிலும் இந்த நாட்டின் சைவ ஆலயங்கள், வழிபாட்டு முறைகள், மக்கள் வாழ்க்கை முறை, அவர்கள் பழக்கவழக்கங்களை எல்லாம் நன்கு அறிந்து கொண்டுள்ளார். ஆம் ஆனைக்குட்டி சுவாமிகள் சந்நிதியில் வாழ்ந்த தவ வாழ்க்கைதான் அவர் எமது சமயத்தினூடாக தொடர்ந்து மேற்கொண்ட அவரது ஆன்மீக தேடலுக்கும் அவர் மேற்கொண்ட தொண்டுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் எல்லாவற்றிற்கும் அத்திவாரமாக அமைந்தது எனக் கூறலாம். மேலும் அப்பொழுது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த தொண்டைமானாறு கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீஸ்காந்தராஜா அவர்கள் ஆனைக்குட்டி சுவாமிகளுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். ஆன்மீகத்தில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்த நீதிபதி ஸ்ரீஸ்காந்தராசாவின் தொடர்பு ஆனைக்குட்டி சுவாமிகளின் ஆன்மீகப் பாதைக்கு பெரிதும் பயனுடையதாக அமைந்திருந்தது.

மயில்வாகன சுவாமிகளின் ஆனந்தாச்சிரமத்தில் வழமைபோல சைவசமயம் தொடர்பான கலந்துரையாடலில் ஆனைக்குட்டி சுவாமிகளும் அவரது சகபாடிகளும் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர். இந்த கலந்துரையாடலை செவிமடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த புகைப்படம் எடுப்பதில் ஆர்வமுள்ள சாமி என்ற அன்பர் அவர்களிடம் படம் எடுப்பதற்கு அனுமதி கேட்டுள்ளார். அவர்களும் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். அவ்வாறு அவர் எடுத்த படத்தையே இங்கே காண்கிறீர்கள்.



யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை தினச் சிறப்பு இதழாக இந்து ஒளி என்ற நூல் வெளியிடப்பட்டது. அதில் சிவத்தொண்டன் சபையினர் ஆனைக்குட்டி சுவாமிகள் எழுதிய நூல்கள் தொடர்பான விபரங்களை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனைக்குட்டி சுவாமிகள் செங்கல்லடி சிவத்தொண்டன் நிலையப் பண்ணையில் தங்கியிருந்தபொழுது யோகர் சுவாமிகளின் நற் சிந்தனைகளை மொழிபெயர்த்து words of our master என்ற நூலையும் அதன் பின்பு அவர் பிரித்தானியாவுக்கு சென்ற பின்பு இந்த நூலின் திரட்டிய இன்னொரு நூலாக Thought for Daily meditation என்ற நூலையும் எழுதியுள்ளார். இவற்றை விட A recapitulation of the Lord's prayer என்ற நூலையும் எழுதியுள்ளார்.

## நரிக்குட்டி சுவாமிகள்

இவர் அவுஸ்திரேலியா நாட்டில் பிறந்து அங்கே கல்வி கற்று வளர்ந்தவர். இவருடைய இயற்பெயர் வரி ஓவன் வின்சர் என்பதாகும். எமது சைவசமய வேதாந்த உண்மைகளாலும் கீழைத்தேச வாழ்வியல் கலாசாரம் பற்றிய சிறப்புக்களாலும் ஈர்க்கப்பட்டு அவற்றை பற்றி மேலும் அறிந்துகொள்ளும் நோக்கத்துடன் இவருடைய கீழைத்தேச பயணம் அமைந்துள்ளது. 1930ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் பிறந்தவர். இளைஞராக இருக்கும் பொழுதே அதாவது 1950ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்துள்ளார். ஆரம்பத்தில் குட்டி என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர் சந்நிதியில் இருக்கும்பொழுது நரிக்குட்டி சுவாமிகள் என அழைக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியா நாட்டில் பிறந்து சந்நிதியில் ஒரு அருளாளராக சித்தராக வாழ்ந்த நரிக்குட்டி சுவாமிகள் தனது தவவாழ்க்கையை முழுநிறைவுடன் நிறைவடைய செய்வதற்கு சந்நிதியில் வாழ்ந்த காலம் அவருக்கு எல்லா வகையிலும் அத்திவாரமாக அமைந்திருந்தது. அவர் சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்த காலத்தில் தமிழையும் வேதாந்த உண்மைகளையும் கற்று தேறியதுடன் அவர் கீழைத்தேசங்களில் காணவிரும்பிய மக்களின் எளிமையான அமைதியான வாழ்க்கை முறை, பசித்தோருக்கு உணவளிக்கும் அன்னதானச் செயற்பாடு, தர்மநெறி சார்ந்த வாழ்க்கை முறை, ஆண்டவன் சந்நிதியில் நிம்மதியும் நிறைவும் அடையும் வாழ்வியல் என்பவற்றை எல்லாம் இங்கே சந்நிதியில் நேரடியாக கண்டு உணர்ந்து கொண்டமை அவருக்கு பூரண நிறைவை வழங்கியுள்ளது.

இவ்வாறு நரிக்குட்டி சுவாமிகள் சந்நிதியில் வாழ்ந்த பொழுது நேரடியாகக் கண்டு உணர்ந்த எமது சமய உண்மைகளும் சிறப்புக்களும்தான் அவரது அடுத்த கட்ட ஞானநிலைக்கு ஏற்றிச்செல்லும் படிக்கட்டுகளாக அமைந்திருந்தன. ஆலயத்தின் தெற்குத் திசையிலம் மயில்வாகன சுவாமிகளின் ஆனந்தாச்சிரமத் திற்கும் அண்மையாகவும் இவரும் ஜேர்மன் சுவாமிகள் போல தனக்கென தனியாக பன்னசாலை அமைத்து அங்கேயே தவவாழ்க்கை வாழ்ந்துள்ளார்.

பிரித்தானிய நாட்டவரான ஆனைக்குட்டி சுவாமிகளைப் போல அவுஸ்திரேலியா நாட்டவரான நரிக்குட்டி சுவாமிகளும் ஆரம்பத்தில் ஜேர்மன் சுவாமிகளுடன் கதிர்காமத்திலும் பின்பு சந்நிதியிலும் தங்கியிருந்து தமது தவ வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல பின்பு யோக சுவாமிகளை தனது குருவாகக் கொண்டு தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார்கள். யோக சுவாமிகள் சமாதி அடைந்த பின்பு பாரத தேசத்திற்கு ஆன்மீக யாத்திரை மேற்கொண்டு புண்ணிய தலங்களை தரிசித்துள்ளார்கள். இறுதியாக திருவண்ணாமலைக்கு சென்ற அவரது ஆன்மீகப் பயணம் அங்கேதான் நிறைவடைந்துள்ளது. 1994 ஆம் ஆண்டு அவர் அங்கேயே சமாதி அடைந்துள்ளார்.

## பன்றிக்குட்டி சுவாமிகள்

ஜேர்மனி, பிரித்தானியா, அவுஸ்திரேலியா ஆகிய பிற நாட்டவர்கள் சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்த சம காலத்தில் தென் இந்தியாவைச் சேர்ந்த தமிழரான பன்றிக்குட்டி சுவாமிகளும் இவர்களைப் போல சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார். ஆரம்பத்தில் ஆனந்த ஆச்சிரமத்தில் இவர்களுடன் தங்கியிருந்த பன்றிக்குட்டி சுவாமிகள் பின்பு அவர்களைப் போலவே தனியாக பன்னசாலை அமைத்து தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார். இந்தியாவிலிருக்கும் பொழுது கனவுகள் காட்சிகள் மூலம் சந்நிதியான் இவருக்கு வெளிப்படுகின்ற நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவ்வாறு நடைபெற்ற நிகழ்வுகளால் சந்நிதிச் சூழலுக்கு ஈர்க்கப்பட்டு சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டைச் சேர்ந்த இந்த நான்கு அருளாளர்களும் சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்து சமயப் பிரசாரங்களில் ஈடுபட்டமை அக்காலகட்டத்தில் ஆலயத்திற்கு வந்துசெல்பவர்களது கவனத்தை மட்டுமன்றி அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது. தேசிய பத்திரிகையாக கொழும்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த வீரகேசரிப் பத்திரிகையிலும் இந்த செய்தி வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 1965ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ம் திகதி இந்தச் செய்தி வீரகேசரிப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. ஆற்றங்கரையான் நூலிலும் மீள இடம்பெற்ற அந்தச் செய்தியை இங்கேயும் அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

## செல்வச்சந்நிதியில் நால்வர்:

*''உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து கூடியிருக்கும் சுவாமிகளால் சைவசமயத்தவர்களுக்குப் பெருமையும் புகழும் உண்டாகிறது. இவர்களில் நால்வர் செல்வச்சந்நிதிக் கந்தன்மேற் கொண்ட காதலினால் மயக்குண்டு அவ்விடமே வாசஞ் செய்கின்றனர்.*

*கௌரிபாலா என்றழைக்கப்படும் சுவாமி, இவர் ஜேர்மன் தேசத்தவர். இவர் சைவசமய அடிப்படைக் கருத்துக்களை நன்கு தெரிந்துகொண்டு சமயப் பிரசாரமும் செய்துவருகின்றார்.*

*பெருமைப்படக்கூடிய மற்றொரு சுவாமி இலங்கையின் முன்னைநாள் கவர்னராகவிருந்த சோல்பரிப் பிரபுவின் மகனாவார். இவரை ஆனைக்குட்டிச் சுவாமியென்று அழைப்பார்கள். இவரைப் பற்றி அறியாத சைவசமயத்தவர் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள் என்று கூறலாம். இவர் கௌரிபாலா சுவாமி யவர்களின் தொடர்பால் சைவசமயத்தில் பற்றுக்கொண்டு துறவு பூண்டதாக அறியமுடிகின்றது.*

*இவர்களுள் ஆஸ்திரேலியா தேசத்தைச் சேர்ந்த நரிக்குட்டி என்றழைக்கப் படும் சுவாமியும் தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி என்றழைக்கப்படும் சுவாமியும் இருக்கின்றனர். இவர்கள் தங்களுக்கெனத் தனித்தனியே அழகான சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டு அவற்றை மிகவும் சுத்தமாக வைத்து வாழ்கின்றனர். இக் குடிசைகள் கோவிலுக்குத் தென்புறமாகவுள்ள ஆனந்தாச்சிரம மடத்திற்கருகில் அமைந்துள்ளன. இவர்கள் நால்வரும் தங்களுக்குள் சைவ சமயத்தைப் பற்றிக் கலந்துரையாடியும் சைவ பக்தர்களோடு அன்பு ததும்பச் சம்பாஷித்தும் சைவசமயப் பற்றை வளர்த்தும் வருகின்றனர்''*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகேசு சுவாமிகள்



சந்நிதியில் எமது காலத்தில் வாழ்ந்த சித்தர்களில் மிகவும் பக்குவநிலை அடைந்தவரும் அடியவர்களால் நன்கு அறியப்பட்ட ஒரு சித்தராகவும் வாழ்ந்தவர் தான் முருகேசு சுவாமிகள். தேவையும் சூழ்நிலைகளும் பொருந்துகின்ற சந்தர்ப்பங்களில் சித்துக்கள் பல நிகழ்த்தி சித்தர்களுக்குரிய இலக்கணத்துடனும் இவரது வாழ்வியல் அமைந்திருந்ததை காணமுடிகிறது. ஆனால் வேட்டி, சால்வை, உருத்திராக்கம் மாலை அணிந்து ஒரு சராசரி அருளாளராகவே இறுதிவரை வாழ்ந்துவந்ததும் குறிப்பிடத்தக்கது.

23.05.1920 இல் பிறந்த முருகேசு சுவாமிகளின் சொந்த இடம் பருத்தித்துறையின் கிழக்கே அமைந்துள்ள தும்பளை என்னும் கிராமமாகும். இவருடைய இயற்பெயர் வேலுப்பிள்ளை முருகேசு. ஜோதிடம் பார்க்கின்ற குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால் ஜோதிடம் பார்க்கின்ற அறிவும் ஆற்றலும் அவரிடம் நிறையவே காணப்பட்டுள்ளது. ஆனாலும் அதனை அவர் தொழிலாகச் செய்யவில்லை. வியாபாரத்தில் அவருக்கு நாட்டம் இருந்ததால் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற இலங்கையின் வடமத்திய பகுதியில் அமைந்துள்ள மதவாச்சியில் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இறை பக்தி உள்ளவராகவும் முருகப் பெருமான் மீது அளவில்லாத பக்தி கொண்டவராகவும் வாழ்ந்துவந்துள்ளார். இல்லற வாழ்வில் ஈடுபட்டு ஒரு சராசரி மனிதனாகவும் அதேநேரம் செல்வமும் செல்வாக்குமுள்ள ஒரு வர்த்தகராகவும் வாழ்ந்து கொண்டிருந்த முருகேசு சுவாமிகள் தான் ஒரு சித்தராக வாழுவேன் என்பதை அப்பொழுது கனவிலும் சிந்தித்திருக்கமாட்டார். ஆனால் அதற்குரிய காலம் கனிந்தபொழுது சந்நிதியான் அவரை முழுமையாக தன்னுடைய அடியவராக ஆக்குகின்ற திருவிளையாடலை அரங்கேற்றியதை காணமுடிகிறது.

திருநாவுக்கரசு நாயனாருக்கு சூலைநோய் ஏற்பட்டது போல இவருக்கு 1960 ஆம் ஆண்டு வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டது. மகரகமவில் புற்றுநோய்க்குரிய சிகிச்சையும் அளிக்கப்பட்டுவந்தது. மருந்து மாத்திரையால் மாற்ற முடியாதென்பதை பரிசோதனைகள் வெளிப்படுத்தியது. வைத்தியர்களால் சத்திரசிகிச்சை செய்வதற்கு நாளும் குறிக்கப்பட்டது. தமது குடும்ப வாழ்வில் துயரம் சூழ்ந்துவிட்டதை எண்ணி இவரது துணைவியார் மிகுந்த வேதனை அடைந்தார். எல்லாம் ஆண்டவனின் கையில்தான் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்ட இருவரும் இறை வழிபாட்டில் ஈடுபட்டார்கள். சந்நிதியானது அடியவரான முருகேசு சுவாமிகள் சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பு அளவெட்டியை சேர்ந்த அவரது நண்பர் அ. கந்தையாவின் வேண்டுதலை ஏற்று சந்நிதியானிடம் வந்து சேர்ந்தார்கள். இவ்வாறு சந்நிதியானிடம் வந்து சந்நிதியான் வாசலில் நின்று சந்நிதியானை உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு வழிபட்டுக் கொண்டிருக்கும் பொழுது கச்சான் விற்பவர் போல தோற்றமளித்த ஒரு பெண்மணி அங்கு வந்து புளியம் இலை அவித்துக்குடி எல்லாம் சரிவரும் என்று இவருக்கு கூறிச்சென்றுள்ளார். அப்பொழுது தனது துன்பம் ஒருபுறம் இன்னொரு பக்கம் சந்நிதியான் வாசலில் வந்து பயித்தியத்தனமாக கதைகள் கூறுகின்றவர்கள் ஒருபுறம் என தனது மனத்திற்குள் சலித்துக்கொண்டுள்ளார்கள். ஆனாலும் வீட்டிற்கு சென்றபின் அவரது நண்பபர் அ. கந்தையா சந்நிதியான் வாசலில் நடக்கும் சம்பவங்களை சாதாரணமாக எடுக்கக் கூடாது என்று சுட்டிக்காட்டி உள்ளார். அத்துடன் அந்தப் பெண்மணி கூறியதுபோல புளியம் இலையை அவித்து அந்நீரை இதில் குறிப்பிட்ட தடவைகள் குடித்துள்ளார். இதன்பின் திட்டமிட்டபடி மகரகமவுக்கு பயணமானார்கள். அங்கே முருகேசு சுவாமிகளுடைய சத்திரசிகிச்சைக்குரிய எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருந்தன. வழமைபோல சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட இருக்கின்ற வருடைய அப்போதைய நோயின் நிலைமைகளை மீண்டும் சரியாக உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனைகள் அங்கே மேற்கொள்ளப்பட்டன. என்ன அதிசயம், முடிவுகள் அனைத்தும் அவருக்கு புற்றுநோய் இருந்தது என்பதற்கான அறிகுறியே இல்லை என்ற விபரங்களையே வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. சத்திரசிகிச்சை உடனடியாக கைவிடப்பட்டது. டாக்டர்கள் அதிசயப்பட்டனர். நோய் எவ்வாறு குணமாகியது. இது எவ்வாறு சாத்தியமானது என குழப்ப மடைந்தனர். ஆனால் புற்றுநோய் எதுவும் அவருக்கு இப்பொழுது இல்லை என்பதை மட்டும் குழப்பமின்றி உறுதிப்படுத்திக் கொண்டனர்.

ஆம் முருகேசு சுவாமிகள் சந்நிதியானது கருணையையும் திருவிளை யாடலையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல உணர்ந்துகொண்டார்கள். சந்நிதியான் வாசலில் வந்து அமர்ந்து அவனது கருணையை எண்ணி தாரைதாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். அன்றுமுதல் தன்னை முழுமையாக சந்நிதியானுக்கு அடிமையாக்கிக் கொண்டார்கள். இவருடைய துணைவியார் எனக்கு கணவன் வேண்டாம். ஆனால் இவர் உயிர் வாழ்ந்தால் போதும் என்று சந்நிதியானுக்கு நேர்த்தி வைத்தது போல சந்நிதியானது வாசலில் தனது தாலிக்கொடியை கழட்டி கணவன் மனைவி என்ற உறவை விலக்கிக் கொண்டார்கள். அத்துடன் அந்த தாலிக்கொடியை விற்று அன்னதானம் போன்ற அறப்பணிகளுக்கே செலவுசெய்து தனது நேர்த்தியை முழுமையாக நிறைவேற்றி முடித்தார்கள்.

சந்நிதியானது சித்தம்போல அவனது திருவிளையாடல் அரங்கேறியது. அன்றுமுதல் முருகேசு சுவாமிகள் சந்நிதியானுக்கு அடிமையானார்கள். மேலும் அன்றுமுதல் தன்னை எல்லா வகையிலும் படிப்படியாக பக்குவப்படுத்தி சந்நிதியானது முழுமையான திருவருளுக்கு பாத்திரமானார்கள். இதன்பின் ஒரு சித்தருக்குரிய இலக்கணத்துடனேயே அவரது வாழ்க்கைப் பயணம் சென்று கொண்டிருந்ததை காணமுடிகிறது. ஆனால் வெளிப்பார்வைக்கு அவர் முன்பு போலவே வேட்டி சால்வையுடன் உருத்திராக்கம் மாலை அணிந்த ஒரு மெய்யடியவர் போலவே தன்னை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு சுவாமிகள் ஒரு சித்தராக தவ வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருந்த அதேநேரம் சந்நிதியான் ஆலயத்தில் இடம்பெறுகின்ற கைங்கரியங்கள் அனைத்தும் சிறப்பாக இடம்பெறவேண்டுமென்பது அவருடைய பெரு விருப்பமாக இருந்து வந்தது. சந்நிதியில் இடம்பெறுகின்ற நித்திய பூசைகள், அபிஷேகங்கள் போன்றவை அனைத்தும் எந்தவித குறைவுமின்றி நடைபெற வேண்டுமென்பதில் எல்லோரையும் விட மிகுந்த அக்கறையும் ஆர்வமும் உள்ளவராகக் காணப்பட்டார். 1986ம் ஆண்டு பிரமாண்டமான சித்திரத்தேர் எரிப்பு தொடர்பான அழிவுகள், நெருக்கடிகளைத் தொடர்ந்து சந்நிதியானது நித்திய பூசைகள் முதல்முறையாக தடைப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இது அவருக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது. இதனால் சந்நிதியானுக்கு மீண்டும் நித்தியபூசைகள் ஆரம்பித்து நித்திய நைவேத்தியம் படைக்கின்ற செயற்பாடுகள் தொடங்கும்வரை தானும் அன்னம் உண்பதில்லை என்று விரதம் பூண்டு அதனை இறுக்கமாகவும் கடைப்பிடித்தார்கள். நிலமைகள் சீரடைந்த பொழுது ஆலய புனருத்தாரண வேலைகளை தானே பொறுப்பெடுத்து செயற்படுத்தினார்கள். இவ்வாறு சந்நிதியில் மீண்டும் 1987 ஆம் ஆண்டு நித்திய பூசைகள் ஆரம்பமாவதற்கும் மற்றும் கும்பாபிஷேக செயற்பாடுகள், தொடர்ந்து 40 நாட்கள் இடம்பெற்ற மண்டலாபிஷேக செயற்பாடுகளிலும் எல்லா வகையிலும் முக்கிய காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்டதையும் காணமுடிந்தது.

சந்நிதியில் ஆலயச் செயற்பாடுகளுக்கு அவர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டாரோ அதேபோன்று சந்நிதியானை தரிசிக்க வருகின்ற அடியவர்களுக்கு நிறைவாக அன்னதானப் பணி இடம்பெற வேண்டுமென்பதிலும் அவர் நிறைவான பங்களிப்பு செய்துள்ளார். ஆரம்பத்தில் அடியார் மடத்துடனும் பின்பு சமாதி அடையும்வரை சந்நிதியான் ஆச்சிரமத்துடனும் இறுக்கமான தொடர்புகளை பேணி அந்த மடங்களில் இடம்பெற்ற அன்னதானச் செயற்பாடு களுக்கு அளப்பரிய பங்களிப்புகளை செய்துள்ளார்.

சூழ்நிலைகளால் தேவை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் சந்நிதியான் திருவீதி மண் திருநீறாகவும், சந்நிதியானது தல விருட்சமான பூவரசு மரத்தின் காய்ந்த பூவரசம் இலை 10 ரூபாத் தாளாகவும் மாறுகின்ற சித்துக்கள் உட்பட பல சித்துக்கள் இவரால் நடந்தேறியது. வாய்பேசாத குழந்தையை பேசவைக்கின்ற செயற்பாட்டையும் நிகழ்த்தியுள்ளார்கள். அக்குழந்தை இன்று பெரியவனாகி முக்கியமாக உற்சவ காலங்களில் ஆலயத்தில் முழுமையான தொண்டுகள் செய்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இதுபோன்று முருகேசு சுவாமிகள் நிகழ்த்திய சித்துக்கள் ஏராளம்.

ஆனால் ஏராளம் அடியவர்களின் துன்பங்கள் துயரங்களைப் போக்கி அவர்களது வாழ்வை நிறைவுபெறச் செய்ததுடன் அவர்களை சந்நிதியானது அடியவர்களாக தொடர்ந்து வாழ்வதற்கு ஆற்றுப்படுத்திச் சென்றதுதான் அவருடைய அரும்பெரும் பணியாக இருந்தது. அதனை அவர் அடியவர் களுக்காக, அவர்கள் வாழ்விடங்களுக்கே நாடிச்சென்று செய்ததையும் காண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. இதனால் அந்த குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றி ஒளிவீசுகின்ற தீபமாக இன்றும் அவர் பிரகாசித்துக் கொண்டிருப்பதை காணமுடிகிறது. முருகேசு சுவாமிகளின் வாழ்க்கைப் பாதையிலும் அவர் ஆற்றுப்படுத்திய அடியார்கள் வாழ்விலும் நடைபெற்ற அற்புதங்களும் ஏராளம். ஆரம்பத்தில் ஞானச்சுடர் மாதாந்தச் சஞ்சிகையிலும் தற்பொழுது சந்நிதியான் அற்புதங்கள் என அடியேன் தொடராக வெளியிட்டுவரும் நூல்களிலும் அடியார்கள் அவற்றை தாராளமாக படித்து பயன்பெறலாம்.

முருகேசு சுவாமிகள் ஆற்றுப்படுத்தி இன்றும் சந்நிதியானது அடியவர்களாக உலகம் முழுவதும் பரந்து ஆன்மீக நிறைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அடியார்கள் ஏராளம். பொதுவாக துறவற வாழ்வை மேற்கொள்பவர்கள் தம்மை ஞானநிலைக்கு பக்குவப்படுத்தி முத்திநிலை அடைகின்ற செயற்பாட்டிலே ஈடுபடுவது வழக்கம். ஆனால் முருகேசு சுவாமிகள் தன்னை ஞானநிலைக்கு பக்குவப்படுத்திய அதேநேரம் அடியவர்கள் துன்பங்கள் துயரங்களை போக்குகின்ற செயற்பாடுகளிலேயே அதிக காலத்தையும் நேரத்தையும் செலவுசெய்துள்ளதை காணமுடிகிறது. துன்பங்கள் துயரங்களை எதிர்நோக்குகின்றவர்கள் இல்லங்களுக்கு தானே நாடிச்சென்று அவர்களுக்காக தானும் பிரார்த்தனை செய்து அவர்களையும் பிரார்த்தனை செய்வதற்கு ஆற்றுப்படுத்தி அவர்களது துன்பங்களை போக்குகின்ற காருண்யம் நிறைந்தவராக இவர் விளங்கியுள்ளார். இதனால் பல அடியவர்கள் முருகேசு சுவாமிகளை ஒரு மீட்பாராகவே காண்கின்றனர்.

அடியவர்கள் மகிழ்ச்சியே இவரது மகிழ்ச்சியாக இருந்துள்ளது. அதே நேரம் அடியவர்கள் இவரை சாமியார் என்று அழைப்பதைக் கூட விரும்பாத ஒரு சராசரி மனிதனாகவே தன்னை வெளிப்படுத்தியுள்ளார். இதனால் அடியார்கள் இவரை ''சாமி ஐயா'' என்றுதான் அழைத்தனர். முருகேசு சுவாமிகள் ஒரு சித்தராக மானிடத்தின் மேல் காருண்யம் நிறைந்த மீட்பராக எவ்வாறு செயற்பட்டார் என்பதை அடியார்கள் ஓரளவேனும் விளங்கிக்கொள்வதற்காக அவரின் வாழ்க்கைப் பாதையில் இடம்பெற்ற சில நிகழ்வுகளை இங்கே வெளிப்படுத்துவது பொருத்தமானது. 1980 ஆம் ஆண்டு காலகட்டம் சிறுப்பிட்டியில் சுவாமிகள் ஒரு வாகனத்தில் சென்றுகொண்டிருக்கிறார்கள். அவ்வாறு சென்று கொண்டிருந்தவர் திடீரென குறிப்பிட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்துமாறு சாரதியிடம் சொல்லுகின்றார். நிறுத்தப்பட்ட வாகனத்திலிருந்து இறங்கிய சுவாமிகள் சில இளைஞர்கள் உரையாடிக் கொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்து செல்கின்றார். அங்கே சென்றவர் முன்பு என்றுமே அறிமுகமில்லாத அந்த இளைஞனை அணுகி அவருடன் ஏதோ கதைக்கின்றார். அவ்வாறு சிறிது நேரம் கதைத்தவர் அந்த இளைஞனை தன்னுடன் அழைத்துவந்து தான் பிரயாணம் செய்த வாகனத்தில் ஏற்றிக்கொண்டு அவனுடன் சகஜமாக உரையாடிய வண்ணம் தனது பிரயாணத்தைத் தொடருகின்றார். அவ்வாறான அந்த இயல்பான உரையாடலின் நடுவிலே ''தம்பி உனது சாரத்திற்குள் இருப்பதை எடு. அதை முதலில் எடுத்து என்னிடம் தா'' என்று அந்த இளைஞனிடம் கேட்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எந்தவகையிலும் எள்ளளவும் எதிர்பார்க்காத அந்த இளைஞன் வியப்பும் பரபரப்புமடைகிறான். ஆனால் பாம்பாட்டிக்கு கட்டுப்பட்ட நாகம் போல் தனது சாரத்துக்குள் மறைத்து வைத்திருந்த நஞ்சு மருந்து போத்தலை எடுத்து சாமியாரிடம் கொடுக்கின்றான். ஆம் சிறிது நேரத்தில் தனது உயிரை மாய்த்துக் கொள்வதற்காக கடையில் வாங்கி தயாராக வைத்திருந்த நஞ்சு மருந்துதான் அது. தனது வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட சில பிரச்சனைகளால் தாங்கமுடியாத மனவேதனை அனுபவித்த அந்த இளைஞன் இவ்வாறு தனது உயிரை மாய்த்துக் கொள்கின்ற விபரீதமான முடிவை எடுத்துவிட்டிருந்த நிலையில் இன்னும் சிறிது நேரத்தில் தனது உயிரை மாய்த்துக்கொள்ள இருந்த சந்தர்ப்பத்தில்தான் முருகேசு சுவாமிகளால் அவன் அங்கே காப்பாற்றப்பட்டிருக்கின்றான்.

ஞானநிலை அடைந்த மகான்களை எம்மால் அளவிடமுடியாது. தேவையும் சூழ்நிலைகளும் ஏற்படும்பொழுது அவர்கள் சில செயற்பாடுகளில் வெளிப்படையாக இவ்வாறு ஈடுபடும்பொழுதுதான் சராசரி மனிதர்களாகிய நாம் அவர்களை மதிக்கின்றோம், மதிப்பிடுகின்றோம். மீட்கப்பட்ட இளைஞனின் பெயர் சிவநேசன். அவரது பூர்வபுண்ணிய பலன் அவரை இப்பிறவியில் காப்பாற்றியிருக்கிறது. இவ்வாறு மீட்கப்பட்டு முருகேசு சுவாமிகளால் ஆற்றுப்படுத்தப்பட்ட சிவநேசன் இன்று கொழும்பில் வங்கியில் உயர் பதவி வகித்துக்கொண்டு வாழ்க்கையில் நிம்மதியுடனும் நிறைவுடனும் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார். சிவனேசனை வீதியில் தானாக தேடிச்சென்று மீட்டதுபோல துன்பங்கள் துயரங்களில் மூழ்கியுள்ள பல குடும்பங்களின் வீடுகளுக்கும் தானாகவே தேடிச் சென்று அவர்களுடன் சில காலம் தங்கியிருந்து அவர்களது துன்பங்களை போக்கும் கருணை இவரிடம் நிறையவே காணப்பட்டுள்ளது.

முருகேசு சுவாமிகள் மற்றவர்கள் துன்பங்கள் துயரங்களை போக்குகின்ற பொழுது அவர்களை தனது மகனாக, மகளாக, பேரக்குழந்தையாக, நெருங்கிய உறவுக்காரராக உள்வாங்கி பூரண விசுவாசத்துடன்தான் அதனை மேற்கொள்வார். முருகேசு சுவாமிகளிடம் எப்பொழுதும் பழைய பொருட்கள் அடங்கிய ஒரு சில பொட்டலங்கள் காணப்படும். பயன்படுத்திய பல்வேறு உடுப்புக்கள் தொடக்கம் கைவளையல்கள் வரையான இந்த பழைய பொருட்கள் அவராக பலரிடம் தானே கேட்டுப்பெற்ற பொருட்களே இவைகளாகும். ஆம் துன்பங்கள் துயரங்கள் உள்ளவர்களிடம் அல்லது துன்பங்கள் துயரங்களை எதிர்நோக்கப் போகின்றவர் களிடம் இயல்பாக உரையாடுவதுபோல உரையாடி அவர்கள் அன்றாடம் பாவித்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு பொருளை பெற்றிருப்பார். இவற்றை அவர்களின் அடையாளமாக வைத்துக்கொண்டு அவர்களின் துன்பங்களை தமது துன்பமாக தன்தலைமேல் ஏற்று நாளும்பொழுதும் அவர்களுக்காக இறைவனிடம் மன்றாடி இறைவனை பிரார்த்னை செய்து அவர்களது துன்பங்களை போக்கி மற்றவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றிய மகானாக இவர் வாழ்ந்துள்ளார். மானிட உடல் தாங்கியிருந்தாலும் தெய்வங்கள் போல கருணை செய்து எமது மண்ணில் வாழ்ந்த மகான்களே இவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகத்தில் அறத்திற்கு புறம்பான செயற்பாடுகளால் நாம் எதிர்நோக்கும் துன்பங்கள் துயரங்களிலிருந்து விடுபட ஒரே வழி தூய்மையான பக்தி மார்க்கமே என்பதை முருகேசு சுவாமிகள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனை போதனையால் அல்லாமல் வாழ்வியல் சாதனையாக அடியவர்களுள் தானும் ஒருவராக இருந்து அவர்களை பல்வேறு பக்திச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களை மீட்டெடுத்துள்ளார். இது முருகேசு சுவாமிகளினுடைய ஒரு தனித்துவமான செயற்பாடென்றே கூறலாம். இது ஒரு இலகுவான காரியம் அல்ல என்பதை முருகேசு சுவாமிகள் உணர்ந்திருந்தார்கள். அவருடன் கூட இருந்தவர்களும் பெருமளவுக்கு அதனை புரிந்துகொண்டவர்களாக காணப்பட்டனர்.

முருகேசு சுவாமிகளுடன் பல வருடங்கள் பழகுகின்ற பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது. ஒரு சராசரி மனிதர் போலவே அடியேனுடன் பழகிக் கொண்டார்கள். ஆனாலும் ஒரு சம்பவத்தை மேலோட்டமாகவேனும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது. ஒரு முறை எனது மகன் தொடர்பாக அடியேனும் ஒரு துயரமான நிலையை எதிர்நோக்கியிருந்தேன். அப்பொழுது முருகேசு சுவாமிகள் 'மாஸ்ரர் யோசிக்காதையுங்கோ முருகன் கைவிடமாட்டார்" என சாதாரணமாக ஆறுதல் வார்த்தை கூறுவதுபோல கூறியிருந்தார். ஆனால் அந்த வார்த்தை வேத வாக்காக மாறியது. ஒளியைக் கண்ட இருள்போல அந்த துயரம் விலகிச்சென்ற அற்புதம் அங்கே அரங்கேறியது.

முருகேசு சுவாமிகள் தனது இறுதிக் காலத்தில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கிழக்கு வீதியில் உள்ள அருணாசலம் என்ற அன்பர் வீட்டில் அவரது துணையுடன் தங்கியிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் மோகனதாசும் அடியேனும் அவரை பார்வையிடச் சென்றிருந்தோம். அப்பொழுது அவர் ''மாஸ்டர் இனிமேல் சந்நிதியானை விட்டு வேறு எங்கேயும் நான் போக மாட்டேன்" என சிறு குழந்தையைப் போல மழலை மொழியில் கூறியிருந்தார்கள். ஆம் தாயை விட்டு குழந்தை பிரிய விரும்பாத உணர்வைப்போல தனது இறுதிக் காலத்தில் சந்நிதியானுடயே அவர் இருக்க விரும்பியதை அங்கே அப்பொழுது அடியேன் உணரமுடிந்தது.

முருகேசு சுவாமிகள் தான் சமாதி அடையப்போகும் இறுதி நாளையும் நேரத்தையும் நன்கு உணர்திருந்தார்கள். ஒரு ஞாயிற்றுக்கிழமை தான் சமாதி அடையப் போவதை ஏற்கனவே அருணாசலம் என்ற அந்த அன்பருக்கு கூறிவந்துள்ளார்கள். அதேபோல் ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தனக்கு தேனீரும் பிஸ்கட்டும் தருமாறு கேட்டுவாங்கி அவற்றை அருந்தியுள்ளார். அதன்பின் தனது கழுத்தில் அணிந்திருந்த உருத்திராக்கம் மாலையை கழட்டி அதை குறிப்பிட்ட ஒரு நபரிடம் வழங்குமாறும் கூறியுள்ளார். அதன்பின் சிறிது ஓய்வாக உறக்கம்கொண்டவர் அவ்வாறே சமாதியடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடைவரத சுவாமிகள்

1950 ஆம் 60 ஆம் ஆண்டு தசாப்தத்தில் சந்நிதியில் வாழ்ந்த சித்தர்களில் முக்கியமானவர்களில் ஒருவராக சடைவரத சுவாமிகள் விளங்குகின்றார்கள். அத்துடன் சந்நிதியில் முக்கியமான மடங்களில் ஒன்றான அடியார் மடத்தை ஆரம்பித்தவர் என்ற வகையிலும் இவர் முக்கியத்துவம் பெறுகின்றார்.

அச்சுவேலியில் சுப்பையா என்ற சலவைத் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்த இவர் சிறு வயதிலேயே அருள் ததும்பும் தோற்றப்பொலிவுடன் விளங்கியுள்ளார். இதனால்போலும் வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண் சரவணை என்ற பெயருடைய இந்த சிறுவனை தத்தெடுத்து வளர்த்துள்ளார். யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி என்பது இரத்தத்தில் ஊறியது போல எல்லோர் மனதிலும் ஆழமாக ஊடுருவி இருந்த காலகட்டம் அது. இதனால் அந்த அம்மையார் சரவணையை தத்து எடுத்து வளர்த்தாலும் உளப்பூர்வமாக ஏற்க அவர் தயங்கியுள்ளார். அப்பொழுது அவரது கனவிலே சந்நியாசி ஒருவர் தோன்றி இவன் எனது அடியவனல்லவா என கூறி மறைத்துள்ளார். இதன்பின்பு அந்த அம்மையார் மனதில் மாற்றம் ஏற்பட்டு அவர் முழுமையாக சரவணையை தனது மகனாக ஏற்றுக்கொண்டுள்ளதாக அறியமுடிகிறது.

சடைவரத சுவாமிகளுக்கு பூர்வபுண்ணிய தொடர்பு இருந்ததினால் போலும் அவர் இளமையிலிருந்தே இயல்பாக ஆன்மீக நாட்டம் உள்ளவராக விளங்கியுள்ளார். எமது மண்ணில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர் பரம்பரையில் மிகவும் மூத்தவரான கடையிற் சுவாமிகளின் அருளும் ஆசீர்வாதமும் இவருக்கு இளமையிலேயே கிடைத்துள்ளது. அதுமட்டுமன்றி தீவுப் பகுதியைச் சேர்ந்த முருகேசு சுவாமிகளிடமும் இவர் சீடனாக இருந்து உபதேசம் பெற்றுள்ளார். அவரிடமே தீட்சையும் பெற்றதுடன் அவராலேயே 'சடைவரதர்' என்ற தீட்சை நாமமும் இவருக்கு சூட்டப்பட்டதாக அறியமுடிகிறது.

இவ்வாறான அருளும் ஞானநிலையுமுள்ள சடைவரத சுவாமிகள் தனது ஆன்மீகப் பயணத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கு பொருத்தமான இடம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலே என்பதை உணர்ந்து சந்நிதியில் வந்து தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார். யோக சுவாமிகள் எப்பவோ முடிந்த காரியம் என்ற மகா வாக்கியத்தை கூறி அடியார்களை ஆற்றுப்படுத்தினார்கள். இங்கே சடைவரத சுவாமிகள் எல்லாம் இறைவன் செயல் என்ற ஆன்மீக அருள்வாக்கை தனது தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்துள்ளதை காணமுடிகிறது. தன்னை நாடி வருகின்ற அடியவர்களுக்கும் ''எல்லாம் அவன் செயல்'' என்ற கருப்பொருளை அவர்களும் உணர்ந்து கொள்ளக்கூடியதான ஆன்மீக வழிகாட்டல்களையே மேற்கொண்டதாக அறியமுடிகிறது. சடைவரத சுவாமிகளின் தொனியும் தோற்றப் பொலிவும் அடியவர்களை அவர்பால் ஈர்க்கும் தன்மையுள்ளவையாக விளங்கியுள்ளது. இதனால் ஏராளம் அடியவர்கள் இவரை நாடிச்சென்று ஆறுதல் அடைந்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியில் நின்று நிலைத்து அடியார்கள் பயன்பெறக் கூடியதாக சடைவரத சுவாமிகள் மேற்கொண்ட தொண்டு அடியார்மடம் அல்லது தொண்டர் மடம் என்ற அன்னதான மடத்தை ஸ்தாபித்தமையாகும். இவரால் ஆரம்பிக்கப்பட்ட அடியார் மடம் வைரமுத்துசாமி நடராசாசாமி போன்றவர்களால் தொடர்ந்து சிறப்பாக செயற்படுத்தப்பட்டு அடியவர்கள் பசிபோக்கும் மிக உன்னதமான சேவையை இன்றும் தொடர்ந்து செயற்படுத்திக் கொண்டிருப்பதை நாம் காணமுடிகின்றது. சடைவரத சுவாமிகளின் சமாதி நிலை ஏழாலையில் இடம்பெற்றுள்ளது.

## மயில்வாகனம் சுவாமிகள்



மிக அதிகளவு அடியார்களின் உள்ளங்களில் பசுமையான நினைவுகளுடன் இன்றும் நிலைத்து நிற்கும் அருளாளர்தான் மயில்வாகனம் சுவாமிகள். தவ வாழ்க்கை வாழ்ந்து ஞானநிலைக்கு தன்னை பக்குவப்படுத்துவதே மயில்வாகனம் சுவாமிகளின் ஆரம்பகாலக் குறிக்கோளாக இருந்துள்ளது. ஆனால் பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பசிப்பிணி போக்குகின்ற மக்கள் பணியே இப் பிறப்பில் இவர் ஆற்றவேண்டிய பணி என்பது சந்நிதியான் திருவுள்ளமாயிருந்துள்ளது. ஆம் சந்நிதியான் திருவுள்ளப்படி சந்நிதியில் மிக நீண்டகாலம், மிகச் சிறப்பாக அடியார்களுக்கு அன்னதானப் பணியை மேற்கொண்ட அருளாளர் என்ற சிறப்புக்கும் பெருமைக்குமுரியவராக மயில்வாகனம் சுவாமிகள் அடியார் களின் உள்ளங்களில் நிறைந்திருக்கின்றார்.

1913ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் பிறந்த மயில்வாகனம் சுவாமிகள் இளைஞனாக இருக்கும்பொழுது யாழ்ப்பாணத்தில் செட்டிமார்களின் நகைக்கடையில் வேலைசெய்து வசதிவாய்ப்புக்களுடன் வாழ்ந்ததாக அறிய முடிகிறது. ஆனாலும் ஆன்மீகத்தின்பால் இயல்பாகவே இவருக்கு நாட்டம் ஏற்பட்டதால் 1936 ஆம் ஆண்டளவில் தனது 23வது வயதிலேயே துறவற வாழ்க்கையை விரும்பி ஈழத்திலும் இந்தியாவிலும் பல தலங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டு தன்னை பக்குவப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதன் ஒரு கட்டமாக இந்தியாவில் ரமண மகரிஷியை குருவாக ஏற்றுக்கொண்டு ரமண மகரிஷியின் ஆச்சிரமத்திலேயே சிலகாலம் தங்கி துறவற வாழ்க்கையை மேற்கொண்டுள்ளார். ஆனாலும் ரமண மகரிஷி இவர் பிறந்த நாட்டிலேயே ஆற்ற உள்ள பெரும் கருமங்களை முன்கூட்டியே உணர்ந்து கொண்டதனால் போலும் ''நீ பிறந்த நாட்டிற்கு சென்று தொண்டு செய்'' என அருள்வாக்கு கூறியுள்ளார். குருவின் கட்டளையை ஏற்றுக்கொண்ட மயில்வாகனம் சுவாமிகள் நாடு திரும்பி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் சிலகாலம் அருளாளராக வாழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது தம்புச்சாமி, வைரமுத்துச்சாமி போன்ற அருளாளர்களுடன் சேர்ந்து மணியம் மடத்திலும் சிறிது காலம் தங்கியிருந்துள்ளார். அதன்பின்பு 1940ஆம் ஆண்டு ஆலயத்தின் தெற்குத்திசையில் தென்னந்தோப்புகள் நிறைந்திருந்த இயற்கை எழில் நிறைந்த பகுதியில் சிறுகுடிசை ஒன்றை அமைத்துள்ளார். அங்கே மிகச்சிறிய அளவில் ஆலயத்தை தரிசிக்கவரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளார். இவரது நேர்த்தியான செயற்பாட்டால் இவர் எதிர்பார்க்காத அளவு அதிகளவு அடியார்கள் அங்கே அன்னதானத்தை எதிர்பார்த்து வர ஆரம்பித்துள்ளனர். இதனால் சிறு குடிசையாக இருந்த அந்த இடத்தின் நான்கு திசைகளிலும் அன்னதானச் செயற்பாட்டிற்காக படிப்படியாக பல கட்டிடங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மயில்வாகனம் சுவாமிகளுடன் மிக நெருக்கமாக பழகியவர் பிரதம பூசகர் தங்கராசா ஐயராவார். தங்கராசா ஐயர் அவர்களும் மயில்வாகனம் சுவாமிகளின் அன்னதானச் செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவு வழங்கி மடத்தின் விரிவாக்கத்திற்கு தேவையான நிலபுலங்களை தாராளமாக வழங்கி உதவியுள்ளார்கள். ஆனந்தமான சூழலில் அமைந்து ஆனந்தமாகவே இந்த அன்னதான மடம் செயற்பட்டு வந்ததால் ஆனந்த ஆச்சிரமம் என்ற சிறப்புப் பெயரையும் இது பெற்றுள்ளது.



(ஆச்சிரம முகப்பில் சுவாமிகள்)

ஆலயத்தின் தெற்கு திசையில் சிறிது தூர விலகி ஆட்கள் நடமாட்டமற்ற அந்த பகுதி பரந்துவிரிந்து புல்வெளியாகவும் பறவைகள் சரனாலயமாகவும் இயற்கை காடுகள் நிறைந்த மனதை கவரும் ரம்மியமான பகுதியாகவும் காணப்படுகிறது. இந்த இயற்கை எழில் நிறைந்த பகுதிகளில் உலாவந்து இயற்கையின் எழிலை உள்வாங்கி மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஏற்கனவே மயில்வாகனம் சுவாமிகள் ஈடுபட்டு வந்துள்ளார்கள். இவ்வாறான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலகட்டத்தில் தான் ஆலயத்திற்கு சிறிது அண்மையாக காணப்பட்ட அந்த கட்டாந்தரையில் ஒரு பகுதியில் மிகச்சிறிய அளவில் ஓலைக்கொட்டில் ஒன்றை உருவாக்கியுள்ளார். பின்பு அவர் அந்த கட்டாந்தரையை சீர்படுத்து வதற்கும் நிரப்புவதற்கும் சிறிய தள்ளுவண்டில்கள் மூலம் சிறிது சிறிதாக மணலைக் கொண்டுவந்து கொட்டி தான் தெரிவுசெய்த இடத்தை மனிதர்கள் நடமாடும் இடமாக மாற்றியுள்ளார். கைவண்டியில் ஒருமுறை மணலை அவ்வாறு கொண்டுவந்து கொட்டிவிட்டி அதற்கு கூலியாக அப்பொழுது இருபத்து ஐந்து சதத்தை பல இளைஞர்கள் மகிழ்வுடன் பெற்றுச் சென்றுள்ளனர். அவர்களில் வேலுப்பிள்ளை வெங்கடாசலம் என்ற 83 வயதைத் தாண்டிய அன்பர் இப்பொழுதும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார். மயில்வாகனம் சுவாமிகள் ஆரம்பத்தில் வியர்வை சிந்தி தன்னம்பிக்கையுடன் மிக மிகச் சிறிய அளவில் காட்டுத் தடிகளாலும் ஓலைகளாலும் உருவாக்கியதுதான் ஆரம்பகால ஆனந்த ஆச்சிரமமாகும். இதனை மயில்வாகனம் சுவாமிகள் சந்நிதியான் திருவருளின் துணையுடன் குறுகிய காலத்தில் நாம் காணுகின்ற மிகப் பிரமாண்டமான ஆனந்த ஆச்சிரமமாக மாற்றியிருந்தமை உண்மையில் ஒரு மகத்தான செயற்பாடாகும்.

ஒரு சித்தராக அருளாளராக தனது வாழ்க்கைப் பாதையை அமைக்க விரும்பி அப்பாதையிலேயே எல்லாவகையிலும் தன்னை பக்குவப்படுத்திக் கொண்டிருந்த ஒரு அருளாளர்தான் மயில்வாகனம் சுவாமிகள். அதை அவர் இறைபதம் அடையும்வரை தொடர்ந்து கொண்டிருந்ததும் உண்மைதான். ஆனால் ஞானநிலைக்கு தம்மை பக்குவப்படுத்துவதற்காக நாடிவருகின்ற அருளாளர்களும் பக்திமார்க்கத்தினூடாக தம்மை ஈடேற்றிக்கொள்ளவரும் சராசரி அடியவர்களும் ஒன்றுகூடுகின்ற சந்நிதானமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் காலம்காலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இதனால் மயில்வாகனம் சுவாமிகள் ஞான நிலைக்காக நாடிவருகின்ற அருளாளர்களையும் வழிபாடு செய்ய வந்து பசிப்பிணியை எதிர்நோக்கும் அடியார்களையும் அரவணைத்து அவரவர் தேவைகளை நிறைவு செய்கின்ற ஒரு வித்தியாசமான இறைபணியை மேற்கொண்ட வித்தியாசமான அருளாளராக நோக்கப்படுகின்றார். இதேபோன்று இவர் செயற்படுத்திய ஆனந்த ஆச்சிரமம் ஒருவகையில் தென் இந்தியாவில் காலம் காலமாக செயற்பட்டுவந்த மடாலயங்களை ஒத்த ஒரு ஸ்தாபனமாகவே செயற்பட்டுக் கொண்டிருந்ததை நாம் அங்கே காணக்கூடியதாக இருந்தது.

ஆனந்த ஆச்சிரமம் செயற்பட்டுக் கொண்டிருந்த 1940ஆம் ஆண்டு தொடக்கம் 1985ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டம் இன்று உள்ளது போன்ற வசதி வாய்ப்புக்களோ, மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களோ வெளிநாட்டு வருமானங்களோ எதுவும் மக்கள் மத்தியில் இல்லாத காலகட்டம். அரசாங்க உத்தியோகங்களில் தொழில்புரிந்த மத்திய வகுப்பினர், வியாபாரிகள், நில புலங்கள் உள்ளோர் என சமுதாயத்தின் சிறு பகுதியினரே ஓரளவு வசதி வாய்ப்புக்களுடன் வாழ்கின்ற வாழ்க்கை சூழல் காணப்பட்ட காலமாக அது இருந்துள்ளது. இக் காலகட்டங்களில் பசி பட்டினியும் சமுதாயத்தில் நிலவியுள்ளது. இதனால் சந்நிதியானை வழிபட வருகின்ற அடியவர்களுக்கு மட்டுமன்றி வேறு பலவகையிலும் கூட சந்நிதியில் இடம்பெறும் அன்னதானம் முக்கியமான இடத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. இப்பொழுது இடம்பெறுவது போல எல்லா கிராமங்களில் உள்ள ஆலயங்களிலும் அப்பொழுது அன்னதானம் இடம்பெறுவதில்லை. அன்னதானம் என்றால் அது சந்நிதி. சந்நிதி என்றால் அன்னதானம் என்பதுதான் அப்பொழுதிருந்த சூழலாகும். இதனால் சந்நிதிக்கு வருகின்ற எல்லாத் தரத்தினரையும் திருப்திப்படுத்தக்கூடியதாக எல்லோருடைய தேவைகளையும் கனகச்சிதமாக உணர்ந்தவராக மயில்வாகனம் சுவாமிகள் தனது அன்னதானச் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். உதாரணமாக சந்நிதியானே தஞ்சமென ஆலயத்தில் தங்கியிருக்கின்ற ஒரு தொகுதி அடியவர்கள் சில வேளைகளில் இன்று மத்தியானம் உணவருந்தினால் மறுநாள் மீண்டும் அன்னதானம் அருந்தும்வரை பசி பட்டினியுடனும் இருக்கும் நிலையும் நிலவியுள்ளது. இதனால் முதல்நாள் மிஞ்சிய சோற்றினை தண்ணீர் உற்றி பாதுகாத்து பேணி அடுத்தநாள் காலை அதை நன்றாகக் கரைத்து பழஞ்சோற்றுத் தண்ணீராக தினமும் காலையில் வழங்கும் வழக்கத்தையும் மயில்வாகனம் சுவாமிகள் மேற்கொண்டுள்ளார். இதனைப் பெறுவதற்கென்றே பெருமளவு அடியார்கள் காலையில் ஆனந்த ஆச்சிரமத்தின் முன் கூடியுள்ளனர்.

அதேநேரம் மதியநேரம் சுத்தமாக சுவையாக நேர்த்தியாக இறை வழிபாட்டுடன் இணைந்ததான அன்னதானச் செயற்பாடு அங்கே இடம்பெறும். சாமி அறையில் ஓலைப் பாய்களில் அன்னம் குவிக்கப்பட்டிருக்கும். ஒரே நேரத்தில் ஒரு மூடை அரிசி வேகக்கூடியதான அண்டாக்கள் இதற்காகப் பயன்படுத்தப்படும். இதேபோல பெரிய அண்டாக்களில் கறிவகைகளும் அங்கே தயாராக இருக்கும். இந்த அன்னதானச் செயற்பாட்டின் சமையல் மற்றும் பங்கீடுகளுக்கு பொறுப்பாக சாமியாரின் சகோதரி சாந்தமான முகத்துடன் பொறுப்பாக இருந்து செயற்பட்டதையும் அடியார்கள் அவதானித்திருக்கமுடியும்.

பூசை நடைபெற்று கூட்டுப் பிரார்த்தனையைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் செயற்பாடு ஆரம்பமாகும். மயில்வாகனம் சுவாமிகள் எளிமையான ஒரு வேட்டியுடன் கையில் ஒரு சிறு பிரம்புடன் எல்லா மண்டபங்களுக்கும் பம்பரம் போல சுற்றிவந்து கொண்டிருப்பார். அவ்வாறு ஓட்டமும் நடையுமாக எல்லா மண்டபங்களுக்கும் சுற்றிவரும் பொழுதே எல்லாவற்றையும் கண்காணித்து எந்தெந்த மண்டபங்களில் என்னென்ன தேவை என்பதை மதிப்பீடு செய்துவிடுவார். அதன்பின்பு தேவையான அறிவுறுத்தல்களை தொடர்புடைய தொண்டர்களுக்கு கணீர் என்ற ஒலியுடன் வெளிப்படுத்திக் கொண்டிருப்பார். அனுபவமும் அர்ப்பணிப்பும் நிறைந்த தொண்டர்கள் சாமியாரின் அறிவுறுத்தல்களை உடனடியாகவே அங்கே செயற்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மயில்வாகனம் சுவாமிகளின் ஆளுமையின் சிறப்பும் தனித்துவமும் அங்கே வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். நீண்ட காலம் தொண்டராகவும் பின்பு மயில்வாகனம் சுவாமிகளின் சீடராகவும் சுவாமிகளுடன் உடனிருந்து செயற்பட்ட மோகனதாஸ் சுவாமிகள் மயில்வாகனம் சுவாமிகள் ஆனந்த ஆச்சிரமத்தில் அப்பொழுது பின்பற்றிய அதே நடைமுறைகளை தற்பொழுது சந்நிதியான் ஆச்சிரமத்தில் பின்பற்றிக் கொண்டிருப்பதை அடியார்கள் நேரடியாகவே அங்கே காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவ காலங்கள், விஷேட தினங்கள், வெள்ளிக்கிழமைகள் என ஆலயத்தில் அடியார்கள் பெருமளவு கூடுகின்ற முக்கியமான காலங்களில் ஆனந்த ஆச்சிரமத்தின் வெளிவாசல் கதவில் சேவல் சின்னம் பொறிக்கப்பட்ட அழகான வெள்ளைகொடி பறந்து கொண்டிருக்கும். இது அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அன்னதானத்தை எதிர்பார்த்து அங்கே வந்துகொண்டிருக்கும் அடியார்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்துவதற்கு மயில்வாகனம் சுவாமிகள் மேற்கொண்ட ஒரு நடைமுறையாகும். வெள்ளிக்கிழமை போன்ற விஷேட தினங்களில் ஆலயத்தில் வழிபாட்டை அவரவர் வசதிக்கு ஏற்ப முடித்துக்கொண்டு பசிபட்டினியுடனும் உள்ளார்ந்த எதிர்பார்ப்புடனும் சாரைசாரையாக அடியார்கள் ஆனந்த ஆச்சிரமத்தை நோக்கி வந்து கொண்டிருப்பார்கள். ஆலயத்திலிருந்து ஆற்றோரமாக தெற்கு திசையில் சிறிதுதூரம் நடந்துவந்து கொண்டிருக்கும் அடியார்களுக்கு தூரத்தில் வந்து கொண்டிருக்கும் பொழுதே அந்த ஆனந்த ஆச்சிரம வாசலில் கொடி பறந்து கொண்டிருக்கும் காட்சி கண்களுக்கு தெரிந்துவிடும். அப்பொழுதே அவர்கள் உள்ளத்தில் பெரிய ஆனந்தம் ஏற்பட்டுவிடும். இந்த ஆனந்தத்துடன் தென்னம்தோப்பின் மத்தியில் அமைந்திருக்கின்ற குளிர்மையான ஆனந்த ஆச்சிரமத்தின் வாசலை வந்தடையும் பொழுதே வயிறும் மனசும் அரைவாசி நிறைந்துவிட்டதைப் போன்ற உணர்வு ஏற்படும். ஆண்கள் வேறாகவும் பெண்கள் வேறாகவும் வரிசையாக நிற்கும் அணியுடன் வருகின்றவர்களும் சேர்ந்து ஆச்சிரமத்திற்குள் பிரவேசிப்பார்கள். இவ்வாறு ஆனந்த ஆச்சிரமத்திற்குள் பிரவேசிக்கும் அடியார்கள் மயில்வாகனம் சுவாமிகளால் குறிப்பிட்ட இலக்கமுடைய குறிப்பிட்ட மண்டபத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இவ்வாறு பசிக்களையுடன் செல்லுகின்ற அடியவர்களுக்கு சுத்தமாகவும் சுவையாகவும் நேர்த்தியாகவும் அதேநேரம் பந்தியில் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் சீராகவும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த அன்னதானம் அந்த சந்தர்ப்பத்தில் அமிர்தம் போல அமைந்திருக்கும். இதன்பின்பு நிறைவாக வாழை இலையில் மிகுந்த சுவையுள்ள பாயாசம் விடப்படும். அதனையும் கைகளால் அள்ளி சுவைத்துவிட்டு முருகா! என்று கூறிக்கொண்டு பந்தியிலிருந்து எழும்பும்பொழுது ஏற்படும் நிறைவுக்கு எதுவுமே ஈடாக இருக்கமுடியாது. ஆனந்த ஆச்சிரமத்தில் ஆனந்தமாக இதை அனுபவித்த பலர் நடுத்தர வயதை தாண்டிய நிலையில் அந்த பசுமையான நினைவுகளுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

வியாபாரிகளும் வசதி வாய்ப்பு உள்ள நல்ல உள்ளங்களும் தாம் மயில்வாகனம் சுவாமிகளிடம் வழங்குகின்ற பொருள் பண்ட உதவிகள் தங்கள் கண்முன்னாலேயே இவ்வாறான அரிய அன்னதானச் செயற்பாட்டுக்கு பயன்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் பூரண மனநிறைவு அடைந்தனர். இவர்களில் மானிப்பாய் மாப்பியன் மில், புன்னாலைக்கட்டுவன் இராசன் மில் போன்றவற்றின் உரிமையாளர்கள் முக்கியமானவர்கள். இராமலிங்கம் செட்டியார், முத்துலிங்கம் செட்டியார் போன்றோர் கட்டிடங்களுக்கு உதவி செய்தனர்.

இதேபோன்று மயில்வாகனம் சுவாமிகள் துறவற வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தாலும் மக்கள் தொடர்பான ஒரு அறப்பணியை தாராளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக செய்யமுடிகிறதே என்ற மனநிறைவு அவருக்கும் இருந்துள்ளது. மயில்வாகனம் சுவாமிகள் விரும்பியதுபோல அவர் முழுமையாக ஒரு சித்தராக யோகியாக தனது வாழ்க்கைப் பாதையை அமைத்திருந்தால் அது தனி ஒருவரது வாழ்வியலின் உயர்வாகவே இருந்திருக்கும். ஆனால் அவர் துறவு நிலையில் இருந்துகொண்டு மேற்கொண்ட அன்னதானப் பணி பல ஆயிரம் அல்ல, பல இலட்சம் அடியார்களின் வயிற்றுப் பசியைப் போக்கும் உத்தமமான பணியாக அமைந்துவிட்டது. ஆம் புராண காலங்களில் வாழ்ந்த சித்தர்களின் வாழ்வியல் முறை அவர்களின் செயற்பாடுகள், அக்காலத்திற்கு பொருந்துவனவாய் அமைந்திருந்தது. ஆனால் தற்காலத்தில் வாழ்கின்ற அருளாளர்கள் வாழ்வியல் முறை நேரடியாகவோ மறைமுகமாகவோ பெருமளவிற்கு மக்கள் மயப்பட்டதாக அமைந்திருப்பது காலத்தின் தேவையாகவுள்ளது. இந்தியாவில் காஞ்சிப் பெரியவர் இலங்கையில் யோகசுவாமிகள் போன்ற ஞானிகளின் வாழ்வியலிலும் மக்கள் மயப்பட்ட செயற்பாடுகள் தாராளமாகவே இடம்பெற்றுள்ளன.

மயில்வாகனம் சுவாமிகள் அன்னதானப் பணியை எவ்வாறு காத்திரமாக மேற்கொண்டார்களோ அதேபோல அவர் ஆற்றிய ஆன்மீகப் பணியும் மகத்தானது. ஞானநிலையில் தம்மை மேம்படுத்துவதற்காக சந்நிதியில் ஒன்றுகூடுகின்ற அருளாளர்களை அரவணைத்து ஆதரவு வழங்கியவர்களில் மயில்வாகனம் சுவாமிகள் முதன்மையானவர் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. ஜேர்மன் சுவாமிகள் ஆனைக்குட்டி சுவாமிகள் பன்றிக்குட்டி சுவாமிகள் புலிக்குட்டி சுவாமிகள் ஆகிய வெளிநாட்டவர்கள் உட்பட எமது நாட்டைச் சேர்ந்த ஏராளம் அருளாளர்களை தனது ஆச்சிரமத்தில் உள்வாங்கி ஒவ்வொருவரும் அவரவர் பாதையில் ஆன்மீக ரீதியாக மேம்பாடு அடைவதற்கான உதவிகள் ஒத்தாசைகளை மயில்வாகனம் சுவாமிகள் தாராளமாக வழங்கியுள்ளார்கள்.


ஜேர்மன் சுவாமிகளுடன்
ஆனந்தமாக
உரையாடும் காட்சி

மயில்வாகனம் சுவாமிகள் ஒரு அருளாளராக இருந்த பொழுதிலும் ஒரு நிறுவனத்தை வெற்றிகரமாக செயற்படுத்தக்கூடிய முகாமைத்துவ அம்சங்களை மட்டுமன்றி அவற்றின் நுட்பங்களையும் நன்கு விளங்கி வைத்திருந்தார் என்பதை அவருடைய செயற்பாடுகளிலிருந்து படித்தவர்கள் மட்டுமன்றி பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி அவர் செயற்படுத்திய விடயங்கள் அனைத்திலும் காணப்பட்ட வெளிப்படைத் தன்மையும் மற்றவர்களுக்கு அவர்மேல் மிகுந்த மதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. மேலும் மயில்வாகனம் சுவாமிகள் ஒரு அருளாளராக இருந்துகொண்டு உளத் தூய்மையுடன் செயற்பட்டதனால் சந்நிதியானின் அனுக்கிரகமும் அவருக்கு உறுதுணையாக இருந்துள்ளதை சந்நிதியான் வாசகர்களுக்கு அடியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதனால்தான் அவர் தனது அறப்பணிகள் அனைத்தையும் நிறைவாகச் செயற்படுத்த முடிந்துள்ளது. அவர் வெளிப்படையாக அன்னதானப் பணியை ஆற்றினாலும் உள்ளுணர்வால் சந்நிதியானின் அடிமையாகவே வாழ்ந்துகொண்டிருந்தார்.

மானிட வாழ்வில் இவ்வாறான அருளாளர்கள் வாழ்க்கை என்பது மகத்தானது. இன்று சமய நிறுவனங்களுக்கு பொறுப்பாக இருந்து செயற்படுபவர்களும் சமய நிறுவனங்களின் பெயரால் அறச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களும் மயில்வாகனம் சுவாமிகள் போன்றோரின் வாழ்க்கைப் பாதைகளை அறிந்து தெரிந்து செயற்படுதலே சாலச் சிறந்தது.

மயில்வாகனம் சுவாமிகளது காலத்தில் வாழ்ந்து அவரது செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்து அவரது கொண்டுகளை நிதானமாக உள்வாங்கியது மட்டுமல்ல அவரது பரிபக்குவ நிலையையும் நன்கு புரிந்துகொண்டவர்களில் ஒருவர் வைரமாளிகை உரிமையாளரான திரு. முருகமூர்த்தி அவர்கள். அவரை 14.03.2018 புதன்கிழமை அவரது இருப்பிடம் சென்று ஆறுதலாக உரையாடினேன். அப்பொழுது அவர் மயில்வாகனம் சாமிகள் போன்று தொண்டு செய்த ஒருவரை தான் இன்றுவரை சந்திக்கவில்லை எனவும் இனிமேல் அவரைப்போல ஒருவர் பிறந்துதான் வரவேண்டுமென்றவகையில் அவரது பசுமையான நினைவுகளை அடியேனுடன் பகிர்ந்துகொண்டார்கள்.



இலட்சக்கணக்கான அடியார்களின் பசி தீர்த்த ஆனந்தாச்சிரமம் முழுமையாக சிதைவடைந்து பற்றைகள் மண்டியிருப்பதைக் காணலாம். அவ்விடத்தில் வெளிக்கள நிலையக் கட்டிடம் உருவாகிவருகின்றது. (மார்ச் 2016)

மயில்வாகனம் சுவாமிகள் 1985 இல் சமாதி அடையும்வரை தனது பணிகளை தொடர்ந்து செயற்படுத்தினாலும் அதன் பின்பு ஏற்பட்ட இராணுவச் சூழலினால் ஆனந்த ஆச்சிரமத்தின் கட்டிடங்கள் அனைத்தும் தரைமட்டமாகியுள்ளன. அந்த அழிவடைந்த சூழலை அங்கே செல்பவர்கள் தற்பொழுதும் காண முடியும். ஆனாலும் அண்மையில் வானுயர்ந்த வெளிக்கள நிலைய கட்டிடம் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கான வெளிக்கள கல்விச் செயற்பாடுகள் அந்த சூழலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசைத் தினம் தற்பொழுது சந்நிதியான் ஆச்சிரமத்தினால் சிறப்பாக வருடாவருடம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பல இலட்சம் அடியார்களின் பசிப்பிணி போக்கிய மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசைத்தின நிகழ்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலம் ஆச்சிரமத்தில் ஒழுங்குபடுத்தி செயற்படுத்திய மனநிறைவு அடியேனுக்கும் உள்ளது.

## சிவயோகசுவாமிகள்



இருபதாம் நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்ட காலம் யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த சித்தராக, மகானாக வாழ்ந்து இந்த மண்ணில் வாழ்ந்தவர்களை ஈடேற்றியவர் சிவயோக சுவாமிகள். தனது குருவான செல்லப்பா சுவாமி களின் கட்டளையை ஏற்று கால்நடையாகவே கதிர்காம யாத்திரையை மேற்கொண்டார்கள். அந்த நீண்டகால கதிர்காம யாத்திரையின் நிறைவில் யோகசுவாமிகள் எல்லாவகையிலும் தன்னை பக்குவப்படுத்திய நிலையில் ஒரு மகானாகவே அவர் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்ததை காண முடிகிறது. அதேநேரம் அவர் முருகப்பெருமா னுடைய முழுமையான திருவருளுக்கும் பாத்திர மாகியிருந்ததையும் நாம் காணமுடிகிறது. யோக சுவாமிகள் கதிர்காம யாத்திரை என்ற பெயரில் ஒரு வருடத்திற்கு மேலாக தன்னை பல வழிகளிலும் பக்குவப்படுத்திக் கொண்டாலும் உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் களைப்புற் றிருந்துள்ளார். இவ்வாறான களைப்புடனும் அழுக்கடைந்த உடுப்புடனும் அவர் கதிர்காமத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார். அவர் திரும்பி வரும்வழியில் மலைநாட்டிற்கும் சென்றுகொண்டிருந்தார்.

கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளித்து காப்பாற்றும் இறைவன் தனது அடியவரை, பல லட்சக்கணக்கான அடியவர்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்டப்போகும் ஒரு மகானின் பசி பட்டினியை, துன்பத்தை பார்த்துக் கொண்டிருப்பானா? ஆம் அப்பொழுது மாத்தளையில் ஓவசியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த சரவணமுத்து என்ற அன்பருக்கு முருகப்பெருமான் ஒரு பெரியவர் போல கனவிலே தோன்றி ''அடியார் ஒருவர் பசியோடும் கந்தை துணியோடும் வருகின்றார். அவரை எதிர்கொண்டு உபசரி" எனக்கூறி மறைந்துள்ளார். மறுநாட் காலை கனவிலே கண்டபடி குறிப்பிட்ட அடையாளங்களின்படி அடியவராக தோற்றமளித்துக் கொண்டிருந்த சிவயோக சுவாமிகளைச் சந்தித்துள்ளார். மகிழ்வுடன் அவரை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று நீராட வைத்து புத்தாடை அணியச்செய்து நிறைவாக உபசாரம் செய்துள்ளார். அதுமட்டுமன்றி புகையிரத பிரயாணத்திற்கு பணமும் கொடுத்து வணக்கத்துடன் யாழ்ப்பாணத்திற்கு வழியனுப்பி வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆம் இதேபோன்ற அற்புத நிகழ்வுகள் நாயன்மார் காலத்தில் நாயன்மார் களுக்கு மட்டுமல்ல சுவாமி விவேகானந்தர், யோக சுவாமிகள் போன்ற மகான் களின் வாழ்க்கைப் பாதையில் இன்றும் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதெல்லாம் ஆன்மிக ஈடுபாடுள்ள அன்பர்களுக்கு புதுமையானவை அல்ல.

இவ்வாறு ஒரு சித்தராக மகானாக சிவயோக சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்தாலும் அவர் ஒரு சாதாரண அருளாளராகவே தன்னை மற்றவர் களுக்கு வெளிப்படுத்தி வந்துள்ளார். ஆனாலும் சிவயோக சுவாமிகளுடன் நெருங்கிப் பழகுகின்ற பலர் ஆரம்பத்திலிருந்தே அவரின் மகிமையை மிகவும் நன்றாகவே உணர்ந்திருந்தனர். சுவாமிகளை நாடி வருகின்ற ஒரு அன்பருடைய இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என அந்த அன்பருடைய முக்காலத்தைப் பற்றி மட்டுமல்ல, அவரது முற்பிறப்பைப் பற்றியும் அறிந்துகொள்ளும் ஆற்றலும் அவரிடம் காணப்பட்டுள்ளது. இதேபோன்று தேவை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் பிரசன்னமாக இருந்த நிகழ்வுகள் உட்பட அவரால் நிகழ்த்தப்பட்ட அதிசயங்களும் அற்புதங்களும் சித்துக்களும் ஏராளம். ஆனாலும் இந்த மண்ணில் வாழ்பவர்களை ஈடேற்றுவதற்காகவே அவதரித்த ஒரு மகானாகவே யோக சுவாமிகளின் வாழ்க்கை பாதை அமைந்திருந்தது. இவ்வாறான ஒரு மகானே இந்த மண்ணுக்கும் அவசியமாகவும் இருந்தது.

சிவயோக சுவாமிகள் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் தவ வாழ்க்கை வாழாவிட்டாலும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு பலமுறை வந்து வழிபட்டு அவனது திருவருளிற்கு பாத்திரமான ஒரு மகானாக விளங்கியுள்ளார். அது மட்டுமன்றி சந்நிதியானின் திருவருளையும் இந்த ஆலயத்தின் மகிமையையும் முழுமையாக உணர்ந்துகொண்ட மிகப்பெரிய சித்தராகவும் விளங்குகின்றார். ஆம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு வந்து வழிபடுகின்ற அடியவர்கள் ஒவ்வொருவரும் இந்த ஆலயத்தின் புனிதத்தையும் சிறப்பையும் உணர்ந்தவர்களாகவே உள்ளனர். ஆனால் இந்த ஆலயம் இவ்வளவு சிறப்பும் புனிதமும் நிறைந்தது என்பதை நேரடியாகவே தனது ஞானநிலையால் கண்டு உணர்ந்து எமக்கெல்லாம் வெளிப்படுத்திச் சென்றவர்களில் யோக சுவாமிகள் போல வேறு எவரும் இல்லை என்றே கூறலாம்.

யோகசுவாமிகள் இவ்வாலயத்திற்கு பலமுறை வந்து வழிபாடு செய்துள்ளார்கள். இவ்வாறு ஒரு முறை இவ்வாலயத்திற்கு வருகைதந்த யோகர் சுவாமிகள் ''இங்கே ஆலயத்தின் வீதியில் நிலத்தில் எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்களும் தீபங்களும் காட்சியளிக்கின்றனவே! இந்த மண்ணில் எனது பாதங்களை எவ்வாறு பதிப்பேன்'' என ஆதங்கப்பட்டு அதனைத் தன்னுடன் கூடச் சென்ற அடியார்களுக்கு எடுத்துக் கூறிய நிகழ்வும் இவ்வாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் கந்தபுராண காலத் தொன்மை யையும் புனிதத்தையும் அருள் நிலையையும் சிவயோக சுவாமிகள் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கண்களால் தான் கண்டு உணர்ந்தது மட்டுமன்றி அதனை எமக்கும் வெளிப்படுத்திச் சென்றது நாம் செய்த பாக்கியமே. யோகசுவாமிகளின் சீடர்களில் ஒருவராக அருள் வாழ்க்கை வாழ்ந்தவர் செல்லத்துரை சுவாமிகள். செல்லத்துரை சுவாமிகள் ஏறத்தாழ அரை நூற்றாண்டுகளாக சிவத்தொண்டன் நிலையத்தை நிர்வகித்து வந்த சிறப்புக்குரியவர். அவர் ''யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்'' என்ற நூலை 1991 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்கள். அந்த நூலிலும் யோகசுவாமிகள் தனது ஞானக்கண்களால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வீதியில் கண்ட அந்த புனிதம் நிறைந்த அருட்காட்சி தொடர்பான சம்பவம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆம் யோக சுவாமிகள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவ வாழ்க்கை வாழாவிட்டாலும் இந்த ஆலயச்சூழல் தவ வாழ்க்கைக்கு எவ்வளவு உகந்த உச்சமான ஒரு புனிதமான இடம் என்பதை தெட்டத்தெளிவாகவே எம் எல்லோருக்கும் உணர்த்திச் சென்ற ஒரு சித்தராக விளங்குகின்றார். யோகசுவாமிகள் தவ வாழ்க்கை வாழ்ந்த கொழும்புத்துறை கொட்டில்தான் அவரது தவ வாழ்க்கைக்கு உகந்தது என்பதை அவரது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் ஏற்கனவே தீர்மானித்து விட்ட விடயம். குருநாதர் கூற்றுப்படியே யோக சுவாமிகளும் கொழும்புத்துறையில் தவ வாழ்க்கை வாழ ஆரம்பித்துவிட்டார்கள். இந்த நிலையில் யோக சுவாமிகள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் தவ வாழ்க்கை வாழ வேண்டிய தேவையோ சூழ்நிலையோ எந்தவகையிலும் ஏற்படவில்லை. ஆனாலும் கூட யோக சுவாமிகள் தனது உள்ளத்தாலும் உணர்வாலும் உலாவந்து உறைந்த இடமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்கியுள்ளது.

## செல்லத்துரை சுவாமிகள்



யோக சுவாமிகளின் சீடர்களில் ஒருவராக இருந்து அண்மைக்காலம் வரை வாழ்ந்து யோக சுவாமிகளின் உணர்வுகளையும் செயற்பாடு களையும் எமது மண்ணில் தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வளர்த்து வந்தவர்தான் செல்லத்துரை சுவாமிகள். இந்த மண்ணில் ஆன்மீகச் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற தூரநோக்குடன் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கே அமைந்துள்ள செங்கலடி சிவத்தொண்டன் நிலையங்களை யோக சுவாமிகள் ஸ்தாபித்தார்கள். இந்த சிவத்தொண்டன் நிலையங்களில் பொறுப்பாக சேவையாற்ற யோக சுவாமிகளாலேயே நியமிக்கப்பட்ட அருளாளர்தான் செல்லத்துரை சுவாமிகள். ஏறத்தாழ அரைநூற்றாண்டு காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரை சுவாமிகள் மாறிமாறி இந்த இரு சிவத்தொண்டன் நிலையங்களையும் சிறப்பாக நிர்வகித்து வழிப்படுத்தி வந்துள்ளார்கள். தனது குருவான யோக சுவாமிகள் இல்லாத நிலையிலும் அவரது சிந்தனைகளை தொடர்ந்து செயற்படுத்தி ஆன்மீக ரீதியாக இந்த மண்ணை வழிப்படுத்திய ஒரு வள்ளலாகவே செல்லத்துரை சுவாமிகள் மதிக்கப்படுகின்றார். அதுமட்டுமல்ல எதிர்கால சந்ததியினர் பயன்பெற வேண்டுமென்பதற்காக ''யோக சுவாமிகளின் வாழ்க்கையும் வழிகாட்டலும்'' என்ற மிகச்சிறந்த ஆவண நூலையும் செல்லத்துரை சுவாமிகள் ஆக்கி எமக்காக கையளித்துச் சென்றுள்ளார்.

பொதுவாக சித்தர்கள், யோகிகள் அருளாளர்களாக வாழ்ந்து சென்றவர் களின் வாழ்க்கைப் பாதையை பார்க்கும்பொழுது அவர்கள் இளமைக் காலத்தில் வாழும்பொழுது தாம் வாழுகின்ற சமூகத்தின் சராசரி மனிதர்களாகவே வாழ்ந்துள்ளதை காணமுடிகிறது. சிலவேளைகளில் அவர்கள் வாழும்பொழுது சில சிறப்பு இயல்புகள் அவர்களிடம் முனைப்புப்பெற்று காணப்பட்டாலும் அவற்றை அந்த சந்தர்ப்பங்களில் யாரும் பெரிதாக எடுத்துக்கொள்வதுமில்லை. ஆனாலும் காலப்போக்கில் அவர்கள் தாம் செல்லவேண்டிய பாதையை சரியாக வகுத்து பின்பு படிப்படியாக தாம் வகுத்த அந்த ஆன்மீகப் பாதைக்கு ஏற்றவகையில் தம்மை தயார்படுத்தி தமது இலக்கை அடைவதை நாம் காணமுடிகிறது. அப்பொழுதுதான் சமுகமும் அவர்களை சரியாக அடையாளம் கண்டுகொள்கிறது. செல்லத்துரை சுவாமிகளின் வாழ்க்கைப்பாதையும் இதனையே எமக்குத் தெளிவுபடுத்துகிறது.

செல்லத்துரை சுவாமிகள் பிறந்தது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள சரசாலையாகும். கல்வியை சொத்தாக மதிக்கின்ற யாழ்ப்பாணச் சமூகத்தில் பிறந்து வளர்ந்து கல்விகற்று தனக்கு விருப்பமான ஆசிரியத் தொழிலை செல்லத்துரை சுவாமிகள் விரும்பி ஏற்றுக் கொண்டார்கள். நல்ல ஆசிரியராகவும் செயற்றிறன் உள்ள அதிபராகவும் அவர் தன் சேவைக் காலத்தை அலங்கரித்துள்ளார். அதேநேரம் இவ்வுலகில் வாழ்வதற்கு ஆதாரமான வருமானத்தையும் கௌரவத்தையும் அது அவருக்கு கொடுத்தாலும் கூட அவரது அடிமனதில் ஆன்மீக தாகமே மேலோங்கிக் கொண்டிருந்தது. இலங்கையின் மத்திய பகுதி உட்பட எல்லாப் பகுதிகளிலும் இவர் கடமை புரிந்துள்ளார். இவ்வாறு ஆசிரியத் தொழிலை மேற்கொள்கின்ற காலத்திலேயே விடுமுறைக் காலங்களில் தூரநோக்கில் தன்னை ஆன்மீக ரீதியாக பக்குவப் படுத்துகின்ற செயற்பாடுகளிலேயே அவர் ஈடுபட்டுவந்ததையும் காணமுடிகிறது. அவ்வாறு அவர் தன்னை பக்குவப்படுத்துவதற்காக தெரிவுசெய்த ஒரு முக்கியமான இடம்தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாகும்.

புனிதமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆற்றங்கரை முருகன் அடியவர்களுக்கு அபயமளித்து அவர்களை ஈடேற்றுகின்ற கருணையை செல்லத்துரை சுவாமிகள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். இதனால் இந்த புனிதமான ஆலயச் சூழலை செல்லத்துரை சுவாமிகள் தனது ஆன்மீகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்திற்கு தன்னை வளப்படுத்தும் முக்கியமான ஒரு தளமாக தெரிவு செய்து கொண்டதில் வியப்பேதுமில்லை. இதேபோன்றே கதிர்காமமும் அவரது தவ வாழ்க்கைக்குரிய தலமாக அமைந்திருந்தது. அத்துடன் இந்தியாவில் ரமண மகரிஷியின் ஆச்சிரமம், சிதம்பரம், பஞ்சபூத தலங்கள், அறுபடை வீடுகள் மற்றும் வட இந்திய தலங்கள் உட்பட பல புனிதமான தலங்களுக்கு ஆன்மீக யாத்திரைகளை மேற்கொண்டுள்ளார். ஆம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், கதிர்காமம், இந்திய தலயாத்திரை ஆகிய முக்கோணத் தொடர்புள்ளதாகவே இவரது ஆரம்பகால ஆன்மீகப் பயணம் அமைந்திருந்தது.

இவ்வாறு படிப்படியாக தன்னை ஆன்மீக ரீதியில் பக்குவப்படுத்திய செல்லத்துரை சுவாமிகள் ஒரு சித்தராக அல்லது யோகியாக தனது வாழ்க்கைப் பாதையை அமைப்பதென்று ஒரு கட்டத்தில் தீர்மானித்துள்ளார்கள். அவ்வாறு தீர்மானித்தபொழுது அதற்கு பொருத்தமான நாடு இந்தியாதான் எனவும் அதுவும் வடஇந்தியாதான் சிறந்தது எனவும் முடிவெடுத்துள்ளார்கள். 1954ஆம் ஆண்டு இந்தியா சென்று அந்தச் செயற்பாட்டில் தன்னை ஈடுபடுத்தவும் தயார் ஆகிவிட்டார்கள். இவ்வாறு செல்லத்துரை சுவாமிகள் தான் சித்தராக வேண்டுமென தனது பாதையை அமைத்து இந்தியா சென்று அதைச் செயற்படுத்த ஆயத்தமாகிக் கொண்டிருந்து பொழுதுதான் அவர் செல்ல இருந்த பாதையில் திடீரென திருப்பம் ஏற்பட்டுள்ளது.

செல்லத்துரை சுவாமிகளின் வாழ்க்கைப்பாதை எவ்வாறு அமைய வேண்டுமென்பதை யோக சுவாமிகள் எப்பொழுதோ தீர்மானித்துவிட்டார்கள். ஆம் இராமகிருஸ்ண பரம கம்சர் சுவாமி விவேகானந்தரை முதன்முறை அவரை சிறுவனாக சந்தித்த சந்தர்ப்பத்திலேயே அவரை ஆட்கொண்டு அகத்தில் அமர்த்தி வைத்திருந்து பின்பு சந்தர்ப்பம் வந்தபொழுது அவரை முழுமையாக ஆட்கொண்ட வரலாற்றைப் பார்க்கின்றோம். இதேபோன்றுதான் இங்கேயும் யோகர் சுவாமிகள் செல்லத்தரை சுவாமிகளை முதன்முறையாக இளைஞனாகச் சந்தித்த பொழுது ‘‘தம்பி நல்லாய் இருப்பாய் போயிற்றுவா’’ என ஆசிர்வதித்து அனுப்பி வைத்திருந்தார்கள். பின்பு காலம் வரும் வரை காத்திருந்து காலம் கனிந்துவிட்ட நிலையில் செல்லத்துரை சுவாமிகளை தன்வயப்படுத்திக் கொண்டார்கள்.

ஆம், அங்கு பெரும் அற்புதம் நடைபெறுகிறது. சித்தராகும் நோக்குடன் வட இந்தியாவில் திருக்கேதாரம் என்ற புனிதமான இடத்தில் செல்லத்துரை சுவாமிகளும் அவருடன் கூடச்சென்ற ஆத்ம ஜோதி முத்தையா அவர்களும் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அங்கே தங்கியிருந்தார்கள். அப்பொழுது யோகசுவாமிகள் நேருக்கு நேரே தோன்றி come home emmediatly என அவருக்கு (நீ உடனே வீட்டிற்கு திரும்பிவா) அருள் கட்டளையை வழங்கினார்கள். இது கனவுகள் காட்சிகளாக இடம்பெற்ற நிகழ்வு அல்ல. யாழ்ப்பாணத்தின் பெரும் சித்தரான யோகசுவாமிகள் இன்னொரு சித்தரான செல்லத்துரை சுவாமிகளுக்கு நனவு நிலையில் நடாத்திய சித்து நிகழ்வாகும். நனவு நிலையில்த்தான் இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை செல்லத்துரை சுவாமிகள் நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமாக உள்வாங்கிக் கொள்கிறார். இதன்பின்புதான் செல்லத்துரை சுவாமிகளும் தனது குருநாதர் கட்டளையை தட்டாமல் ஏற்றுக்கொண்டு நாடு திரும்புகின்றார். நாடுதிரும்பியவர் சிவயோக சுவாமிகளை சந்திப்பதற்காக அவர் தங்கியிருந்த கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்கு செல்கின்றார்கள். அங்கே சுவாமிகள் தம்பி வந்துவிட்டாயா, வா என அழைத்து வார்த்தைகளால் அரவணைக்கின்றார். அதுமட்டுமல்ல அவருக்காகவே காத்திருந்த பணியாகிய சிவத்தொண்டன் நிலையத்தை கொண்டு நடாத்தும் பொறுப்புவாய்ந்த அந்த புனிதமான பணியை யோகசுவாமிகள் செல்லத்துரை சுவாமிகளிடம் கையளித்தார்கள்.

யோகசுவாமிகள் வெறுமனே அந்தப் பொறுப்பை செல்லத்துரை சுவாமிகளிடம் கையளித்துவிட்டு இருக்கவில்லை. சிவத்தொண்டன் நிலையப் பொறுப்பை செல்லத்துரை சுவாமிகள் எல்லா வகையிலும் சிறப்பாகச் செயற்படுத்தும் வகையில் அவரை ஆற்றுப்படுத்தியது மட்டுமன்றி சிவத்தொண்டன் நிலையத்திற்கும் நேரடியாகச் சென்று யோகர் சுவாமிகள் செல்லத்துரை சுவாமிகளை புடம்போட்டு எடுத்தார் என்றே கூறவேண்டும். ஆம் இவ்வாறு யோகசுவாமிகளாலேயே நேரடியாக வளர்த்தெடுக்கப்படுகின்ற பாக்கியம் செல்லத்துரை சுவாமிகள் போன்ற ஒரு சிலருக்கே கிடைத்துள்ளது.

தனது குருநாதர் யோகசுவாமிகள் தனக்கு அளித்த பணியை தனக்கு கிடைத்த பேறு என எண்ணி செல்லத்துரை சுவாமிகள் அரை நூற்றாண்டிற்கும் மேலாக யாழ்ப்பாணம், செங்கலடி ஆகிய இரண்டு இடங்களிலுமுள்ள சிவத்தொண்டன் நிலையங்களுக்கும் பொறுப்பாளராக இருந்து செவ்வனே தனது பணியை நிறைவேற்றியுள்ளார்கள். ஆன்மீக உலகில் அனைவராலும் அறியப்பட்டும், மதிக்கப்பட்டுமிருந்ததுமின்றி அண்மைக்காலம் வரைக்கும் ஆன்மீக உலகை அலங்கரித்த ஒரு மகானாகவும் செல்லத்துரை சுவாமிகள் விளங்குகின்றார்கள். அப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த செல்லத்துரை சுவாமிகள் ஆரம்ப காலத்தில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவவாழ்க்கை வாழ்ந்த காலத்தின் பசுமையான அனுபவங்களையும் அந்த காலப்பகுதியில் தனது ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயச்சூழல் எவ்வாறு அத்திவாரமாக அமைந்திருந்தது என்பதை எல்லாம் தனது திருவடிக்கலப்பு காலம் வரை தன்னுடன் சுமந்தவராகவே வாழ்ந்து வந்ததையும் நாம் காணமுடிகிறது.

2002ம் ஆண்டு செல்லத்துரை சுவாமிகள் யாழ்ப்பாணம் சிவத்தொண்டன் நிலையத்தை வழிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர் பொது நிகழ்வுகளில் மிக அரிதாகவே பங்குபற்றுவதுண்டு ஆனாலும் செல்லத்துரை சுவாமிகள் 2002ம் ஆண்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்ட வைகாசிப் பெருவிழாவிற்கு அருளுரை வழங்குவதற்காக வருகை தந்திருந்தார்கள். அப்பொழுது சுவாமிகள் மனம்திறந்து அடியார்களுக்கு சந்நிதியானின் மகிமையையும் அவர் நிகழ்த்துகின்ற அற்புதங்களையும் கூறுகின்ற ஒரு பக்திச் சூழல் அங்கே காணப்பட்டது. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திச்சூழலில் அவர் அங்கே அடியவர்களுக்கு வெளிப்படுத்தியதை அப்படி இங்கே வாசகர்களாகிய அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் ஸ்ரீ செல்வசந்நிதி ஆலயத்தின் தென்மேற்குத் திசையில் மேடை போன்ற ஒரு இடத்தில் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் எம் எல்லோருக்கும் ஏற்படுவது போன்று செல்லத்துரை சுவாமிகளுக்கும் மனதில் பின்வருமாறு ஒரு சபலம் தோன்றியது.

**''சந்நிதியானைக் கண்கண்ட தெய்வமென ஆயிரக்கணக்கான அடியார்கள் தினமும் வழிபடுகின்றனர். அவ்வாறான அடியார்களில் நானும் ஒருவனாகத்தான் இருக்கின்றேன். ஆனாலும் இறைவன் இருப்பதாக கூறப்படுவதெல்லாம் உண்மை தானா? சந்நிதி முருகன் உண்மையாகவே பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றானா? இது எமக்குள் ஏற்படுகின்ற ஒரு மாயமான தோற்றமா? அல்லது உண்மையாகவே நமது வாழ்வில் நிஜமாக நடந்தேறுகின்ற சம்பவங்கள்தானா? இவற்றை எப்படி நாம் விளங்கிக்கொள்ள முடியும் என்ற சந்தேகம் அவர் மனதில் வழமைக்கு மாறாக எங்கிருந்தோ ஏற்பட்டது''**

எதிர்காலத்தில் மிகப்பெரிய ஆன்மீகப் பணிகளை இந்த மண்ணில் இருந்து இந்த மக்களுக்காக ஆற்றப்போகின்ற ஒரு மகானுக்கு இவ்வாறான சஞ்சலம் மனதில் ஏற்படுவதை சந்நிதியான் பார்த்துக் கொண்டிருப்பானா? அதுவும் தனது மெய்யடியவனாகவும் தனது முழுமையான திருவருளுக்கும் பாத்திரமான ஒரு அடியவருக்கு தனது சந்நிதானத்திலேயே இவ்வாறான சந்தேகம் வந்துவிட்டபின் சந்நிதியான் சும்மா இருந்துவிடுவானா? ஆம் கலியுகக்கடவுள் அடுத்த கணமே தனது திருவிளையாடலை அங்கு அரங்கேற்றிவிட்டான்.

என்ன அதிசயம், செல்லத்துரை சுவாமிகளுக்கு இறையருள் பற்றி இவ்வாறு ஏற்பட்ட அந்த சந்தேகத்திற்கு சந்நிதியான் உடனடியாகவே அந்த இடத்திலேயே தெளிவை ஏற்படுத்திவிட்டான். இவ்வாறு இறையருள் பற்றி குழப்பம் ஏற்பட்ட சிறிது நேரத்தில் சந்நிதி ஆலயத்தில் மேற்குப்பக்க வீதியில் இரண்டு இளைஞர்கள் சுவாமிகளுக்கு தென்பட்டனர். அதில் ஒரு இளைஞன் துவிச்சக்கர வண்டியில் இருக்க மற்றஇளைஞன் அவனை ஏற்றி ஓடியவாறு அங்கே வந்துகொண்டிருந்தான். அப்படி வந்தவர்களில் துவிச்சக்கரவண்டியை ஓடிவந்தவன் மற்ற இளைஞனை அங்கே இறக்கிவிட்டு தான் திரும்பிச் சென்றுவிட்டான்.

இறக்கிவிடப்பட்ட இளைஞன் ஒரு பேய்பிடித்தவன் போல காணப்பட்டான். தடுமாற்றமான மனநிலையில் காணப்பட்ட அந்த இறக்கிவிடப்பட்ட இளைஞன் சந்நிதியானுடைய ஆலயத்தை உற்றுநோக்கிவிட்டு பின்பு செல்லத்துரை சுவாமிகள் பக்கம் திருப்பிப் பார்த்தான். இவ்வாறு செல்லத்துரை சுவாமிகளை நோக்கிய அந்த இளைஞன் தனக்கு தண்ணீர்த்தாகம் என்றும் தனக்கு குடிப்பதற்கு தண்ணீர் தரும்படியும் சைகை காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குத் தாகம் தண்ணீர் தருமாறு கேட்டுக்கொண்ட அந்த இளைஞனது நிலைமையை புரிந்துகொண்ட செல்லத்துரை சுவாமிகள் சந்நிதியான் ஆலயத்தின் தென்மேற்குத் திசையில் மேடைபோன்று தான் படுத்திருந்த அந்த இடத்தில் இருந்து எழுந்து சென்று கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து அந்த இளைஞன் கைகளில் ஊற்றிய பொழுது இளைஞனும் தனது தாகம் தீர தண்ணீரை அருந்தினான்.

அவ்வாறு நீரை அருந்தியவனது தாகம் தீர்ந்தது. தாகம் தீர்ந்த திருப்தி முகத்தில் தென்பட்டது. அது மட்டுமல்ல அவனது முகத்தில் தென்பட்ட சோர்வு, வெறுப்பு என்பன மறைந்து ஒருவித பூரிப்பும் மலர்ச்சியும் ஏற்பட்டது. நோயினால் அவனடைந்து கொண்டிருந்த வேதனையும் குறைவடைந்தது. ஆம்! அந்த இளைஞன் வரும்பொழுது அவனில் காணப்பட்ட நோயின் தன்மைகள் அனைத்தும் அந்த இடத்திலேயே நீங்கிவிட்டது.

இவ்வாறு நோய் நீங்கப்பெற்ற இளைஞனே செல்லத்துரை சுவாமிகளுக்கு தனக்கு நோய் குணமடைந்திருப்பதையும் தான் எவ்வாறு எந்த சூழ்நிலையில் சந்நிதிக்கு அழைத்து வரப்பட்டேன் என்பதையும் விபரமாக எடுத்துக்கூறினான்.

தனக்கு நீண்ட நாட்களாக பித்துப் பிடித்தது போன்ற ஒருவகையான நோய் காணப்பட்டது எனவும் அந்த நோயைக் குணப்படுத்துவதற்குரிய பிராயச்சித்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு பின்னர் இறுதியாக தான் சந்நிதிக்கு அழைத்து வரப்பட்டது பற்றி எடுத்துக்கூறினான். சந்நிதியானிடம் சென்று அவனது பாதங்களை பணிவதனூடாகவே தனது சுகவீனத்தை முழுமையாக மாற்றமுடியுமென்ற நம்பிக்கையுடனேயே தான் ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்ட நிகழ்வையும், அங்கே வந்த பின்பு தனது நோய் குணமடைந்திருக்கின்ற அற்புதத்தையும் அந்த இளைஞன் சுவாமிகளுக்கு பயபக்தியுடன் எடுத்துக்கூறினான்.

இவ்வாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இறை நம்பிக்கை பற்றியும், சந்நிதியான் திருவருள் பற்றியும், தனக்கு ஏற்பட்ட சஞ்சல உணர்வினையும் அதற்கு அந்த இளைஞன் மூலம் சந்நிதியான் தனக்கு உடனடியாகவே நிகழ்த்திய திருவிளையாடலையும் தனக்குள்ளே நினைத்து சுவாமிகள் உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

மேற்படி சுவாமிகளினுடைய அருளுரை நிறைவுபெற்றபின் சுவாமிகள் அடியேனுடன் தனியாக உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது சந்நிதியானுடைய ஒரு சில அற்புத நிகழ்வுகள் மட்டுமே நாம் ஏனைய அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடியவை எனவும் அதிகமானவை அவரவர்கள் தாமாகவே தமக்குள் உணர்ந்துகொள்ள வேண்டியவை என்பதையும் பக்குவமாக செல்லத்துரை சுவாமிகள் அடியேனிடம் வெளிப்படுத்தினார்கள். ஆனாலும் தனது உள்ளுணர்வு தூண்டியதால் இச் சம்பவத்தை இங்கே நான் அடியார்கள் முன்னிலையில் வெளிப்படுத்தும் நிலை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்த மண்ணில் மிகவும் மகத்தான பணிகளை ஆற்றிய ஒரு மகானாக அவர் அப்பொழுது அங்கே தன்னை சிறிதும் வெளிப்படுத்த வில்லை. மாறாக எளிமை, அமைதி, அடக்கம் ஆகிய இயல்புகளையே அப்பொழுது அவரிடம் காணமுடிந்தது. அதுமட்டுமன்றி ஒரு சராசரி ஓய்வுநிலை ஆசிரியராக, அதிபராக தனது தொழிலின் அனுபவங்கள் சிலவற்றையும் செல்லத்துரை சுவாமிகள் அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

2018 மார்ச் மாதம் அடியேனுக்கு யாழ்ப்பாணம் சிவத்தொண்டன் நிலையத்தை தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது அங்கே செல்லத்துரை சுவாமிகள் தங்கியிருந்து செயற்பட்ட அறையையும் பார்வையிட முடிந்தது. அப்பொழுது செல்லத்துரை சுவாமிகள் அந்த அறையில் தங்கியிருப்பது போலவே அந்த அறை பேணப்பட்டு வரும் சிறப்பையும் புனிதத்தையும் அங்கே காணமுடிந்தது. அவருக்குப் பதிலாக அவரது திருவுருவப்படம் அங்கே பேணப்பட்டு வருகிறது.

அதேநேரம் செல்லத்துரை சுவாமிகள் அந்த சிவத்தொண்டன் நிலையத்தை மிகுந்த கட்டுப்பாட்டுடன் நிர்வகித்த பாங்கினையும் தற்போது சிவத்தொண்டன் நிலைய பொறுப்பாளராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய முரளி மூலமும் அறிந்து கொள்ள முடிந்தது. அத்துடன் சிவயோக சுவாமிகள் தொடர்பான தியான மண்டபம், அவரது திருவடி வணக்க மண்டபம் ஆகியவை அமைந்த பகுதிகள் முழுமையாக சிவயோக சுவாமிகள் தொடர்பான புனிதமான இடங்களாகவே பேணப்பட்டும் வருகிறது. வேறு எவருடைய எந்தச் சின்னங்களும் அங்கே இடம்பெற்றிருக்கவில்லை. இவ்வாறுதான் செயற்பட வேண்டும் என்பது செல்லத்துரை சுவாமிகளது இறுக்கமான கட்டளை எனவும் அடியேனுக்கு கூறப்பட்டது.

2006 ஆம் ஆண்டு சிவயோக சுவாமிகளின் குருபூசை அண்மித்துவிட்ட காலத்திலேயே செல்லத்துரை சுவாமிகளது திருவடிக் கலப்புக்குரிய காலமும் நெருங்கியது. ஆனாலும் குருபூசை நிகழ்வுகள் அனைத்தும் நிறைவடையும் வரை செல்லத்துரை சுவாமிகள் நிறைவாக அதில் பங்குபற்றி நிறைவடைந்துள்ளார்கள். அதன்பின்பே அவரது திருவடிக் கலப்பு இடம்பெற்றது. அவரது அஸ்தி தொண்டைமானாறு புனித நதியில் சங்கமமாக்கப்பட்டது.

சந்நிதி அப்பன் என்ற தலைப்பில் செல்லத்துரை சுவாமிகள் இயற்றி வெளியிட்ட பாடலையும் இங்கே தருகின்றோம்.

### சந்நிதி அப்பன்

சந்நிதி யப்பனைச் சண்முக நாதனைப்
பன்னிரு கையனைப் பணிவார்க் கிடரிலை

முன்னிய கருணை முகமா றுடையான்
என்னது நெஞ்சில் என்றும் உளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிப் பிணியும் பிறபல பிணிகளும்
குறைந்து போகக் குமரன் அருள்கவே

வறுமை சிறுமை யாவும் தேயுமே
பொறுமை யுடனே போற்றிடின் புனிதனை

கங்கைச் சடையன் மைந்தனை என்றும்
எங்கை கூப்பி ஏத்திடல் இன்பமே

திங்கட் சடையான் சிவகுமா ரன்தனை
பொங்கு தமிழால் போற்றிடல் இன்பமே

வேலனைச் சிவனார் பாலனை வேண்டிடில்
ஞால மெங்கும் நமக்குற வாகுமே

உள்ளத்தி னுள்ளே ஒளிரும் ஒருவனை
கள்ள மனத்தவர் காணவும் மாட்டார்

கும்பிடுவார் மனத்தானைக் கூர்வே லாயுதனை
நம்பின பேர்க்கென்றும் நடுக்க மில்லையே.

## செந்தில் சாமியார்



2014ம் ஆண்டு கந்தசஷ்டி விரத காலம். ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச்சூழல் மிகவும் பக்தி மயமாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறது. மகோற்சவ காலங் களில் ஏற்படுகின்ற பக்திச் சூழலைவிட ஒருபடி உயர்வான பக்திச்சூழல் கந்தசஷ்டி காலத்தில் இங்கே வெளிப்படுவதை அடியார்கள் நன்கு அறிவார்கள். எல்லா விரதங்களையும் விட சைவ மக்கள் மிகவும் புனிதமாக கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டித்து வருவதால் யாழ் குடாநாட்டில் மட்டுமல்ல வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, மலையகம் என இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் சைவ மக்கள் உடலாலும், உள்ளத்தாலும் மிகவும் தூய்மை யாகவும் பக்தி சிரத்தையுடன் இவ்விரதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் காணமுடியும். அதேநேரம் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை நாடி வந்து ஆலயத்தில் தங்கியிருந்தும் கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டிக்கும் சிறப்பும் மகிமையும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் காணப்பட்டு வருகின்றது. 2014ம் ஆண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இதற்கு முன்பு என்றுமே கண்டிராத ஒரு புதிய சித்தரும் பிரசன்னமாகி அங்கே மிகவும் பக்தி சிரத்தையுடன் விரதத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்ததையும் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக் கூடியதாயிருந்தது. ஆலயத்தில் வழக்கமாக தங்கியிருக்கின்ற அடியவர்கள், ஆலயத்துடன் மிக நெருக்கமான தொடர்புள்ளவர்கள் இந்த புதிய சித்தருடைய குள்ளமான தோற்றம், வட்டமான முக அமைப்பு, மற்றும் நடை உடை பாவனை என்பவற்றை அவதானித்து இந்த சாமியார் வடநாட்டுச் சாமியாளராக இருக்க வேண்டும் என தமக்குள் பேசிக்கொண்டனர்.

இந்த புதிய சித்தர் மிளகும் தண்ணீரும் அருந்தி தனது விரதத்தை தூய்மையாக அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்ற அதேவேளை பூசைகள், அபிஷேகங்கள், புராணப் படிப்புக்கள் போன்ற அனைத்திலும் ஒன்றித்து அளவிட முடியாத ஆனந்தத்துடன் உள்ளம் உருகி சந்நிதியானை வழிபாடு செய்து கொண்டடிருந்ததையும் அங்கே காணமுடிந்தது. அந்த சாமியார் இவ்வாறு அளவிடமுடியாத பக்தி நிலையில் நின்று வழிபாடு செய்திருந்தமைக்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று சந்நிதியானுடைய அழைப்புக் கிடைத்து அந்த அழைப்பின் நிமித்தம் இந்த சாமியார் இங்கே வந்து சந்நிதியானை வழிபாடு செய்து கொண்டிருந்தமை. இரண்டு அவர் சில மாதங்களுக்கு முன்பு கனவில் கண்ட காட்சிகளை இங்கே ஆலயத்திலும் ஆலயச்சூழலில் நேரடியாகக் காணுகின்ற அற்புத நிகழ்வும் அங்கே நடந்தேறிக் கொண்டிருந்தமை. அதே நேரம் ஆலயச்சூழலில் உள்ளவர்கள் இவருக்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகள் ஒத்தாசைகளையும் மனமுவந்து தாமாக செய்து கொண்டிருந்தனர். இவை எல்லாம் சந்நிதியானுடைய திருவருளே என நன்கு உணர்ந்தவராக அங்கே அந்தக் குள்ளமான தோற்றத்தினுடைய புதிய சித்தர் தனது கந்தசஷ்டி விரத வழிபாடுகளை மேற்கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது இந்த புதிய சாமியார் தன்னுடன் மிகநெருக்கமாக அங்கே பழகிக்கொண்டுடிருக்கிறவர்களுக்கு தான் யார் என்பதை மனம் திறந்து வெளிப்படுத்திக் கொண்டார்கள். தான் இந்தியாவிலிருந்தோ வடஇந்தியாவிருந்தோ இங்கே வரவில்லை. வட அமெரிக்க நாடான கனடாவிலிருந்து சந்நிதியானது அழைப்பு கிடைத்து இங்கே வந்துள்ளது பற்றி அவர்களுக்கு எடுத்துக்கூறினார். தானும் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவன் தான் என்பதையும் தனது சொந்த இடம் இணுவில் என்பதையும் நாட்டுப் பிரச்சினை காரணமாக வெளிநாடு சென்று தற்பொழுது கனடாவில் வாழ்ந்துகொண்டிப்பதையும் எடுத்துக்கூறினார்கள்.

ஆம் இவருடைய சொந்த இடம் இணுவில். மற்றவர்கள் பார்வைக்கு ஒரு சராசரி மனிதனாக கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் ஆன்மீகத்தில் மிக ஆழமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்ற ஒருவர். அத்துடன் இளைஞனாக இருக்கின்ற காலத்திலிருந்து தன்னை சந்நிதியானது அடியவனாக, அடிமையாக ஆக்கிக்கொண்டு நாளும் பொழுதும் சந்நிதியானது நினைவுடனேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்.

கட்டிளமைப் பருவத்தில் செந்தில் என்ற இந்த இளைஞன் மிகவும் துடியாட்டமாகவும் நண்பர்களுடன் சேர்ந்து மிகவும் மகிழ்ச்சியாக பொழுதைக் கழிக்கின்ற ஒருவராகவும் செயற்பட்டு வந்துள்ளார். இதனால் தனது மகனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை திசைமாறி போய்விடக்கூடாதென்ற கவலை இவரது தாயாருக்கு ஏற்பட்டுள்ளது. இவருடைய தாயார் தனது மகனுடைய எதிர்கால பலன் பற்றி அறிந்துகொள்வதற்காக தனது மகனையும் அழைத்துக்கொண்டு அளவெட்டி அருளாளர் விநாசித்தம்பி ஐயாவிடம் மூன்று தடவைகள் சென்றுள்ளார். ஆனாலும் மூன்று தடவைகளும் இவர்களுக்கு அங்கே ஏமாற்றமே கிடைத்துள்ளது. விநாசித்தம்பி ஐயா அங்கே வந்திருப்பவர்களில் தானாக விரும்பி அழைக்கின்றவர்களுக்கு மட்டுமே பலன்சொல்லும் வழக்கமே அங்கே பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அவ்வாறான அழைப்பு விநாசித்தம்பி ஐயாவிடமிருந்து இவர்களுக்கு கிடைக்காமையால் மூன்று தடவைகளும் அங்கே காத்திருந்து ஏமாற்றமடையும் நிலை இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மூன்றாவது தடவை செந்தில் விரக்தியும் வெறுப்பும் ஏற்பட்ட நிலையில் தனது தாயாரையும் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தனது வீட்டிற்கு திரும்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு வீட்டிற்கு திரும்பிச் சென்று கொண்டிருக்கும் பொழுது இளைஞரான செந்திலின் சிந்தனையில் திடீரென மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆம் வீட்டிற்கு செல்ல வேண்டி மோட்டார் சைக்கிள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை சென்றடைந்துள்ளது. தாயாருடன் ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தை சென்றடைந்த செந்தில் அங்கே சந்நிதியானுக்கு தன்னை அடிமையாகவும் ஆக்கிக் கொண்டார். அது மட்டுமல்ல சந்நிதியானுக்கு பல நேர்த்திகளை மேற்கொள்வதாக மனதில் உறுதியும் எடுத்துக்கொண்டார். 1987ம் ஆண்டு செந்திலுக்கு 22 வயதாக இருக்கும் பொழுது இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. செந்தில் சந்நிதியானிடம் வந்து மனதில் உறுதி எடுத்தது போலவே வருடா வருடம் சந்நிதியானுக்கு ஆட்டக்காவடி எடுத்தல், விரதங்கள் அனுஷ்டித்தல் என சந்நிதியானின் மெய்யடியவராகவே வாழ்ந்துவரலானார்.

இதன் பின்பு ஏற்பட்ட நாட்டுக் குழப்பங்கள் காரணமாக ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளுக்கு அகதியாகச் சென்று புலம்பெயர்ந்த அகதித் தமிழனுக்குரிய அத்தனை இயல்புகளுடனும் இன்ப துன்பங்களுடனும் செந்தில் வாழ நேர்ந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இறுதியாக கனடாவுக்கு வந்து சேர்ந்துள்ளார். செந்தில் கனடாவிற்கு வந்து சேர்ந்தாலும் பல வருடங்களுக்கு பின்புதான் கனடாவில் ஸ்காபுரோ என்ற இடத்தில் இருக்கும் கனடா ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தை காணநேர்ந்துள்ளது. ஆம் ஆலயம் அமைந்திருக்கின்ற அந்த பகுதிக்கு தன்னை போகச்செய்து ஆலயத்தை காண்கின்ற பாக்கியத்தை தனக்கு ஏற்படுத்தியது சந்நிதியானது பெருங் கருணையையே என செந்தில் ஆனந்தப் பரவசமடைகின்றார். ஆம் தாயகத்தில் சந்நிதி முருகன் தன்னை தனது ஆலயத்திற்கு அழைத்தது போல 17 வருடங்களுக்கு பின்பு மீண்டும் கனடாவில் செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அழைக்கின்ற அற்புதத் நிகழ்வு நடந்தேறியுள்ளது. அதுமட்டுமல்ல கனடா ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செந்தில் சாமியாரை அழைத்த இந்த நிகழ்ச்சி மீண்டும் அவரது ஆன்மீகப் பாதையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துகின்ற சம்பவமாகவும் அமைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில் இப்பொழுது இளைஞன் அல்ல. சாமியார் என்ற நிலைக்கு பக்குவப்பட்ட ஒருவர். அதேசமயம் குடும்பத்தலைவன் என்ற பொறுப்பான நிலையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். மேலும் ஆலய தரிசனம், சந்நிதியானுக்கு தூக்குக்காவடி எடுத்து வருடாந்த நேர்த்திச் செயற்பாடுகளை நிறைவேற்றுதல், ஆன்மீகத்தேடல், ஆன்மீகரீதியாக தன்னை பக்குவப்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் மிகவும் அமைதியாகவும், அடக்கமாகவும் ஈடுபட்டு வருவதையும் காணமுடிகிறது.

ஒரு சராசரிப் பார்வையில் செந்தில் சாமியாரின் செயற்பாடுகள் இவ்வாறு அமைந்திருந்தாலும் உண்மையில் அவரின் ஆன்மீகப் பயணம் ஆழமானது, உறுதியானது, மேலைத்தேச வாழ்க்கை முறைக்குள் ஒரு சராசரி மனிதன் போல வாழ்ந்துவந்தாலும் தன்னை ஆன்மீக ரீதியாக மேம்படுத்துகின்ற செயற்பாட்டில் தினமும் ஈடுபடுகின்ற அருளாளராக காணப்படுகின்றார். கனடா ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் செந்தில் சாமியார் ஏற்கனவே அடியேனுக்கு பழக்கப்பட்டவர். ஒரு சில வருடங்களுக்கு முன்பு அவருடன் தனியாகவும் ஆறுதலாகவும் சிறிது ஆழமாகவும் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுதுதான் தாயகத்தில் உள்ள அருளாளர்களைப் போல செந்தில் சாமியாரும் அருளாளருக்குரிய பாதையில் தன்னை ஆற்றுப்படுத்திக்கொள்வதை நன்கு உணர்ந்துகொள்ள முடிந்தது.

மேலும் ஒரு அருளாளராக வாழ்வதற்குரிய அகப்புற சூழ்நிலைகள் கனடா போன்ற மேலைத்தேய நாடுகளில் பொருத்தமற்றதாகவே இருக்கிறது. இந்த நிலையில் இவ்வாறான அருள் வாழ்க்கையை இங்கே வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமன்றி மேலும் ஆழமாக இதற்குள் ஈடுபடுவது எவ்வாறு சாத்தியமாகும் என்பது தொடர்பாக அவரிடம் அறியமுற்பட்டேன். அப்பொழுது அவர் சந்நிதியானுடன் உள்ள தொடர்பும் தனது ஆன்மீகப் பயணமும் இப்பிறப்பில் ஆரம்பித்ததாக தான் உணரவில்லை. இது இதற்கு முந்திய பிறப்புக்களின் தொடர்ச்சியாகவே தான் உணர்வதாக அடியேனிடம் பக்குவமாக எடுத்துக் கூறினார்கள். இந்தப் பிறவியில் வந்த இந்த உடம்புதான் புதிது ஆன்மா இதற்கு முந்திய பிறப்புகளிலிருந்து தொடர்கிறது. எனவே இப்பிறவியில் எங்கிருந்தாலும் அதன் தொடர்ச்சியை தொடரவேண்டியது தனது கடமைஎனவும் குறிப்பிட்டார்கள்.

சந்நிதியான் என்ற கலியுகக் கடவுள் தொடர்பாக உங்கள் உணர்வு எவ்வாறு உள்ளதென்று மிகவும் பக்குவமாக அவரிடம் வினாவினேன். அப்பொழுது அவர் ''இது வார்த்தைகளால் கூறி விளங்க வைக்கக்கூடிய விடயம் அல்ல. ஆனால் சந்நிதியான் அடியவர்களுக்கும், அருளாளர்களுக்கும் கிடைத்த ஒரு ஆன்மீகப் பொக்கிஷம் என்பதை தனது உள்ளுணர்வாலும் அனுபவத்தாலும் உணர்ந்துள்ளதை" மட்டும் அடியேனுடன் அடக்கத்துடன் பகிர்ந்துகொண்டார்கள். மேலும் சந்நிதியான் எங்கோ இருக்கின்ற கடவுள் அவனை நாம் மனத்தால் வழிபடுதல் என்பது தவறானது. உண்மையான மெய்யடியார்களுடன் தாய் போல உற்றதுணையாக எப்பொழுதும் உடனிருந்து செயற்படுத்துகின்ற கருணைக் கடலான கடவுள் தான் சந்நிதியான் எனவும் குறிப்பிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொல்லிமலை சித்தர்

மலைநாட்டில் குயின்ஸ்மேரி தோட்டப் பகுதியில் நவநாத சித்தருடைய சமாதி காணப்படுகிறது. நவநாத சித்தர் வாழ்ந்த காலத்தில் ஞானஒளியைப் பரப்பியது போல அவருடைய சமாதி உள்ள குயின்ஸ்மேரி தோட்டப் பகுதியும் தற்பொழுது ஆன்மிக சாந்தியை வழங்கும் புனிதமான இடமாக பிரபல்யம் பெற்றுவருகிறது. நவநாதச் சித்தர் இந்தியாவில் கொல்லிமலைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு வந்த ஒரு சித்தர். இங்கே நாம் வெளிப்படுத்துகின்ற ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்துடன் தொடர்புடைய கொல்லிமலைச் சித்தருடைய பூர்வீகம் வடமராட்சிப் பகுதியாகும். இவர் இந்தியாவில் கொல்லிமலைக்கு சென்று அங்கே சித்தராக வாழ்ந்துள்ளார். பின் 1950 ஆண்டு தசாப்தத்தில் இலங்கைக்கு திரும்பி பல ஆலயங்களுக்கும் தல யாத்திரை மேற்கொண்டுள்ளார். கொல்லிமலைச் சித்தர் வன்னிப் பகுதியில் கூடுதலான காலத்தை செலவுசெய்து அப்பகுதி ஆலய செயற்பாடுகளில் ஆன்மிக ஈடேற்றத்திலும் சித்த வைத்திய செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார். நிறைவாக முருகண்டி பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு தொடர்ச்சியாக மூன்று மாதம் அங்கப்பிரதட்சனை மூலம் தல யாத்திரை மேற்கொண்டு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தை வந்தடைந்துள்ளார்.

அக்காலகட்டத்தில் ஓமந்தைப் பகுதியில் கொந்தக்காரக்குளம் பகுதியில் அமைந்துள்ள வண்ணாங்குளம் கண்ணகி அம்மன் ஆலயம் என்பதும் பிரசித்தமான ஆலயமாக இருந்துள்ளது. குடிமனைகள் குறைவாக இருந்த இந்த வண்ணாங்குளம் கண்ணகி அம்மன் ஆலயத்தில் வெள்ளி, திங்கள் ஆகிய நாட்களில் மட்டும் பூசைகள் நடைபெற்றன. இதைவிட வருடாந்த பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. கொல்லிமலைச் சித்தர் 1959ஆம் ஆண்டு இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வில் பங்குபற்றியிருந்தார். அதன்பின் அந்த ஆலயத்திலேயே தங்கியிருந்து தினமும் மூன்று நேரப் பூசைகள் நடாத்தியுள்ளார். ஊர் மக்கள் மாலை நேரங்களில் கூட்டுப் பிரார்த்தனை செய்யும் பழக்கமும் ஆரம்பமாகியுள்ளது.

கொல்லிமலைச் சித்தர் தினமும் தியானம் முடித்து மதியம் சூரியனை விளித்தபடி பார்த்து ஒரு மணித்தியாலமாய் சூரிய நமஸ்காரமும் செய்துள்ளார். பின்பு கலசத்தில் நீருடன் காட்டிற்கு சென்று அங்கே உள்ள மூலிகைகளை கொண்டுவந்து அவற்றையே உணவாக உட்கொண்டுவந்துள்ளார். பாலும் சிறிதளவு அருந்தியுள்ளார்.

மூலிகைகள் மூலம் சித்த வைத்தியம் செய்து மாறாத நோய்களை மாற்றியுள்ளார். உளநோய்க்கு உட்பட்டவர்களுக்கு அம்மனுடைய அருளால் அந்த நோய்களையும் மாற்றியுள்ளார். அம்மன் மூலஸ்தானத்திலிருந்து நல்ல பெண்கள் குரலில் அசரீதியும் கேட்டுள்ளது. சித்தர் மூலிகைகளை அரைத்தோ அல்லது நீர்விட்டுக் காய்ச்சியோ அதன் மூலம் சித்த வைத்தியம் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவசமாக மாறாத வருத்தங்களையும் சித்த வைத்திய முறை மூலம் கொல்லி மலைச் சித்தர் மாற்றிவந்ததால் உள்ளூர் வைத்தியர்கள் பொறாமை கொண்டு இவரை கொலைசெய்யும் முயற்சியிலும் இறங்கியுள்ளனர். ஆனாலும் கொலை செய்ய வாகனத்தில் வந்தவர்கள் கொந்தக்காரன் குளமாவடி வளைவில் விபத்துக்குள்ளாகி சிலபேர் இறந்தும்உள்ளனர்.

கனகராயன் குளப்பகுதியில் உள்ள புற்குளம் கண்ணகி அம்மன் ஆலயம் கொல்லிமலை சித்தருடைய முயற்சியால் உருவாக்கப்பட்ட ஆலயமாகும். ஆலயத் திருப்பணியை கொல்லிமலை சித்தரே பொறுப்பெடுத்து செயற்படுத்தியுள்ளார்கள். ஆலயம் முழுமையாக்கப்பட்டு கும்பாபிஷேக செயற்பாடுகளும் நிறைவாக நடைபெற்றுள்ளன. அதன்பின் தனது கடமைகள் முடிவடைந்ததாகக் கூறி தான் அங்கிருந்து செல்லப் போவதாக கூறியுள்ளார்.

அவ்வாறு கூறிய கொல்லிமலைச் சித்தர் முருகண்டி பிள்ளையார் ஆலயத்திலிருந்து அங்கப் பிரதட்சனை மூலம் சித்தர்கள் உறைகின்ற ஶ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு தல யாத்திரை மேற்கொண்டுள்ளார். இவ்வாறு அங்கப் பிரதட்சனை மூலம் வருதவற்கு ஏறத்தாழ மூன்று மாதங்கள் எடுத்துள்ளது. ஶ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு அங்கப்பிரதட்சணை மூலம் தல யாத்திரையை நிறைவு செய்தவர் இறுதியில் ஆலயத்தில் பிரசங்கமும் நிகழ்த்தியுள்ளார். அதன் பின் சிறிது காலம் சந்நிதியில் தங்கியிருந்து பின் கதிர்காமத்திற்கு தல யாத்திரை மேற்கொண்டு கதிர்காமம் சென்றுள்ளார். அதன்பின் ஒரு சிலர் மட்டுமே கதிர்காமத்தில் அவரை சந்தித்துள்ளனர். இறுதியில் அவர் கதிர்காமத்திலேயே தேகம் விட்டதாக அறியப்படுகிறது.

கொந்தக்காறன் குளத்தைச் சேர்ந்த வைத்தியர் வேலுப்பிள்ளை விநாசித்தம்பி என்பவர் கொல்லிமலைச் சித்தருடன் நெருங்கிய தொடர்புள்ளவராக இருந்துள்ளார். அது மட்டுமன்றி முருகண்டிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து சந்நிதி ஆலயத்திற்கு அங்கப்பிரதட்சனையை சித்தர் மேற்கொண்ட பொழுது ஆரம்பம் முதல் நிறைவு வரை அவருக்கு உதவிகள் ஒத்தாசை புரிந்த ஒருவராகவும் காணப்படுகின்றார். அப்பொழுது விநாசித்தம்பியின் மகன் இரகுநாதனுக்கு 14 வயதாக இருந்துள்ளது. அவரும் சித்தருக்கு தொண்டு செய்து அவரிடம் வைத்தியமும் கற்றுள்ளார். தற்பொழுது வி. இரகுநாதன் வைத்தியராக இருக்கின்றார். சித்தரால் உருவாக்கப்பட்ட புற்குளம் கண்ணகி அம்மன் ஆலயத்தில் கண்ணகி அம்மன் படிப்பையும் வருடாவருடம் படிப்பதிலும் பங்குபற்றிவருகின்றார். இந்த படிப்பு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் படிப்பு நிறைவுபெற்ற பின் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் கண்ணகி அம்மன் படிப்பாக இடம்பெற்றுவருகிறது. கனடாவில் வாழ்ந்து வரும் வைத்தியர் இரகுநாதன் மூலம் கொல்லிமலைச் சித்தர் தொடர்பான தகவல்களை அடியேன் பெறுகின்ற அரிய வாய்ப்பு கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரமுத்து சாமி

சின்னத்தம்பி சாமிகளை குருவாகக் கொண்டு சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்த அருளாளர் தான் வைரமுத்து சாமிகள். மயில்வாகனம் சாமிகள், தம்புசாமிகள் ஆகியோருடன் இணைந்து வைரமுத்து சாமிகளும் மணியம் மடத்தில் தங்கியிருந்து தனது ஆரம்பகால ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். காலப்போக்கில் மயில்வாகனம் சுவாமிகள் தம்புசாமிகள் போன்றே தானும் அதே சூழலில் தனியாக ஒரு அன்னதான மடத்தை ஸ்தாபித்து அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்டு அடியார்களின் பசிப்பணி போக்கியுள்ளார்.

வைரமுத்து சாமிகளால் இயக்கப்பட்ட வைரமுத்து சாமிமடமும் 1986ம் ஆண்டு கால கட்டம் வரை முக்கியமான மடங்களில் ஒன்றாகவே காணப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. ஆலயசூழலில் நெருக்கடிகள் ஏற்பட்ட பொழுதிலும் வைரமுத்து சாமிகள் தனது தவவாழ்க்கையை தொடர்ந்து சந்நிதிச் சூழலில் இருந்தே மேற்கொண்டுவந்துள்ளார். அன்னதானச் செயற்பாடுகள் 1986ம் ஆண்டு காலகட்டத்தில் முற்றாக தடைப்பட்டுள்ளது. ஆனால் தான் ஸ்தாபித்த அதே அன்னதான மடத்தில் தனியாக தங்கியிருந்து தனது அருள் வாழ்க்கையை வாழ்ந்துள்ளார். அவர் தேகம் விட்டதும் அதே மடத்தில்தான். தற்பொழுது வைரமுத்து சாமிமடம் தரைமட்டமாக உள்ளது.

## தம்புசாமி

தென்மராட்சியில் கச்சாய் பகுதியிலிருந்து சந்நிதியானின் அழைப்பு கிடைத்து சந்நிதிக்கு வந்தவர் நடராசா சாமியார், நடராசா சாமியார் தனது நோய் குணமடைந்த நிலையில் மணியம் மடத்தை பொறுப்பெடுத்து நீண்டகாலம் அதனை சிறப்பாகச் செயற்படுத்தியுள்ளார். அவ்வாறு செயற்பட்ட நடராசா சாமியின் மடத்தில் ஆரம்பத்தில் தங்கியிருந்து சக அருளாளர்களுடன் இணைந்து ஆன்மீக தேடலில் ஈடுபட்டவர்தான் தம்புச்சாமிகள். காலப்போக்கில் நடராசா சாமியாரின் ஒத்துழைப்புடன் தானே ஒரு அன்னதான மடத்தை மணியம் மடத்திற்கு தெற்கு பக்கமாக ஸ்தாபித்து அன்னதானச் செயற்பாட்டையும் மேற்கொண்டுள்ளார். அந்தமடம் தம்புசாமி மடம் என அழைக்கப்பட்டுள்ளது.

சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்த தம்புச் சாமிகள் இயற்கையை நேசித்து இயற்கையுடன் ஒன்றிச் செல்கின்ற ஒரு சாமியாராக வாழ்ந்துள்ளார். இதனால் இவருடைய மடத்திற்கு செல்பவர்கள் பூ மரங்கள், வாழை மரங்கள் என மடம் முழுவதும் பச்சைப் பசேலென்று காட்சியை கண்களால் காண்பதுடன் உடலால் குளிர்மையான சூழலையும் உணரக்கூடியளவுக்கு சுகம் தரும் இடமாக அது விளங்கியுள்ளது. இதனால் ஆரம்பத்தில் தம்புசுவாமி மடம் காலப்போக்கில் வாழைகள் நிறைந்திருந்ததால் வாழை மடம் என சிறப்புப்பெயரால் அழைக்கப் பட்டுள்ளது. மடத்தில் காணப்பட்ட கிணறு துலாக்கிணறாகக் காணப்பட்டதுடன் அந்த துலாவும் தடிபோட்ட துலாவாகக் காணப்பட்டுள்ளது. துலாவுக்கும் தடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டு தண்ணி அள்ளுவது எமது பாரம்பரிய முறை என்பதுடன் முடிந்தளவுக்கு இயற்கை சூழலைப் பயன்படுத்தி எவ்வாறு வாழலாம் என்பதனை எமது முன்னோர் எமக்கு காட்டி சென்ற வழிமுறையாகும். அதனை இயற்கையை நேசிக்கும் இயல்புள்ள தம்புசாமிகளும் நேசித்ததில் வியப்பேதும் இல்லை அல்லவா?

இயற்கையுடன் இணைந்து, இறைவனை வழிபட்டு அறவழி நின்று, பசித்தோருக்கு உணவளித்து இந்த பாரினில் வாழ்வது கூட ஆன்மீக ஈடேற்றமே. இதனை தனது வாழ்க்கை முறையால் வாழ்ந்து காட்டிவிட்டுச் சென்றவர்தான் தம்புசாமி. ஆம் மானிட வாழ்வின் மான்பை வெளிப்படுத்துவதும் ஒரு வகையான ஆன்மீக ஈடேற்றமே.

## நடராசா சாமியார் (மணியம் மடம்)

வேலுப்பிள்ளை நடராசா என்ற நாமத்துடன் தொன்மராட்சியில் புங்கடி கச்சாய் என்ற முகவரியில் வாழ்ந்து வந்தவர்தான் நடராசா சாமியார். இவர் திருமணம் செய்து குடும்பத்தலைவனாக இயல்பாக வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில் வயிற்றுப்போக்கு தொடர்பான ஒரு நோய் ஏற்பட்டுள்ளது. அந்த நோயை குணமாக்குவதற்கு இயல்பாக மேற்கொண்ட வைத்திய முறைகள் எதுவும் பயனளிக்கவில்லை. ஆனாலும் எப்படியாவது நோயை மாற்றிவிட வேண்டுமென்று தொடர்ந்து வைத்தியம் செய்தபொழுதிலும் நோய் குணமடையவில்லை. அதுமட்டுமல்ல காணி பூமிகளை விற்று வைத்தியம் செய்யும் அளவுக்கு மிகுந்த செலவும் ஏற்பட்டுள்ளது. நீண்ட காலம் நோயினால் வேதனை அடைகின்ற நிலை ஒருபுறம், செலவு மறுபுறம், அதே நேரம் நோயும் குணமடைவதற்குரிய அறிகுறி எதுவும் தென்படாத கவலை என எல்லாம் சேர்ந்து வே. நடராசாவை மிகுந்த வேதனைக்குள்ளாக்கியுள்ளது. இதனால் அவர்மட்டுமன்றி அவரது குடும்பமும் மிகுந்த துயரத்தில் மூழ்கியிருந்தது.

இவ்வாறு திரு. நடராசா அவர்கள் தனது வாழ்க்கை பாதையில் என்றுமில்லாத கவலைதரும் சூழ்நிலை ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். அத்துடன் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாத குழப்பமும் அவருக்கு ஏற்பட்டது. இதனால் அவருடைய கவலை மேலும் அதிகரித்து நிம்மதி அற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். ஆனாலும் அவர் எதிர்பார்க்காத நிகழ்வு ஒன்று நடைபெற்றது. ஆம் சந்நிதி முருகன் கனவிலே வெளிப்பட்டு சந்நிதிக்கு வருமாறும் அங்கே வந்து ஆறுதல் அடையுமாறும் அழைப்பு விடுத்துள்ளான். சந்நிதி முருகனுடைய அழைப்பு கிடைத்த நிலையில் மனதில் நம்பிக்கையுடன் நடராசா குடும்பம் சந்நிதிக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

சந்நிதிக்கு வந்து சேர்ந்த நடராசா குடும்பத்தினர் ஆரம்பத்தில் வடக்கு திசையில் காணப்பட்ட புளியமரத்தின் கீழ் குடும்பமாக தங்கியிருந்தனர். ஆனாலும் திரு. வே. நடராசாவின் சுகவீனம் குணமடையவில்லை. இந்த நிலையில் புளியமரத்தின் கீழ் தொடர்ந்து தனது பிள்ளைகளுடன் தங்கி இருப்பதில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களை உணர்ந்து அவரது மனைவி திரு. நடராசாவை கோயிலடியில் வந்து தங்குமாறு அழைத்திருந்தார். ஆனாலும் திரு. நடராசா அதற்கு சம்மதம் தெரிவிக்காத நிலையில் அவரது மனைவியும் பிள்ளைகளும் ஆலயத்திற்கு வந்து பிள்ளையார் வாசலில் தங்கியிருந்தனர். திரு. நடராசா தொடர்ந்து ஆலயத்தின் வடக்குத்திசையில் புளிய மரத்தின் கீழே தங்கியிருந்தார்கள். அவ்வாறு தங்கியிருக்கும் காலத்தில்தான் அவர் தங்கியிருந்த இடத்திற்கு அண்மையில் அருளாளராக வாழ்ந்து கொண்டிருந்த சின்னத்தம்பி சாமியாரை தனது குருவாக ஏற்று சந்நிதியில் தானும் அருள் வாழ்க்கை வாழ ஆரம்பித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் தான் சந்நிதியான் மீண்டும் கனவிலே தோன்றி சந்நிதியில் அவருக்காக காத்திருக்கும் பணியை அவருக்கு வெளிப்படுத்தினான். ஆம் சந்நிதியான் ஆலயத்திற்கு தெற்கு திசையில் காணப்படும் ஒற்றையடிப் பாதையால் சென்று அங்கே பயன்படுத்தப்படாதிருக்கும் மடத்தை இனங்கண்டு அங்கே அன்னதானச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு நடராசாவுக்கு அருள் கட்டளை வழங்கியுள்ளான். கனவு கண்ட கையுடன் துடிதுடித்து நித்திரையில் நின்றும் எழும்பிய நடராசா அவர்கள் தனது நோய் முற்றாக குணமடைந்திருப்பதை உணர்ந்து கொண்டார்கள். அவ்வாறு உணர்ந்து கொண்டவர் தனது நோய் காணப்பட்ட வயிற்றுப் பகுதியை உற்றுநோக்கினார்கள். என்ன அதிசயம் அப்பொழுது அவரது வயிற்றிலே மூன்று திருநீற்றுக் குறி காணப்பட்டுள்ளது. இதனை அவதானித்த நடராசா அவர்கள் சந்நிதியானது கருணையை நினைத்து ஆனந்த கண்ணீர் சொரிந்துள்ளார்கள்.

அதன்பின்பு சந்நிதியான் வெளிப்படுத்தியவாறு ஆலயத்தின் தெற்கு திசையில் நடந்து சென்ற பொழுது அங்கே காணப்பட்ட ஒற்றை வழிப்பாதை சிறிய பற்றைகள் மண்டிக்கிடந்த ஒரு இடத்தை சென்றடைந்துள்ளது. அங்கே இரண்டு சிறிய அறைகளுடன் கூடிய இரண்டு சிறிய மண்டபங்களும் காணப்பட்டுள்ளன. ஆம் அந்த மடம்தான் மணியமடம் அது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் சிவசிதம்பரத்தின் மூதாதையர்களால் சந்நிதியில் கட்டிய ஆரம்பகால மடங்களில் ஒன்று. திரு. சிவசிதம்பரம், திருமதி. சிவசிதம்பரம் ஆகிய இருவரது பெற்றோரும் மணியகாரர்களாக இருந்துள்ளனர். அந்த இரண்டு சம்பந்திகளும் சேர்ந்து சந்நிதியில் அந்த மடத்தை அமைத்ததால் அது மணியகாரர் மடம் என அழைக்கப்பட்டுள்ளது.

நடராசா அவர்கள் இரண்டு முறை மணியகாரரை சந்திப்பதற்கு கரவெட்டிக்கு சென்ற பொழுதும் மணியகாரரை சந்திக்க முடியவில்லை. மூன்றாம் முறை மணியகாரரை சந்திக்க செல்வதற்காக ஆயத்தம் செய்த பொழுது மணியகாரரே மடத்திற்கு வந்துள்ளனர். நடராசா சாமியார் மடத்தை பராமரிப்பதற்கும் அன்னதானம் போன்றவற்றை செய்வதற்கும் ஆரம்பத்தில் மணியகாரர் சில நிபந்தனைகளை விதித்தே மடத்தை கையளித்துள்ளதாக அறிய முடிகிறது. ஆனால் காலப்போக்கில் மணியகாரரே பாத்திரங்கள் முதலியவற்றை வழங்கி அன்னதானச் செயற்பாட்டிற்கு உதவிகள் வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசா சாமியார் மணியகாரர் மடத்தை பொறுப்பெடுத்த பொழுது அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த பத்தர் குடும்பத்தினரே முதன்முதலில் வந்து அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளனர். அதன்பின்பு எல்லா வகையான சிறப்புக்களுடனும் மணியம் மடம் சந்நிதியில் அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்டு வந்துள்ளது. நடராசா சாமியாரின் மூன்றாவது சந்ததியினர் இப்பொழுதும் மணியம் மடத்தை சிறப்பாக நடாத்திவருகின்றனர்.

நடராசா சாமியார் சந்நிதி முருகனது அருள் கட்டளையை ஏற்று அன்னதானச் செயற்பாட்டை மேற்கொண்டாலும் சந்நிதியானது கருணையையும் அவனது திருவருளையும் நாளும் பொழுதும் நினைத்து அவனது திருநாமங்களை உச்சரித்தவாறே தனது வாழ்நாளை போக்கியுள்ளார். தான் சந்நிதி முருகனது கருணையினாலேயே சந்நிதிக்கு அழைத்துவரப்பட்ட வரலாற்றையும் சந்நிதியானே தனது தீராத வருத்தத்தையும் போக்கி அருளிய விந்தையையும் தனது பேரக் குழந்தைகளுக்கும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இதேபோன்று தனது குருவாக சின்னத்தம்பி சாமியாரை ஏற்று அவருக்கு பணிவிடைகள் செய்து அவரை போற்றி வாழ்ந்துள்ளார். அவர் பாவித்த சிரட்டையை அவரது ஞாபகப் பொருளாக கேட்டுப் பெற்றுள்ளார். சின்னத்தம்பி சாமியார் சமாதி அடைந்த பின்பும் அந்த புனித சிரட்டையை சாமி அறையில் பேணி வந்துள்ளார். 1986ம் ஆண்டு மடங்கள் இயல்பாக செயற்படும் காலம் வரை அந்த சிரட்டை சாமியறையில் புனிதமாகப் பேணப்பட்டு வந்துள்ளது.

நடராசா சாமியார் தான் அருளாளராக வாழ்ந்தது மட்டுமன்றி சந்நிதியில் வாழ்ந்து அருளாளர்கள் பலரை ஆதரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் ஒத்தாசைகளை தாராளமாக வழங்கியுள்ளதையும் அறிய முடிகிறது. ஆனந்த ஆச்சிரமத்தை ஸ்தாபித்த மயில்வாகனம் சுவாமிகள், வாழை மடத்தை ஸ்தாபித்த தம்புச்சாமிகள் மற்றும் வைரமுத்து சாமிகள் ஆகிய மூவரும் இவர்களில் முக்கியமானவர்கள். சந்நிதியானின் கருணையினால் நடராசா சாமியாரின் நோய் குணமடைந்த பின் 95 வயது வரை மிக நீண்டகாலம் அவர் சுகதேகியாகவே வாழ்ந்துள்ளார். 1990ம் ஆண்டு அவரது 95 ஆவது வயதில் கொடிகாமத்தில் அவர் தேகம் விட்டுள்ளார். அவரது உடல் அவரது விருப்பப்படி தகனம் செய்யப்படாது சமாதி கட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தம்பையா சாமியார்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், கதிர்காமம் உட்பட அனைத்து ஆலயங் களுக்கும் தல யாத்திரை மேற்கொண்டு ஆன்மீக ஈடேற்றம் அடைவதுடன் அடியவர்களையும் ஆன்மீகப் பாதைக்கு ஆற்றுப்படுத்துகின்ற சாமியாராக வாழ்ந்தவர்தான் தம்பையா சாமியார். இவருடைய சொந்த இடம் வட்டுக்கோட்டை பகுதி என அவருடன் பழகிய அடியவர்கள் மூலம் அறியமுடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பையா சாமியாரின் பக்குவநிலையை உணர்ந்துகொண்ட அடியவர்கள் அவரை நாடிச்சென்று அவருடைய ஆசிகளைப் பெற்று தம்மை மேம்படுத்திக் கொண்டுள்ளனர். இதேபோன்று தம்பையா சாமியாரும் அவ்வப்பொழுது தன்னுடன் நெருக்கமாகப் பழகுகின்ற அடியவர்கள் இல்லங்களுக்கு சென்று அவர்களை ஆசீர்வதிப்பதும் உண்டு. தமது ஆன்மீக ஈடேற்றத்திற்கு தம்பையா சாமியாரை குருவாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற அடியார்களையும் காணமுடிகிறது. அண்மையில் இறைபதம் அடைந்த தம்பையா சாமியாருக்கு சேந்தாங்குளத்தில் அவரது அடியவர்கள் சமாதி அமைந்துள்ளனர்.



## புதுக்குடியிருப்பு சாமிகள்



15 வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் அருள் வாழ்க்கை வாழ்ந்தபின் 2016இல் மீண்டும் எமது நாட்டிற்கு திரும்பியுள்ள சாமியார்தான் புதுக்குடியிருப்பு சாமிகள். இவரது பெயர் வேலுப்பிள்ளை புலேந்திரராஜா. புதுக்குடியிருப்பு சாமிகள் கன்னியாகுமரிப் பகுதியில் சமாதி யடைந்த வைகுண்டர் என்ற சித்தரை குருவாகக் கொண்டு அவர் இப்பொழுதும் தனக்கு வழிகாட்டுவதாகக் கூறி தனது வாழ்க்கையை தொடர்ந்து கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. காவி உடை தரித்து தலையில் கிரீடம் போன்ற தலைப்பா அணிந்திருப்பதையே இவர் கூடுதலாக விரும்புகின்றார். இது இறைவனால் அருளப்பெற்ற முறைப்படியான ஒரு கோலம் என்பதால் அதனை தான் பின்பற்றுவதாகக் குறிப்பிடுகின்றார்.

தான் எந்த தெய்வத்தை வழிபட்டாலும் வைகுந்தர் என்ற தனது குருவை அந்தந்த தெய்வங்களினூடாக பார்ப்பதாகவும் தான் செல்லும் இடங்களில் எல்லாம் தனது குருநாதர் அபயமளித்துக் கொண்டிருப்பதாகவும் இப்பொழுது சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த சாமியார் குறிப்பிடுகின்றார். சந்நிதியில் உள்ள மெய்யடியார்கள் ஒன்றுசேர்ந்து 2017 ஆம் ஆண்டு வருட இறுதியில் தல யாத்திரை மேற்கொண்டுள்ளனர். அப்பொழுது புதுக்குடியிருப்பு சாமிகள் அதற்கு தலைமைதாங்கி அவர்களுடன் சேர்ந்து கதிர்காம தலயாத்திரை மேற்கொண்டுள்ளார்கள்.

2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சுனாமி ஏற்படப் போவதாக மக்கள் பயப் பிராந்தியத்துடன் காணப்பட்டுள்ளனர். அப்பொழுது இவர் புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்துள்ளார். அப்பொழுதுதான் சுனாமி ஏற்பட மாட்டாதென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு தெரிவித்ததுடன் கடற்கரையில் ஒருநாள் உபவாசம் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். தனது குருநாதரே இவ்வாறு தன்னை வழிநடாத்துவதாகவும் கூறுகிறார். தற்பொழுது ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்கியிருக்கின்ற சுவாமிகளில் இவரும் ஒருவராக உள்ளார்.

## இணுவில் சாமியார்



சந்நிதியானிடம் இளமையிலிருந்து மிகுந்த ஈடுபாடு உள்ளவராக இருந்து இன்று ஒரு அருளாளராக சந்நிதியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தான் இணுவில் சாமியார். இவருடைய பெயர் தம்பு பாலசுப்பிரமணியம். ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட காலத்தி லிருந்து சிறுவனாகவும் பின்பு இளைஞனாகவும் இருக்கின்ற காலத்திலிருந்து சந்நிதியானை வழிபட வேண்டும் எனற ஈடுபாடு இவருக்குள் வெளிப்பட்டு வந்துள்ளது. ஆரம்பத்தில் பெற்றோருடனும் பின்பு இளைஞனாக வளர்ந்த காலத்தில் துவிச்சக்கர வண்டியில் இணுவிலில் இருந்து தனியாகவும் வந்து சந்நிதியானை வழிபட்ட அனுபவங்களையும் இணுவில் சாமியார் மிகுந்த மகிழ்ச்சியுடனும் உள்ளார்ந்த உணர்வுடனும் அடியேனிடம் பகிர்ந்து கொண்டார்கள். வீட்டில் இருந்து வரும்பொழுது பிட்டு, இடியப்பம் போன்ற ஏதோ ஒரு உணவுப் பொருளை எடுத்து வருவது இங்கே சந்நிதிக்கு வந்தபின்பு ஆலயத்திற்கு தெற்கு திசையில் காணப்பட்ட தேனீர்க்கடையில் துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு ஆற்றில் தீர்த்தமாடுவது தனது வழமையான செயற்பாடு எனக் குறிப்பிட்டார்கள். அதன் பின் வீட்டில் இருந்து எடுத்து வந்த உணவை உட்கொண்ட பின்பு நீண்ட நேரம் சந்நிதியானது அபிஷேகங்கள் பூசைகளில் பங்குபற்றுவதெல்லாம் அக்கால கட்டத்திலேயே தனக்கு நிறைவைத் தருகின்ற விடயங்களாக இருந்த அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார்கள்.

தற்பொழுது இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள ஆலயங்களுக்கு தலயாத்திரை மேற்கொள்வது அந்தந்த ஆலயங்களில் குறிப்பிட்ட காலம் தங்கியிருந்து ஆலயத் தொண்டுகளை மேற்கொள்வது அமைதியாக தன்னைப் பக்குவப்படுத்துவது ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை காணமுடிகிறது. திருக்கேதீஸ்வர ஆலயத்தை தொடர்ந்து தற்பொழுது இங்கே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இவ்வாறான செயற்பாட்டில் இணுவில் சாமியார் ஈடுபட்டிருப்பதை காணமுடிகிறது.

24.03.2018 சனிக்கிழமை வழமைபோல சந்நிதியானுடைய சனி திருமுழுக்குப் பூசையில் பங்குபற்றுவதற்காக அடியேன் ஆலயத்திற்கு சென்ற பொழுது இணுவில் சாமிகளை ஆலயத்தில் ஆறுதலாக சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பாக உரையாடிக் கொண்டிருக்கும் பொழுதே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனிதத்தையும் மகிமையையும் மிகவும் தெளிவாகவும் ஆழமாகவும் இணுவில் சாமிகள் தனது அனுபவத்தால் உணர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. தீபத்தின் ஒளி எவ்வாறு தெளிவாக பிரகாசிக்கின்றதோ அதே போல சந்நிதியானின் அருள் ஒளியும் இந்த ஆலயச் சூழலிலும் தெளிவாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பது நிதர்சனமான உண்மை என்பதையும் எடுத்துக் கூறினார்கள். அதுமட்டுமன்றி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தைப் போல அடியார்களுக்கு எல்லா வகையிலும் நிறைவுதரக் கூடிய வேறு ஒரு ஆலயத்தை காண்பது மிகவும் கடினமானது என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

இணுவில் சாமியார் ஒரு அருளாளருக்குரிய பக்குவநிலையில் உணர்நிலையில் இருந்தாலும் அதனை பெரிதாக வெளிப்படுத்தாது அல்லது இனங்காட்டாது இருப்பதற்காக தொண்டு என்ற போர்வையை போர்த்தியிருப்பதை காணமுடிகிறது. ஆம் ஆலயத்தில் எப்பொழுது பார்த்தாலும் ஏதோ ஒரு தொண்டினை செய்து ஒரு தெண்டர் போலவே நடமாடிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. அவ்வாறு தொண்டினை செய்யும் பொழுது சகஜமாக உரையாடி அந்தந்த தொண்டிற்குரிய நடிபங்கை பொருத்தமாக மேற்கொண்டு வருவதில் அவர் மிகவும் வல்லவராக இருப்பதை ஆலயத்தில் காணமுடிந்தது. அனைவரும் ஆலயத்தொண்டினை செய்யும் பொழுது ஆலய கருமங்கள் இலகுவாக நடந்தேறுவதுடன் ஆலயம் சுத்தமானதாகவும் காட்சி தருகிறது. அதேநேரம் அது எமது ஆன்மீக ஈடேற்றத்திற்கும் உதவுகின்றது. இதனை உணர்ந்து செயற்படுவது கூட ஒரு பாய்க்கியமே என்று ஆலயத் தொண்டின் மகத்துவத்தையும் சுவாமிகள் வெளிப்படுத்தினார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் மந்திரங்கள் ஓதாது அகத்திலிருந்து ஊற்றெடுக்கும் உச்சமான பக்தி உணர்வினூடாக பூசைக்காரியங்களை மேற்கொண்டு வருவது ஒரு மகத்தான செயற்பாடு என இணுவில் சாமிகள் குறிப்பிட்டார்கள். அத்துடன் இங்கே பல்வேறு மூர்த்தங்களில் இறைவன் குடிகொண்டு அடியவர்களுக்கு நிறைவான அருளை வழங்கிக் கொண்டிருக்கின்ற ஆழமான அந்த ஆன்மீக தத்துவ உண்மைகளையும், சிறப்புக்களையும் இணுவில் சாமிகள் அடியேனிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

அடியேனுடன் மட்டுமன்றி தேவை ஏற்படும் பொழுது அடியார்களுடனும் சகஜமாக உரையாடும் இயல்புள்ளவராக இணுவில் சாமிகள் இருப்பதை நாம் அங்கு காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவுச்சாமிகள்



அமைதியாகவும், சாந்தமாகவும் அதேநேரம் தன்னை அதிகம் வெளிப்படுத்தாது ஏறத்தாழ 20 வருடங்கள் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் தவவாழ்க்கை வாழ்ந்து வரும் அருளாளர் தான் புங்குடுதீவுச் சாமிகள். கட்டிளமைக் காலம் வரை ஒரு சராசரி மனிதனாக வாழ்ந்து வந்தது மட்டுமன்றி ஜீவனோபாயத்திற்காக தொழிலும் புரிந்துள்ளார். ஆனாலும் இளமையிலிருந்து இறை சிந்தனை, இறை தொண்டு, தர்மநெறி சார்ந்த வாழ்க்கை என்ற பாதையினூடாகவே இவரது வாழ்க்கைப் பயணம் அமைந்திருப்பதையும் காணமுடிகிறது.

இறை ஈடுபாட்டுடன் வாழ்ந்து வந்த புங்குடுதீவு சாமிகளின் அடிமனதில் ஞானத்தை தேட வேண்டும் என்ற உணர்வு படிப்படியாக மேலோங்கி வந்துள்ளது. அத்துடன் தீவுப் பகுதிகளில் யுத்த நெருக்கடிகளும் ஏற்பட்டு வாழ்வியல் பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பத்தில்தான் புங்குடுதீவு சாமிகள் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஆனால் நெருக்கடிகள் நிறைந்த அக்காலகட்டத்தில் இவர் பயணம் செய்த படகு பயங்கரமான துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளது. அதில் அதிசயிக்க தக்க வகையில் இவர் உயிர் பிழைத்துள்ளார். இவ்வாறு உயிர் பிழைத்து இந்தியா சென்ற புங்குடுதீவு சாமிகளுக்கு திருவண்ணாமலை உட்பட பல தலங்களுக்கு தலயாத்திரை மேற்கொள்வதற்கு இறையருள் கிட்டியுள்ளது. பின்பு இலங்கை திரும்பிய புங்குடுதீவுச் சாமிகள் இலங்கையிலும் கதிர்காமம் உட்பட பல புனித ஸ்தலங்களுக்கு தலயாத்திரை மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் சந்நிதியானுடைய அழைப்பு புங்குடுதீவுச் சாமிகளுக்கு கிடைத்தது. சந்நிதிக்கு வந்து இங்கே தனது ஆன்மீகப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறார். 16.03.1977இல் முருகேசு சுவாமிகள் சந்நிதியில் சமாதி அடைந்தார்கள். அவர் சமாதி அடைந்து ஐந்தாம் நாள் புங்குடுதீவுச் சாமிகளுக்குரிய அழைப்பு கிடைத்துள்ளது.

புங்குடுதீவுச் சாமிகள் தான் சந்நிதியானிடம் வந்து சேர்ந்ததை ஒரு அற்புதமான விடயம் என்பதை அவருடன் உரையாடும் பொழுது அடியேனிடம் மிகவும் பக்குவமாக வெளிப்படுத்தியிருந்தார்கள். புங்குடுதீவுச் சிவன் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் இடம்பெற்றுள்ளது. அதில் வேட்டைத் திருவிழாவில் எம்பெருமான் வீதி உலா சென்ற வேளையில் சுவாமி சரிவதைப் பார்த்து அதனை தனது தோள்களால் திடீரென தாங்க முற்பட்ட வேளை இடுப்பில் நோய்வாய்ப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் நீண்டநாட்கள் சிகிச்சை பெற்றும் சிகிச்சை பயன் அளிக்காத நிலையில் தான் சந்நிதியானுடைய அழைப்பு அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துள்ளது. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், ஆச்சிரமம் தொடர்பான காட்சிகளும் இங்கே இடம்பெறும் நிகழ்வுகளும் அவரின் மனக்கண்முன் இயல்பாகவே வெளிப்பட்டுள்ளது. இங்கே வந்த பின்பு தான் மனக்கண்முன் கண்ட காட்சிகளும் இங்கே நேரடியாகக் காண்கின்ற காட்சிகளும் ஒரே விதமாக இருக்கும் அற்புதத்தையும் உள்ளம் உருகி புங்குடுதீவுச்சாமிகள் அடியேனுடன் பகிர்ந்து கொண்டார்கள். ஆம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஞானிகளும் அருளாளர்களும் இவ்வாறு தான் ஒன்று கூடுகின்றார்கள்.

புங்குடுதீவுச்சாமிகள் இறைவனின் திருவருளை தனக்குள்ளே உணர்ந்து கொண்டு மிகவும் அடக்கத்துடன் வாழ்ந்து வருகின்ற ஒரு அருளாளர். மற்றவர்களுக்கு எதனையும் பொதுவாக வெளிப்படுத்த விரும்பாதவர். ஆச்சிரமத்தில் அன்னதானப் பணிக்கு மிகச்சிறிய சரியைப் பணிகளை செய்து கொண்டு ஆச்சிரமத்திலும் ஆலயச் சூழலிலும் உலாவந்து கொண்டிருப்பவர். அடியேன் அவரை நன்கு விளங்கிக் கொண்டதனால் அவ்வப்பொழுது அவருடன் உரையாடுவதுண்டு. அவ்வாறு உரையாடும் பொழுதுதான் அவரின் சொந்த இடம் புங்குடுதீவு என்றும் பெயர் கதிரேசு பொன்னையா என்பதையும் அவரிடம் அறிந்துகொள்ள முடிந்தது.

பூர்வ ஜென்ம பலனால் புங்குடுதீவுச்சாமிகள் எவ்வாறு சந்நிதியானுடைய அருளாட்சிக்கு உட்பட்டார் என்பதையும் அவரது வாழ்க்கையில் இடம்பெற்ற ஒரு அற்புத நிகழ்வையும் அடியார்களுக்கு இங்கே வழங்குகின்றோம்.

1949 ஆம் ஆண்டு மேற்படி புங்குடுத்தீவுச் சுவாமிகளின் தாயார் ஒரு பயங்கரமான கனவு கண்டுள்ளார். கனவு கண்டு கண்விழித்தவர் **"என் செல்வச்சந்நிதியானே என்னுடைய மகனை இரண்டு...."** என்று கத்தியவர் அதற்குமேல் வார்த்தைகள் வராது வாயடைத்துப்போய் கதைக்கமுடியாத நிலைக்கு ஆளாகியுள்ளார். இவ்வாறு பேசமுடியாது வாயடைத்த நிலையிலேயே மூன்று நாட்கள் சென்றது. மூன்றாம் நாள் வாய்திறந்து கதைக்கும் நிலைக்கு சுகம் பெற்ற சுவாமிகளின் தாயார் தான் கண்ட கனவின் பயங்கரத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

கனவு கண்ட வீட்டிற்கு வடக்கே இருந்த பண்டார முருகன் கோயிலில் இருந்து இரண்டு பண்டாரங்கள் சுவாமிகளின் தாயாரிடம் வந்து உனது மூத்த மகன் எங்கே (மேற்படி சுவாமிகள்) என்று கேட்டு அவரைக் கூப்பிட்டனர். அப்படிக் கூப்பிட்டவரை வாயில் அலகு குத்திய ஒரு பண்டாரம் அவரை வெள்ளைத் துணியின் மேல் படுக்கச் செய்ய மற்றப் பண்டாரம் கூரிய வாளினால் இவரது மகனை ஓங்கி வெட்டியுள்ளார். அவ்வாறு வெட்டுகின்ற காட்சியைப் பார்த்த தாயார் தனது மகன் இரத்த வெள்ளத்தில் இரண்டுத் துண்டுகளாகக் கிடப்பதைக் கண்ட அந்த பயங்கரத்தினாலேயே இரண்டு துண்டுகளாகக் கிடக்கின்ற தனது மகனைக் காப்பாற்ற செல்வச்சந்நிதியானை ஆபத்பாந்தவனாக நினைத்து கத்தி அழைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகச் சந்நிதியானிடம் எவ்வித ஆழமான தொடர்பும் இல்லாத நிலையில் தான் செல்வச்சந்நிதியானிடம் அபயம் கேட்டு குரல் எழுப்பியதையிட்டு சுவாமிகளின் தாயார் தனக்குள் ஆச்சரிப்பட்டார். ஆனால் அதேநேரம் சந்நிதியானுடைய அருளினால்தான் தனது பிள்ளை எதிர்நோக்கும் துன்பங்களில் இருந்து விடுபடமுடியும் என்பதுடன் தனது மகன் சந்நிதிக்கே உரியவர் என்பதையும் காலப்போக்கில் அனுபவங்கள் மூலம் உணர்ந்து கொண்டார்.

சந்நிதியானின் திருவருள் நிரம்பப்பெற்ற சுவாமிகள் மற்றவர்களது பார்வைக்கு ஒரு சராசரி மனிதர் போலக்காட்சி தந்தாலும் இறைவனின் திருவிளையாடல்களை தனக்குள்ளே உணர்ந்து இறையருள் நிறைந்தவராக வாழத்தொடங்கினார்.

சுவாமிகள் வாழ்க்கைப்பயணம் இறையருள் நிறைந்தது என்பதை வெளிப்படுத்துகின்ற 1958 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கே தருகின்றோம். 1958 ஆம் ஆண்டு சுவாமிகள் ஒரு சராசரி மனிதராக யாழ்ப்பாணத்தில் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரரின் கீழ் வேலைசெய்து கொண்டிருந்தார். அப்பொழுது பூநகரியிலுள்ள இவரது நண்பர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கடையில் தான் திருத்துவதற்கு கொடுத்த பொருளைப் பெற்றுக்கொள்ள வந்திருந்தார். கடை பூட்டப்பட்டிருந்ததால் தனது நண்பனான மேற்படி சுவாமிகளிடம் வந்து நலம் விசாரித்ததுடன் தான் வந்திருந்த விடயம் பற்றியும் கூறிவிட்டு பூநகரிக்கு திரும்பிச் சென்றுவிட்டார்.

சுவாமிகள் சில தினங்களுக்குப் பின்பு கிளிநொச்சிக்கு செல்ல வேண்டியிருந்ததால் தனது சினேகிதனுடைய பொருளை குறிப்பிட்ட கடைக்குச்சென்று உரிய பணத்தைச் செலுத்தி அதனைப்பெற்று செட்டியகுறிச்சி என்ற இடத்திலுள்ள தனது சினேகிதனிடம் கொண்டு சென்று கையளித்தார்கள். தன்னிடம் பயணத்திற்காக இருந்த பணத்தைக் கொடுத்தே அந்தப் பொருளை சுவாமிகள் பெற்றுக் கொண்டதனால் வாங்கிவந்த பொருளுக்குரிய பணத்தை தனது சினேகிதரிடம் சுவாமிகள் கேட்டார்கள். அதற்கு சினேகிதன் நீங்கள் அறிவித்துவிட்டு வந்திருந்தால் பணத்தை ஒழுங்குபண்ணி வைத்திருக்கலாம். இப்பொழுது தன்னிடம் எந்தப் பணமும் இல்லையே என்று தனது நியாயத்தை பக்குவமாக எடுத்துக் கூறினார். அந்தப் பணத்தை நம்பி கிளிநொச்சிக்கு பயணத்தை தொடரவந்த சுவாமிகளுக்கு அது பெரிய ஏமாற்றமாக இருந்தது. ஏற்பட்ட ஏமாற்றத்தினையும் துன்பத்தினையும் தனக்குள்ளே சுவாமிகள் ஜீரணித்துக்கொண்டார்கள். எல்லாம் சந்நிதி வேலனின் வழிப்படியே நடக்கின்ற காரியங்கள் தானே நல்லதிற்கும் அவனே பொறுப்பு தீயதிற்கும் அவனே பொறுப்பு எல்லாவற்றையும் நீயே பார்த்துக்கொள் என்று சந்நிதியானிடம் முறையிட்டுகொண்டார்கள். அத்துடன் சுவாமிகள் பேருந்து வண்டிக்கு கொடுப்பதற்கு பணம் இல்லாத நிலையில் 12 மைல்கள் நடந்து கிளிநொச்சிக்கு சென்றடைந்தார்கள். சில நாட்களின் பின் மீண்டும் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்கு தனது சினேகிதனிடம் செல்லுகின்ற சந்தர்ப்பம் சுவாமிகளுக்கு ஏற்பட்டதனால் அவரிடம் சென்றடைந்தார். அப்பொழுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த சிநேகிதன் தான் பசு மாடு ஒன்றை வாங்குவதற்கு நீண்ட நாட்கள் முயற்சி செய்வதாயும் ஆனால் அந்த முயற்சி தடைப்பட்டுக்கொண்டு வருவதாயும் சுவாமிகளிடம் எடுத்துக்கூறினார். நான்கு மாதக்கண்டுடன் கூடிய பசு மாட்டிற்கு அச்சவாரம் கொத்தும் அது தடைப்பட்டுவிட்டது. இன்னொரு இடத்தில் கண்டுத்தாச்சி மாடு ஒன்று நிற்கிறது அதனை வாங்குவோம் என்று பார்த்து எல்லாமே பேசி முடித்தாகி விட்டது. அதனுடைய கயிற்றைப்பிடித்தால் அது கீழே விழுந்து படுத்துவிடுகிறது. எப்படி அதனை வீட்டிற்கு அழைத்து வருவது என தெரியாதுள்ளது. எல்லாம் தடையாகவே உள்ளது என்றும் தனது பரிதாப நிலையை சுவாமிகளுக்கு எடுத்துக்கூறினார்.

தனது சினேகிதனுடைய நிலையை உணர்ந்து அவருக்கு உதவுவதற்கு சுவாமிகள் முன்வந்தார்கள். பூநகரியில் தனது சிநேகிதனின் வீடு அமைந்துள்ள இடத்திலிருந்து 3 மைல்கள் மேற்கேயுள்ள வில்லடிபத நிலை என்ற இடத்திலுள்ள வீட்டிற்கு இருவரும் சென்று அந்த பசுமாட்டைப் பணம் கொடுத்து வாங்கினார்கள். மிகவும் சிரமப்பட்டு காலை 8 மணிக்கு தொடங்கிய பயணம் பிற்பகல் ஒரு மணியை அடைந்தும் அரைவாசித் தூரத்திலேயே நிற்கிறது. அதாவது 5 மணித்தியாலயங்கள் சிரமப்பட்டு 1½ மைல் தூரத்திற்கே அந்த மாட்டை அழைத்துவர முடிந்தது. பசியின் கொடுமையைப் புரிந்துகொண்ட சுவாமிகளின் சிநேகிதன் சுவாமிகளை அங்கேயே இருக்குமாறு கூறி 1½ மைல் தூரத்திலுள்ள தனது விட்டிற்குச்சென்று மத்தியானச் சாப்பாட்டை எடுத்து வந்து அங்கே இருவரும் உட்கொண்டு பசியாறினார்கள்.

அதன் பின்பு இருவரும் ஒருவாறு பகீரதபிரயத்தனத்தின் பின்பு மீண்டும் மாட்டை எழுப்பி மெதுமெதுவாக சினேகிதருடைய வீட்டை நோக்கி நடத்திச்செல்ல முயற்சித்தனர். அப்பொழுது அந்த சினேகிதன். ''ஒரு மாட்டை வாங்கவேண்டும் என்பதற்காக வீட்டிலிருந்த பணத்தைக் கூட உங்களுக்கும் தராமல் வைத்திருந்துதான் இப்போது மாட்டை வாங்கினேன். ஆனாலும் வாங்கிய மாட்டை கூட்டிச்செல்ல எவ்வளவு கஸ்ரப்படுகின்றோம் பார்த்தீர்களா'' என்று தூய்மையான அன்புடன் தனக்கு உதவிசெய்து கொண்டிருக்கும் சுவாமிகளுக்கு தான் முன்பு செய்த துரோகத்தை மனம் திறந்து எடுத்துக் கூறினார்கள். என்ன ஆச்சரியம் இந்த உண்மையை அவர் கூறியதுதான் தாமதம் நடப்பதற்கே தயக்கம் காட்டிய அந்த பசுமாடு இவர்கள் பிடித்திருந்த கயிற்றையும் பறித்துக்கொண்டு சிநேகிதனுடைய வீட்டிற்கு அருகிலுள்ள விநாயகர் ஆலயம் வரைக்கும் ஒரே ஓட்டமாக ஓடிச்சென்று அங்கே இவர்கள் இருவரினதும் வரவையும் எதிர்பார்த்து காத்திருந்தது.''

பின்தொடர்ந்து தனது அடியவர்களை நிழல் போல அவர்களின் துன்பங்களை போக்கி வருபவன் சந்நிதி முருகன், அடியவர்கள் மீது அளவில்லாத அன்பு கொண்ட சந்நிதி முருகன் இலைமறைகாய் போல வாழ்ந்து வருகின்ற சித்தர்கள், ஞானிகளது வாழ்க்கைப் பயணத்தில் அவர்களுக்கும், அவர்கள் மூலம் மற்றவர்களுக்கும் நாள் தோறும் நடாத்திக் கொண்டிருக்கின்ற இது போன்ற அற்புதங்களை எம்மால் வார்த்தைகளால் கூறத்தான் முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் கோமாதா மூலம் வெளிப்படுத்திய இந்த அற்புதத்தின் மூலம் கோமாதாவின் தெய்வப் பண்புகளையும் நாம் உணர முடிகின்றதல்லவா! மேற்படி புங்குடுதீவுச் சுவாமிகள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நீண்டகாலம் அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

தற்பொழுது அவர் புங்குடுதீவுக்கு சென்றுள்ளதை அறியமுடிகிறது.

## பபா சாமிகள்



தொண்டு செய்வதையே தனது வாழ்வில் இலட்சியமாகக் கருதி நாளும் பொழுதும் தொண்டு செய்து கொண்டிருக்கும் ஒரு அருளாளர்தான் பவா சுவாமிகள். இவரின் சொந்த இடம் இணுவில். பெயர் பொன்னுத்துரை அருள்செல்வம். எமது சமயம் வளரவேண்டும், அடியார்கள் பக்தி பெருக வேண்டும், சந்நிதியில் இடம்பெறும் அன்னதானச் செயற்பாடு நிறைவாக நடைபெறவேண்டும் என எமது சமயம் எமது அடியார்கள் என்ற சுற்று வட்டத்திற்குள் சுழன்று கொண்டிருக்கின்ற ஒரு வித்தியாசமான அருளாளராக நாம் இவரைப் பார்க்கமுடியும். காவி உடை இவர் பொதுவாக அணிவதில்லை. நாலுமுழ வேட்டியோ சாரமோ எது வேண்டுமானாலும் அணிந்துகொள்வார். சத்திய சாயிபாபா போன்ற பாணியில் இவரது தலைமுடி காணப்படும். அதிலிருந்து இவர் ஒரு அருளாளர் என்பதை இலகுவாக இனங்காணமுடியும். சித்தன் போக்கு சிவன் போக்கு என்று சொல்வது இவருக்கு மிகப் பொருத்தமாக இருக்கும்.

மிகச்சிறிய வயதிலிருந்தே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்துடன் தொடர்புள்ளவராக வாழ்ந்துவரும் பபா சாமிகள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக சந்நிதியில் ஒரு அருளாளராக வாழ்ந்து வருவதை காணமுடிகிறது. சந்நிதியில் இடம்பெறுகின்ற அன்னதானச் செயற்பாடுகள் இவரது மிக முக்கிய பணியாகக் காணப்படுகிறது. இந்த அன்னதானப் பணி தொடர்பாக பங்களிப்பு செய்ய விரும்புபவர்களிடமிருந்து நிதியையோ பொருட்களையோ பெற்று சேரவேண்டிய இடத்திற்கு கொண்டு சென்று சேர்ப்பதில் இவர் ஒரு கைதேர்ந்த சாமியாராகக் காணப்படுகிறார். சந்நிதியில் இடம்பெறும் அன்னதானச் செயற்பாடுகள் மட்டுமன்றி வேறு ஆலயங்களின் அன்னதானச் செயற்பாடுகள், திருப்பணிச் செயற்பாடுகள், உற்சவ காலச் செயற்பாடுகள் என ஆலயங்கள் தொடர்பான எந்த செயற்பாடுகளாக இருந்தாலும் வழங்கும் இடத்தில் பெற்று சேர்ப்பிக்க வேண்டிய இடத்தில் சேரச்செய்வதில் பபா சாமிகள் மிகுந்த அனுபவமும் ஆற்றலுமுள்ளவராகக் காணப்படுகின்றார். இதனால் இவர் யாழ்ப்பாணம் முழுவதிலும் முக்கியமாக வலிகாமம் பகுதியில் அதிகமான ஆலயங்களுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புள்ளவராகக் காணப்படுகிறார். அதிகமானவர்களால் அறியப்பட்ட அருளாளராகவும் காணப்படுகின்றார். அதேநேரம் கடல்கடந்த ஒரு சில நாடுகளில் இடம்பெற்ற கும்பாபிஷேக செயற்பாடுகளிலும் அவர்களின் அழைப்பிற்கிணங்க பங்குபற்றியதையும் காணமுடிகிறது.

ஆலயம் அடியார்களின் ஈடேற்றத்திற்குரிய ஒரு புனிதமான இடம் என்ற கொள்கைப் பிடிப்பு இவரிடம் இருப்பதை காணமுடிகிறது. இதனால் இணுவில் கந்தசாமி கோயிலில் பிராமணர்கள் அல்லாதவர்கள் தமிழ்மொழியில் நடாத்தும் அந்த பூசைச் செயற்பாடுகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளார். அந்த ஆலயத்திலும் கணிசமான நேரத்தை செலவுசெய்து வருகின்றார். கதிர்காமம் உட்பட பல ஆலயங்களுக்கு தலயாத்திரையும் மேற்கொண்டுள்ளார். ஆலய தரிசனம், ஆலயத் தொண்டு என்பவற்றிலேயே இவரது வாழ்நாள் கழிந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

இவ்வாறு பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் சந்நிதி ஆலயச் சூழலில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அன்னதானச் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்வதில்தான் இவர் தனது அதிகளவான கால நேரங்களை செலவு செய்துகொண்டிருப்பதை காணமுடிகிறது. மயில்வாகனம் சுவாமிகள் ஆனந்தாச்சிரமத்தில் கட்டுப்பாட்டுடன் நடாத்திய அன்னதானச் செயற்பாட்டை நேரடியாக பார்த்து அனுபவித்த அனுபவத்தையும் இன்றுவரை தனது மனக்கண்முன் வைத்திருப்பதை காணமுடிகிறது. அதேபோன்ற செயற்பாட்டிற்கு தானும் உதவ வேண்டும் என்ற ஆதங்கமும் இவரிடம் வெளிப்படுகிறது. இதனால் பபா சாமிகள் சந்நிதியானது திருவருளிற்கு பாத்திரமான ஒருவராக தென்படுகின்றார். மேலும் சந்நிதியான் ஆச்சிரமம் பரந்து விரிந்த மண்டபங்கள் உள்ள இடமாக மாறவேண்டும். ஒரே நேரத்தில் மிக அதிகளவானவர்கள் அமர்ந்திருந்து உணவருந்த வேண்டும் என்பது அவரது மிக நீண்டகால விருப்பம். அதனை பலமுறை அடியேனிடம் தெரிவித்து ஆதங்கப்பட்டுள்ளார். இன்று அவர் எதிர்பார்த்தது போல் ஆச்சிரமம் பரந்து விரிந்த இடமாக மாறியுள்ளது. சந்நிதியான் இவருக்கு கனவுகள் காட்சிகள் மூலம் வெளிப்பட்ட நிகழ்வுகள் பல இடம்பெற்றுள்ளன. அதேபோல சந்நிதியான் இவரது உருவத்தில் தனது மெய்யடியார்களுக்கு வெளிப்பட்டு திருவிளையாடல் நிகழ்த்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

கெருடாவில் பகுதியைச் சேர்ந்த அமரர் எஸ். துரைராஜா சந்நிதியான் மீது அசையாத நம்பிக்கை வைத்து வழிபடுகின்ற ஒரு மெய்யடியார். ஆனால் அவரது வழிபாட்டு முறை சற்று வித்தியாசமானது, உடலை வருத்துதல், விரதம் இருத்தல் போன்ற வழிபாட்டு முறைகளை அவர் மேற்கொள்வதில்லை. அதேபோல தனக்கு துன்பங்கள், துயரங்கள் ஏற்பட்டால் ஒரு நண்பனிடம் உரிமையுடன் முறையிடுவது போல சந்நிதியானிடம் முறையிடுகின்ற சுபாவமுள்ளவர். மேலும் ஆலயம் என்பது வழிபாட்டுக்குரிய இடமேயன்றி வருமானத்திற்குரிய இடம் அல்ல என வாதிடுபவர் சமத்துவம், நீதி, நியாயம் போன்ற முற்போக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையுள்ளவர். இப்படிப்பட்ட முற்போக்கு சிந்தனையுள்ள எஸ். துரைராஜாவுக்கு சந்நிதியான் பபா சாமிகள் உருவத்தில் நடாத்திய திருவிளையாடல் ஒன்றை இங்கே அடியவர்களுக்கு வழங்குகின்றோம்.

2000ம் ஆண்டின் வருடாந்த உற்சவத்தின் சப்பறத் திருவிழாவின் காலைத் திருவிழாவிற்கான ஆயத்தங்கள் ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதே நேரம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானச் செயற்பாட்டிற்கான ஆயத்த வேலைகள் ஒருபுறமும் உற்சவகால விசேட நிகழ்விற்கான வேலைகள் மறுபுறமாகவும் எல்லோரும் தங்கள் தங்கள் வேலைகளில் உற்சாகமாகவும் அதேநேரம் பக்தி உணர்வுடனும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் திரு.துரைராசா அவர்கள் ஆச்சிரமத்தின் வாயிலைத் திறந்துகொண்டு உள்ளே வருகின்றார்கள். அப்பொழுது அன்னதானத்திற்கான முன் ஆயத்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பபா சுவாமிகளும் அந்த இடத்தில் தென்படுகின்றார்கள். இந்த நிலையிற் பபா சுவாமிகளைக் கண்டதுதான் தாமதம் திரு. எஸ். துரைராசா அவர்கள் தன்னை மறந்த நிலையில் பபா சுவாமிகள் நிற்கின்ற இடத்தை வந்தடைந்தார்கள். அவ்வாறு வந்து சேர்ந்தவர் திடீரென பபா சுவாமிகளின் பாதங்களைப் பற்றியபடி உள்ளம் உருகிக் கண்ணீர் ததும்ப அவரை வழிபட ஆரம்பித்துவிட்டார்கள்.

எதிர்பாராது நடைபெற்ற இந்தச் சம்பவத்தைக் கண்ட ஆச்சிரமத்தின் சுவாமிகள் உட்பட அனைவரும் ஆச்சரியமும் வியப்புமடைந்தனர். ஏனெனில் வன்றொண்டனான திரு. எஸ். துரைராசா அவர்கள் சாஷ்டாங்கமாக விழுந்து பபா சுவாமிகளை வணங்குவதும், கண்ணீரே விடாத துரைராஜா அவர்கள் கண்ணீர் விட்டுத் தேம்பித்தேம்பி அழுவதும் பபா சுவாமிகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருப்பதும், உண்மையில் பார்ப்பதற்கு புதுமையாகவும், அதேநேரம் நெஞ்சை நெகிழ வைக்கின்ற காட்சியாகவும் இருந்தது. யாருக்கும் எதுவும் விளங்கவில்லை எந்த விதத்திலும் ஏற்கனவே தொடர்புகொண்டிராத பபா சுவாமிகளை இவர் ஏன் வணங்க வேண்டும் அதுவும் இப்படியான ஒரு உணர்ச்சி வெள்ளத்தில் ஏன் வணங்க வேண்டுமென்பதெல்லாம் யாருக்கும் புரியாத புதிராகவே தென்பட்டது.

சந்நிதியானை வழிபடுகின்ற பொழுது ஒரு நண்பனுடன் கொள்ளுகின்ற உறவைப்போன்று உரிமையுடனும் அதிகாரத்துடனும் வழிபடுகின்ற வன்றொண்டனான திரு. எஸ். துரைராஜா அவர்கள் பபா சுவாமிகள் என அழைக்கப்படும் திரு. க. அருட்செல்வம் அவர்களின் பாதங்களைப் பற்றிய வண்ணம் பக்தி நிலையில் காணப்பட்டது உண்மையில் எல்லோருக்கும் வியப்பை அளிக்கத்தான் செய்தது.

இறுதியில் ஒருவாறு பபா சுவாமிகள் திரு. எஸ். துரைராஜா அவர்களைத் தேற்றி தனது அன்பையும் ஆசீர்வாதத்தையும் துரைராஜா அவர்கள் மேல் செலுத்தி அவரை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு பக்தி ததும்பும் அந்த உணர்ச்சி நிலையிலிருந்து விடுபட்ட திரு. எஸ். துரைராஜா அவர்கள் இரவு கனவிலேதான் கண்ட காட்சியையும் ஒரு நண்பனைப் போலத் தனக்கு சந்நிதியான் இடித்துக் கூறிய வார்த்தைகளையும் உள்ளம் நெகிழ பபா சுவாமிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

**''அன்று அதிகாலை 3 மணியளவில் சந்நிதியான் பபா சுவாமிகளின் வடிவில் தோன்றி திரு. எஸ். துரைராஜா அவர்களின் நெஞ்சிலே அடித்து சும்மா கொடடா சுகம் வரும், சும்மா கொடடா சுகம் வரும்''** என்று கட்டளையிடுவது போல இடித்துக் கூறியுள்ளார்கள். அதன் பின்பே சந்நிதியானுடைய இடத்தில் அதுவும் உற்சவ காலத்தில் தசாங்கத்தினை இலாப நோக்கத்திற்காக அடியார்களுக்கு விற்பனை செய்கின்ற தவறை திரு. துரைராஜா அவர்கள் உணர முற்பட்டார்கள். அதுமட்டுமல்ல இரவு சந்நிதியான் எந்த சாமியார் வடிவத்தில் காட்சி கொடுத்து கட்டளை இட்டாரோ அதே பபா சுவாமிகளை இன்று காலையிலேயே தனக்கு நேரடியாகக் காண்பித்துவிட்ட அற்புதத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

திரு. துரைராஜா அவர்கள் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒரு வித்தியாசமான இயல்புள்ளவர் மட்டுமல்ல முற்போக்கான சிந்தனையுமுள்ளவர். மதம் என்று கூறும் பொழுது அது தனியே வழிபாடு செய்வதாக மட்டும் இருக்கக்கூடாது ஒருவன் வாழுகின்ற பொழுதே மத தர்மத்துடன் வாழ வேண்டுமென்று நினைக்கின்றவர். இந்த வகையில் ஆலயம் என்பது பக்திக்குரிய இடமாக இருக்க வேண்டுமே தவிர அங்கே வியாபாரம் இருக்கக்கூடாது என்று ஏனையவர்களுக்கு அறிவுரை கூறுகின்றவர்.

இவ்வாறு அறிவுரை கூறுகின்ற அன்பர் தூய்மையானதும் பக்தி உணர்வை ஏற்படுத்தக் கூடியதுமான தசாங்கம் அடியார்களுக்கு கிடைக்க வேண்டுமென்று நினைத்துச் செயற்பட முற்பட்டவர். இறுதியில் ஆலயச் சூழலில் அதனை ஒரு வியாபாரப் பொருளைப் போல சந்தைப்படுத்தும் செயற்பாட்டில் தன்னை அறியாமலேயே ஈடுபடத்தொடங்கி விட்டார். இது அவருடைய கொள்கைக்கும், சிந்தனைக்கும் முரண்பட்ட செயற்பாடு அல்லவா? இது போன்ற ஒரு தவறை நாம் எமது நண்பனுக்குச் செய்தால் அவன் சும்மா இருப்பானா அதனால் தான் போலும் நண்பனைப் போல் சந்நிதியானும் திரு. துரைராஜா அவர்களின் நெஞ்சினிலே அடித்து தசாங்கத்தினை சும்மா கொடடா சும்மா கொடடா என்று கூறி அவர் விட்ட தவறினை எடுத்துக் காட்டியுள்ளார்.

மேற்படி சந்நிதியானுடைய அற்புத நிகழ்வினை உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த அன்றைய தினமே அடியேனைச் சந்தித்த பொழுது உள்ளம் உருக எடுத்துக்கூறினார்கள். மேலும் திரு. துரைராஜா அவர்கள் தனக்கு வாழ்க்கையில் எதிர்பாராத இடைஞ்சல்கள் துன்பங்கள் ஏற்படும் பொழுது தான் எவ்வாறு சந்நிதியானிடம் சென்று உரிமையுடன் வழிபடுவேனோ அதேபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியானும் பபா சுவாமிகளின் உருவத்தில் வந்து தனது தவறை சுட்டிக் காட்டி, உரிமையுடன் தனக்கு படிப்பினையை ஏற்படுத்தி இறுதியில் தன்னையும் ஒரு அடியானாக ஆட்கொண்டு விட்ட அற்புதத்தை உணர்ச்சி பொங்க எடுத்துக் கூறினார்கள்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து திரு. துரைராஜா அவர்கள் ஆலயச் சூழலில் சில வியாபார ஸ்தாபனங்கள் மூலம் தசாங்கத்தினை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்தி உண்மையான பக்தி உணர்வுடன் உற்சவ காலத்தில் சந்நிதியானிடம் வருகைதந்த பல அன்பர்களுக்கு அவற்றை தானாகவே தேடிச்சென்று இலவசமாக வழங்கும் பணியில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

அதுமட்டுமன்றி ஏற்கனவே தசாங்க உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த திரு. துரைராஜா அவர்களுக்கு பத்தாம் திருவிழாவின் பொழுது ஒரு யோசனை தோன்றியது. அதாவது தசாங்க உற்பத்தியின் பொழுது உருதுகின்றவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெரிய தசாங்கமாக்கி சந்நிதியானின் மூலஸ்தானத்தில் அதனை ஏற்ற வேண்டுமென்பதே அந்த யோசனையாகும்.

என்ன அதிசயம் அதன் பின்பு ஆம்! அந்த பத்தாம் திருவிழாவின் பின்பு அவர் அச்சில் இட்டு உருவமைக்க முயற்சிக்கும் பொழுது உருவாக்கப்படுகின்ற தாசாங்கங்களின் எண்ணிக்கையை விட உருதுகின்றவற்றின் எண்ணிக்கையே அதிகமாக சேரத் தொடங்கியது.

அணைக்கட்டை கட்டுவதற்கு செம்மணச் செல்வியிடம் வந்த முழுமுதற்கடவுளான சிவபெருமான் உருதுகின்ற பிட்டு எல்லாம் தனக்கு என்று கூறி அணைக்கட்டை கட்டுகின்ற வேலையை ஆரம்பித்த பொழுது செம்மணச் செல்வி அவித்த பிட்டுக்களில் அதிகமானவை உருத ஆரம்பித்தது போல இங்கேயும் உருதுகின்ற தசாங்கங்களின் அளவே அதிகமாக காணப்படுகின்ற அதிசயத்தையும் சந்நிதியான் ஏற்படுத்தினார். முடிவாக ஒன்றுக்கு மேற்பட்ட நாட்கள் எரியக் கூடியதான இராட்சத தசாங்கம் ஒன்றை உற்பத்தி செய்து சந்நிதியானுக்கு வழங்குகின்ற அற்புத அனுபவத்தையும் திரு. துரைராஜா அவர்கள் அனுபவிக்க முடிந்தது.

பபா சாமிகள் தான் மேற்கொண்டு வருகின்ற தனது வழமையான சமயச் செயற்பாடுகள், சமயத் தொண்டுகளை வழமைபோல இன்றுவரை தொடர்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. பிரதி வெள்ளிதோறும் சந்நிதியானிடம் வருகின்ற பபா சாமிகளை அதிகமாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் அடியார்கள் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதடிச் சாமிகள்

சந்நிதியில் வழிபட வருகின்ற அடியார்கள் பலவிதம். அதே போல அருளாளர்களும் பலவிதம். கைதடிச்சாமியார் ஆரம்ப காலங்களில் போத்தல்களை தனது தலையில் அடித்து சுக்குநூறாக்கிய செயற்பாடுகளை நாம் காணமுடிந்தது. தற்பொழுது இரும்புக் கம்பியினால் அடித்து தனது உடலை வருத்துதல் போன்ற அசாதாரண செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதையும் பிரதி வெள்ளிதோறும் அடியார்கள் அங்கே காணமுடியும். இவைகளெல்லாம் அவரது தனித்துவமான இயல்புகளாகும்.

இவருடைய பெயர் ஆறுமுகம் சிவஞானம். கைதடி கிழக்கு கைதடி என்பது அவருடைய நிரந்தர விலாசமாகும். சந்நிதியில் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அருளாளர்களுள் இவரும் முக்கியமானவராவர். இவர் ஞானநிலையில் பெற்றுள்ள பக்குவம், அனுபவம் என்பவற்றை ஏனையவர்கள் அதிகம் அறிந்திருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் ஒரு சித்தராக அல்லது அருளாளராக அவரிடம் இயல்பாக இருக்கவேண்டிய அருள்நிலை சார்ந்த பண்புகள் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை அவரிடம் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இது தொடர்பாக மிக அண்மையில் நடைபெற்ற அற்புத நிகழ்வை இங்கே அடியார்களுக்கு வெளிப்படுத்துவது பொருத்தமானது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆரம்ப கால வரலாறே புனித பூவரசு மரத்துடன் தொடர்புபட்டதாகவுள்ளது. இவ்வாறான வரலாற்றுச் சிறப்பும் புனிதமும் நிறைந்த சந்நிதியானது தல விருட்சமான பூவரசு மரத்தினை இன்றும் அடியார்கள் பய பக்தியுடன் வணங்கிவருவதை நாம் இங்கே காணமுடியும். முருகேசு சுவாமிகள் காலத்தில் அவரால் ஒரு இளம் யுவதிக்கு வழங்கப்பட்ட இந்த புனித பூவரசு மரத்தின் காய்ந்த பூவரசம் இலை 10 ரூபா தாளாக மாறிய அற்புதமும் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்தேறியது.

இவ்வாறு பலவகையிலும் புனிதமும் அற்புதங்களும் நிறைந்த இந்த புனித பூவரசு மரத்தில் கடந்த பல வருடங்களாக பட்டுத் துண்டுகள், மஞ்சள் துணியினால் சுற்றப்பட்ட நாணயக் குத்திகள், பல வகைப்பட்ட வேல்கள், பல்வகைப்பட்ட அளவுடைய தொட்டில்கள், வேளைகள் (நூல்கள்) என பலவகைப்பட்ட பொருட்களையும் அடியார்கள் புனித பூவரசு மரத்தின் மேல் கட்டி வருவதால் அந்த புனித பூவரசு மரத்தின் பெரும்பகுதி மறைக்கப்பட்டிருந்ததையும் அடியார்கள் அவதானிக்கலாம். அது மட்டுமல்ல பட்டுக்கள் கட்டப்பட்டிருந்த இந்த புனித பூவரசு மரத்தின் இடுக்குகளில் சில அடியார்கள் சிட்டி விளக்குகளை வைத்து அங்கே தீபங்களையும் ஏற்றியுள்ளனர். இதனால் பட்டுத் துணிகளில் தீபம் பற்றி பெரும் ஆபத்துக்கள் ஏற்படுகின்ற சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வித செயற்பாடுகள் எல்லாம் ஏறத்தாழ கடந்த 15 வருடங்களுக்கு உட்பட்ட காலத்திலேயே இடம்பெற்று வந்துள்ளதையும் அடியார்கள் அவதானித்திருக்கலாம். இவ்விதமான செயற்பாடுகள் எல்லாம் பொதுவாக நேர்த்திச் செயற்பாடுகளுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரைப் பின்பற்றி இன்னொருவர் என அடியவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்பாடுகளினால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

ஆனால் புனிதமான தல விருட்சத்தை பயபக்தியுடன் தொட்டு வணங்கி வழிபடுகின்ற அடியவர்கள், புனித பூவரசு மரத்தின் கீழ் இருந்து தியான நிலை வழிபாடு செய்யும் அடியவர்கள் இதன் புனிதத்தை அனுபவத்தால் உணர்ந்து கொண்டவர்கள் என பலருக்கும் தல விருட்சமான பூவரசு மரத்தில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்விதமான பல்வேறு நடவடிக்கைகள் கவலையையும் சங்கடத்தையும் ஏற்படுத்தி வந்துள்ளன.

ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலம் தவறாது சந்நிதியானிடம் வந்து செல்லுகின்ற கைதடிச் சாமியாருக்கு புனிதமான தல விருட்சமான பூவரசு மரத்தில் பல வகைப்பட்ட இவ்வித பொருட்கள் கட்டப்பட்டிருப்பதும் அவை எல்லைமீறி அளவுக்கதிகமாகக் கட்டப்பட்டு அதன் புனிதத்திற்கு மாசு ஏற்பட்டுக் கொண்டிருப்பதும் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. இந்த பூவரசு மரம் இயல்பாக இருந்த காலத்தில் அதன் சிறப்பையும் புனிதத்தையும் நன்கு விளங்கிக் கொண்டவர் கைதடிச் சாமிகள். அதேபோல தற்பொழுது பூவரசு மரம் மறைக்கப்படும் அளவுக்கு அதன் புனிதத்திற்கு களங்கம் ஏற்பட்டிருப்பதையும் நேரடியாக உணர்ந்து அதனை மிகுந்த கவலையுடன் உள்வாங்கிக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் கைதடிச் சாமியார்.

ஆம் ஆன்மீக ரீதியாக புனித பூவரசு மரத்தின் வரலாற்றுச் சிறப்பையும் அது இயல்பாக இருந்த காலத்தில் அதில் வெளிப்பட்ட புனிதத்தையும் தற்பொழுது உள்ள கவலைதரும் நிலமைகளையும் நன்கு விளங்கிக்கொண்டு எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்த கைதடிச்சுவாமிகளின் உள்ளத்தில் அது இயல்பாக இருப்பதே சிறந்தது என்ற உணர்வு மேலோங்கிக் கொண்டிருந்தது. இவ்வாறான உணர்வு நீண்ட காலமாக அவரது உள்ளத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தாலும் புனித பூவரசு மரத்தில் கட்டப்பட்டிருப்பவை அனைத்தையும் அகற்றி அதனை இயல்பாக இருந்த நிலைக்கு கொண்டுவரும் செயற்பாட்டை சந்நிதியில் நடைமுறைப்படுத்துவதென்பது சாதாரண விடயம் அல்ல என்பதையும் அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

இந்த நிலையில்தான் சந்நிதியில் அந்த அற்புத நிகழ்வு அரங்கேறியது. 2017ஆம் ஆண்டு மாசி மாதம் இறுதிப் பகுதியில் ஒரு வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் கைதடிச் சாமிகள் புனித பூவரசு மரத்திற்கு அண்மையில் சிறிது ஓய்வாக தியான நிலையில் காணப்படுகின்றார்கள். அப்பொழுது அவரை அறியாமலே அவரது உள்ளத்தில் ஒரு அருள் உணர்வு ஏற்படுகிறது. புனித பூவரசு மரத்திலிருந்து இந்த பொருட்கள் அனைத்தும் அகற்றப்பட்டு அது ஆரம்ப காலத்தில் இருந்தது போன்ற புனிதமான பூவரசாக இங்கே காட்சி தரவேண்டும் என்று திடமாக முடிவு எடுத்துக்கொள்கின்றார்கள். அது மட்டுமல்ல இன்னும் மூன்று நாட்களுக்குள் அந்தக் காட்சி இங்கே தென்பட வேண்டும் என்றும் அவரது உள்ளத்தில் அவர் முடிவு செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஒரு அருள்நிலை உந்துதலில் அவர் காணப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது கைதடிச்சாமிகளுடன் அவ்வப்பொழுது ஆன்மீக உரையாடலில் ஈடுபடுகின்ற சந்நிதியானது சில அடியவர்கள் அங்கே வந்து சேர்ந்தார்கள். குடைச்சாமிகளுக்கு தொண்டுகள் செய்து அவரை தனது வாகனத்தில் ஏற்றிச் செல்கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்த பகீரதன் என்ற அன்பர், மற்றும் நெல்லியடியில் உதிரிப்பாகக் கடை வைத்திருக்கின்ற சண்முகவசிகரன் என்ற அன்பர் இவர்களுடன் ஒரு வைத்தியரின் மகன் என மூன்று அடியவர்கள் அங்கே வந்து சேர்ந்தனர். கைதடிச் சாமியார் தன்னுடன் இயல்பாகப் பழகும் இந்த மூன்று அடியவர்களுடனும் புனித பூவரசு மரம் தொடர்பாக நீண்ட காலமாக தனது உள்ளத்தில் எழுந்து கொண்டிருக்கும் உள்ளத்து உணர்வுகளை பகிர்ந்து கொண்டார்கள். அத்துடன், **''இன்னும் மூன்று நாட்களுக்குள் சந்நிதியான் இந்த பூவரசு மரத்திலிருந்து இவற்றை எல்லாம் நீக்குவதற்கு எனக்கு வரம் தரவேண்டும்''** இது நான் சந்நிதியானிடம் கேட்கும் வரம் என தனது இயல்பான பாணியில் அந்த மூன்று அடியவர்களுக்கும் எடுத்துக்கூறினார்கள்.

என்ன அதிசயம் அவர் சந்நிதியானிடம் இவ்வாறான ஒரு வரத்தைக் கேட்டு இரண்டாம் நாளே அந்த பூவரசு மரத்திலிருந்த அனைத்துப் பொருட்களும் அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டன. புதுப்பொலிவுடன் உள்ளத்தில் தெளிவான உணர்வையும் பக்தியையும் வெளிப்படுத்தும் புனிதமான தல விருட்சமாக அது அங்கே காட்சி தந்து கொண்டிருந்தது. ஆம்! அருளாளர்கள் வாக்கு எப்பொழுதும் பொய்ப்பதில்லை.

இது தொடர்பாக திருப்பணிச்சபையினருடனும் பிரதம பூசகர்களுடனும் தொடர்பு கொண்ட பொழுது தாங்கள்தான் அவற்றை எல்லாம் அகற்றினோம் என அடியேனிடம் தெரிவித்தார்கள். மேலும் தங்களுக்கும் இவற்றை எல்லாம் அகற்ற வேண்டும் என்ற உணர்வு இருந்துவந்தாலும் அவற்றை எல்லாம் இவ்வாறு அகற்றுவதற்கு இப்பொழுதுதான் சந்நிதியான் திருவுள்ளம் கொண்டுள்ளான் போலும். எனவேதான் அவற்றை இப்பொழுது நாம் அகற்றினோம் எனவும் எடுத்துக்கூறினர்.

17.03.2017 வெள்ளிக்கிழமை பகல் ஆலயத்தில் கைதடிச் சாமியாரைச் சந்தித்து இது பற்றி பக்குவமாக அவருடன் உரையாடினேன். அப்பொழுது அவர்,

*''வேண்டத் தக்கது அறிவோய் நீ!*
*வேண்ட, முழுவதும் தருவோய் நீ!*
*வேண்டும் அயன், மாற்கு, அரியோய் நீ!*
*வேண்டி என்னைப் பணிகொண்டாய்;*
*வேண்டி, நீ யாது அருள் செய்தாய்?*
*யானும் அதுவே வேண்டின் அல்லால்,*
*வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,*
*அதுவும் உன்தன் விருப்பு அன்றே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற திருவாசகப் பாடலை அடியேனுக்கு பாடிக் காண்பித்தார்கள். நான் எதையும் நானாக கூறவும் இல்லை கேட்கவும் இல்லை. சந்நிதியான் எனது உள்ளத்தில் புகுந்து அவனே அவனது விருப்பத்தை கேட்கவைத்து அவனே செயற்படுத்தி தனது திருவிளையாடல்களை நடாத்தி வருகின்றார். எல்லாம் சிவமயம் என வழமையான பாணியில் தனது ஆன்மிகக் கருத்துக்களை அடியேனுக்கு வெளிப்படுத்தினார்கள்.

புனித பூவரசு மரத்தில் இருந்தவை எல்லாம் 2017ஆம் ஆண்டு மாசிமாத இறுதியில் முழுமையாக அகற்றப்பட்டு அது இயல்பான விருட்சமாக சில நாட்கள் மட்டுமே காட்சியளித்தது. ஆனால் மீண்டும் அடியார்கள் வழமைபோல பல வகையான பொருட்களையும் அங்கே கட்ட ஆரம்பித்ததால் தற்பொழுது பல வகைப்பட்ட பொருட்களும் நிரம்பியிருப்பதை நாம் அங்கே காண முடியும். இது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான். ஆனால் திருப்பணிச்சபை பக்குவமாக அதற்கான மாற்று நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதை அடியார்கள் அங்கே அவதானிக்கமுடியும்.

அதேநேரம் இந்த புனித பூவரசு மரமும் அடியார்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இடம்கொடுக்காதவாறு பக்கவாட்டில் கொப்புக்கள் விடுவதை நிறுத்தியுள்ளது. அதற்கு பதிலாக உயர்ந்த கொப்புகளில் புதிய கிளைகளை பரப்பி செல்வதை அடியார்கள் கவனமாக அங்கே அவதானிக்க முடியும்.

சந்நிதியில் தீர்மானங்களையோ, முடிவுகளையோ மனிதர்கள் எடுக்க விரும்புவதில்லை. இறுதியான தீர்மானங்களும் முடிவுகளும் அவனுடைய சித்தத்தின் படியே நடக்கும் என்பதுதான் காலம் காலமாக இங்கே இடம்பெற்று வரும் விடயமாகும்.

இது தொடர்பாக கைதடிச்சாமிகளுடன் 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. புனித பூவரசு மரக் கொப்புகள் இப்பொழுது உச்சமான கொப்புக்களிலேயே புதிய கிளைகள் விடுவதை அவரும் அடியேனிடம் சுட்டிக் காட்டினார்கள். காலப்போக்கில் அடியார்கள் இவ்வாறு பொருட்களால் புனித பூவரசு மரத்தை நிரப்புகின்ற செயற்பாடு இல்லாமலே போகும் என்றே அவரும் நம்புகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகராசா சாமியார்

இணுவில் காரைக்கால் என்ற இடத்தை சேர்ந்த தியாகராசா சாமியாரும் சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்த ஒரு சாமியாராகக் காணப்படுகின்றார். அடியார் மடத்தில் அருள் வாழ்க்கை வாழ்ந்த வைரமுத்து சாமிகள், நடராசா சாமிகள் ஆகியோர் காலத்தில் தியாகராசா சாமிகளும் அருள் வாழ்க்கை வாழ்ந்துள்ளார். இவர் மயில்வாகனம் சுவாமிகளுடனும் உறவு பூண்டு ஆனந்த ஆச்சிரமத்தில் தொடர்புள்ளவராகவும் காணப்பட்டுள்ளார்.

இவர் சித்த வைத்தியத்தின் மூலம் பல்வேறு வகையான நோய்களை குணமாக்குதல், விபூதி வழங்கி அருள்வாக்கு கூறுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அடியார்களை ஈடேற்றுகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். இதேபோன்று ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், நல்லூர் கந்தன் ஆலயம் போன்ற ஆலயங்களில் பஜனைச் செயற்பாடுகளிலும் சிறப்பாக ஈடுபட்டுவந்துள்ளார்.

இந்தியாவுக்கும் தல யாத்திரை மேற்கொண்ட இவர் ரமண மகரிஷியின் ஆச்சிரமத்திலும் சில காலம் தங்கியிருந்து தன்னை பக்குவப்படுத்தியுள்ளதாக அறியமுடிகிறது. தன்னை பக்குவப்படுத்துதல் அந்த பக்குவ நிலையினை சமுகத்தின் நலனுக்கு பயன்படுத்துதல் என ஆன்மீகத் துறையையே தமது வாழ்வியலாகக் கொண்டு வாழ்ந்துள்ளார். இவ்வாறு ஏராளம் அருளாளர்கள் வாழ்ந்த புண்ணிய பூமியாக இந்த மண் விளங்கியுள்ளது. இவர் சமாதியடைந்தது இவருடைய சொந்த கிராமமான இணுவிலில் ஆகும்.

அண்மையில் கரணவாய் வெற்றிகாட்டுப் பிள்ளையாருடைய மண்டலாபிஷேக செயற்பாட்டில் ஆலய தரிசனத்திற்காக சென்றபொழுது அங்கே கதிரவேலு என்ற அன்பரை தற்செயலாக சந்தித்தபொழுது மேற்படி தியாகராசா சாமியார் தொடர்பான தகவல்களை அவர் மூலமும் அறியமுடிந்தது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் ஒரு சராசரி ஆலயம் அல்ல. அது எங்களை எல்லாம் ஈடேற்றுவதாக அங்கே அமைந்துள்ள எங்களது ஆன்மீகச் சொத்து என்பதை கதிரவேலு அவர்கள் கண்களில் கண்ணீர் மல்க எடுத்துக்கூறினார்கள். கதிரவேலு என்ற இந்த அன்பர் சிறுவனாக இருக்கும்பொழுது 1958ஆம் ஆண்டளவில் உரும்பிராயிலிருந்து சந்நிதியானிடம் மழை வெள்ளத்தில் நடந்து வந்து ஆற்றைக் கடக்க முயற்சித்துள்ளார். அப்பொழுது வெள்ளத்தில் மூழ்க இருந்த சந்தர்ப்பத்தில் திடீரென ஒருவர் அங்கே தென்பட்டு தன்னை காப்பாற்றிய அற்புதத்தை ஆனந்தக் கண்ணீர் சொரிய அடியேனிடம் தெரிவித்தார்கள். ஆம் தியாகராசா சாமியார் வாழ்ந்த காலத்தில் அவருடன் பழகிய ஒரு அடியவராக கதிரவேலு என்ற இந்த அன்பருடைய அனுபவத்தையும் அடியேன் அறிந்து கொள்ள திருவருள் கிடைத்தது.

தியாகராசா சாமியாரின் குருவாக இருந்தவர் குப்பிளான் அம்மா அல்லது சோதி அம்மா என்று அழைக்கப்படும் பெண் சித்தர் என்பதை அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பெண் சித்தருடைய சமாதியில் தற்பொழுது ஒரு அம்மன் ஆலயம் காணப்படுவதாக அறியமுடிகிறது. அத்துடன் அப்பகுதியில் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த உடையார் சாமியாரின் சமாதிக் காரியங்களையும் தியாகராசா சாமியார் முன்நின்று செயற்படுத்தியுள்ளார். தியாகராசா சாமிகளுக்கும் அவருடைய சொந்த இடமான இணுவிலில் சமாதி காணப்படுகிறது.

## சின்னத்தம்பி சாமிகள்



கடையிற் சுவாமிகள் காலத்திலிருந்து சித்தர் பரம்பரை ஒன்று யாழ் குடாநாடு முழுவதும் வேர் விட்டு பரவி வளர்ச்சியடைந்து செல்வதை காண முடிகிறது. யுத்த சூழ்நிலை ஏற்பட்ட காலத்தில் இந்த வளர்ச்சியில் ஒரு தடையும் தளம்பலும் ஏற்பட்டிருந்ததையும் காணமுடிகிறது. தற்பொழுது மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த இயல்புநிலையில் அருளாளர்களின் நடமாட்டம் மீண்டும் பிரகாசமாக இருப்பதையும் காணமுடிகிறது.

கடையிற் சாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோக சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் இன்று செல்லத்துரை சுவாமிகளின் சீடர்கள் என ஒரு குருசீடர் பரம்பரை தொடர்ந்துகொண்டிருப்பதை காணமுடிகிறது. இதேபோன்று இன்னொரு குருசீடர் பரம்பரையாக கடையியற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், செல்லப்பா சுவாமிகளிடம் சீடனாக இருந்த குழந்தைவேற் சுவாமிகள் அவரிடம் சீடனாக இருந்த சின்னத்தம்பி சுவாமிகள் அந்த சின்னத்தம்பி சுவாமிகளின் சீடர்கள் என அவரிடம் சீடர்கள் இன்றுவரை சந்நிதியில் தொடர்ந்துகொண்டிருப்பதை காணமுடிகிறது.

சின்னத்தம்பி சாமிகளின் சொந்த இடம் நாவற்குழியாகும். இவர் இளமையிலிருந்தே ஆன்மிக நாட்டம் நிறைந்தவராக வாழ்ந்துவந்துள்ளார். இவ்வாறு ஆன்மிக நாட்டம் நிறைந்த சின்னத்தம்பி சுவாமிகளுக்கு மறவன்புல குழந்தைவேற் சுவாமிகளின் தொடர்பும் அவரை குருவாகக் கொண்டு செயற்படுகின்ற திருவருளும் கைகூடியுள்ளது. குழந்தைவேற் சுவாமிகளை குருவாகக் கொண்டு அவருக்கு தொண்டுகள் செய்து வாழும் பாக்கியம் கிடைத்த சின்னத்தம்பி சுவாமிகள் குறுகிய காலத்திற்குள்ளேயே பரிபக்குவ நிலையை அடைந்துள்ளார்கள். இதன்பின் இவ்வாறான பரிபக்குவ நிலையுடன் நல்லூர் கந்தனது ஆலயத்திற்கு சென்றடைந்துள்ளார்.

பரிபக்குவ நிலையுடன் ஆலயச் சூழலில் வாழ்ந்துவந்த சின்னத்தம்பி சுவாமிகளிடம் ஆசிபெற்று ஈடேற்றம் பெற்ற அடியார்கள் ஏராளம். அவர்களில் நல்லூர் சூழலில் வாழ்ந்த செல்லத்துரை செட்டியாரும் ஒருவராக இருந்துள்ளார். செல்லத்துரை செட்டியாரின் வேண்டுதலை ஏற்று சின்னத்தம்பி சாமிகள் அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்திற்கு சென்று அங்கே தங்கியிருந்து அடியார்களை ஆற்றுப்படுத்தி வந்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் மருதர் கதிர்காமர் மரபில் வந்த சந்நிதியானுடைய பூசகர்களில் ஒருவராகிய நாகமுத்து ஐயர் சின்னத்தம்பி சாமிகளின் மகிமையை அறிந்து அவரிடம் சென்று ஆன்மிக உபதேசம் பெற்றுவந்துள்ளார். அது மட்டுமன்றி சித்தர்கள் உறைகின்ற ஆலயமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும் அவரை வரவழைத்து அகமகிழ்ந்துள்ளார். அத்துடன் ஆலயத்தின் வடக்குத்திசையில் சின்னத்தம்பி சாமிகள் தவ வாழ்க்கை வாழ்வதற்கு பொருத்தமான சிறிய ஆச்சிரமம் ஒன்றையும் அமைப்பதற்கு நாகமுத்து ஐயர் காரணமாக அமைந்துள்ளார்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் வடக்குத்திசையில் சின்னத்தம்பி சாமிகள் தவ வாழ்க்கை வாழ்ந்த காலம் நாட்டுச்சூழல் இயல்பாக இருந்த காலம். இக் காலத்தில் சின்னத்தம்பி சாமிகளிடம் ஏராளம் அருளாளர்கள் அருள் உபதேசம் பெற்றுள்ளதை அறியமுடிகிறது. அவ்வாறு உபதேசம் பெற்றவர்கள் அவ்வாறான பக்குவநிலையில் நின்று ஆலயச் சூழலில் அன்னதானச் செயற்பாடு உட்பட பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு தொண்டுகள் புரிந்துள்ளதையும் காணமுடிகிறது. சின்னத்தம்பி சாமிகளிடம் அருளுபதேசம் பெற்றவர்களில் மயில்வாகனம் சுவாமிகளும் ஒருவர். சின்னத்தம்பி சாமிகள் மயில்வாகனம் சுவாமிகளது ஆனந்தாச்சிரமத்திற்கு தனது சீடர்குழாமுடன் சென்று அங்கே தங்கி அளவளாவி அகமகிழ்ந்து உணவுண்டு வந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சந்நிதியில் ஒரு சித்தர் பரம்பரை வேர்விட்டுத் தழைப்பதற்கு காரணமாக இருந்த சின்னத்தம்பி சுவாமிகள் ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் சந்நிதியில் தவ வாழ்க்கை வாழ்ந்துள்ளார். அதன்பின்பு அவர் மறவன்புல பகுதிக்கு சென்று அங்கே புதிதாக ஆச்சிரமம் ஒன்றை ஸ்தாபித்துள்ளார். அத்துடன் ''சுத்த சிவசமரச சன்மார்க்க சாது சங்க குருபீடம்'' என்ற அருளாளர் சங்கம் ஒன்றையும் ஸ்தாபித்துள்ளார்.

இவ்வாறு சின்னத்தம்பி சாமிகள் இந்த மண்ணில் தான் செல்லுகின்ற இடம் எல்லாம் அடியார்களும், அருளாளர்களும் தத்தம் பாதையில் ஈடேற்றம் பெறுகின்ற மகத்தான ஆன்மீகப் பணியை நிறைவாக நிறைவேற்றியுள்ளதைக் காணமுடிகிறது. அத்துடன் ஆன்மீகப் பக்குவம் நிறைந்தவர்களாக 96 சீடர்களை இவர் தானே தெரிவுசெய்து அவர்களின் பெயர் விபரங்களை தானே குறிப்பில் எழுதி வைத்துள்ளதையும் காணமுடிகிறது. மறவன்புலவில் சின்னத்தம்பி சாமிகள் ஸ்தாபித்த ஆச்சிரமமும் சுத்த சிவசமரச சன்மார்க்க சாது சங்க குருபீடமும் நின்று நீடித்து செயற்படுகின்ற ஸ்தாபனங்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. யுத்த காலத்தில் அவை அழிவடைந்திருந்தாலும் அவை மீண்டும் சீடர்களால் புனரமைக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது.

மறவன்புலவில் நிலையான செயற்பாடுகளை ஆரம்பித்து செயற்படுத்திய சின்னத்தம்பி சுவாமிகள் அங்கே தனது சமாதிக்குரிய இடத்தை தானே தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தெரிவுசெய்து ஏறத்தாழ ஒரு மாதத்தின்பின்பு சின்னத்தம்பி சாமிகள் சமாதி அடைந்துள்ளார்கள். மறவன்புலவில் சின்னத்தம்பி சாமிகளின் சமாதி அவர்களின் சீடர்களால் இன்றும் பேணப்பட்டு ஒழுங்குமுறையில் பூசைகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

சின்னத்தம்பி சாமிகள் தனது 96 சீடர்களின் பெயர்களை தானே தெரிவுசெய்து தனது குறிப்பேட்டில் எழுதியும் வைத்துள்ளார். சந்நிதிச் சூழலில் இவ்வாறு ஏராளம் சீடர்களுடன் தவ வாழ்க்கை வாழ்ந்தபின் தென்மராட்சியிலுள்ள மறவன்புலவுக்கு செல்வதற்கு திருவுள்ளம் கொண்டார்கள். இந்தவேளையில் அங்கே நிலவிய ஒரு உருக்கமான சூழலை இங்கே வெளிப்படுத்துவது பொருத்த மானது. ஆம் சின்னத்தம்பி சுவாமிகள் மறவன்புலவில் தவ வாழ்க்கை வாழ்வதற்கு செல்ல இருந்ததால் சீடர்களும் அடியார்களும் சிறிது கவலையுடன் அந்த தருணத்தில் காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் மிகவும் நெருக்கமான உறவு வைத்திருந்த சின்னத்தம்பி சாமிகள் அங்கே கூடியிருந்த ஒவ்வொரு சீடருக்கும் தான் பாவித்த ஒவ்வொரு பொருட்களை வழங்கி அவர்களை ஆறுதல்படுத்தி அகமகிழச் செய்துள்ளார். அப்பொழுது தனக்கும் குருநாதரிடமிருந்து ஏதாவது ஒரு பொருள் கிடைத்துவிட வேண்டும் என நடராசா சுவாமிகள் ஆதங்கப்பட் டுள்ளார். இதனை உணர்ந்துகொண்ட சின்னத்தம்பி சாமிகள் இந்தா இதுதான் உனக்குரிய பொருள் என தான் கஞ்சி குடிப்பதற்கு பாவிக்கின்ற சிரட்டையை நடராசா சாமிகளுக்கு வழங்கியுள்ளார். நடராசா சாமிகள் தனது இறுதிக் காலம்வரை அந்த சிரட்டையை புனிதப் பொருளாக தனது சாமி அறையில் வைத்து பேணிவந்துள்ளார். பூசை நடைபெறும் நேரங்களில் அந்த சிரட்டையை குருவின் அடையாளமாகக் கருதி அந்த சிரட்டைக்கு பால் அபிஷேகம் செய்து அந்த சிரட்டையினூடாக தனது குருவருளை பெற்று வந்துள்ளார். இதனை அவருடைய இன்றுள்ள சந்ததியினர் மூலம் அறியமுடிகிறது. இதனால் நடராசா சாமிகள் நடாத்திய மணியம் மடத்தில் அன்னதானச் செயற்பாடுகளுக்குரிய பொருள் பண்டங்களும் பெருகியுள்ளது. இதேபோன்று கட்டிட வசதிகளும் தாராளமாக அங்கே பெருகியுள்ளன.

## மௌனகுரு சுவாமிகள் (கடவுள் சுவாமிகள்)



இறைவனை அடைவதற்கு அடித்தளமாக அமைவது அறத்தின்வழி அமைந்த தர்மநெறி தவறாத வாழ்க்கை முறையே என்பதை தனது வாழ்வியலால் வாழ்ந்து காட்டிச்சென்ற மகான்தான் கடவுள்சாமி எனவும் மௌனசாமி எனவும் அழைக்கப்பட்ட முருகுப்பிள்ளை சுவாமிகள். 1906ஆம் ஆண்டு இப் பூவுலகில் அவதரித்த முருகுப்பிள்ளை சாமிகளின் சொந்த இடம் அல்வாய். திருமணம் செய்த இடம் வல்வெட்டியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்க்கை வாழ்ந்து ஒன்பது பிள்ளைகளுக்கு தந்தையாக இருந்தவர். வாழ்வியலுக்காக வியாபாரத் தொழிலில் ஈடுபட்டவர். ஆனாலும்,

இயல்பினால் இல் வாழ்க்கை என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

என்ற வள்ளுவப் பெருமானின் கூற்றுக்கு இலக்கணமாக இவரது வாழ்க்கை அமைந்திருந்தது. ஆம் இல்லற வாழ்க்கையை அதற்குரிய தர்மநெறியில் வாழும்பொழுது அது தவ வாழ்க்கையை விட உயர்வானது என்பதற்கிணங்க அந்த இல்லற வாழ்க்கையை அதற்குரிய இயல்புமுறையில் வாழ்ந்து வெற்றி கண்ட ஒரு இல்லறவியலாளன்.

இல்லற வாழ்வில் முருகுப்பிள்ளை சாமிகளின் வாழ்க்கைப் பாதை சென்று கொண்டிருந்தாலும் இறையருள் ஒன்றே எம்மை ஈடேற்ற முடியும் என்ற உண்மையையும் உணர்ந்தவராக வாழ்ந்துள்ளார். இதனால் இந்த பிறவியிலேயே ஒரு மகானாக, ஞானியாக வாழ்ந்து ஏராளமானவர்களை அந்த பாதையிலும் ஆற்றுப்படுத்திச் சென்றுள்ளார். இவ்வாறு இல்லறம் துறவறம் ஆகிய இரண்டிலும் ஒருவர் நிறைவாக வாழமுடியும் என்பதை எம் எல்லோருக்கும் வாழ்ந்து காட்டிச் சென்ற ஒரு வித்தியாசமான அருளாளராக நாம் கடவுள்சாமிகளை நோக்க முடியும்.

பொருள் இல்லாற்கு இவ்வுலகம் இல்லை என்பதற்கிணங்க பொறுப்புள்ள குடும்பத் தலைவனாக வியாபாரம் செய்து தனது குடும்பத்தை கொண்டு நடாத்தியுள்ளார். வியாபாரத் தொழிலாக இருந்தாலும் தொழில் தர்மத்தை கடைப்பிடித்து அதனையும் ஒரு வாழ்வியல் பாடமாகவே கற்றுக் கொண்டுள்ளார். அதேபோன்று தினமும் காலையில் சிவபுராணத்தை ஓதி பிள்ளைகளையும் அதில் பங்குபற்ற செய்து ஒழுக்கம் கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கை முறை என ஒரு நல்ல குடும்பத் தலைவனுக்குரிய நற்பண்புகள் எல்லா வகைகளிலும் அவரிடம் வெளிப்பட்டிருப்பதை அவரது பிள்ளைகள் மூலம் தெளிவாக அறியமுடிகிறது.

இதேபோன்று ஸ்ரீ செல்லவச்சந்நிதி ஆலய தரிசனம், வல்லிபுர ஆழ்வார் ஆலய தரிசனம், இந்திய தல யாத்திரை என இவரது ஆன்மீகப் பயணமும் தொடர்ந்து கொண்டிருந்தது. காலம் கனிந்துவந்தது. திருவருள் கைகூடியது. ஆம் இவரது இந்த ஆன்மீக பயணம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்கியிருந்த இவரது குருநாதராகிய சின்னத்தம்பி சாமிகளிடம் இவரை சென்றடையச் செய்தது. சந்நிதியில் வாழ்ந்த மிகச் சிறந்த சித்தர்களில் ஒருவரான சின்னத்தம்பி சாமிகளும் முருகுப்பிள்ளை என்ற இயற்பெயர் கொண்ட கடவுள் சாமிகளின் பக்குவ நிலையை தனது ஞானத்தால் உணர்ந்து தனது சீடராக உள்வாங்கிக் கொண்டார்கள்.

செல்லப்பா சுவாமிகளுக்கு யோக சுவாமிகள் என்ற மிகச் சிறந்த சீடர் கிடைத்தது போல இங்கே சின்னத்தம்பி என்ற சித்தருக்கு முருகுப்பிள்ளை என்ற மிகச்சிறந்த சீடர் கிடைப்பதற்கு இறையருள் கைகூடியது. சின்னத்தம்பி சாமிகள் தனது 96 சீடர்களில் முருகுப்பிள்ளை சாமிகளை முதன்மை சீடனாக மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். இதன் விளைவாக சந்நிதியில் ஒரு சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு சீடர் பரம்பரை ஆழமாக வேர் ஊன்றுவதற்கும் அது இன்றும் சிறப்பாக தொடர்ந்து கொண்டிருப்பதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அது மட்டுமன்றி 1960ஆம் 1970ஆம் ஆண்டு தசாப்தத்தில் சந்நிதியில் ஏற்பட்ட இவ்வாறான குரு சீடர் பரம்பரையும், சித்தர்கள் செயற்பாடுகளும் சந்நிதியில் மட்டுமன்றி யாழ் மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் விரிவடைந்து செல்லுகின்ற தன்மையையும் நாம் இங்கே காணமுடிகிறது. உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் ''கடவுள் சந்நிதி" என்ற ஸ்தாபனம் எவ்வாறு குருசீடர் பரம்பரை இன்றும் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கிறது என்பதை எமக்கு எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மௌனகுரு சுவாமிகள் ஆலயத்தின் வடக்குத் திசையில் ஆலயத்திற்கு அண்மையாக உள்ள தகர மடத்திலிருந்து செயற்பட்ட காலம் ஆன்மிக ஆர்வமுள்ள அடியவர்களுக்கு மிகவும் பயனுடைய காலமாகக் கருதப்படுகிறது. முருகுப்பிள்ளை சாமிகள் ஒரு பக்கம் தன்னை பக்குவப்படுத்திக் கொண்டிருந்த அதேநேரம் ஏராளம் அடியவர்கள் துன்பங்கள், துயரங்கள் போக்குகின்ற செயற்பாடுகளிலும் அவர் ஈடுபட்டுள்ளதை காணமுடிகிறது. அதேபோன்று தன்னை நாடிவருகின்ற ஏராளம் அடியவர்களை ஆன்மீகப் பாதையில் செல்வதற்கான ஆற்றுப்படுத்தலையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

எப்பொழுதும் கடவுள் சிந்தனையுடன் வாழ்ந்து, எதிலும் கடவுளைக் காணுகின்ற முருகுப்பிள்ளை சுவாமிகள் அடியவர்கள் அனைவரையும் கடவுளாகவே கருதிச் செயற்பட்டார்கள். எதிலும் கடவுள் எவரிலும் கடவுள் என செயற்பட்டதால் இவருடைய உள்ளம் மட்டுமல்ல உதடும் கடவுள் கடவுள் என்றே உச்சரித்து வந்துள்ளது. இதனால் இவர் கடவுள் சாமிகள் என்று அடியவர்களால் அழைக்கப்பட்டுள்ளார். இதேபோன்று ஆரம்பத்தில் வியாழக் கிழமைகளிலும் பின்பு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மௌன விரதம் பூண்டவர் 1976ஆம் ஆண்டு உற்சவ காலத்திலிருந்து தொடர்ச்சியாக மௌன விரதம் பூண்டதால் மௌன சாமிகள் எனவும் அழைக்கப்பட்டுள்ளார்.

அறம் தவறாத இல்வாழ்வு, இறையருள், குருவருள் இவை எல்லாம் நிறைவாகக் கிடைத்த மகானாக கடவுள் சாமிகள் விளங்கினார்கள். அவரை நாடி வருகின்ற ஏராளம் அடியவர்களின் எல்லாவகையான குறைகளையும் போக்கி அவர்களது உள்ளத்தில் நீங்காத இடம்பிடித்துள்ள அருளாளராக கடவுள் சாமிகள் விளங்குகின்றார்கள். கடவுள் சாமிகளின் சீடர்களாக இனம் காணப்பட்டவர்கள் 86 பேர். இதில் முதன்மையானவராக விளங்குபவர் உடுவில் கிழக்கை சேர்ந்த செல்வி மலர் பொன்னம்பலம். ஆன்மீக தாகம் ஏற்பட்ட இந்த ஆசிரியர் 1969ஆம் ஆண்டு சந்நிதிக்கு சென்றுள்ளார். இவரை இவரது குருநாதர் தானாகவே அழைத்து இங்கே வந்து போ, நீ தப்பமுடியாது, இங்கே அடிக்கடி வா என முதல்முறையிலேயே அவரது பக்குவத்தை உணர்ந்து தனது சீடராக உள்வாங்கியுள்ளார். தனது குருநாதர் தொடர்பான இந்த அனுபவத்தை இந்த ஆசிரியரே இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். இதேபோன்று சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்களும கடவுள் சுவாமிகளின் இன்னொரு முக்கியமான சீடர். இவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சித்தர் வரிசையில் மௌனகுரு கடவுள் சுவாமிகள் என்ற தனது குருநாதர் பற்றிய விரிவான நூல் ஒன்றை 2010ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்த நூலில் கடவுள் சுவாமிகள் பற்றிய முழு விபரங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

28.04.2018 சனிக்கிழமை கடவுள் சாமிகளின் 113வது ஜயந்தி தின நிகழ்வு அவர் சந்நிதியில் அருள்வாழ்க்கை வாழ்ந்த தகர மடத்தின் முகப்பில் இடம்பெற்றது. எதிர்பாராதவிதமாக அடியேனும் அதில் பங்குபற்றுவதற்கு திருவருள் கிடைத்தது. மனநிறைவுடன் அதில் கலந்துகொண்டேன். அத்துடன் கடவுள் சாமிகளை தரிசித்தவர்கள், அவரின் சீடர்களாக இருந்தவர்கள் என பலரையும் சந்திக்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. கடவுள் சாமிகளை ஒரு மகானாகவே அவர்கள் கருதுகின்றனர். அவர் 1980ஆம் ஆண்டு சமாதி அடைந்த பின்பும் அவரது குருவருள் தமக்கு கிடைத்து வருவதாகக் குறிப்பிட்டனர்.

85 வயதுடைய கந்தசாமி என்ற அன்பருடன் உரையாடினேன். தனக்கு 37 வயதாக இருக்கும்பொழுது கடவுள் சாமிகளை சந்தித்த அனுபவத்தை அடியேனுடன் பகிர்ந்துகொண்டார்கள். முதன்முதல் குருவின் மகிமை உணராது ஒரு சந்தேகப் பார்வையுடனேயே சிறிது தூரத்திலிருந்து அவரை நோக்கியுள்ளார். அதனை கடவுள்சாமிகள் தனது உள்ளுணர்வால் உணர்ந்து தன்னை அவருக்கு அருகில் அழைத்து தான் சந்தேகித்ததை தனக்கே நாசுக்காக கூறியதை வெளிப்படுத்தினார்கள். இதேபோன்று அவர் கூறுகின்ற ஒவ்வொரு வாக்கும் அர்த்தமுள்ள அருள் வாக்குகளாகும். இதேபோன்று 69 வயதுடைய வரதராஜா என்ற அன்பருடனும் உரையாடினேன். உனக்கு வேலை கிடைக்கும் நீ விரும்பிய இடத்திலேயே கிடைக்கும் என கடவுள் சாமிகள் கூறிய அருள்வாக்கு போலவே தனக்கு வேலை கிடைத்த விபரத்தை கூறி இவர்கள் எல்லாம் மகான்கள் என கூறி பரவசமடைந்தார்கள்.

ஆம் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், சின்னத்தம்பி சுவாமிகள், கடவுள் சுவாமிகள் இன்று அவரது சீடர்களாக அமரர் மலர் பொன்னம்பலம் அம்மையார், சிவத்திரு குமாரசாமி ஐயர் ஆகியோரை நாம் குறிப்பிடலாம். அதேநேரம் சமாதியடைந்த பெண் சித்தரான மலர் அம்மாவின் சீடர்களாக பொ. கோவர்த்தனராசா மற்றும் பலர் செயற்பட்டுக் கொண்டிருப் பதையும் காணமுடிகிறது.

தற்பொழுது வாழ்ந்துகொண்டிருக்கும் அருளாளர் குமாரசாமி ஐயா அவர்களை குருவாகக் கொண்டு ஆ.சி. அற்புதலிங்கம் போன்ற பலர் அவரது வழிகாட்டலை பின்பற்றி பல்வேறு ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் எம்மால் காணமுடிகிறது. இவர்கள் எல்லோருமே மௌனகுரு கடவுள் சாமிகளின் வழிவந்தவர்களாக ஒரே உணர்வுடன் ஒற்றுமையாக ஆன்மீக வழியில் சென்றுகொண்டிருக்கின்றனர். இதனை மௌனகுரு சாமிகளின் ஜயந்தி தின விழாவில் அடியேன் காண்பதற்கும் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்ததும் அடியேனுடைய பாக்கியமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் அம்மா



கடையிற் சாமிகளைத் தொடர்ந்து யாழ் குடாநாடு முழுவதும் சித்தர் பரம்பரை ஒன்று இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த சித்தர் பரம்பரை சந்நிதியிலும் தொடர்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இவ்வாறு தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்ற சித்தர் பரம்பரையில் அண்மைக் காலம் வரை வாழ்ந்து 2011ஆம் ஆண்டு சமாதி அடைந்த ஒருவர்தான் மலர் அம்மா என்ற பெண் சித்தராவார். இயல்பாகவே ஆன்மீக நாட்டம் உள்ள இந்த அம்மையார் சந்நிதியில் கடவுள் சாமிகளை சந்தித்த முதல் நாளே அவருடைய அருள் பார்வைக்கு ஆட்பட்ட வரலாறு ஒரு அற்புத வரலாறாக அமைந்துள்ளது. மௌனகுரு கடவுள் சாமிகள் பற்றிய பெறுமதியான ஒரு நூல் 2010ஆம் ஆண்டு சிவத்திரு வ. குமாரசாமி ஐயரால் வெளியிடப்பட்டது. அந்த நூலிற்கு மலர் அம்மா கட்டுரை ஒன்று வழங்கியிருந்தார். அந்த கட்டுரையில் மலர் அம்மா தான் தனது குருநாதரால் எவ்வாறு ஆட்கொள்ளப்பட்டேன் என்ற அற்புத நிகழ்வை வெளிப்படுத்தியுள்ளார். அதன் ஒரு பகுதியை வாசகர்களாகிய அடியார்களுக்கு அப்படியே இங்கே வழங்குகின்றோம்.

> ''ஆத்மீக தாகம் ஏற்பட்ட காலத்தில் 1969ஆம் ஆண்டு ஒரு நாள் என்னுடைய சக ஆசிரியர்களுடன் வெள்ளிக்கிழமை செல்வச் சந்நிதிக்குப் போகநேரிட்டது. கடவுள் சுவாமிகள் தான் இருந்த தகரமடக் கடை வாயிலில் நின்று வரும்படி அழைத்தார்கள். ஆன்மீக ஆசை இருந்தும் அந்நாட்களில் குரு நம்பிக்கை குறைவாக இருந்தது. என் மனதில் குருவும் கோவிந்தனும் முன்னிலையில் நிற்கையில் யாரை வணங்குவது? 'கோவிந்தனைக் காட்டிய குருவே உன் தெய்வம்' என்னும் ஆத்ம ஜோதியில் இருந்த பிரசுரம் என் ஞாபகத்திற்கு வந்தது. அதை யோசித்துக் கொண்டு பெரியவரின் அழைப்பை ஏற்றுச் சென்றேன். என்றாலும் பிடிகொடாது கதைக்க வேண்டுமென்ற ஆணவத்தினால் வாயிலுக்குக் கிட்டப் போகையில் சுவாமிகள் கேட்டார்கள் ''நீ யார்'' என்று. நான் உடனே 'நான் ஆன்மா' என்று பதிலளித்தேன். ஆன்மா பக்குவமாகக் காலம் இருக்கின்றது என்று சொல்லிச் சிரித்தார்கள். ''நீ உலகில் பிறந்தது வேறு வேலைக்கு. கரடு முரடான பாதைக்குப் போகாது நல்ல வழியைத் தேர்ந்தெடு. இங்கு வந்து போ நீ தப்ப முடியாது. இங்கு அடிக்கடி வா'' என்றார்கள். பல பல கஷ்டங்கள் மத்தியிலும் பாடசாலை விடுதியில் தங்கியபடியால் திருவருள் அங்கு செல்வதற்கு வசதியை ஏற்படுத்தியது.''

சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்த கடவுள்சாமிகளின் 113வது ஜயந்தி தினம் ஏப்ரல் 2018 இல் தகரமடத்தில் கொண்டாடப்பட்டது. அங்கே பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவான சின்னத்தம்பிச் சித்தர், அவரின் முதன்மை சீடரான கடவுள் சாமிகள், கடவுள் சாமிகளின் முதன்மைச் சீடரான மலர் அம்மா ஆகியோரின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அந்த ஜயந்தி தின நிகழ்வுகள் அவர்களின் சீடர்களாலும், அடியவர்களாலும் நிகழ்த்தப்பட்டது. இவ்வாறு இன்றும் சந்நிதியில் குருசீடர் பாரம்பரியம் தொடர்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. வாழ்வியலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வாழ்வின் நோக்கங் களும் மாற்றமடைந்துள்ளன. ஆனாலும் சந்நிதியில் வாழ்ந்த சித்தர்கள் தமது சீடர்களுக்கும், அடியார்களுக்கும் விதைத்த ஆன்மீக விதை இன்றும் வளர்ந்து சென்றுகொண்டிருப்பது நிறைவு தரும் விடயமாக அமைந்துள்ளது.

கடையிற் சாமிகள் காலத்தில் ஆரம்பித்த இந்த சித்தர் பரம்பரை தொடர்ந்து கொண்டிருப்பதற்கு பெண் சித்தரான மலர் அம்மாவின் பங்களிப்பு மகத்தானதாக உள்ளது. தூரநோக்கில் மலர் அம்மாவின் ஆன்மீக செயற்பாடுகளும், ஆன்மீக வழிகாட்டலும் இந்த சித்தர் பரம்பரை தொடர்ந்து செல்வதற்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளதை நாம் காணமுடிகிறது. கடவுள் சாமிகள் சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே தனது பிரதம சிஷ்யையான இந்த பெண் சித்தருக்கு அவர் ஆற்றவேண்டிய, ஆற்றப்போகும் கடமைகளை அருள் கட்டளையாக வழங்கியுள்ளார். இந்த அருள் கட்டளைக்கு இணங்க மலர் அம்மா சின்னத்தம்பி சாமிகள், கடவுள் சாமிகள் ஆகியோரின் குருபூசைத் தினங்களை மறவன்புலவில் உள்ள அவர்களின் சமாதிக் கோயில்களுக்கு அடியார் கூட்டத்துடன் சென்று ஒழுங்காகவும், பயபக்தியுடனும் பொறுப்பாக நின்று செயற்படுத்திவந்துள்ளார். யுத்த சூழல் ஏற்பட்டு அந்த சமாதிக் கோயில்களுக்கு செல்லமுடியாத சூழல் ஏற்பட்ட வேளையிலும் அந்த செயற்பாடுகளை அவர் இடைநிறுத்தவில்லை.

உடுவிலில் உள்ள தனது இல்லத்தை கடவுள் சந்நிதியாக மாற்றி அங்கேயே குருபூசை நிகழ்வுகளை தடைப்படாது தொடர்ந்து நடாத்திவந்துள்ளார். அது மட்டுமல்ல கடவுள் சந்நிதியில் திருவாசக முற்றோதல், பஜனை, நவராத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை போன்ற எமது சமயச் செயற்பாடுகளை அடியார் கூட்டத்துடன் இணைந்து செயற்படுத்தி பக்தி மணம் கமழும் இடமாக அதனை மாற்றியமைத்துள்ளார். இவ்வாறு இந்த அம்மையார் செயற்பட்டது எமது சமயத் திற்கும், சமுகத்திற்கும் இரண்டு வகையான நன்மைகளை ஏற்படுத்தியுள்ளதை நாம் உணரமுடிகிறது. ஒன்று கடையிற்சாமிகள் காலத்தில் ஆரம்பித்த அந்த குருசீட பாரம்பரியம், குருபூசை நிகழ்வுகள் யுத்த காலத்திலும் தடைப்படாமல் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருப்பதற்கு அளப்பரிய பங்களிப்பை செய்துள்ளார். இரண்டு இந்த பெண் சித்தருடைய அப்பழுக்கற்ற ஆன்மிக செயற்பாடுகளும், ஆற்றுப்படுத்தல்களும் ஏராளம் அடியவர்களை ஆன்மீகப் பாதையில் உள்வாங்குவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. அவர் உருவாக்கிய உடுவில் கடவுள் சந்நிதி இன்றும் ஏராளம் அடியவர்களுடன் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் குமாரசாமி ஐயர்



கடவுள் சாமிகளின் முதன்மை சீடர்களில் ஒருவராக விளங்கி தனது குருவின் செயற்பாடுகளை இன்றும் தொடர்ந்து முன்னெடுத்து வருபவர் அருளாளர் குமாரசாமி ஐயராவார். அதுமட்டுமன்றி இவர் கிருபானந்த வாரியாரோ என்று கூறக்கூடியளவுக்கு அனைவரையும் கவர்ந்திழுக்கும் குரலாலும், பொருள் பொதிந்த கருத்துக்களாலும் ஆன்மீக சொற்பொழிவுகளையும் நிகழ்த்திக் கொண்டிருப்பவர். அத்துடன் தனது அர்ச்சகர் செயற்பாட்டையும் புனிதமான முறையில் மேற்கொண்டு வருபவர். மேலும் எமது சமயக் கொள்கைகள் கோட்பாடுகளை கடைப்பிடித்து தன்னை தினமும் பக்குவப்படுத்தி வருவதுடன் அவற்றை மற்றவர்களும் கடைப்பிடித்து ஒழுகுவதற்கான வழகாட்டியாகவும் அவருடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

திருமண உறவுகள் மூலம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பூசகர் குடும்பத்தின ருக்கும் உறவுக்காரராக உள்ளார். சிறுவனாக இருக்கின்ற காலத்திலேயே இலைகள், பூக்களால் வேல் போன்ற அமைப்பை உருவாக்குதல், அதனை முருகப் பெருமானாக வழிபடுதல், அதனை வீதி உலா போல வீட்டைச் சுற்றி எடுத்துச் செல்லுதல் போன்றவற்றை தனது விளையாட்டுச் செயற்பாடுகளாக மேற்கொண்டுவந்ததையும் அறியமுடிகிறது. ஆம் இறை சிந்தனைகளும், செயற்பாடுகளும் இவரிடம் இளமையிலிருந்தே வெளிப்பட்டுவந்துள்ளது. கட்டிளமைப் பருவத்தை அடைகின்றபொழுது இவ்வுலக வாழ்விற்கு பொருளாதாரம் அவசியம் என்பதை தானாக உணர்ந்து கல்வியில் ஊக்கம் காட்டியுள்ளார். தான் கற்ற கல்வியைக் கொண்டு இளமையிலேயே வேலை செய்ய விரும்பியதால் நூலகராக கடமையாற்றும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. இது அவருக்கு தொழிலாக மட்டுமன்றி அவர் விரும்பிய ஆன்மிகத் துறையில் மேலும் ஆழமாக கற்றுத் தெளிந்து தன்னை பக்குவப்படுத்துவதற்கும் வசதியாக இருந்துள்ளது.

சமயம் சமயத்திற்காக மட்டும் இருக்கக்கூடாது. சமயத்தினூடாக சமூகத்திற்கும் நாம் செய்யக்கூடியவற்றை செய்யவேண்டும் என்ற கொள்கையுடன் செயற்படுகின்ற ஒருவர். மிக நீண்டகாலமாக ஆன்மீக சொற்பொழிவாளராகச் செயற்பட்டு வருவதால் தான் செல்லுகின்ற இடங்களில் எல்லாம் சமய தத்துவக் கருத்துக்கள், நீதிக் கருத்துக்கள், சமுக மேம்பாட்டு கருத்துக்களை எல்லாம் அடியார்களுக்கு வெளிப்படுத்தும் பணியை மேற்கொண்டுவருவது இயல்பானதே. ஆனால் அவர் அதற்கு அப்பாலும் சென்று தான் கூறுகின்ற கருத்துக்களின் நன்மை, தீமை, தர்மம், அதர்மம் என்பவை எல்லாம் எவ்வாறு எமது அன்றாட வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதனை எல்லாம் பாமரரும் விளங்கி உணரும் வகையில் வெளிப்படுத்திவருவது இவருக்கே உள்ள தனித்துவமான பாணியாகும். குரு தனது சீடருக்கு வழிகாட்டுவது போல இவர் சொற்பொழிவினூடாக அடியவர்களுக்கு வழிகாட்டுகின்ற பாங்கை பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறது. இதனால் பாதை மாறிய பலர் சரியான பாதையில் செல்வதை காணமுடிகிறது.

ஒரு குரு ஓரிடத்தில் தங்கியிருந்து தான் தவ வாழ்க்கை வாழ்ந்து சீடர்களுக்கும் வழிகாட்டுவது என்பது தான் புராண காலம் தொடக்கம் இருந்து வரும் செயற்பாடாகும். இன்றும் அந்த செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இன்று வாழ்க்கை சூழல் மாறிவருகிறது. கல்வி, வருமானம், தொழில், சமுகம் போன்றவற்றையும் உள்ளடக்கியதான ஆன்மீகம் என்ற காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான ஒரு சூழலில்தான் அருளாளர் குமாரசாமி ஐயரும் வாழ்ந்து கொண்டு தனது ஆன்மீகச் செயற்பாடுகளை அப்பழுக்கற்ற வகையில் தொடர்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இவரது சமய சமுக ஆன்மீக பணிகளும் அவரது வழிகாட்டுதல்களும் இவரைப் போன்ற உணர்வுள்ள இளம் சமுதாயத்தினரில் ஒரு பகுதியினரை மிகவும் ஈர்ந்துள்ளதை காணமுடிகிறது. அது மட்டுமன்றி இவரைப்போல சமயத்துடன் இணைந்த தொண்டுகளையும் சமுக சீர்திருத்தங்களையும் செய்யவேண்டும் என்று எண்ணுகின்ற ஒரு சீடர் பரம்பரை இவருக்கு பின்னால் இவரது வழிகாட்டலை எதிர்பார்த்து இவரை நாடிவந்து கொண்டிருக்கின்றனர். அருளாளர் குமாரசாமி ஐயர் எவ்வாறு தனக்கென ஒரு குருவை நாடிச் சென்றாரோ அதேபோல அவரை நாடி ஆன்மிக நாட்டமுள்ள பலபேர் வந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது.

அருளாளர் குமாரசாமி ஐயர் தனது உயிர்மூச்சாக சந்நிதி முருகனை நாளும் பொழுதும் நினைத்து வாழ்ந்து கொண்டிருப்பவர். ஆலயத்திலும், ஆச்சிரமத்திலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருபவர். பேரவையால் வெளியிடப்பட்ட ஞானச்சுடர் சஞ்சிகையில் பாரதக் கதையை மையமாக வைத்து மானிடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் என்ற கட்டுரையை தொடராக எழுதிவந்தவர். பின்பு அவை நூல் வடிவம் பெற்றுள்ளன. தற்பொழுது தனது குருநாதர் பற்றி ''ஈழத்துச் சித்தர் வரிசையில் மௌனகுரு கடவுள் சாமிகள்'' என்ற நூலையும் வெளியீடு செய்துள்ளார். இவ்வாறு சந்நிதியானின் திருவருளின் பெருமைகளையும், தனது குருநாதரின் ஆன்மீக வழிப்படுத்தல் களையும் இந்த மண்ணில் வாழ்பவர்களுக்கு பரவச் செய்து கொண்டிருக்கின்ற அருளாளராக இவர் காணப்படுகின்றார். இவருடன் இணைந்து மௌனகுரு சுவாமிகளின் சீடர்களும் மலர் அம்மாவின் அடியவர்களும் தமது ஆன்மீகப் பயணத்தை தொடர்ந்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இதனை 2018ஆம் ஆண்டு ஏப்ரல் 2வது சனிக்கிழமை சந்நிதியில் நடைபெற்ற மௌனகுரு சுவாமிகளின் 113வது ஜெயந்தி தின விழாவில் காணமுடிந்தது. சந்நிதியில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற குருசீட பரம்பரையின் பாரம்பரியம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருப்பதை வழமைபோல இந்த வருடமும் சந்நிதியில் ஒன்றுகூடிய இந்த அடியார் கூட்டத்தின் செயற்பாடுகளிலிருந்து எம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானகுரு பரம்பரை

ஸ்ரீமத் கடையிற் சுவாமிகள்

↓

ஸ்ரீமத் செல்லப்பா சுவாமிகள்

↓ ↓

ஸ்ரீமத் குழந்தைவேற் சுவாமிகள்
(மறவன்புலோ)

↓

ஸ்ரீமத் சின்னத்தம்பி சுவாமிகள்
(பெரிய குருநாதர்)
(மறவன்புலோ)

↓

ஸ்ரீமத் முருகுப்பிள்ளைச் சுவாமிகள்
(மௌனகுரு கடவுள் சுவாமிகள்)
(அல்வாய்)

↓ ↓

செல்வி சிவபாக்கியம் அம்மையார்
(மலர் அம்மையார்)

↓

பொ. கோவர்த்தனராசா
நா. சிவனேசன்
அ. யோகர்
இ. மோகன்
திருமதி நந்தினி
திருமதி உதயா
க. காந்தன்

ஸ்ரீமத் யோகர் சுவாமிகள்

வ. குமாரசாமி ஐயர்

↓

ஆ.சி. அற்புதலிங்கம்
திருமதி சசிலேகா ஜெயராமன்
ஞா. திரிபுராந்தகன்
எஸ். ஜெயரூபன்
க. கைலைநாதன்
பொ.சந்திரவேல்
எஸ். கமலேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதர் கதிர்காமர் வழிவந்த அருளாளர்கள்

சந்நிதியான் ஆற்றங்கரையில் நாடிவந்து குடிகொண்டது போல மருதர் கதிர்காமரையும் நாடிவந்து ஆட்கொண்டு அவரையே தனக்கு பூசையை நடாத்துமாறு அருட்கட்டளையிட்ட கருணைத் தெய்வமாகவும் விளங்குகின்றான். இதனால் சந்நிதியில் சந்நிதியானுக்கும் பூசகர்களுக்கும் உள்ள தொடர்பு இருபக்க தொடர்பாகவும் இறுக்கமான தொடர்பாகவும் காணப்படுகிறது. மருதர் கதிர்காமர் பரம்பரையில் இன்று ஏழாவது சந்ததியினராக தொடருகின்ற இந்த பூசகர்கள் சந்நிதியானுக்கு பூசை செய்கின்ற இந்த தொண்டினை தமது வரலாற்றுக் கடமையாகவும் தமக்கு கிடைத்த மிகப்பெரிய பேறாகவும் கருதி மிகுந்த பயபக்தியுடன் அதனை மேற்கொண்டு வருகின்றனர். இதேபோல சந்நிதியானும் இந்த பூசகர்களது தொண்டினை உவகையுடன் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு தனது கருணையை வெளிப்படுத்தி வருகின்றார்.

சந்நிதியான் அடியார்களுக்கு தனது திருவிளையாடல்களை நடாத்தும் பொழுது அதிகமான சந்தர்ப்பங்களில் அந்த அடியார்களின் கனவுகள் காட்சிகளில் தனக்கு பூசை செய்கின்ற இந்த பூசகர்களையே வெளிப்படுத்தி வருகின்றான். இந்த பூசகர்களுக்கூடாக சந்நிதியானே தனக்கு காட்சி கொடுத்ததாக அடியார்களும் ஆனந்த பரவசமடைந்து வருகின்றனர். இது காலங்காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளாகும். சந்நிதியானுடைய பூசகர்களும் இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்து கொண்டு மிகுந்த பயபக்தியுடன் தமது பூசைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை நாம் காணமுடிகின்றது.

அது மட்டுமல்ல சந்நிதியில் சில பூசகர்கள் தமது வரலாற்று கடமையான அன்றாட பூசைச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் ஆன்மீக ரீதியில் தம்மை மேலும் பக்குவப்படுத்தி அருளாளர்களாகவும் வாழ்ந்து வருவதை காணமுடிகிறது. இவ்வாறு மருதர் கதிர்காமர் மரபில் வந்து பூசகர்களாகவும் அருளாளர்களாகவும் சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்துவருகின்ற இந்த அருளாளர்களின் செயற்பாடுகள் சிறிது வித்தியாசமாக அமைந்திருக்கும். இவர்கள் அடியவர்களுக்கு ஆன்மீக ரீதியாக மட்டும் வழிகாட்டுவதுடன் நின்றுவிடுவதில்லை. இவர்களில் பலருக்கு சொந்தமாக மடங்களும் இருந்துள்ளன. இதனால் இவர்கள் அந்த அடியவர்களுக்கு பல்வேறு உதவிகள், ஒத்தாசைகளை வழங்கி அவர்களை நிறைவடையச் செய்த சிறப்புக்குரியவர்களாகவும் விளங்குகின்றனர். தற்பொழுதும் பல பூசகர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு சித்தர் மருதர் கதிர்காமரைப் போல பூசகர்களாகவும் அருளாளர்களாகவும் சந்நிதியில் வாழ்ந்து வழிகாட்டிச் சென்றவர்கள் வரிசையில் நாம் பின்வருவோரைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இரத்தினசாமி ஐயர்
2. விசாகரத்தினம் ஐயர்
3. செல்வவிநாயகம் ஐயர்
4. சிவசுப்பிரமணியம் ஐயர் (சின்னக்கட்டி ஐயர்)
5. பெரிய ஆறுமுகசாமி ஐயர்
6. காசிப்பிள்ளை ஐயர்
7. செல்லையா ஐயர்
8. தர்மரத்தினம் ஐயர் (கற்கண்டு ஐயர்)
9. சிவானந்தம் ஐயர்
10. செல்லத்துரை ஐயர்
11. சித்திவிநாயகர் ஐயர்
12. சாம்பசிவம் ஐயர்
13. மெத்தைவீட்டு கந்தசாமி ஐயர்
14. சுப்பிரமணியம் ஐயர்
15. கதிரிப்பிள்ளை ஐயர்

சந்நிதியும் அன்னதான மடங்களும் என்ற ஆவண நூல் 2016 ஆம் ஆண்டு அடியேனால் வெளியீடு செய்யப்பட்டது. அந்த நூலில் இந்த அருளாளர் களில் சிலர் பற்றிய விரிவான விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை பணிவுடன் அறியத் தருகின்றோம்.



28.04.2018 அன்று சந்நிதியில் நடைபெற்ற மௌனகுரு சுவாமிகளின் (கடவுள் சாமி) ஜெயந்தி தின விழாவில் அவரது சீடர்களும் அடியார்களும் பஜனை செய்து கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளாளர் வரிசையில்...

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் அருள் வாழ்க்கை வாழ்ந்த மேலும் பல அருளாளர்களுடைய விபரங்களை நாம் அறியமுடிகிறது. ஆனாலும் அவர்கள் தொடர்பான விரிவான அல்லது ஆழமான விபரங்களை எம்மால் பெறமுடியா துள்ளது. அவ்வாறான அருளாளர் சிலருடைய விபரங்களை இங்கே வெளிப்படுத்து கின்றோம்.

1. தணிகாசலம் சாமியார்
2. ஆழ்வாப்பிள்ளை சாமியார்
3. மகாதேவா சாமிகள்
4. நமசிவாயம் சாமிகள்
5. சின்னக்கட்டி சாமியார்
6. புங்குடுதீவு சதானந்தஜீ
7. பொன்னையாச் சாமியார்
8. கார்த்திகேசுச் சாமியார்



கடவுள் சுவாமிகளின் ஜெயந்தி தின விழாவில் அவரின் திருவுருவப் படத்துடன் (நடுவில்) அவரது குரு மற்றும் சிஷ்ஜை ஆகியோரின் படங்களும் உடன் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் அருளாளர்கள்

சந்நிதியில் அவ்வப்பொழுது சமூகமளித்து ஒருசில மாதங்கள் மட்டும் இங்கே அருள்வாழ்க்கை வாழ்கின்றவர்களும் ஒரு வகையான அருளாளர்களாக நோக்கப்படுகின்றனர். இவர்கள் இங்கே வந்து தங்கியிருந்து தவவாழ்க்கை வாழுகின்ற சந்தர்ப்பங்களில் சில அற்புதங்களை நடாத்துகின்றவர்களாகவும் காணப்படலாம். ஆனாலும் குறிப்பிட்ட காலத்திற்குப்பின்பு இவர்களை இங்கே காணமுடிவதில்லை.

வெகுசனத்தொடர்பு சாதனங்கள் பெருகிவிட்ட இக்காலகட்டத்தில் இவ்வாறு சித்துக்கள் அற்புதங்கள் நிகழ்த்துகின்றவர்கள் குறுகிய காலத்தில் பிரபல்யமடைகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ்வாறு பிரபல்யம் அடைகின்ற அந்த அருளாளர்களை அடியார்கள் ஆலயத்திற்கு தேடி வருகின்ற பொழுது அவர்களை அங்கே காணமுடிவதில்லை. இதனால் இவர்கள் தொடர்பான விடயங்கள் தொடர்ந்து மக்கள் மத்தியில் மர்மமாகவே பேசப்பட்டு வருவதையும் காணமுடிகிறது.

ஏறத்தாழ நான்கு வருடங்களுக்கு முன்பு இவ்வாறான ஒரு சித்தர் ஆலயச் சூழலில் காணப்பட்டார். விநாயகர் சந்நிதானத்திற்கு முன்பாக உள்ள மண்டபத்தில் அவர் அதிகமாக காணப்படுவதுண்டு. இங்கே ஆலயத்திற்கு வழமையாக வருகின்ற சில மெய்யடியார்கள் அவருடன் உரையாடியும் உள்ளனர். பூசகர்களும் அவரைத் தாம் கண்டதாக கூறுகின்றனர். அத்துடன் தகர மடத்தில் தங்கியிருந்ததையும் பார்த்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் இவருடைய ஆசீர்வாதத்தால் குழந்தைச் செல்வம் கிடைத்தது பற்றியும் வேறு சித்துக்களை அவர் செய்வது பற்றியும் கதைகள் அடிபடத் தொடங்கியது. வலைத்தளங்களிலும் அவரது படமும் அவர் தொடர்பான செய்திகளும் வெளிவரத் தொடங்கியது. பலர் அவரை தேடிவரவும் ஆரம்பித்தார்கள். ஆனால் அதன்பின்பு அவரை அங்கே காணமுடிய வில்லை.

இதேபோன்று 2016ஆம் ஆண்டு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ''சித்தர் அற்புதம்'' என்று இன்னொரு செய்தி பற்றியும் வலைத்தளங்களில் செய்தி பரவத் தொடங்கியது. அவருடைய பெயர் வெற்றிவேல் சாமி எனவும் அவர் பிள்ளையைப் பேசவைத்ததாகவும் நோய்களைக் குணப்படுத்துவதாகவும் தகவல்கள் பரவ ஆரம்பித்தன.

சந்நிதியில் மட்டுமன்றி வேறு ஆலயங்களிலும் வந்து, தரிசித்து, பின்பு சென்றுவிடுகின்ற அருளாளர்கள் காணப்படுவது இயல்பானதே. அவர்கள் தொடர்பாக பயனடைகின்ற அடியவர்கள்தான் அவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை வெளிப்படுத்துவது பொருத்தமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் பற்றி...



ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. நடராசா அரியரத்தினம் அவர்கள் சமயப் பணிகள், சமூகப் பணிகள் என்பவற்றோடு வரலாற்று ஆவணங்களைப் பதிவுசெய்வதிலும் முன்னின்று உழைத்து வருபவர். கடந்த காலங்களில் செல்வச்சந்நிதியில் சிறப்புற விளங்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் "கலை பண்பாட்டுப் பேரவை"யின் ஆரம்ப கர்த்தாவாக இருந்து 20 வருடங்களுக்கு மேலாக காத்திரமான சேவைகளை செய்துவந்தவர். அத்துடன் அதன் செயலாளராக நீண்ட காலம் உயிர்த்துடிப்புடன் செயற்பட்டுவந்தவர். சந்நிதியான் ஆச்சிரம பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" சஞ்சிகையில் பல வருடங்கள் தொடர்ச்சியாக "சந்நிதியான்" என்ற தலைப்பிலே சந்நிதி முருகனின் அற்புதச் செயல்களை தனது முகம் காட்டாது மாதந்தோறும் எழுதியவர். அதன் பின்னர் "சந்நிதியான் அற்புதங்கள்" என்ற நூலினை வருடந்தோறும் வெளியிட்டு வருவது நூலாசிரியரின் அளப்பரிய சேவையாகும். புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தாலும் காலத்துக்குக் காலம் இங்கு வந்து மண்ணின் பெருமையை வெளிப்படுத்தும்வகையில் பல நூல்களை வெளியிட்டுவருகிறார். தற்போது "சந்நிதியான் அற்புதங்கள் பாகம் 8" வெளியிடப்படுவதோடு "சந்நிதியில் சித்தர்கள்" என்ற பெறுமதி மிக்க ஆவண நூலினை ஆக்கி வெளியீடு செய்வது பெருமைக்குரியது.

இந்துசமய வரலாற்றில் சித்தர்களின் மகிமை சொல்லில் அடங்காது. இறைவன்பால் தமது சித்தத்தை ஒன்றுபடுத்திய சித்தர்கள் ஈழத்திலும் வாழ்ந்துவந்துள்ளனர். குறிப்பாக சந்நிதியை அண்டிய சூழலோடு தொடர்புடைய சித்தர்கள் பலரின் உண்மையான வரலாற்றைத் தேடிப் பெற்று அவற்றை நூலுருவாக்கித் தந்துள்ளார். இந்நூல் ஒரு சமய ஆவண நூல் மட்டுமல்ல எமது கலை, கலாசாரம், பொருளாதாரம் போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய வரலாற்று ஆவணமாகவும் காணப்படுகிறது. இதனை தமிழ் மக்கள் அனைவரும் வாசித்துப் பயன்பெற வேண்டியது அவசியமாகும். இந் நூலாசிரியர் தமது கல்விப் புலமையினால் மேலும் படைப்புக்களை ஆக்குவதற்கு சந்நிதி முருகனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

மலர்க்குழு சார்பில்
**திரு. இ. ஸ்ரீநடராஜா**
அதிபர், யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி - 0212264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org